உ

சிவமயம்.

# விருத்தாசலபுராணம்.

சிவன்பாக்கம்

ஞானக்கூத்தசுவாமிகள் அருளிச்செய்த மூலமும்

திருத்துருத்தி - இந்திரபீடம்.

கரபாத்திரசுவாமிகள்

ஆதீனத்திருந்த - பிறையை

அருணாசலசுவாமிகள்

மாணாக்கராகிய

பார்ப்பாக்கம்

ரணியப்பமுதலியாரவர்கள்

செய்த புதியவுரையும்.

ஷை முதலியாரவர்களால்

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நாஜ-ஷு.


சிவமயம்.

# சருக்கவகராதி.


| | சருக்கத்தொகை. | பாடற்றொகை. |
|---|---|---|
| | காப்பு | ௧ |
| | பாயிரம் | ௰௮ |
| ௧ | கிரிச்சருக்கம் | ௩ |
| ௨ | தலச்சருக்கம் | ௰௫ |
| ௩ | தீர்த்தச்சருக்கம் | ௨௮ |
| ௪ | விதர்க்கணச்சருக்கம் | ௨௩ |
| ௫ | விபசித்துச்சருக்கம் | ௪௫ |
| ௬ | நிருத்தச்சருக்கம் | ௨௪ |
| ௭ | அகத்தியச்சருக்கம் | ௰௪ |
| ௮ | கலிங்கச்சருக்கம் | ௨௧ |
| ௯ | கலிமலர்ச்சருக்கம் | ௨௰ |
| ௰ | சுவேதச்சருக்கம் | ௨௰ |
| ௰௧ | அன்பர்பூசைச்சருக்கம் | ௰௫ |
| ௰௨ | சிவபூஜாவிதிச்சருக்கம் | ௪௪ |
| ௰௩ | விபூதிச்சருக்கம் | ௰௮ |
| ௰௪ | உருத்திராக்ஷச்சருக்கம் | ௰௭ |
| ௰௫ | சிவகீர்த்திச்சருக்கம் | ௰ |
| ௰௬ | கோபர்வதச்சருக்கம் | ௨௧ |
| ௰௭ | பிருடிச்சருக்கம் | ௰௨ |
| ௰௮ | சகிவன்னச்சருக்கம் | ௩௰ |


காப்புபாயிர முள்பட

ஆக சருக்கம்-௰௮-இ, திருவிருத்தம்-௪௩௫.





சிவமயம்.

# விருத்தாசலபுராணம்.

## பாயிரம்.

### ஆழத்துப்பிள்ளையார்-காப்பு.

திருவுங்கல்வியுஞ் சீருந்தழைக்கவுங்
கருணைபூக்கவுந் தீமையைக்காயவும்
பருவமாய்நம துள்ளம்பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப்பேணுவாம்.

(இ-ள்) மகால்ட்சுமி விலாசமும்வித்தையுஞ்சிறப்புந்தழைத்தோங்கவும்-ஜீவகாருண்யமுண்டாகவும்- தீமைகளைத் தகிக்கவும்-பக்குவமாகி நம்முடையமனம் பழுக்கவும்-ஞானப்பிரகாச மிகுந்த ஆழத்துப்பிள்ளையாரை வணங்குவாம்—எ-று.

இதன்கருத்து,

ஆன்மா, மாயாசம்பந்தமான இந்திரியகரணாதிகளோடு கூடி விவகரிக்குமவசரத்தில் அவ்வான்மாவிற்கு உள்ளமென்றுபெயர்—ஆதலால் அவ்வான்மா குருமுகமாய்ச் சிரவண மனனநிதித்தியாசனஞ்செய்து ஞானாக்கினியால் அசுத்தவாசனையை விடுத்துச் சுத்தவாசனையைப்பெற்று ஞானோதயமுண்டாய்ச் சஞ்சிதவினையைத் தகித்துப் பிர்ம்மானந்த சுகத்தையடையும்படி மூலாதாரப்பொருளாகிய ஆழத்துப்பிள்ளையாரை வணங்குவாமென்பதாம்,

## வேறு - விருத்தாசலேஸ்வரர்துதி,

திருமாலுநான்முகனுந்தேவர்கோவுந்-தேவர்களுமியாவர்களு
ஞ்சிந்தையாலு, மருவாயமறையாலுமளவையாலு- மளப்பரிதாயக
ண்டிதமாய்நின்றமூர்த்தி,யுருவாயகிரிவடிவாயனந்தங்கோடி-யொ
ளியுடையகொடுமுடிகளாகிநின்ற, பெருவாழ்வைத்திருமுதுகுன்
றுடையான்றன்னைப்பெருங்கருணையாளனையாம் வணங்கலுற்றாம்-

(இ-ள்) மகாவிஷ்ணுவும் சதுர்முகப்பிர்ம்மாவும் தேவேந்திரனு
ம்தேவர்களும் சகலமானபேர்களும்மனதினாலும் அரூபமாகிச்ச
த்தமாத்திரமாய்விளங்குகின்றவேதங்களினாலும் பிரமாணங்களினா
லும் அளவிடுதற்கரிதாகி அகண்டாகாரமென்றுமாகிநிலைபெற்றநி
ஷ்களப்பொருளாகிய பரமசிவரூபம் சகளமாகிய மலைவடிவமாகி அ
னந்தகோடி சூரியப்பிரகாசம் பொருந்திய கொடுமுடிகளோடுநி
ன்ற பெரியசெல்வமும் அழகும்பொருந்தியமலையையுடையவரும் மிகுந்த
கிருபாமூர்த்தியுமாகியவிருத்தாசலேஸ்வரரைநமஸ்கரிப்பாம்-எ-று()

## வேறு - பெரியநாயகிதுதி,

பச்சைமலைபவளமலை தனிற்கிடந்தாற்போலப் பரிவுடையதி
ருவடிவுமம்மலைமேலுற்ற, மெச்சமதிச்சந்திரமும்பொச்சதிருவி
டையும் விழிமூன்றுங்கரநான்கும்பெரியநாயகியார், கச்சிருந்த மு
லைத்தடமுமமுதவாக்குங்கருங்குழலுமெமக்கென்றுங்காட்டுஞ்செய்யவா
யு, நச்சுமடியார்பிறவியறுக்குமாமலரடித்துணையிலிருத்திச்சிந்
தைசெய்வாம்,

(இ-ள்) பச்சைமலையானது பவளமலையின் கட்கப்புவிட்டெழுந்
ததுபோல அன்புருவாய் விளங்குகின்ற பெரியநாயகியம்மையா
ருடைய திருமேனியையும் அந்தமலையின்மேல் தோன்றிய மெச்சு
கின்ற பூரணச்சந்திரனையொத்த அழகிய பாலஸிந்தூரத்தையும்காண
ப்படாமையால் இல்லையென்று சொல்லத்தக்க அழகிய இடையையு
ம் திரிநேத்திரங்களையும் நான்கு கைகளையும் கச்சணிந்தஸ்தன
பாரங்களையும் அமிர்தம்பொழியும் வார்த்தையையும் கரியதிரண்ட அள
கபாரத்தையும் வெண்மைபொருந்திய நகையையும் சிவந்தவா
யையும் இச்சிக்கின்ற அடியார்களுடைய பிறவித்துன்பத்தை நீக்கிய
ருளுகின்ற திருவடிகளையும் மனத்தினால் நினைந்து அன்பினால் மெ
லிந்துருகித் தோத்திரஞ்செய்து அறிவினால்தியானிப்பாம்-எ-று, (உ)

## வேறு- விநாயகர்துதி,

ஒருமலையாற்புரமலையு மொருமைந்தன்றிருமைந்த
னிருமலையுந்துட்மலையு மெதிர்மலையும்வினைமலையும்
பொருமலையும்விம்மலையும் பொம்மலையும்புடைத்தருளிக்
கருமலையும்பெருமலையிற் கைம்மலையைக்கைதொழுவாம்,

இ-ள். ஒப்பற்ற மகமேருவாகிய வில்லினால் திரிபுர சங்காரஞ்செய்த வலிமைபொருந்திய பரமசிவனுடைய அழகிய மூத்தகுமாரரும் அடியார்களுடைய இருமலையும் தும்மலையும் எதிர்த்துப்பொருதுகின்ற வினையாகிய மலையையும் பொருமலையும் விம்மலையும் பொய்யாகிய மலையையுங்கெடுத்துப்பிறவியை ஒழித்தருளுகின்ற பெரியபழமலையின் கண்ணெழுந்தருளிய யானைமுகத்தை யுடையவருமாகிய விநாயகமூர்த்தியினுடைய பாதகமலங்களை இரண்டுகைகளாலும் வணங்குவாம்-எ-று. (௧)

## சுப்பிரமணியஸ்துதி.

திருக்குமரம்போல்வாருந்திருப்பாதங்கண்டாலா
யுருக்குமரன்றிருக்குமரமுற்றாகச்சிறந்துரவா
முருக்குமரன்குருனுக்குருபரம்பிரானார் ...
தருக்குமரம்மையைப்போற்றந்தாளைச்சிந்தையுட்செய்வாம்

இ-ள். வளர்ந்திருக்கின்றமரம்போன்ற மனத்தையுடையவர்கள்திருவடி தரிசனஞ்செய்தவளவில் அவர்களுள்ளத்தையுருக்குகின்றபரமசிவனுடைய செல்வக்குமாரனும் தம்முடைய அடியார்களுக்குப்பகைவரானவரைச்சங்கரிக்கின்றவரும்குருபரமனுக்குமெப்பொழுதும் பிரமாணவரும்நம்முடையஇருதயத்தை உருக்கனிக்கும்படியானவாழைப்பழம்போலக்கனிவித்தவருமாகிய சிவசுப்பிரமணியக்கடவுளை எக்காலத்திலுஞ் சிந்தித்துவணங்குவாம்-எ-று, (௨)

## திருஞானசம்பந்தசுவாமிகள்ஸ்துதி,

மருளோடப்புத்தரெலாமருண்டோடவருகரிடத்
தருளோடவாறோடவாற்றெதிரேயேடோட
வெருளோடப்பாண்டியனார்வினையோடச்செய்தடியா
ரிருளோடவருளோடமேற்றிருஞானபதம்போற்றி,

(இ-ள்) மயக்கத்தோடு அந்தப்புத்தர்களெல்லாம்பயத்தோடவும் அருகரிடத்தருளின்றிவைகையநதிபெருக்கும்-அந்தநதிப்பெருக்கெதிரோதாம்விட்டருளியதிருப்பாசுரத்தோடோடவும் ஆக்காலத்துக் கூனபாண்டியராஜனுடையவினைகளானது நடுங்கியோடவுஞ்செய்து அடியார்களுடைய அஞ்ஞானநீங்க மெய்ஞ்ஞானம் ஓங்கியுயரக்கூடலில் திலேற்றுவித்தருளினவரும் நதிபெருகுதலாற்செலுத்துவாரின்றி லாதிருந்த ஓடத்தின்மேல் அடியார்களையேற்றி அக்கரையை அடையும் படிபதிகமருளிச்செய்தவருமாகிய திருஞானசம்பந்தசுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவாம்-எ-று. (௩)

## அப்பர்சுந்தார்மாணிக்கவாசகசுவாமிகள்ஸ்துதி.

மருங்குகடற்கன்மிதப்பில்வந்தார்தம்பதம்போற்றி
யொருங்கரிமேற்கயிலையினிற்போனார்தம்பதம்போற்றி
நெருங்குநரிபரியாக்கித்திறத்தினர்தம்பதம்போற்றி
யிருமையாருள்கேட்டான்பக்கத்திருந்தார்தம்பதம்போற்றி

(இ-ள்) அருகர்கள் கடலின்கண் தம்மைக்கட்டிப் போட்டகல்லே தெப்பமாக அதன்மீது வந்ததிருநாவுக்கரசுசுவாமிகளுடையதிருவடிகளை வணங்குவாம்-பொருந்துகின்றவெள்ளையானையின்மேலேறித் திருக்கயிலாயத்திற்கெழுந்தருளிய சுந்தரசுவாமிகளுடையதிருவடிகளை வணங்குவாம்-நெருங்கியநரிகளைக் குதிரைகளாக்கிப்பாண்டியராஜனுக்குமுன்னிறுத்தின பரமசிவனுடைய திருவடிகளை வணங்கிப்பெருமையதம்பிடனார்த்தத்தைக்கேட்டு அந்தப்பரமசிவனைவிட்டு நீங்காது அவரது அருகிலிருந்த மாணிக்கவாசகசுவாமிகளுடையபாதாரவிந்தங்களை வணங்குவாம்-எ-று, (௩)

### வாழ்த்து,

வானவர்களானினங்கண்மறையவர்கண்மனறவேள்வி
யானசிவசமயவேதாகமங்கடழைத்தோங்க
ஞானமுளநரபதியுநற்குடியுந்தழைத்தோங்க
தானதன்மந்தழைத்தோங்கத்தரணியெலாமழைதூங்க,

(இ-ள்) தேவர்களும் பசுக்களும்-பிராமணர்களும் வேதங்களும் அவற்றின்வழியாகச்செய்கின்றபலயாகங்களும் சிவசமயசம்பந்தமானவேதாகமங்களுந்தழைத்தோங்குக-விவேகமுடையவரசனும் நல்லகுடிகளும்-தழைத்தோங்குக -தானங்களுந் தருமங்களுந்தழைத்தோங்குக-பூமியெல்லாங்குறைவின்றிப்பூர்த்தியாகமழைபெய்துவருக-எ-று (௪)

தெய்விகமாமுதுகுன்றர்திருமேனிதனைத்தீண்டுஞ்
சைவமணியோர்குலமுந்தானிகருந்தழைத்தோங்க
மெய்விரவுஞ்சிவனடியார்மேன்மேலுந்தழைத்தோங்க
பொய்விரவாமுனிவர்களும்புண்ணியருந்தழைத்தோங்க,

(இ-ள்) தெய்விகமாகமுளைத்தெழுந்தவிருத்தாசலேஸ்வரருடையதிருமேனியைப்பரிசித்துப்பூசிக்கின்றசைவப்பிராமணர்களுடையமரபும் ஸ்தானிகருந்தழைத்தோங்குக-ஞான சொரூபமாகியசிவனடியார்கள் மேன்மேலுந்தழைத்தோங்குக-பொய்ம்மையில்லாத முனீஸ்வரர்களும்புண்ணியவான்களுந்தழைத்தோங்குக-எ-று ()

### தீர்த்தவிசேடம்-கிரிவிசேடம்,

வேயுதிருமுத்தாறுவிரவியணைமுத்தாறு
போயசமபடியாமோபுலையாகய்படியாமோ

மாயமலமுழுதுகுன்றம்லைய[illegible]மலமுழுதுகுன்றந்
தூயவரைப்பணியாரோசூழ்ந்தவரைப்பணியாரோ.

(இ-ள்) மூங்கிலிலிருக்கின்ற முத்துகள் இருகரையிலுங் கலந்து மோதுகின்றதிருமணிமுத்தாநதி. அந்நதியிற்போய்ஸ்நானஞ்செய்யாதவர்களேசண்டாளர்கள்-பழமையாகியமாயாமலங் கெடுதற்கேதுவாகவிளங்குகின்ற அழகியதாமரைகணிறைந்துள்ள வயல்சூழ்ந்தபழமலையின்கண்ணெழுந்தருளிய பரிசுத்தமாகிய சர்ப்பத்தை யரையிற்றரித்தபரமசிவனைப்பிரதட்சண நமஸ்காரஞ்செய்த அடியார்களைவணங்காத மூடர்களே மனமடங்காதவர்கள்-எ-று. குன்றந்தூயவர் என்பது-குன்றாத்தூயவரெனமெலிந்தது, (௯)

ஸ்தலவிசேடம்,

பழமலையிலிருந்தவரோபலிப்புண்டாயிருந்தவரோ
யழகுபணிவருந்தினரோபருணிறையவருந்தினரோ
குழகனடிக்கண்டாரோகூற்றனடிக்கண்டாரோ
யெழிலையுறவளைந்தவரோயின்பமுறவளைந்தவரோ,

(இ-ள்) விருத்தாசலத்திற் குடியிருந்தவர்களேசகலசித்திகளையுமடைந்தவர்கள்-விருத்தாசலேஸ்வரருடைய திருப்பணிசெய்துசரீரம்வருந்தினவர்களே-ஞானாமிர்தத்தைப் பூரணமாகப்புசித்தவர்கள் பரமசிவனுடைய திருவடிகளைத்தரிசனஞ்செய்தவர்களே-யமதண்டனைக்காளாகாதவர்கள் அவளை அழகுபொருந்தவணங்கினவர்களே ஞானசொரூபமானவர்கள்-எ-று, (௰)

திருமுன்னேமெய்வன்னிசிரகிரியர்மெய்வன்னி
யிருவன்னிதருங்குவளையிறைகாதிலங்குவளை
பெருமலையாள்கற்பகமேபெருவன்னிகற்பகமே
வருவதுவுமார்ச்சனமேமருவியறமார்ச்சனமே.

(இ-ள்) பழமலைநாதருடைய சந்நிதானத்தின் முன்னிருப்பதுஉண்மையாகியவன்னிவிருட்சம் அவருடைய திருமேனி அக்கினிஸ்வரூபம்-அந்தப்பெருமைபொருந்தியவன்னிவிருட்சத்திற்புஷ்பிப்பதுகுவளைமலர் - அவருடையதிருச்செ[illegible]களிற்பிரகாசிப்பதுசங்கக்குழைகள்-கற்புநிலைமையே பெரியநாயகியார்- கற்பகவிருக்ஷமே பெரியவன்னிவிருக்ஷம்-பழமலையினிடத்தில் வருகின்றதுவும் சிவதர்மமுஞ் சிவார்ச்சனையுஞ் செய்து பிறவியொழிப்ப தற்காகும் என்றவாறு, (௰௧)

தோற்றுவித்தநான்முகனூர் துஞ்சியநாட்கடலெழும்
வீற்றென்றுப்க்கீழ்த்தாழ்த்துமேலுயர்த்துநின்றபதி
நாற்றிசையெண்ணம்பிக்குநம்புக்குக்கனகமளிக்
தாற்றிவிட்டுத்திருவாரூர்க்குளத்தளிக்குமரியபதி,

(இ-ள்) விருத்தாசலமானது - சகலத்தையுஞ்சிருஷ்டித்தபிர்ம்மா வானவர் அழிந்துபோகின்ற பிரளயகாலத்தில்சப்தசமுத்திரங்களு மொன்றாகக்கோத்து ஜலங்கீழ்ப்பட மேற்பட்டுயர்ந்துநின்றஸ்தலம்-நான்குதிசைகளிலுள்ளவர்களும் பரவப்பெற்றபுகழையுடையசுந்தரசுவாமிகளின் நம்பிக்கையின்பொருட்டு சுவர்ணத்தைக்கொடுத்துத்திருமணிமுத்தாநதியில் விட்டுத்-திருவாரூர்க் கமலாலயதடாகத்தீர்த்தத்திலெடுத்துக்கொடுத்தருளிய அருமையாகியஸ்தலம்-எ-று,

அவையடக்கம்,

கிளிகளும்புன்பூவைகளுங்கிளக்குமொழிகேட்டார்க
டெளிவுவரத்தவறினசொற்றெருட்டுவரோமருட்டுவரோ
வொளிவுடையபோறிவாலுயர்ந்தபெரியோரெல்லா
மெளியதமியேன்கவியையெள்ளுவரோகொள்ளுவரோ,

(இ-ள்) கிளிப்பிள்ளைகளும் புல்லியநாகணவாய்ப் பட்சிகளும்பேசுகின்றசொற்களைக்கேட்டபேர்கள் தவறுகின்றசொற்களைத் தெளிவுவரும்படி தெளிவிப்பார்களேயல்லாமல் அவைகளை மயங்கச்செய்யார்கள் - அதுபோலப்பிரகாசத்தையுடைய மெய்ஞ்ஞானத்தினுலுயர்ந்தபெரியோர்களனைவருஞ்சிற்றறிவையுடைய எனதுகவிதையை இகழ்ச்சிசெய்யாமல் அங்கீகரிப்பார்கள்-எ-று, (௧௩)

ஆக்கியோன்பெயர்.

அருளாலேதிருமுடிகளனந்தமாய்நின்றபிரான்
திருவாயாலுமைகேட்கச்செப்பியவிப்புராணத்தை
யொருவாயாலுரைக்கின்றேனுயர்ஞானக்கூத்தனவன்
றிருநாமமடியேன்றன்சிரமீதுதரித்தமையால்,

(இ-ள்) திருவருளினு லளவிறந்த திருமுடிகளாகி நின்றருளினபரமசிவன் தமதுதிருவாக்கினுல் உமையவள்கேட்கத் திருவுளம்பற்றியருளிய இந்தவிருத்தாசலபுராணத்தை உயர்ந்தஞானக்கூத்தனுகியபரமசிவனது திருநாமத்தை அடியேனுடையசிரசின்மேற்றரித்திருக்கின்ற தன்மையினுல் எனது ஒருவாக்கினுற் சொல்லத்துணிந்தேன்-எ-று, (௧௪)

புராணவிசேடம்,

தவமேதுஞ்செய[illegible]டாந்தருமங்கள்செயவேண்டாம்
புவனேசன்விருத்தகிரிபு[illegible]ணத்தைப்புலப்பாட்டாற்
கவலாதேகற்றோருங்[illegible]ட்டோருங்கதியடைவர்
சிவனாணைசிவனாணைசிவனாணைசத்தியமே,

(இ-ள்) எந்தத்தவங்களுஞ்செய்யவேண்டுவதில்லை-எந்தத்தருமங்களுஞ்செய்யவேண்டுவதில்லை சகலபுவனகர்த்தாவாகியபரமசிவனுடைய விருத்தாசலபுராணத்தை உறுதிப்பாட்டினுல் கவலைபடாமல் கற்றுணர்ந்தபேர்களுங் கேட்டவர்களுஞ் சாயுச்சியத்தைப் பெறுவார்கள்முக்காலுஞ் சிவாக்கினைப்படிக்கு சத்தியமாம்-எ-று. ()

# பாயிரம்.

## புராணவரலாறு.

கயிலாயத்திருந்தருளிக் கண்ணுதலோனுமைக்கருள
மயிலூர்திகேட்டருளி வியாசர்க்குமகிழ்ந்துரைப்பச்
செயலாருஞ்சுமந்தமுனி தெய்வவன்மர்க்குரைசெய்யப்
பயிலாலேசூதர்செயும் பதினெட்டுப்புராணத்தில்,

(இ-ள்) நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன்கயிலாசபர்வதத்திலெழுந்தருளியிருந்து உமையவளுக்கருளிச்செய்ய அதைக்கேட்டிருந்த மயில்வாகனக்கடவுளானசுப்பிரமணியர் சந்தோஷமாகவேதவியாசருக்குச்சொல்ல அவர்சுமந்த முனிவருக்குச்சொல்ல அவர்தெய்வவன்மருக்குச்சொல்ல அவர்சூதமுனிவருக்குச்சொல்ல அந்தச்சூதமுனிவர்நைமிசாரண்ணியரிஷிகளுக்குச சொல்லப்பட்டபதினெண் புராணங்களில்-எ-று (௰௬)

இரும்பிரமகைவர்த்தமெனும்பத்தாம்புராணத்திற்
பொருந்துசிவன்விருத்தகிரிபுராணந்தனைத்தமிழ்செய்வே
னரும்பரனுநாரதன்மாவனவர்த்திக்குரைத்தபடி [மே.
திருந்தமைமேசெனச்சொன்னற்சிறுநாயேன்றுணிவென்றே

(இ-ள்) பெருமைபொருந்திய பிரமகைவர்த்தமென்னும் பத்தாவதுசிவபுராணத்திற்சொல்லப்பட்ட பரமசிவனுடையவிருத்தாசலபுராணத்தைத்தமிழினாற்சொல்லத்துணிந்தேன் பூர்வத்தில்நாரதன்மாவானவர்த்திக்குச்சொன்னபிரகாரந்திருத்தமாகியஆபரணங்களைத்தரித்த உமையவளேசேளென்று பரமசிவனுந்திருவுளம்பற்றியருளினானாலுஞ்சிற்றறிவையுடைய-அடியேன் சொல்லப்புகுந்ததுணிவு எதுபோலாகும்-எ-று. (௰௭)

## சருக்கவகை.

விருத்தகிரிதலந்தீர்த்தம் விதர்க்கணனேவிபசித்து
நிருத்தமகத்தியன்கலிங்கனிகழ்ந்தகலிசுவேதமுனி
திருத்தன்பர்சிவபூசைதிருவடையாளங்கீர்த்திச்
சருக்கங்சோவரைபிருடிசசிவன்னர்பதினெட்டாம்.

(இ-ள்) கிரிச்சருக்கம்-ஸ்தலச்சருக்கம்,தீர்த்தச்சருக்கம்-விதர்க்கணச்சருக்கம், விபசித்துச்சருக்கம்,நிருத்தச்சருக்கம் அகத்தியச்சருக்கம்,கலிங்கச்சருக்கம், கலிமலர்ச்சருக்கம், சுவேதச்சருக்கம் திருத்தமாகிய அன்பர்பூசைச்சருக்கம்,சிவபூஜாவிதிச்சருக்கம்.விபூதிச்சருக்கம்,பிருடிச்சருக்கம்சசிவன்னச்சருக்கம் என்கின்ற பதினெட்டுச்சருக்கங்களாம்-எ-று. (௰௮)

பாயிரமுற்றப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

# கிரிச்சருக்கம்.

வேறு.

இலகவாணுதற்றேவிகேள்கிரகிரிப்பெருமை
யிலகுமாலயனிந்திரனியாவருமறியார்
குலவுவாலையென்றுனக்கியாங்கூறினோமில்லை
யுலகிலாரறிவாரெனவும்பர்கோனுரைத்தான்.

(இ-ள்) சிந்தூரப்பொட்டையணிந்த ஒளிபொருந்தியநெற்றியை யுடைய உமையவளே நீகேள் விருத்தாசலத்தின் மகத்துவத்தை விஷ்ணு-பிர்ம்மா-தேவேந்திரன் முதலியயாவர்களுமறியார்கள் வாலைப்பருவத்தை யுடையவளென் றிருவளாயில்உனக்கும்நாம்சொல்லவில்லை அப்படியானால்உலகத்திலுள்ளவர்களில்எவர்களறிவார்களென்று தேவதேவனாகிய பரமசிவன் திருவுளம்பற்றியருளினார்-எ-று.

ஆதலான்முதுகுன்றநிற்கதிகமென்றிறைஞ்சி
யாதிநாயகியுரைத்தலுமண்ணலுநகைத்துப்
பாதிமேனியளாதலாற்பழங்கிரியுனக்குச்
சாதியாதலாற்சாற்றலாமெனவுரைத்தருள்வான்.

(இ-ள்)ஆதலால் விருத்தகிரிதேவரீருக்கு அதிகமாமென்று சகலகாரணியாகிய வுமையவள்வணங்கி விண்ணப்பஞ்செய்தபொழுது பரமசிவனும் புன்னகைகொண்டு நீபாதிசரீரத்தையுடையவளாகையினாலும் பழமலையானது உனக்குக்குலமாகையினாலும் சொல்லத்தகுமென்று திருவுளம்பற்றி யருளுகின்றார்-எ-று. (௨)

புண்ணியம்பொதிசரக்கறைபொற்கிரிமுதலா
மெண்ணிலாவனைக்கிந்திரனியாவருமிறந்து
மொண்ணிலாவியநித்தியமுகாந்தநாட்கடல்போற்
றிண்ணமாமறைமுழக்கறுந்திருமுதுகுன்றம்.

(இ-ள்) பிரளயகால சமுத்திரம்போல உண்மையாகிய வேதமுழக்கம்நீங்காத அழகியவிருத்தகிரியானது பொன்மலைமுதலிய எண்ணிறந்த மலைகளுக்கெல்லாம்சகலபுண்ணியங்களையுநிறைத்துவைத்தசரக்கறையாகவும் தேவேந்திரன்முதலானயாவர்களும் இறந்தகாலத்திலும் ஞானப்பிரகாசம்பொருந்தியநித்தியத்துவமாகவும் விளங்கும்-எ-று. (௩)

பூவில்வண்டினம்போற்சுளையீக்கணம்போல
மூவர்தேவர்கண்முனிவர்கள்யோகிகள்சித்தர்
மேவுமெய்ப்பதியாமெனவதுவெனவேறு
தேவியுன்னினும்விருப்பநற்றிருமுதுகுன்றம்.

(இ-ள்) உமையவளே அழகியநமது விருத்தகிரியானது புஷ்பத்தில் மொய்க்கின்ற வண்டுகள்போலும் பலாச்சுளையில் மொய்க்கின்றஈக்கூட்டங்கள்போலும் மும்மூர்த்திகளும் தேவர்களும்முனீஸ்வரர்களும் யோகீஸ்வரர்களும் சித்தர்கணங்களும் நிறைந்து வசிக்கின்ற உண்மையானஸ்தலமாகும் நாமென்றும் அதுவென்றும் பேதமோ நமக்கு உன்னிடத்திலிருக்கும் விருப்பத்தைப் பார்க்கிலும் அதனிடத்திலதிகவிருப்பமாகும்—எ-று. (ச)

இச்சையாற்கொளும்வடிவநம்மிருதயத்தான
மச்சமில்லதுநந்தமைப்போலுவதுறுதி
நிச்சயஞ்சிவலிங்கநம்மிருவர்க்குநிகழ்ச்சி
மெச்சுநான்மறையுச்சிநம்வியன்முதுகுன்றம்,

(இ-ள்) அழகியநமது விருத்தகிரியானது நாம்இச்சையினாற்கொள்ளப்பட்ட வடிவங்களுள் இருதயஸ்தானமாகவும் ஒருசலனமுமில்லாததாகவும் நம்மைஒத்திருப்பதாகவும் உறுதியாயுள்ளதாகவும் உண்மையாகவும் சிவலிங்க சொரூபமாகவும் நம்மிருவருக்குஞ் சந்தோஷகரமாய்ப் பிரகாசிப்பதாகவும்மெச்சுகின்றநான்குவேதங்களின்முடிவாகவும் விளங்கும்—எ-று. (ரு)

நினைக்கில்வேதனை நீக்கிநினைத்தவர்க்கின்ப
மனைத்தையுந்தருமனந்தமாயிரமுடியுடைத்து
வினைக்கடண்டமுங் கடந்ததும்மலர்ச்சிக்கிற்
சினத்ததீவினைகளைவதுதிருமுதுகுன்றம்.

இ-ள்- அழகியவிருத்தகிரியானது நினைத்தபொழுதே எல்லாவேதனைகளையு நீக்குவதாகவும் இடைவிடாமல் நினைந்தவர்களுக்குச்சகலவின்பங்களைக்கொடுக்கின்றதாகவும் அனந்தமாயிரங் கொடுமுடிகளையுடையதாகவும் இருவினைப்பயனையும் அநுபவித்தற்குரிய கடிய சகல வண்டங்களையுங் கடந்ததாகவும் அங்கிடந்திருந்தொருத்தினாலும் அருச்சனைசெய்தாலும் குரூரமாகிய தீவினைகளையொழித்தருளுவதாகவும் விளங்கும்— -று. (சு)

புறந்தனிற்றவம்புரிந்தவர்தம் பிலக்கிரியிற்
பிறந்தமூடரோபெரியரிச்சராசரமெல்லா
மிறந்தமாதவஞ்செய்தபினிந்நலத்தடைக்குஞ்
சிறந்தபேறையுந்தேவர்திருமுதுகுன்றம்.

(இ-ள்) புறத்திலுள்ள ஸ்தலங்களிலிருந்து தவத்தைச்செய்தபேர்களிலும் இந்தவிருத்தகிரியிற்பிறந்துள்ள மூடர்களே பெரியோர்கள் இந்தசராசரவுயிர்களெல்லாம்முற்செனனத்தில் அளவற்றதவத்தைச்செய்தபின்பு இந்த ஸ்தலத்திற்பிறக்கும்இத்தலத்தில்வசிக்கின்றமிகுந்த அறிவினர்களுந்தேவர்களேயாவர்-எ-று. (௭)

அஞ்சுகாவதந்தூரோசனமருவலாவெற்புத்
தஞ்சவெல்லையிற்றங்கினரியாவருந்தேவர்
விஞ்சுகோபுரக்காட்சியரெவரினுமிக்கோர்
மஞ்சுசூழ்வரைசூழ்ந்தவர்மாலயற்கொப்பாம்.

(இ-ள்) அரிதாகிய மூங்கில்களா னெருங்கப்பட்ட விருத்தகிரியைச்சேர்ந்த எல்லைக்குட்பட்ட ஐந்துகாதவழிதூரத்திற்குடியிருப்பவர்களெல்லாருந் தேவர்கள் மிகவுயர்ந்த கோபுரதரிசனங்கிடைக்கத்தக்கவிடங்களிலிருந்தவர்க ளெவர்களினுமதிகமானவர்கள் மேகந்தவழுகின்றமலையைச்சூழக் குடியிருப்பவர்கள்பிரம்மாவிஷ்ணுக்களுக் கொப்பானவர்களாவர்-எ-று. (௮)

நாலுமூன்றிரண்டொன்றதாநாலுகதன்ம
மேலுமிவ்வரைக்கண்யுகபேதமுமிலைச்
சிலநோய்பசிதீவினைகிரகநோயிலைச
சாலுமின்மையுந்தானவர்வாதையுமில்லை.

(இ-ள்) நாலுமூன்று இரண்டு ஒன்றுஎன்கிற பேதச் சொற்கள் நான்கு யுகதன்மங்களுக்கேயல்லாமல்இந்தவுயர்வான விருத்தகிரிக்கு அந்தயுகபேதங்களில்லை இதில் வசிப்பவர்கட்குத்திரிதோஷபேதமுதலியாதிகளும்பசியும் தீவினையும் நவக்கிரகவேதையும்நிறைந்ததரித்திரமும்ராக்ஷதவாதையுமில்லை-எ-று. (௯)

சீதரன்றொழு[illegible]குன்[illegible]வாய்
வேதமாகமங்குருக்களும்பர[illegible]
காதன்மானிடர்கண்ணிலுந்தோன்[illegible]
யோதுநம்புகழின்னதென்றியாவருமுரையார்.

(இ-ள்) மகாவிஷ்ணுவானவர் வணங்குகின்ற அழகிய விருத்தகிரி பேறுபெற்ற விருட்சங்களைவேதாகமங்கள் பிரத்தியக்ஷங்களாகவும் அவைகள் பேசித்துக்காமிய புத்தியையுடைய மனிதர்களின்கட்புலனுக்குத்தோன்றும் அங்ஙனந் தோன்றுவதுஞ் சொல்லுதற்கு ...மது வல்லபமாதலால் அதனைஇவ்வகைத்தென்றெவர்களுமறியமாட்டார்கள்-எ-று. (௰)

மன்றினாடுவோர்வளர்முதுகுன்றினிலிருப்போ
ரென்றுகண்டவன்யாவனேயாயினுந்தேவ

என்றவன் கையி லகப்படுஞ் சித்திகளனைத்து
நன்றுசத்தியஞ் சத்தியமென்னவே நவிலா.

(இ-ள்) சிதம்பரத்தில் நடனஞ்செய்வோம் வளருகின்ற விருத்தாசலத்திலிருப்போமென்று நமது ஸ்வரூபத்தைத்தரிசித்தவன் எவ்வகைப்பட்டவனானாலும் அவனே தேவனாவான், அப்பொழுதே சகலசித்திகளு மவனுக்கு நன்றாய்க் கைவசமாகும், சத்தியஞ் சத்தியமென்று பரமசிவன் றிருவாய்மலர்ந்தருளினார்-எ-று. (௰௪)

பூருவந்தனி லன்முகன் பராபரையும் படைத்தா
விரவிந்துவை விட்டனன் முட்டையாய் மிதப்ப
மூரிமுட்டையைத் தகர்த்தனன் முக்குணந் தோன்றிச்
சோர்விலாதவைம் பூதமுந் தோன்றிய வனைத்தில்.

(இ-ள்) பிர்ம்மாவானவர் முன்காலத்தில் ஜகத்தைச் சிருஷ்டித்து அதிவீரமாகிய வித்தைவிட்டார் அவ்வித்தானது முட்டையாக வுருத்தது அந்த வலியமுட்டையை யுடைத்தபொழுது அதில் மூன்றுகுணங்களுண்டாகி அக்குணங்களில் கெடாத பஞ்சபூதங்களு முண்டாயின-எ-று. (௰௫)

காதிரண்டினிற் குறும்பியிற் கண்ணரீயா லிரண்டு
பேதமாகிய மதுவுடன் கைடபன் பிறந்து
சீதரன்றனைப் பொருதனர் சிதரன் மேற்று
யாதுசெய்குவோ மெங்ஙனம் வெல்லுவோ மென்றான்.

(இ-ள்) அப்பிறகு சர்த்தாவான விஷ்ணுவினுடைய இரண்டுகாதிலுமுள்ள குறும்பியினிடத்தில் இரண்டுபேதமாகிய மதுகைடவர்களென்னும் இரண்டுபேருடைய பராக்கிரமர்கள் பிறந்து உலகத்திலுள்ளவர்களை இம்சைசெய்து விஷ்ணுவினிடத்தில் வந்தெதிர்த்து யுத்தஞ்செய்தார்கள் அப்பொழுது பகவான் [illegible] ஜயமடைந்து நாமென்னசெய்யப்போகிறோம் இவர்களை எவ்விதத்திற் செயிப்போமென்று யோசித்தார்-எ-று. (௰௬)

தேற்றமாய்வரஞ் சேர்மினென்றுரைத்தனன் றிருமால்
தோற்றநீவிர் [illegible]
யேற்றமாகிய வெங்களைக்கேள்வ மென்றார்
மாற்றமேனையென் மாயுறேன் வென்றனன் மாயன்.

(இ-ள்) விஷ்ணுவானவர் அவர்களை யோசித்து [illegible] அவ்விருவர்களையும் பார்த்து உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்களென்றார் அந்த தத்துவார்த்தத்தை அவ்விருவர்களுங் கேட்டு

ஆ-ஆ-தோற்றுப்போன நீ எந்தவிதத்தில் வரங்கொடுப்பாய் அந்தவல்லபத்தைச் சற்றே தெரியச்சொல்லென்றுசொல்லிப் பின்பு ஜெயம்பெற்ற எங்களை வரங்கேளும் தருகிறோமென்றுசொன்னார்கள் அப்பொழுது விஷ்ணுவானவர் என்கையில் நீங்களிறக்கும்படியானவரத்தைக்கொடுங்களென்றுகேட்டார் அங்ஙனேகொடுத்தார்கள்-எ-று

மாயன்கையினான் மதுவுடன்கைடவன் மடிந்தார்
தோயமீதினின் மேதையைத்தூர்த்தனர் புவிக்கு
மேயநாமமு மேதினியாயது விரிஞ்ச
னேயமேதினி யிறுகிடச்சிவன்பத நினைந்தான்.

(இ-ள்) அப்பொழுது விஷ்ணுவினுடைய கையினால் மதுகைடவர்க ளிருவரு மிறந்தார்கள் அவ்விருவர்களின் மாமிசத்தையும் பிர்ம்மாவினாற் சிருட்டிக்குள்ள ஜலத்திற் செறுத்தார்கள் அங்ஙனமவர்களுடைய மேதையினாற் செறுத்தபடியால் இந்தப்பூமிக்கு மேதினியென்று பெயராயிற்று அந்த ஜலமும் மாமிசமும் ஒன்றாய்க் கலந்திருக்கும்படியாகப் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானஞ்செய்தார் பிர்ம்மதேவர்-எ-று. (௰௬)

பங்கயன்புவி யிறுகிடப்பரமனை நினைக்கத்
தங்குபாதல மனைத்தினுக்கப்புறந் தாளா
யங்கணண்டமீ தளவிலாக்கொடு முடியாகி
யெங்கணும்முழுது குன்றமாய்நின்றன னெங்கோன்.

(இ-ள்) அங்ஙனம்பிர்ம்மதேவர்பூமியிறுகும்படி பரமசிவனைத்தியானித்தபொழுது எமதுபிதாவாகியபரமசிவனானவர் பொருந்திய பாதாளங்களுக்கப்புறத்திற்றிருவடிகளும் இடமகன்ற அண்டங்களுக்கப்புறத்தில் அளவில்லாதகொடு முடிகளுமாகி எங்குஞ்சர்வபரிபூரணவியாபகமாகிய விருத்தகிரிவடிவாய்ப் பிரகாசித்தருளினார்-எ-று.

மிடியன்வாயிலிற் பொன்மழைமீக்கொள லொக்கத்
தூடியவூற்றினிற் பிரளயந்தோன்றிய தொக்கக்
கடிகமழ்ந்தசெங் கமலனெண்ணமுங் கடந்து
படியுமண்டரண்டங்களும்பழமலை பரப்பி.

(இ-ள்) அங்ஙனம் பிரகாசித்தருளிய கிரியானது தரித்திரனுடைய வாசலில் சுவர்ணமாரிபொழிதற்குச் சமானமாகவுஞ் சிறியவூற்றுக்குழியிற் சலப்பிரவாக முண்டானதற்குச் சமானமாகவும் பரிமளம் வீசுகின்றசெந்தாமரையில்வசிக்கும் பிர்ம்மதேவருடைய கருத்தையும் அதிக்கிரமித்துப் பூலோகத்திலும் தேவர்களுடைய அண்டங்களிலும் பரவிநின்றது எ-று. (௰௭)

மத்தில்வெண்ணெய்போல்வரையுறிமேதையுஞ்சிவனி
யொத்தபூதரம்புவிக்குறாஞ்செய்தலாலுகந்து
சித்தநான்முகன்சிவன்செயலென்பதைமறந்து
பத்தியின்மையாற்பற்பலபூதரம்படைத்தான்.

(இ-ள்) மத்தினிடத்தில்வெண்ணெயானது கூடியிருப்பதுபோலவிருத்தகிரியினிடத்தில் மாமிசங்கலந்தொன்றாகிநின்றபழமலையானது பூமிக்குப்பலஞ்செய்துநிற்றலால் பிர்ம்மதேவர்மனமகிழ்ந்து இது சிவன்செயலென்றெண்ணுவதைமறந்து பத்தியில்லாமையால் மனச்செருக்கடைந்து பலபலமலைகளைச்சிருட்டித்தார்-எ-று. (௰அ)

படைத்தபூதரமெங்கணும்பரப்புவானேவக்
கிடைத்ததில்லையோரிடங்களுங்கிரியரசன்றி
மிடைத்தபூதரமீண்டுவந்தயனுடன்விளம்ப
வுடைத்தவெஞ்சினத்துடனகங்காரமேற்கொண்டான்.

(இ-ள்) அப்படி சிருஷ்டித்தமலைகளை எந்தவிடத்திலும் பரவும்படிக்கனுப்ப அவைகள்போய் எவ்விடத்திலும் மலைக்கரசாகிய பழமலையன்றி வேறிடங்காணமையால் எங்களுக்கு ஓரிருப்பிடமுங்கிடைக்கவில்லையென்று திரும்பிவந்து அந்தநெருங்கியமலைகள்பிர்ம்மதேவருக்குச்சொல்ல அதைக்கேட்டபிர்ம்மதேவர் மிகுந்தகுரூரமான கோபத்தோடு அகங்கரித்துநின்றார்-எ-று. (௰௯)

சீற்றந்தன்னுடனகந்தைசென்றடையினுநெருப்புங்
காற்றுங்கூடினுநிகரதுசுடுமனைசுட்டுச்
சாற்றும்பக்கமுஞ்சுடுமதுதன்னுயிர்சுட்டுத்
தோற்றுந்தன்குலஞ்சுட்டடுத்தவரையுஞ்சுடுமால்.

(இ-ள்) ஒருவனிடத்திற்கோபமும் யானென்னு மகங்காரமுமொருமித்துக்கூடுவதும் நெருப்புங்காற்றுமொருமிக்கக்கூடுவதுமொக்கும்எவ்வாறெனில் அந்தநெருப்பானது தன்வீட்டையுமெரித்துச் சொல்லுகின்றநாற்புறத்திலுமுள்ளவீடுகளையுமெரிக்கும் அதுபோல அந்தக்கோபாக்கினியானது தன்பிராணனையுமழித்துத்தோன்றுகின்றதன்னுடையவமிசத்தையுமழித்துத் தன்னை யனுசரித்தவர்களையுமழிக்கும்-எ-று. (உ௦)

அன்னமேலயனமரர்களாயிரம்வருட
முன்னிநாடினனடிமுடியொன்றையுமுணரா
னென்னமாயமீதார்செய்தவித்தையோவென்றான்
பின்னரேயாப்பிரமமாஞ்சிவமெனப்பேணி.

(இ-ள்) அப்படி கோபங்கொண்ட அன்ன வாகனத்தை யுடைய பிர்ம்மதேவர் ஆயிரந்தேவ வருஷபரியந்தம் மனத்தில் நினைந்து நி

லைந்து தேடி அடிமுடியொன்றையுங் கண்டறியாதவராகிய இரு
வென்னமாய்கையோ இது யாவராற் செய்யப்பட்ட வித்தையோ
வென்று வருத்தமடைந்து பின்பு. பரப்பிரம்மமாகிய சிவன்செய
லென்று மனத்திற்குறித்து-எ-று. (௨௧)

அஞ்செழுத்துமே யருமறையாகம புராண
மஞ்செழுத்துமே மந்திரமாந்தனக் கருவ
மஞ்செழுத்துமே யகண்டபூரணமென வறிந்தா
னஞ்செழுத்தையுந் துதித்தந்தயாதியா வமைத்தான்.

(இ-ள்) பஞ்சாக்ஷரமே அரிதாகியவேதாகமபுராணங்களென்றும்
பஞ்சாக்ஷரமேசப்தகோடிமகாமந்திரங்களுக்குங்காரணமாய் உரு
பமாகவிளங்குவதென்றும் பஞ்சாட்சரமே அகண்டபரிபூரணமான
பரப்பிர்ம்ம சொரூபமென்றுந்தெளிந்து பஞ்சாட்சரத்தை முடிவு
முதலாகக்கூட்டித்துதியானஞ்செய்தார்பிர்ம்மதேவர்—எ-று. (௨௨)

துதித்தகாலையிற்சூரியர்கோடியோரிடத்தி
லுதித்ததென்னநம்பெருந்தேவியுமையுடன்விடைமேற்
கதித்தமேனியாளியாங்கமுற்றோன்றலாற்கண்ட
விதிக்குமெய்நடுக்குற்றிடவீழ்ந்தெழுந்துணைப்பான்.

(இ-ள்- அங்ஙனந்துதித்தபொழுது கோடி சூரியர்களோரிடத்தி
லுதயஞ்செய்வதுபோலநமதுஆண்டவராகியபரமசிவன்உமையவ
ளோடும்ரிஷபவாகனந்தன்மேல் மிகுந்தசுயம்பிரகாசமாகிக்கண்மு
ன்னே தரிசனங்கொடுத்து நின்றபடியால்அதைக்கண்டபிர்ம்மதே
வர்சரீரநடுக்கங்கொள்ளப் பூமியில்விழுந்துபணிந்தெழுந்துஅஞ்ச
லியஞ்செய்தாய்நின்று விண்ணப்பஞ்செய்கின்றார்—எ-று. (௨௩)

பாயநால்வகைப்பாலுளபசுக்களைப்படைத்து
மேயபாசகோசந்தனால்விழைவுறத்தளைத்து
தூயபூமியுஞ்சுவர்க்கமுநாகமுமெய்த்துச்
சாயலாலயிற்கட்டியபசுபதிசரணம்.

(இ-ள்) அண்டசம் உற்பிச்சம் சுவேதசம் சராயுசமென்று - பரவப்
பெற்ற நால்வகைப் பகுப்பையுடைய யோனியிலுள்ள ஆன்மாக்
களைச் சிருட்டித்து அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்
ஞானமயம் ஆனந்தமயமென்னும்- பஞ்சகோசங்களாலிச்சைபொ
ருந்தப் பந்தித்துப்பரிசுத்தமாகியசுவர்க்கமத்தியபாதாளமென்னும்
திரிலோகங்களிலும்மேய்த்துப் பிராரத்வவிதியில் அவைகளின்வி
னைவழியே கட்டுகின்ற பசுபதியாகிய பரமசிவனே அடைக்கல ம
டைக்கலம்—எ-று. (௨௪)

ன்றிறைஞ்சியென் கரத்தினால்வாய்களைப் புதைத்து
சென்றநான்முகன் சிலமலைபடைத்தன னடியே
னின்றதங்ஙனே நின்வரை நிறைந்ததென் றுரைத்தான்
குன்றமன்றநம் வடிவெனவுரைத்தனன் கோமான்.

(இ-ள்) என்று தோத்திரஞ்செய்து வணங்கித் தனது எட்டுக்கைகளாலும் நான்குவாய்களையும்பொத்திக்கொண்டு சுவாமீ அடியேன் சிலமலைகளைச் சிருட்டித்தேன் அவைகட்குஇருப்பிடமில்லாமல் அவ்விடத்திற்றனே நின்றது உமது திருவருளினாலுண்டான விருத்தகிரியே பூரணமாக நிறைந்திருக்கிறதென்று விண்ணப்பஞ்செய்தார் அதைக்கேட்ட பரமசிவனானவர் விருத்தகிரியுஞ் சிதம்பரமும் நமது சொரூபமென்று திருவுளம்பற்றியருளினார்-எ-று. (௨௫)

புன்மையேன்செய்த பொருப்புகணிற்கவே றிடங்க
ளின்மையென்செய்கை யொன்றனனிரும்புன விறக
நன்மைசெய்தன நாஞ்செய்தநன்றியைக் கொன்றாய்
கன்மியாயினை யெனச்சிவன் றிருவுளங் கனன்று.

(இ-ள்) அற்பவறிவையுடைய அடியேன் சிருஷ்டித்த மலைகளிருப்பதற்கு வேறேயிடங்களில்லையாதலால் நானென்செய்வேனென்று பிரமதேவர் விண்ணப்பஞ்செய்தார் அப்பொழுது பரமசிவன் திருவுளத்திற் கோபங்கொண்டு முன்புசலமிறுகும்படி நன்மையைச் செய்தோம் நாமுனக்குச்செய்த நன்றியைமறந்து நம்மை நினையாமற் கர்ம்மியாகினையென்று சொல்லி-எ-று. (௨௬)

ஒருகணத்தினிற் கோடிநான்முகரையுண் டாக்கி
யொருகணத்தினின் மான்முதலுலகெலாம் படைப்போம்
வருகணத்தினின் மான்முதனினையெலா மழிப்போம்
வருகணத்தினி லாற்றுவோமடிந்தவ ரனேகர்.

(இ-ள்) ஒருகணநேரத்தில் கோடிபிர்ம்மாக்களைச் சிருஷ்டித்து மறுகணத்தில் விஷ்ணுக்கள்முதலான உன்னையுஞ் சகலவுலகங்களையும் நாசஞ்செய்வோம் வருகின்றகணப்பொழுதில் அழிந்தவைகளைச்சிருட்டிப்போம் இப்படிஇறந்தபேர் அளவில்லாதவர்கள்-எ-று.()

அவமதித்தனை யாகினுன்னையு மழிப்போஞ்
சிவமொழித்தொரு தெய்வமின்றென்ன நீ கண்டாற்
புவனமாளுவை யல்லதுபோகுவை யென்றார்
கவனவேதனு மியாளிமுன்னானைபோற் கலங்கி.

(இ-ள்) நீ நம்மை அவமதித்தாயானால் நாமுன்னையுமழித்து விடுவோம் நீ சிவத்தைத்தவிர வேறுதெய்வமில்லையென்று காண்டாயா

இல் சகலலோகநாயகனு யிருப்பாய் அல்லது அழிந்துபோவாயெ ன்று பரமசிவன் திருவாய் மலர்ந்தருளினார் அதுகேட்டுச் சிந்தனை கொண்டிருந்த பிரமதேவரும் யாளியினெதிர்ப்பட்ட யானையைப் போல் கலக்கமடைந்து-எ-று. (உஅ)

நச்சுமாமர மாயினுந்தன்கையா லயர்த்து
வைச்சமாமரம் வைத்தவர்கொல்வரோ மன்னு
பொச்சனேன்பிழை பொறுத்தருள்செய்கெனப் புரிந்தான்
பிச்சனஞ்சலென் றருள்செய்துபிதாமகற் குரைப்பான்.

(இ-ள்) எட்டிமரமானாலும் அன்பாகத் தங்கள்கையினால்வைத்தமரத்தை வைத்தவர்க ளழிப்பார்களோ அதுபோல எனது கர்த்தாவாகிய நீர் பொய்யையுண்டாய அடியேன்செய்த குற்றங்களைப் பொறுத்துரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார் அதுகேட்டுப் பரமசிவனும் பிர்மதேவருக்குப் பயப்படாதேயென்று அபயாஸ்தங்கொடுத்துத் திருவுளம்பற்றியருளுகிறார்-எ-று. (உக)

அறுதிநம்முருச் சிரகிரியென்றறி கையினாற்
சிறுவனாதலான் மான்மகனாதலாற் சிருட்டிப்
பெறுதலானுனைப் பிழையெலாம்பொறுத்தனம் பிரம
வுறுதியாகநா முரைத்திடுமுண்மையே கேட்டி.

(இ-ள்) ஓய் பிர்ம்மாவே நம்முடையவடிவம் விருத்தகிரியென்று நீநிச்சயமாகத்தெரிந்தபடியினாலும் சிறியவனாதலாலும் விஷ்ணுவினுடையகுமாரனாதலாலும் சிருட்டித்தொழிலைப்பெற்றிருப்பதினாலுமஉன்னுடையபிழைகளெல்லாம் க்ஷமித்தருளினோம் இப்போது நாம்சொல்லுகின்றஉண்மைவசனத்தைஉறுதியாகக்கேட்பாய்-எ-று.

எத்தநாளினு மீறிலாக்கொடுமுடி யனைத்தி
லைந்திலிங்கமோர் காலமுமாறிலா வைத்தின்
முந்திலிங்கநம் முதுகிரிநாவலந் தீவி
னைந்துநாற்றிசைத் தீவினுநாவலோர் நந்தும்.

(இ-ள்) எந்தக்காலத்திலு மழிவில்லாத எல்லாக்கொடுமுடிகளிலும் பஞ்சலிங்கங்கள் ஒருகாலமுமாறாமலிருக்கும் அந்தபஞ்சலிங்கங்களில் நமதுவிருத்தகிரிபிரதமலிங்கமாகநாவலந்தீவிற் பிரகாசிக்கும் ஏனைய நான்கு திசைகளிலுள்ள தீவுகளிலும் சகலகலை ஞானங்களுந் தெரிந்த பெரியோர்களாற் பிரகாசிக்கும்-எ-று. (ஙக)

குற்றவாளவர் தொழுமுடிமானிடர்க் கெளிதாய்
நிற்றலாகுவ நிலத்தினிற்கேற்பது வாக
மற்றெம்மால்வரை மறைந்துநின் கண்ணினுக் கருவாய்ப்
பெற்றுநிற்குநின் படைப்பிடம்பெறுகவென் றுரைத்தார்.

(இ-ள்) நெருங்கிய தேவர்களுக்கும் வணங்குகின்ற சென்னியை யுடையமனிதர்களுக்கும் பூமிக்கேற்றபடி எளிதாகவிளங்குவம்மற் றும்எமதுவிருத்தகிரிஉன் னுடையகட்புலனுக்கு அருவமாக விளங் கக்கடவதுடன் றாற்சிருட்டிக்கப்பட்டமலைகளுக்கிடமுண்டாகித் தக்கடவதென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளினார்-எ-று. (௬௨)

பண்டுதம் மையும்படைப்பையுமறந்துநீபடைத்து
மீண்டுசெய்தலால்வெற்பினுக்கிடமறச்செய்தோந்
திண்டிறற்கடம்படமெலாஞ்செய்தவற்காட்டுங்
கண்டபாவையுநஞ்செயலென்றுநீகாண்பாய்.

(இ-ள்) ஓப்பிரம்மாவே முன்னமே நம்மையும் நமது சிருட்டி யையும் மறந்துவிட்டு நீசிருட்டித்து அக்கிரமஞ் செய்தபடியால்உ ன் னுடைய மலைகளுக்கிடங்கிடையாமற் செய்வித்தோம் வலிமை பொருந்திய மிருத்துவினா லுண்டானகடமும் தந்துவினா லுண் டான படமும் அதற்குக்காரணமாயிருந்து செய்தகுயவனையும்கா ருகனையும்பற்றிநிற்கும் அதுபோலத் தோன்றுகின்ற சகலமும்நம் முடையசெயலென்று நீகாண்பாயாக-எ-று. (௬௩)

இந்திரன்முதற்கடவுளரியாவருநீயுந்
தந்தையுஞ்சுடர்தம்முடன்சகலயோனிகளுடையாறு
மைந்துபூதமுமப்புறத்துள்ளனவனைத்து
நந்தமேவலானடக்குமென்றறிந்துகொள்பிரம.

(இ-ள்) ஓப்பிரம்மாவே தேவேந்திரன் முதலான சகல தேவர்களு ம்நீயும்உன்பிதாவாகிய விஷ்ணுவும்இரண்டு சுடர்களும் சகலஉயிர்க ளும் பஞ்சபூதங்களும் அப்புறத்துண்டானவெல்லாவஸ்துக்களும் நம்முடைய ஏவலினால் நடக்குமென்றறிவாயாக-எ-று. (௬௪)

நினைத்துமேதினிக்குறுதியாநின்கிரிநிறுத்திக்
கனைத்தவேலைகள்காடுகணாடுதிக்கயங்க
ளனைத்துநாகமேதீவுகளமரர்தம்பதங்க
ளனைத்துமாக்கநந்தியானமேயெளிதிலுண்டாக்கும்.

(இ-ள்) நீநினைத்துச் சிருட்டித்தபர்வதங்களையெல்லாம் பூமிக்கு றுதியாகநிறுத்தி விசாலமாகிய சப்த சமுத்திரங்கள் காடுகள் நாடுக ள் அட்டகஜங்கள் அட்டநாகங்கள் சப்ததீவுகள் தேவர்களுடைய ப தங்கள் இவைகளையெல்லாஞ் சிருட்டிக்க நமதுதியானமேஉனக்கு எளிதிலுண்டாகச்செய்யும்-எ-று. (௬௫)

செப்ப.-201

வேண்டுநல்வரங்கேளெனவிரிஞ்சனுங்கேட்பா
னுண்டநாயகவன்னையுநீயுமப்படியே
யீண்டுநின்றருளன்பருக்கெளியையாய்நல்கும்
பூண்டகீர்த்தியிம்புராணமும்பொலிவருளென்றான்.

(இ-ள்) இப்பொழுது உனக்குவேண்டிய நன்மைபொருந்தியவரங்களைக்கேட்பாயாகவென்றுபரமசிவன் றிருவுளம்பற்றியருளினார் அதுகேட்டுப்பிர்ம்மதேவருங்கேட்கின்றாரென்னை அடிமைகொண்டகடவுளே யென்மாதாவாகிய பெரியநாயகியாருந் தேவரீரும் இந்தத்திருவுருவமாகவே இந்தத்தலத்தில் சதாகாலமும் அடியார்களுக்கெளியவனாகியெழுந்தருளி ரக்ஷிக்கின்ற கீர்த்தியும்சிவபுராணங்களும் பூமியிற்பிரகாசிக்கும்படியானவரத்தைக் கொடுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்-எ-று. (௩௧)

இத்தகைத்துநீகேட்டவையாவையுந்தந்தோம்
பத்தராகிநம்முதுகிரிபணிந்தவர்யார்க்கு
மத்தமெண்குணமட்டமாசித்திகளியோகம்
வித்தைமுத்திகணித்தியவ்வேண்டினவளிப்போம்.

(இ-ள்) இத்தன்மையவாகிய நீகேட்டவரங்களை யெல்லாங்கொடுத்தோம் அல்லாமலும் அடியார்களாகி நமது விருத்தகிரியைவணங்கினவர்கள் யாவருக்கும்பொருள்கள் நமது அஷ்டகுணங்கள் அஷ்டமாசித்திகள் அஷ்டாங்கயோகங்கள் பிரமஞானம் மோக்ஷங்கள் நித்தியத்துவமுதலானவேண்டியவரங்களையுங்கொடுத்துரக்ஷிப்போம்.

பக்கவிண்ணவர்மண்ணவர்பண்ணவர்பதங்க
டிக்குநாயகர்தேவராசாங்கமுந்தருவோ
மக்கண்மண்ணைகண்மற்றவையாவருநோய்க
ளொக்குமுன்வினைபின்வினைவல்வினைதொலைப்போம்.

(இ-ள் தேவபதமும் பூமியில்வாழ்கின்றவரசர்பதமும் வித்தியாதரர்பதமும் அஷ்டதிக்குப்பாலகருடையதெய்விகமாகிய இராசாக்ஷியுங்கொடுத்தருளுவோம் அல்லாமலும் மனிதர்களாலும் பசாசங்களாலும் மிருகபக்ஷிகண்முதலானவைகளாலும்வருகின்ற வியாதிகள் முற்பவத்திற் பந்தப்பட்டிருந்த தீவினைகள் இந்தச்சரீரமெடுத்தபின்செய்துள்ள வினைகள் முதலான கொடுவினைகளையுநீக்கி ரக்ஷிப்போம்-எ-று. (௩௨)

தீதிலாதநம்முதுகிரிசேர்ந்தவர்க்கின்ப
மேதுதானிலையென்றிறைமறைந்தனனிறைஞ்சி
போதியத்துறைநாளோதிமன்றணைபரியுறைந்தான்
சோதியால்வரம்பலித்தலாற்படைக்கவுந்தொடுத்தான்.

(இ-ள்) குற்றமில்லாதநமதுவிருத்தகிரியையடைந்தவர்களுக்குச் சகலவின்பங்களுமுண்டு அவர்களுக்கில்லாததொன்றுமில்லையென்றுசொல்லி பரமசிவன்மறைந்தருளினார் அதுகண்டு அன்னவாகனத்தையுடையபிர்ம்மதேவர்பரமசிவனெழுந்தருளியதிசையைக்குறித்துவணங்கித்தோத்திரஞ்செய்து அப்பொழுதேதனதுசத்தியலோகத்திற்குப்போய்ச்சேர்ந்துகடவுளனுக்கிரகத்தினால் சகலவரங்களுங்கிடைத்திருக்கின்றபடியால் சிருஷ்டிக்கத் தொடங்கினார்-எ-று. ()

கிரிச்சருக்க முற்றுப்பெற்றது.

பாயிரமுள்பட-௯௰-திருவிருத்தம்-௫௮.

இரண்டாவது

# தலச்சருக்கம்.

வேறு.

முத்தார்முறுவலனவர்த்தியைகேள்முதுகுன்றின்மகத்துவமுக்கணனார், வித்தார்விதியார்க்குரைசெய்தகதை விழைவாருழைவார்மொழிவார்நினைவார், செத்தாரெனினுஞ்செத்தாரலவே சிவனாகுவரென்றுரைசெய்துபினுஞ், சத்தாகியவத்தலமாக்கதையைச் சதுமாமறைநாதசன்மாமொழிவான்.

(இ-ள்) முத்தைப்போற் பிரகாசிக்கின்ற பல்வரிசையையுடைய அனவர்த்தியையே விருத்தாசலத்தின் மகத்துவத்தை நீகேட்பாயாக மூன்றுகண்களையுடைய பரமசிவன் சிருஷ்டிக்குக் காரணகர்த்தாவாகிய பிர்ம்மதேவருக்கு அனுக்கிரகஞ்செய்த இந்தச் சரித்திரத்தைக்கேட்டுச் சந்தோஷித்தபேரும் உறுதியாகக்கேட்டபேரும் மற்றவருக்குச் சொன்னபேரும் திரிகாலங்களிலுஞ் சிந்திக்கின்றபேரும் இறந்தாராயினும் இறந்தவர்களல்ல சிவசொரூபமாவார்களென்றுசொல்லி மறுபடியும் அழிவில்லாத இந்தஸ்தலத்தின்பெருமை பொருந்திய சரித்திரத்தைச் சதுர்வேதங்களையுமுணர்ந்த நாதசன்மாவானவர் சொல்லுகின்றார்-எ-று. (௧)

பாதிக்கணமொருகணமொருநாழிகை பரவொருஜாமமொருநாள்பக்க, மாதத்துடனிருவருடமொருமூவருடம்முழுதிரியதலாதுறைவார், வேதப்பிறவிக்கடலிற்றிளையா ரிதுவேபதியாயுறைவாரிமுவார், சாதப்பிணிவாரவரேசிவனார் தாமாவதையுறியாமேமொழிவோம்.

(இ-ள்) அரைக்கணம் ஒருகணம் ஒருநாழிகைபாவுகின்ற ஒருஜாமம் ஒருநாள் ஒருபக்ஷம் ஒருமாதம் ஒருவருஷம் மூன்றுவருஷம் விருத்தாசலத்தைவிட்டு நீங்காமலிருப்பவர்கள் துன்பமாகிய பவக்கடலில் அழுந்தமாட்டார்கள் இத்தஸ்தலமே இடமாகவசித்திருந்து இறந்தபேர்கள் உண்மையையடைவார்கள் அவர்களே சிவசொரூபமாவார்கள் அல்லாமலும் முற்கூறிய மூவகையாகிய ஒருவருடம் மூன்றுவருடம் மரணபரியந்தம் இத்தஸ்தலத்தில் வசித்தவர்களுடைய பெருமையை எம்மாலளவிட்டுச் சொல்லத்தகுதியோ-எ-று. (உ)

நன்றிகள்கொன்றவர்பொன்களவெய்தினர் நறவமருந்தினர்மறையவர்சுரபிகள், கொன்றவர்குருதாரம்பாரதாரங் கூடினர்முத்தாநதியினின்மூழ்கா, வென்றியதிருமுதுகுன்றைமேவா வீதிவிழாவணிகாணுவெண்ணீ,றென்றியேபாயலின்மேவாவருடமொருமூன்றுறைவாரிறையாகுவரே.

(இ-ள்) ஒருவர்செய்த நன்றியை மறந்தவர்கள் பொன்னைத் திருடினவர்கள் மதுபானஞ் செய்தவர்கள் பிராமணரையும் பசுக்களையுங்கொன்றவர்கள் ஆசிரியருடையமனைவியையும் அன்னியனுடைய மனைவியையுங் கூடினவர்களாகிய இவர்கள் திருமணிமுத்தாநதியினிடத்திற்சென்று ஸ்நானஞ்செய்து பழமலைநாதனைத் தரிசித்து வீதிகளில் மஹோச்சவ அலங்கார திருக்கோலத்தைக்கண்டுவணங்கி இடைவிடாமல் திருநீறு தரித்துக்கொண்டு மனைவியோடொருபாயிற் படுக்காமல் மூன்றுவருஷபரியந்தம் இத்தஸ்தலத்தில் வசிப்பார்களேயாகில் சிவஸ்வரூபமாவார்கள்-எ-று. (௩)

சத்தகிரித்தலமும்மலமொருவுஞ் சத்தநதிக்கட்சார்ந்து தவஞ்செய், தத்தகையாண்டேழ்சாந்திரவாயண மாண்டொருநான்குமீண்டுநடத்திற், சுத்தனுமாகுவனித்தலமீதத் தொகைகளிலொன்றேமுயல்வானிலதேன், முத்தனுமாகுவன்முற்செயலுடனே முப்பிரதக்கணநித்தலுமுயல்வான்.

(இ-ள்) கயிலாசகிரிமுதலிய சத்தகிரிகளினிடத்திலும் ஆணவாதிமும்மலங்களையுநீக்குகின்ற கங்கைமுதலிய சத்தநதிகளினிடத்திலும் போயிருந்து எழுவருஷபரியந்தம் மகாதபத்தைச்செய்து பின்பு நாலுவருஷம் சாந்திராயணவிரதஞ் செய்துமுடித்தாற் பரிசுத்தனாவான் இத்தஸ்தலத்தில் அந்தவருஷத்தொகைகளில் ஒருவருஷமாத்திரந் தவஞ்செய்வானேயாகில் மோக்ஷாதிபனாவான் அங்ஙனஞ்செய்வது கூடாதாயின் முற்கூறிய தவவேடத்தோடு நின்று பழமலைநாதனைத் தினந்தோறு மூன்றுபிரதக்ஷணஞ் செய்துவருவானானால் அவன்முத்தனாவான்-எ-று. (௪)

நாய்நரிமுதலாமிருகந்தாவரநரர்சுரரூர்வனநீரூர்வனவே,யீமு
தலாகிய பறவையிறந்தா லிருமுதுகுன்றர்தம்மடியினில்வைத்துத்,
தாயவள்போலுபதேசமுதல்குவர்தாயுமைதடவித்துகிலால்வீசுவள்
போயதில்வலிதிற்சிவனிழப்பார் புண்ணியராகார்தண் ணுவர்சூலம்.

(இ-ள்) விருத்தாசலத்தில்நாய்நரிமுதலானமிருகங்கள்தாவரங்கள் மனிதர்கள் தேவர்கள் நிலத்திலூர்வன ஜலத்திலூர்வனஈமுதலியபக்ஷிகள்பிராரத்வவினைமுடிந்துஇறந்தால்அவைகளைப் பெருமை தங்கியபழமலைநாதர்தமதுமடிமேல்வைத்துக்கொண்டு தாயைப்போலன்புகூர்ந்து வலச்செவியிலுபதேசஞ்செய்தருளுவார் மாதாவாகிய பெரியநாயகி யம்மையாருந்தனதுகையினாற்றடவிமுன்றானையால் வீசிப் பிறவிக்களையை மாற்றுவாள் இத்தலம் இவ்வாறானமகிமையுடையனவன்றோவென்று அந்தஸ்தலத்திற்போய் வலிதிற்பிராணனை விட்டபேர்கள் புண்ணியவான்களாகமாட்டார்கள் வைரவருடைய சூலத்தினால் குத்துண்டுகிடப்பார்கள்-எ-று. (௫)

பாலர்கள்செய்பிழைபழைய விருத்தன்பாரானதுநேர் பழமலைநாதனும்,வாலைகிழத்தியுநித்தலுமாயிரம்வன்பிழைகளைவர்களாயினுமனதா,லேலவரும்பிழைசெய்தாலோரணுவேருளமேருவினளவாமறையோர்,மூலதபோதனர்பாவமுயன்றான் மூடருமாகுவர்நீடுவர்சூலம்.

(இ-ள்) சிறுவர்கள் செய்தகுற்றத்தைப்புராதனவிருத்தனானவன் மனத்திற் குறியாமற்பொறுத்துக்கொள்வன் அதுபோன்ற பழமலைநாதரும் வாலையாகிய பெரியநாயகியம்மையாரும்இந்தஸ்தலத்தில் ஒருவன் தினந்தோறும்மனமறியாமலாயிரங்கொடிய பாவங்களைச்செய்தாலும் பொறுத்து ரக்ஷிப்பார்கள் ஆனாலும் மனமறிந்து ஓரணுமாத்திரமரியகுற்றஞ் செய்தாலும் அதுமேருவாக வளரும் அல்லாமலும்பிராமணர்களாரணமானதபசுசெய்கின்றபெரியோர்கள்ஒருபாதகத்தைச்செய்தால் அவர்கள் மூடராகப் பிறந்து தேகாந்தத்தில் வயிரவருடைய சூலத்தினாற் குத்துண்டு கிடப்பார்கள்-எ-று. (௬)

கோடையிலாரணியத்தியல்வாளைக்குளிர்புனலல்லதுகளைதணியார்தான், மூடியபாதகமன்னியதேசமுற்றிடின்முதுகிரியல்லதுதணியா, நீடியவிதனிற்றேடியபாதகநீலப்பயிரவர்சூலத்தல்லது,வீடிலதாகினுமிகுதோய்சூலம் விடுநாணரகெனுமாறுகுவரோ.

(இ-ள்) கோடைகாலத்தில்வனத்திற்றிரிகின்றவர்களுடைய சோகமானது குளிர்ந்த ஜலத்தினாலல்லாமல் மற்றொன்றினாலுந்தணியமாட்டாது அதுபோலப் பரஸ்தலங்களிற்செய்த மகா பாதகங்கள் விருத்தாசலத்தில்நீங்கவேண்டுமேயல்லாமல்மற்றொருஸ்தலத்தில்நீ

ங்கமாட்டாது பெருமையிருந்த இத்தலஸ்தலத்திற்செய்தபாதகங்கள்
கருமைதிறம்பொருந்திய வயிரவருடைய சூலத்தினு லல்லாமல்மற்
றொன்றினாலும் நீங்கமாட்டாது நாகவுருத்தத்திலும் அதிசவுருத்தத்
தைச்செய்கின்ற அந்தச்சூலம் விடுதலையாகுங்காலத்தில் நாககுழி
யாகிய காவலிற்கிடந்துழல்வார்கள்-எ-று. (எ)

சற்குருவாலுபதேசம்பெற்றுச்சம்புவின்மந்திரமஞ்சபதத்தை
யு, மற்றையிலைந்நூற்றையாயிரமேயவரையினுமக்கரலக்கங்கூறினு,
முற்றியபாதகமற்றிடைறபாகுவர்மொய்ம்புறுமனைவியுமர்பிகைவடி
வாம்,பற்பலகாலமு மெய்துவர்வேதம் பகரினுமுற்படி யப்படிப
லனே.

(இ-ள்) விருத்தாசலத்தில்பரமாசாரியரால் பரமசிவனுடையமந்தி
ரமாகியபஞ்சாக்ஷரத்வதூபதேசம் பெற்றுக்கொண்டுஐந்தோறு
ம்ஐயாயிரத்தைந்நூறுதரம ஜெபஞ்செய்தாலும் அக்ஷரலக்ஷஜெப
ஞ்செய்தாலும் முதிர்ந்துள்ளபாதகங்கள் நீங்கிச்சிவஸ்வரூபமாவார்
கள் அவர்கள் தோள்சேருகின்ற மனையவளும் சத்திசாரூபமா
வாள் எக்காலமும் அந்த ஸ்வரூபத்தையே பெற்றிருப்பார்கள் அல்
லாமலும் வேதாந்தியயனஞ்செய்தாலும் முற்கூறியபதமெதுவோ
அதனையடைவார்கள்-எ-று. (அ)

சத்துருநாசந்தருமுதுகுன்றிற் றங்கிவணங்கித்தவமுயல்வார்
களை,வித்தகமாதவர்புதமேதள்பணிகுவர்வெருவுவறுமைபுஞ்சிறுதாய்
பெறுதா, யத்தையர்மைத்துனியொக்கவதிர்தவரப்படிமருவுவளாத
வினம்பல, மித்தலம்விட்டுக்காசியிலேகினு மில்லைதவப்பலமுத்தி
யுமிலையே.

(இ-ள்) சத்துருவாகிய மகாபாதகங்களை நாசஞ்செய்கின்றபழம
லையிற்பொருந்திப் பழமலைநாதனைவணங்கித் தவஞ்செய்பவர்களை
ஞானசொரூபமாகிய பெரியோர்களுந் தேவர்களுந் தெண்டனிட்
டுப்பயந்துநிற்பார்கள்உமையவளுஞ்சிறியதாயார்பெரியதாயார் அ
த்தையர் மைத்துனி சகோதரிகளைப்போல வந்து மருவியிருப்பா
ள் ஆகையால் சிதம்பரமும் இந்தஸ்தலமு மல்லாமல் காசிதலத்திற்
குச்சென்றாலும் தபோபலமுமில்லை மோக்ஷமுமில்லை-எ-று. (கூ)

கூனர்களூமர்க்ள்செவிடர்கண்மூடவோர் குருடர்கள்பற்பல
பிணியினரங்கத, நூனர்கள் முத்தா நதியினின்மூழ்கி புமையுடனி
றைவனைவந்தித்தழகார், மேனியரானவரளவிலர்நதிகளின்வெண்ம
ணல்புவிமணறாகைமழையிற், றுனமர்தாரையையளவிடின்முது
கிரிதன்னில்வரம்பெற்றுனையளக்கும்.

(இ-ள்) கூனர்கள்-ஊமர்கள்-செவிடர்கள்-மூடவர்கள்-குருடர்க
ள்-பலவியாதிகளையுடையவர்கள் அவயவக்குறைவுள்ளவர்கள் ஆகிய
இவர்கள்திருமணிமுத்தா நதியில்ஸ்நானஞ்செய்துபெரியநாயகியா

ளையும் பழமலைநாதனையும் வழிபட்டுநின்று திவ்விய சரீரத்தைப் பெற்றபேர்க ளளவில்லாதவர்கள் ஆறுகளிலுள்ள வெள்ளிய மணல்களையும் பூமியிலுள்ள மணல்களையும் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களையும் மழைத்தாரைகளையும் இவ்வளவென் றளவிட்டுச்சொன்னால் விருத்தாசலத்தில்வந்து வரம்பெற்றபேர்களையு மளவிட்டுச்சொல்லலாம்-எ-று. (௰)

அத்திரிவசிட்டன்வித்தகபோதாயனர்சமதக்கினி கும்பன்காசி
பன், வைத்தசதக்கினருரோமசர்கண் ணுவர் வர்ச்சருமிச்சைவரம்ப
லபெற்றார், சத்தவுருத்திரர் நற்கிரகம்பிரசாபதிதிக்குளபாலர்வசுக்க
ண், மெத்துசுடர்த்திருவாணிபுலோமிசை மெய்த்தவமுற்றனர் தற்
பதமுற்றார்.

(இ-ள்) அத்திரிரிஷி-வசிஷ்டரிஷி - ஞானசொரூபமாகிய போதாயனரிஷி - ஜமதக்கினிரிஷி - கும்பரிஷி-காசிபரிஷி - சிவபதங்களையிதயத்தில்வைத்த சதக்கினரிஷி-உரோமசரிஷி - கண்ணுவரிஷி-வர்ச்சரிஷி - முதலான மஹாரிஷிகளும் இந்தஸ்தலத்திற் றவஞ்செய்து அவரவர்கள் விரும்பிய பலவரங்களையும் பெற்றார்கள் அல்லாமலும் சப்தகோடி மகாமந்திரேஸ்வரர்கள்-பிரகஸ்பதி பகவான்-பிரம்மா-அஷ்டதிக்குப்பாலகர்கள் - அஷ்டவசுக்கள் - அதிகரூபலாவண்யத்தையுடைய மகாலட்சுமி-சரஸ்வதி-இந்திராணி - இவர்களெல்லாரும் இந்தஸ்தலத்தில் உண்மையான தவத்தைச்செய்து தங்கள் தங்கட்குரிய பதவிகளைப்பெற்றார்கள்-எ-று. (௰௧)

தானந்தருமந்தவமேயாகந் தத்துவமறியார் முத்தியைவிழை
யி, லீனங்களையுந் திருமுதுகுன்றே யிடமாயுறைவா ரடைவார்கதி
யின், ஞானந்தவமுள ஞானிகள்சிலநா ளெண்ணினுமடைவர்க ளெ
ண்ணினபதமே, யானந்தம்பெறு முன்னர்விமானத் தமருலகெங்
கணு முலவுவரவரே.

(இ-ள்) தானம்-தருமம்- தவம்-யாகம் - தத்துவமென்கின்றஇவைகளிலொன்றுந் தெரியாதவர்களானாலும் மோக்ஷமடைய விருப்பங்கொண்டவர் சகலபாவங்களையும் பரிகரிக்கின்ற அழகிய விருத்தாசலமே ஸ்தானமாக வசித்திருப்பார்களாகில் மோக்ஷத்தை யடைவார்கள் ஞானமுந் தவமுநிறைந்த ஞானவான்கள் சிறிதுகாலம்வசித்திருந்தாலும் அவர்கள்விரும்பிய நித்தியானந்தபதத்தைப்பெறுவார்கள் அவ்வானந்தத்தை யடைதற்குமுன்னமே தெய்வ விமானத்திலேறித் தெய்வலோகமுழுதுஞ் சஞ்சரிப்பார்கள்-எ-று. (௰௨)

ஓரொருகான்முதுகுன்றையுரைத்தவருயர்மதில்சிகராதிகள் சி
வபோதம்,பேர்செவியுற்றனர்போதகர்தீவினைபிரகாசித்திருள்போ
லவகன்றிடு, மூரிதுதன்னிலிருந்துவிமானத் துயர்பதமேறினர்த
ங்களைவழிபிற்,சூரியர்பாலர்சுவர்க்கபதத்தினர் தூயரனர்ச்சனைபோ
ன்முயல்வாரே.

(இ-ள்) ஒருதரம் வாக்கினால் விருத்தகிரியென்று துதிசெய்தவர்களுடைய பாவம் உயர்ந்தமதில்கள் கோபுரங்கள் முதலானவைகளைக்கட்டினவர்களுடைய பாவநீங்குவதுபோலவும் ஞானத்தைப்பெரியசெவியினிடமாகக் கேட்டவர்களுடைய பாவ நீங்குவதுபோலவும் அதையுபதேசித்தவர்களுடையபாவநீங்குவதுபோலவும் சூரியனைக்கண்ட விருணீங்குவதுபோலவும் நீங்கிப்போம் அல்லாமலும் இந்தஸ்தலத்திலிருந்துமரித்து விமானத்திலேறிஉயர்ந்தசிவபதவிக்குச்செல்பவர்களைவழியிற்கண்டபன்னிரண்டுசூரியர்களும்அஷ்டதிக்குப்பாலர்களும்தேவர்களும்வணங்கிநின்றுபரிசுத்தனாகிய பரமசிவனை அர்ச்சனைசெய்வதுபோல அர்ச்சித்து வழிபடுவார்கள்-எ-று.()

மூன்றுலகத்துக்கடவுளர்தம்மினு முதுகிரிநாதர்க்கிணையிலைய
துபோ,' லேன்றவிருத்தகிரிக்கொருதலமு மிணையிலையின்றலவெக்
காலத்து, மூன்றியவன்னியினேரிலைநிறையு முண்டியையாவர்க்கு
தவினுமவரோ, தோன்றுவர்சிவபுரிசிவனுக்கேறுவ துடியளவிபவர்சி
வனாகுவரே.

(இ-ள்) திரிலோகங்களிலுள்ளதெய்வங்களிலும்பழமலைநாதருக்குச்சமானமானதெய்வமில்லை அதுபோலஇப்போதுமாத்திரமல்லஎப்போதைக்கும்உயர்ந்தவிருத்தாசலத்திற்குச்சமானமான ஒருஸ்தலமுமில்லை இந்தஸ்தலத்தில் இராமணவன்னிமரத்தினேரிலையிலடங்கினவுண்டியை எவர்களுக்குக் கொடுத்தாலும் கொடுத்தபேர்கள் சிவலோகத்தில்விளங்குவார்கள் அல்லாமலும் பரமசிவனுக்கேற்றதிரவியங்களையற்பமாயினுங்கொடுத்தபேர்கள்சிவசொரூபமாவார்கள். ()

திருமுதுகுன்றின்மடமுமியற்றிச் சிவனடியாருக் குதவுவரா
யிற், கருதருமெல்லையிலோர்பொழுதிற்கோர்கற்பஞ்சிவலோகத்தி
னில்வாழ்வார், தெருவுகளுஞ்செய்தந்தணர்கட்குச் செழுமனைகட்
டிப்புவியுமளித்தால், வருபலன்முற்படியப்படியாகுமணிமுத்தாந
திவண்மையுரைப்பாம்.

*(இ-ள்) அழகிய விருத்தாசலத்தில் மடாலயங்கட்டிச் சிவனடியார்கள் வசிக்கும்படி கொடுப்பார்களேயானால் அவர்கள் வசிக்கின்ற காலவளவையில் ஒவ்வொருபொழுதிற்கு ஒவ்வொரு கற்பகால பரியந்தம் கயிலாயத்தில்வாழ்வார்கள் தெருக்களுஞ்செய்துபிராமணர்களுக்குவளம்பொருந்தியவீடுங்கட்டிப்பூமியுங்கொடுத்தால் கொடுத்தபேர்கள் முற்கூறியபலனெதுவோ அதனையடைவார்கள் இப்பால்திருமணிமுத்தாநதியினுடைய வளப்பத்தைச்சொல்லுவாம்-எ-று.

தலச்சருக்க முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம்-௨-இ, திருவிருத்தம்-௭௩.

உ

மூன்றாவது

# தீர்த்தச்சருக்கம்.

வேறு.

குருமாமணிபோல்விளங்கமுது குன்றர்கோயிற்குணபாலிற்
றிருமால்பிரமன்முனிவர்குழாஞ் சித்தர்யோகர்முன்னாளி
லருமாதவத்தின்மிகமுடுகி யாறாதாரவழிதிறந்து
பெருமானுண்மைதியானிக்கப் பேரானந்தம்பெருகியதால்.

(இ-ள்) நிறம்பொருந்திய மாணிக்கம்போல விளங்குகின்ற பழமலைநாதருடையசந்நிதிக்குக்கீழ்ப்புறத்தில் விஷ்ணுபிர்ம்மா மகாரிஷிகூட்டங்கள் சித்தர்கள் யோகீஸ்வரர்கள்இவர்களனைவருங்கூடியிருந்து முற்காலத்தில்அரிதாகிய மகாதவத்தில்மிகவும்வேகமாகநடத்தி மூலாதாரஞ்-சுவாதிஷ்டானம்-மணிபூரகம்-அனாகதம்-விசுத்தி-ஆக்கினையென்னுமாறாதாரங்களின் வழிகளைத்திறந்து பரமசிவனுடைய உண்மையானஞானசொரூபத்தைத்தியானஞ்செய்தபோது அந்தச்சொரூபதியானத்தில்பிரமானந்தப்பெருக்குண்டாயிற்று-எ-று.

பேரானந்தப்பெருங்கடலைப் பெருமான்கரந்தானதியாக்கிச்
சீரார்முத்தாநதியென்று திருநாமஞ்சிவனருள
வேரார்சத்தித்திருவுருவா யிறைவற்கினிதாயெல்லார்க்கு
நீராய்விளங்கித்தீவினைக்கு நெருப்பாய்நமக்குக்குளிராமல்.

(இ-ள்) பிரமானந்தமாகிய பெரியசமுத்திரத்தைப் பரமசிவன் தம்முடைய திருக்கரத்தாலமைத்து நதியாகச்செய்து சிறப்புள்ள திருமணிமுத்தாநதியென்னும் பிரகாசம்பொருந்திய திருப்பெயருங்கொடுத்தருளியபடியால் அந்தநதியானது அழகியசிற்சத்தியினது ஸ்வரூபமாகிப் பரமசிவனுக்கு இனிமையுடையதாகி மற்றெல்லோருக்கும் ஜலரூபமாகத்தோன்றிப் பாதகங்களுக்கு நெருப்பாகி நமக்கு அதிசீதளமாகி விளங்கும்-எ-று. (௨)

மணிமுத்தாற்றிற்காற்றணைந்த மனிதர்பறவைமிருகங்க
டணிவில்கிருமிகீடங்க டருப்புற்கொடிகள்சராசரங்க
ளணியதேவருலகாளு மாற்றிற்படிந்தோர்தமக்கன்புந்
துணிவுந்தவமும்பேரறிவுந் தொண்டுந்தொழும்புமுளதாமால்.

(இ-ள்) திருமணிமுத்தாநதியிற் படிந்துவருகின்றகாற்றால் தீண்டப்பெற்ற மனிதர்கள் பறவைகள் மிருகங்கள் அளவிறந்த புழுக்

கள் வண்டுகள் மரங்கள் புல்லுகள் கொடிகள் முதலிய சராசரவுயிர்களனைத்தும் அழகிய தேவருலகத்தில் அரசுசெய்யும் அர்த்த நதியினிடத்திற்சென்று ஸ்நானஞ்செய்தபேர்களுக்குக் கெடாத அன்பும் தெளிவும் தவமும் பரஞானமும் சிவபத்திக்குரிய அடிமைத்திறமும் தமக்கு அடிமைகளும் உண்டாகும்-எ-று. (௫)

அருளும்பொருளுங்கைகூடு மவலங்களையுங்கவலையறு
மிருளுமடியும்பிடியும்போ மீறில்செல்வந்தழைத்தோங்கும்
தெருளுந்திருவுங்குடிகொள்ளுஞ் சித்திமுத்தியுண்டாகு
மருளும்பேயுநோயும்போமணிமுத்தாற்றின்மூழ்கினர்க்கே.

(இ-ள்) திருமணிமுத்தாநதியினில் ஸ்நானஞ்செய்தவர்களுக்குச் சிவகடாட்சமும் சிவஞானச்செல்வமுங் கைப்பலமுங்கிவரும், சகல வருத்தமு நீங்கும், சஞ்சலமொழிந்துபோம், அஞ்ஞானமுஞ்சோம்பலுந் தரித்திரமும் விட்டுப்போம், அளவில்லாத ஐசுவரியங்கள் மேன்மேலுமதிகரிக்கும், ஞானமும் மஹாலக்ஷ்மியும் எப்போது நீங்காமற்குடிகொண்டிருக்கும், அஷ்டசித்தியும் மோட்சமும் உண்டாகும், மயக்கமும்பைசாசம்வியாதியும் ஒழிந்துவிடும்-எ-று. ()

சூதருரைத்தாரெங்கிருந்துஞ் சுத்தவிருத்தகிரிக்கேநந்
சாதலிருக்குமுத்தநதி கடவுள்கரத்தாலமைந்துளதாற்
சீதநதியின்மூழ்குங்கால் செல்வமுண்டாமசவுண்டா
மீதுமணிபோம்புவியிழந்தோர் மீண்டும்புவியாள்வார்.

(இ-ள்) சூதமஹாரிஷியானவர் நாமெங்கிருந்தாலு நமது அபேக்ஷை பரிசுத்தமுள்ள விருத்தாசலத்தினிடத்திலே நீங்காதிருக்குமென்று திருவுளம்பற்றியருளினார் அப்படிப்பட்ட விருத்தாசலத்தின்கண்ணுள்ள திருமணிமுத்தாநதியானது பரமசிவன் தமது திருக்கரங்களால் அழைக்கப்பட்டிருக்கின்றபடியால் குளிர்ச்சிபொருந்திய அந்நதியில் ஸ்நானஞ்செய்பவர்களுக்குச் செல்வமுண்டாகும், சந்தானமுண்டாகும், மேலிடுகின்றவியாதிகணீங்கும், பூமியையிழந்தவர்கள் மறுபடியும் பூமியைப்பெற்று அரசாக்ஷிசெய்வார்கள்-எ-று. ()

ஒருக்கால்முத்தநதிமூழ்கி லோராயிரங்கோதானபல
மருக்காதுண்டாமவர்பிறரை நினைக்கிலவர்போய்க்கதிசேர்வர்
திருக்காய்மூழ்கியோரிரவு தரிக்கிற்சிவலோகஞ்சேர்வர்
செருக்காற்பன்னாண்மூழ்கிடுவார் சேருங்கதிக்கோரளவின்றே.

(இ-ள்) திருமணிமுத்தாநதியினிடத்திற்போய் ஒருதரம்ஸ்நானம் பண்ணினால் அவர்களுக்கு ஆயிரங்கோதானஞ்செய்தபலன் குறையாமலுண்டாகும் அவர்கள் முழுதும்போது தங்களுக்கிஷ்டமான பேர்களைநினைத்தால் அவர்களும்மோட்சத்தையடைவார்கள் மனங்

களித்து ஸ்நானஞ்செய்து அந்தத்தலத்தில் ஓரிரவு தங்கியிருந்தால் அவர்கள் சிவலோகத்தைப் பெறுவார்கள்-ஆதலாற் சந்தோஷமாகப் பலகாலமும் ஸ்நானஞ்செய்து அவிடத்தில் வசிக்கின்றபேர்கள் பெறுகின்ற மோக்ஷத்துக்கு அளவில்லை—எ-று. (௬)

முத்தாநதியைத்தரிசிக்கமுயன்றாநிற்கப்பரிசிக்கப்
பத்தால்வயக்கநீராடப்பானுமுன்னர்பனிபோலக்
கொத்தார்பாவக்குழுக்கமெலாங்குறைந்துகுறைந்துபற்றறமேல்
வித்தாய்மூழ்கிச்சிவபூசைவிளைப்பார்பெருமையுளப்பாரார்

(இ-ள்) திருமணி முத்தாநதியைத் தரிசனஞ்செய்தாலும் தீர்த்தப்பிரவாகத்தைப் பார்ப்போம் அல்லது ஸ்நானஞ்செய்வோம் வாருங்களென்று ஒருவருடன் சொல்லி முயன்றுநின்றாலும் கையினாற் றீண்டிப் புரோக்ஷித்துக்கொண்டாலும் பத்தியினாலந்த நதிதீரத்தில் வாசஞ்செய்தாலும் ஸ்நானஞ்செய்தாலும் அவர்கள் செய்துகொண்டிருந்த பாவத்திரளெல்லாம் சூரியனைக்கண்ட பனி கெடுவதுபோலக் குறைந்து குறைந்து வேரோடுங் கெட்டுப்போகும் ஆதலால் அந்நதியினிடத்தில அன்புகொண்டு ஸ்நானம்பண்ணிச் சிவபூசைசெய்பவர்களுடைய பெருமையை யிவ்வளவென்று பட்டிட்டுச் சொல்வதற்கு எவ்வளவாலும்முடியாது—எ-று. (௭)

கதிரின்மதியங்கலந்திடுநாள்கதிர்ப்பூரணையாடிப்பிறப்பு
மதிசேர்தைமாதப்பிறப்புமற்றைமாதப்பிறப்புகளே
விதியாமுடுக்கள்விதிபாதம்விறல்வைகாசிப்பூரணையி
லதிகமாசிமாதத்திலந்தமகத்திலிந்நாளில்.

(இ-ள்) சூரியனோடு சந்திரன் கலக்கின்ற அமாவாசை பிரகாசம் பொருந்திய பர்வம் ஆடிமாதப்பிறப்பாகிய தக்ஷிணாயன புண்ணியகாலம் தைமாதப் பிறப்பாகிய உத்தராயண புண்ணியகாலம் மற்றச்சங்கராந்தி புண்ணியகாலங்கள் விசேஷமாக விதிக்கப்பட்ட திருவாதிரையாகிய நக்ஷத்திரங்கள் மகாவியதிபாதம் பெருமை பொருந்திய வைசாக பௌர்ணமி சிறப்புப்பொருந்திய மாசிமாதம் மாசிமகம் ஆகிய இப்படிப்பட்ட புண்ணியகாலங்களில்—எ-று. (௮)

புயன்றருமணிமுத்தாறுதனின்மூழ்கித்தானமேதேனு
மியன்றதளித்துச்சிவன்பாதமிறைஞ்சிமுன்றாவலம்வந்து
பயின்றபூசைசெய்வார்தப்பலத்தைநூறுவருடத்தில்
வியந்துமுடியாதவரிருந்தாவிளங்குந்தேசஞ்சிவலோகம்.

(இ-ள்) திருமணி முத்தாநதியினிடத்திற் சென்று ஸ்நானஞ்செய்து ஏதாகிலுமியன்றமாத்திரம் சிவனடியார்களுக்குத் தானமாகக்கொடுத்து பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி அவரது ஆலயத்தை

மூன்று பிரதக்ஷணஞ்செய்து அவரை விதியோடு பூசை செய்பவர்களுடைய பலனை நூறுவருஷபரியந்தம் சொன்னாலும் சொல்லிமுடியாது அப்படிப்பட்ட பெரியோர்கள் வசிக்கின்ற ஸ்தலமே சிவலோகமாகும்—எ-று. (௯)

கங்கையமுனைபிரயாகைகலைகாவிரிசந்திரபாகை
தங்கோதாவிரிதேவிசரயுநர்மதைகோமதியே
யங்கண்டகிமந்தாகினியோடயிரஞ்சனைமந்தகைசோணை
நங்கவுசிகைசிந்துசங்கநல்லகேயைசரசுக்கள்.

(இ-ள்) கங்கையமுனை பிரயாகை சரஸ்வதி அலைகளையுடைய காவேரி சந்திரபுஷ்கரணிபொருந்திய கோதாவிரிசரயு நருமதை கோமதி அழகிய கண்டகி மந்தாகினி நான்மணலைக்கொழிக்கின்ற அஞ்சன மந்தகை சோணை நலமிகுந்த கௌசிகை சிந்துசங்கம் நன்மைதங்கியகேயை என்று சொல்லுகின்ற பலதீர்த்தங்களிலும்—எ-று. ()

பூமியந்தரமாகாயம்புகலுமற்றத்தீர்த்தங்கள்
காயர்நதியுங்கருங்கடலுங்கலத்தன்முதலாந்தீர்த்தங்க
டாமங்கேபோய்மூழ்குபலன்றன்னிற்கோடிபலனதிகம்
வாமமணிமுத்தாநதியைவணங்கியொருநாண்மூழ்கினர்க்கே.

(இ-ள்) பூமி அந்தர சுவர்க்கமென்று சொல்லப்பட்ட மூவுலகிலுள்ள தீர்த்தங்களிலுஞ் சொல்லுகின்ற ஏனைய ஸ்தானங்களிலுள்ள தீர்த்தங்களிலும் அழகிய நதிகளிலும் சமுத்திரத்திலும் ஒன்றோடொன்று சங்கமமாகின்ற தீர்த்தங்களிலும் இன்னு மிதுமுதலாகிய பல தீர்த்தங்களிலும் வருத்தத்தோடுஞ்சென்று ஸ்நானஞ்செய்கின்றவர்களுக்கு உண்டாகின்ற பலனைப்பார்க்கிலும் அழகு பொருந்திய திருமணி முத்தா நதியிடத்திற் போய் நமஸ்காரம்பண்ணி ஒருநாள் ஸ்நானஞ் செய்தபேர்களுக்குக் கோடிபங்கு அதிகமான பலனுண்டாகும்—எ-று. (௰௧)

எடுத்தமுத்தாநதிக்கரையில்யாகம்பண்ணிற்சதசிவனு
மடுத்தமாசிமகந்தன்னிலந்தநீரைக்குடத்தெடுத்து
நடக்கிலடிக்கோர்பரிமேதநல்லயாகபலனுண்டாந்
தொடுத்ததலங்களெங்கிருந்துந்துதிக்கினினைக்கிற்பிறப்பறுமே.

(இ-ள்) உயர்த்திக்கூறிய திருமணிமுத்தா நதிக்கரையிலிருந்துயாதமொருவர் யாகஞ்செய்தால் அவர்கள் சதாசிவ சொரூபமாவார்கள் மாசிமாதத்தில் வருகின்ற மகாநக்ஷத்திரத்தில் அந்தநதியினிடத்திற்சென்று ஸ்நானஞ்செய்து சுவாமிக்கு அபிஷேகஞ்செய்ய அந்தஜலத்தைக் கும்பத்திலேந்திக்கொண்டு நடந்தால் அடிஒன்றுக்கு நன்மைபொருந்திய அஸ்வமேதயாக பலனைக்கொடுக்கும் அல்லாமலும்

எந்தத்தலங்களில் வசித்திருந்த போதிலும் பழமலையை வாக்கினால் தோத்திரஞ்செய்தாலும் மனத்தினால்நினைத்தாலும்பிறவிநீங்கும். ().

கும்பமுனிவனருள்பெற்றுக்குலவுஞ்சுவேதமுனியென்பா
னம்புபருவமாசிமகஞாயிறுதிலாயட்டமிநாட்
டம்பமுத்தாநதிமூழ்கித்தம்பிரானுக்காட்டியநீர்
விம்பதலத்திற்சுவேதநதிவெள்ளாறெனப்பேர்பெற்றதுவே.

(இ-ள்) அகஸ்திய முனிவனிடத்தில் உபதேசம் பெற்றுப்பிரகாசிக்கப்பட்ட சுவேதமுனிவரானவர் ஆசிக்கத்தக்க பர்வம் மாசிமகம் ஆதித்தவாரம் திருவாதிரை நட்சத்திரம் அஷ்டமிதிதி இப்படிப்பட்டதினங்களில்நிலைபெற்ற திருமணிமுத்தாநதியினிடத்தில்ஸ்நானஞ்செய்துபின்புபரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்த திருமஞ்சனமானது வட்டமாகிய இப்பூமியிற்பெருகித்தேவபாஷையில்சுவேதநதியென்றும்தமிழ்பாஷையில்வெள்ளாறென்றும்பெயர்பெற்றது—எ-று. ()

அத்தன்முதுகுன்றமர்ந்தபிரானரியதலத்தில்வந்தெய்தி
முத்தன்கும்பமுனிவன்றன்முன்னேநின்றசயரோகன் [பல்
சொத்தையெயிற்றன்குறைந்தகையன் குட்டநோயன்முடையுடம்
மத்தமுயலகன்னடுத்தோன்வருந்தியறுவர்மொழிகின்றார்.

(இ-ள்) எமதுபிதாவாகிய பழமலைநாதருடைய அரிதாகிய விருத்தாசலத்தில்வந்து மோக்ஷாதிபாகிய அகஸ்தியர் முன்னே நின்று க்ஷயரோகத்தை யுடையவன் சொத்தைப் பற்களை யுடையவன் குறைந்தகைகளையுடையவன் குஷ்டவியாதியை யுடையவன் நாற்றம்பொருந்திய சரீரத்தை யுடையவன் உன்மத்தமாகிய முயலகனென்னும் வலியையுடையவன் ஆகிய இவர்கள் ஆறுபேரும் வருத்தத்தையடைந்து அகஸ்திய முனிவரைப்பார்த்து விண்ணப்பஞ் செய்கின்றார்கள்—எ-று. (௰௪)

பிணியானின்றுதவிக்கின்றோம்பெரியகும்பக்குறுமுனியே
பணியாவடியோமுன்னென்னபாவஞ்செய்தோமெனப்பகர்ந்தார்
தணியாப்பாவமுன்செய்துநரகினெடுங்காலங்கிடந்தி
ரணியானரகசேடங்களயில்வான்வந்தீரெனவுரைத்து.

(இ-ள்) பெரிதாகிய கலசத்தினிடமாகவந்த அகஸ்தியமுனிவரே நாங்களறுவரும்வியாதியால்தாபமடைந்திருக்கின்றோம் அடியேங்கள் முற்சென்னத்தில் என்னபாதகஞ் செய்தோமென்றுவணங்கி விண்ணப்பஞ்செய்தார்கள் அப்பொழுது அகஸ்தியமுனிவர் கிருபாகடாக்ஷம்வைத்து நீங்கள்முற்சென்னத்தில் மகாபாதகங்களைச்செய்து அதனால் நரகத்தில் நெடுங்காலமிருந்து வருந்தினீர்கள இப்போது அந்த நரகசேடங்களை யனுபவிக்கும்படி பிறவியெடுத்தீர்களென்றுசொல்லி—எ-று. (௰௫)

மருவுங்கயநோய்மறையோனைவதைத்துக்குருதேவியைத்தீண்டி
யொருவன்குட்டமுடைபிறனில்விழைவாற்காளாற்சொத்தைப்பற்
பருகிச்சுராயாற்குறைந்தகரம்பயிலுமுயலகன்பொன்னைத்
திருடியுமக்குவந்ததெனத்திருட்டவழியுமுனியுரைப்பான்.

(இ-ள்) பிராமணனைக் கொன்றபடியால் துன்பம் பொருந்திய க்ஷயரோகமும் குருபத்தினியைத் தீண்டினபடியால் யாவரு மஞ்சுகின்ற குஷ்டவியாதியும் பரதாரத்தை யிச்சித்தபடியால் நாற்றம் பொருந்திய சரீரமும் கோட்சொன்ன படியால் சொத்தைப் பற்களும் மதுபானஞ்செய்தபடியால் அழுகிய விரலையுடைய கைகளும் பொன்னைக் களவுசெய்தபடியால் முயலகனென்னும் வியாதியும் உங்களுக்குவந்ததென்றுசொல்லி அந்தவியாதிநிவர்த்தியாகு மார்க்கமும் சொல்லுகிறார் அகஸ்தியமுனிவர்—எ-று. (௰௬)

மாசிமாதநாண்முப்பான்மணிமுத்தாறுதனின்மூழ்கி
யீசன்முதுகுன்றம்பரனையிறைஞ்சிற்பிணிகளறுமென்று
ஞூசிலகுமுத்தாற்றிலையாறளவுநீராடிப்
பாசமறுக்குஞ்சிவன்பாதம்பணிந்துமுனியைப்பணிந்தார்கள்.

(இ-ள்) நீங்களாறுபேரும் போய் திருமணி முத்தாநதியி னிடத்தில் மாசிமாத முப்பதுநாளும் ஸ்நானம் பண்ணிப் பரமசிவனாகிய எமது பழமலைநாயகனை வணங்கினால் உங்கள் வியாதிகணீங்குமென்றுசொன்னார் அதைக்கேட்ட குற்றமற்ற அவ்வாறு பேர்களும் போய்த் திருமணிமுத்தாநதியில் மாசிமாதம் முப்பதுநாள் வரைக்கும் ஸ்நானம்பண்ணி பாசவிமோசனஞ் செய்கின்ற பழமலை நாதருடைய திருவடிகளை வணங்கிப் பின்பு அகஸ்தியமுனிவ ரிடத்திற் குவந்து வணங்கினார்கள்—எ-று. (௰௭)

மேகமகன்றவிளங்கதிர்போன்மெய்பெற்றவரைமுனிநோக்கி
மோகநோய்முன்வந்ததுவுமுத்தாநதியாற்போனதுவு
நாகமிருந்தார்நயந்துதவுநாட்டிற்காட்டிப்போமென்று
ராகம்விளங்கிநின்றவருமவனிமுழுதுங்காட்டினரால்.

(இ-ள்) மேகத்தில் மறைபட்டிருந்து அதினின்று நீங்கிய இளஞ்சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற சரீரம்பெற்ற அவ்வாறுவர்களையும் அகஸ்தியமுனிவர்பார்த்து நீங்கள்முற்செனனத்திற் செய்தபாதகங்களாலடைந்திருந்த வியாதிகளும் திருமணிமுத்தாநதியில்ஸ்நானம்பண்ணினதில் அந்தவியாதிகளெல்லாம் நிவர்த்தியானதும்பழமலைநாதர் உங்களுக்குக் கிருபை செய்ததும் நாட்டிலுள்ளவர்களெல்லாம் அறியும்படி காண்பித்துச்சொல்லிப்போங்களென்று அகஸ்தியமுனிவர்சொல்லியருளினார் அப்படியே நல்லதென்று முனிவரிடத்தில்விடைபெற்றுக்கொண்டு சரீரவியாதிகணீங்கித் தேஜசைப்பெ

அந்த ஆறுபேர்களும் தேசங்களிலெல்லாம் அறிவித்துக்கொண்டு போனார்கள்-எ-று. (௰௮)

பயனால்விளங்குஞ்சிலோச்சயமாம் பசர்பட்டணத்திலொருவணிக
னயமாஞ்சுகேசனவன்றனக்கு நல்லமைந்தாறவருளர்
வியனாங்கல்விகேள்வியினால் விற்கக்கொள்ளதிறத்துலாக்க
வயயாயுள்ளாரேழைக்கும் வலியோர்தமக்குநிரைகோலார்.

(இ-ள்) சர்வ நிதியினாலும் விளங்குகின்ற சிலோச்சய மென்றும் சொல்லப்பட்ட பட்டணத்தில் நீதியையுடைய சுகேசனென்னும் ஒருசெட்டியிருந்தான் அவனுக்கு நன்மைமிகுந்த ஆறுபிள்ளைகளிருந்தார்கள் அவர்கள் பெருமைபொருந்திய கல்விகேள்விகளினால் பொன்முதலியவற்றை விற்கவும் கொள்ளவும் நிறுக்கவும் உணாக்கவும் வல்லபத்தையுடையவர்கள் எளியவர்க்கும் வலியவர்களுக்கும் துலாக்கோலையொத்திருப்பார்கள்-எ-று. (௰௯)

ஆறுபேருநீதியினு லருத்தந்தேடியளகேசன்
வீறுஞ்செல்வம்போற்பொலிந்து மேவுநாளின்முதுகுன்றிற்
பேறுபெற்றார்தமைக்கேட்டுப் பெருமான்றலத்தில்வந்தெய்தித்
தேறுமணிமுத்தாநதியிற் றீர்த்தமாடிநீறணிந்து.

(இ-ள்) அந்தவர்த்தகர்களாறுபேரும் நீதிமார்க்கத்தினால்பொருள் சம்பாதித்துக் குபேரனது மகத்தான சம்பத்தைப்போற் பொலிவடைந்து வாழுகின்றகாலத்தில் பழமலையிற்சென்று பேறுபெற்றவர்களைக் கேள்விப்பட்டுப் பரமசிவனுடைய ஸ்தலமாகிய விருத்தாசலத்திற்குவந்து தெளிவுபொருந்திய நீரையுடைய திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து விபூதியையணிந்துகொண்டு-எ-று. (௨௰)

வணிகர்நியமமுடித்தேறி மணியும்பொன்னும்வகைத்துகிலும்
பணியுமனையும்விளைநிலமும் பசுவுமறையோர்தமக்குதவி
யணியவுறவாமுதுகுன்றி லருமைப்பெருமான்பதம்பணிந்து
நணியமுத்தாநதிக்கரையி னல்லமரத்தின்கிழிருந்தார்.

(இ-ள்) செட்டிபிள்ளைகள் ஆறுபேரும் தங்களுடைய நித்தியநியமங்களை முடித்துக்கொண்டு கரைமேல்வந்து பிராமணர்களுக்குச் சுவர்ணமும் வகைவகையாகிய வஸ்திரங்களும் ஆபரணங்களும் வீடுகளும் விளைநிலங்களும் பசுக்களுந் தானங்கொடுத்து நெருங்கியவுறவாகிவிளங்குகின்ற பழமலையின் கண்ணெழுந்தருளிய அருமையாகிய பரமசிவனுடைய திருவடிகளைவணங்கித் திரும்பிவந்து அந்தத் திருமணிமுத்தாநதிக்கரையிற்பொருந்திய நன்மையுள்ளவிருக்ஷத்தி னிழலிலிருந்தார்கள்-எ-று. (௨௧)

அந்நேரத்திலொருபிறவிக் குருடனனேகதூரத்தான்
முன்னேயொருவன்கோல்காட்ட வந்தான்முத்தாநதிக்கரையின்
மன்னேருமையாள்கோயிலுக்கு வடபாலாம்புண்ணியமடுவிற்
கொன்னேமூழ்கக்கண்டெரிந்து குவளைமலர்போல்விளங்கினதால்.

(இ-ள்) அப்பொழுது ஒருபிறவிக்குருடன் வெகுதூரத்தி லிருந்து முன்னேயொருவன் கோல்பிடித்து வழிகாட்டிவரவந்தான் அவன் முத்தாநதிதீரத்தில் நிலைபெற்று அழகுபொருந்திய பெரியநாயகியாருடைய சந்நிதிக்கு வடபுறத்திலுள்ளபுண்ணியமடுவில் இதில் ஸ்நானஞ்செய்வதினா லென்னபயன் பெறலாமென்று கருதாமல் மூழ்கினவுடனே அவனுடையகண்கள் நன்றாகத்தெரிந்து குவளைமலரைப்போலப்பிரகாசித்ததினால்-எ-று. (உஉ)

சிரித்துநின்றுகூத்தாடித் திசைகளெட்டும்பார்த்தவனை
விரித்தகரமாய்வணிகரெலாம் வினவிப்புதுமையென்னென்றார்
தரித்தவிழிபெற்றவன்சொல்வான் றாகத்துடனேயான்மூழ்கப்
பருத்தவொருவனொருசத்தம் பகர்ந்தான்செவியிலஃதறியேன்.

(இ-ள்) அவன் நகைத்துநின்று சந்தோஷத்தினால்கூத்தாடி எட்டுத்திசைகளையும்பார்த்தான் அப்படிபார்த்தபுண்ணியபுருஷனைமரத்தினிழலிலிருந்த செட்டிப்பிள்ளைகளாறுபேரும் கையைவிரித்துக்கொண்டுஎன்னஆச்சரியம்நடந்ததென்றுகேட்டார்கள் அப்படிகேட்டவர்களுக்குமுன்புபிறவிக்குருடாயிருந்து இப்போதுகண்களைப்பெற்றஅந்தப்புண்ணியபுருஷன்சொல்லுகின்றான் நான்இந்தமடுவினில் அதிகதாகத்துடன்மூழ்கினபொழுது விஸ்வரூபத்தையுடைய ஒருமகாபுருஷன்வந்து என்காதினிடத்திலொருசத்தத்தைச்சொன்னான் அதை இன்னதென்று தெரிந்துகொள்ளாதவனாகி-எ-று. (உங)

ஆகாவென்றுநானலற வவன்றான்பிடித்துவளைத்தென்னை
போகாதேயென்றிருவிழியிற் பொருந்துமருந்துதனையிட்டான்
சேகார்குருட்டுவிழிதெரிந்து சிந்தைதானுந்தெளிதலினா
லேகாதேயென்றவனழகை யானும்பார்த்தேனென்சொல்கேன்.

(இ-ள்) ஆ-ஆ-வென்று நானலறினபொழுதுபோய்விடாதேயென்றுசொல்லி அந்தமகாபுருஷன் என்னைப்பிடித்துக் கழுத்தைவளைத்து எனது இரண்டுகண்களிலும் பொருந்தும்படி மருந்தைத் தடவினான் அப்பொழுது நெடுநாளாயிருந்த குருட்டுத்தன்மை நீங்கிக் கண்கள்தெரிந்து மனமும் தெளிந்தபடியினால் நானும் அந்தமகாபுருஷனைப்போய் விடாதேயென்றுசொல்லி அவருடைய அழகைப்பார்த்தேன்-எ-று. (உச)

உண்டாலன்றோபசிநீங்கு முலகநீதியவனழகைக்
கண்டவுடனேபசிநீங்குங் கமலமுகமுங்கண்மூன்றும்

விண்டாவிநிறைந்தபொற்சடையும் வெள்ளைமதியுங்கருமிடறும்
வண்டார்குழலியிடப்பாலு மானுமழுவுமாய்நின்றார்.

(இ-ள்) புசித்தாலல்லவோ பசிநீங்குமென்று சொல்வது உலகநி
யாயம் அப்படியிருக்க அந்தமகாபுருஷனுடைய அழகைப்பார்த்த
வுடனே பசிநீங்கிப்போம் தாமரையொத்தமுகமும் மூன்று கண்க
ளும் ஆகாசநிறைந்த பொற்பிரகாசம் பொருந்திய ஜடாபாரமும்
வெண்மைதங்கிய மூன்றாம் பிறையும் நீலகண்டமும் வண்டுகள் நி
றைந்த புஷ்பங்களைத் தரித்த அளகபாரத்தையுடைய உமையவள்வ
சிக்கின்ற இடப்பாகமும் மானும்மழுவும் விளங்கும்படியாகத்தோ
ன்றிநின்றார்-எ-று (௨௫)

மின்விட்டிலங்குந்திருவுருவீர் விளங்குநகையீர்விழியிரண்டு
மென்மட்டளித்தீரிருவிரு மீடேறுங்கோளைச்சொன்னே
னுன்மட்டல்லவிந்நதி யொருங்கேநெருங்குமலமறுக்கும்
பொன்மட்டளிக்கும்புவியளிக்கும் புத்தேளரசும்பரிந்தளிக்கும்.

(இ-ள்) மின்னலைப்போல் ஒளிவிட்டுப்பிரகாசிக்கின்றதிருமேனி
யையுடைய பரமசிவனே முல்லையரும்புபோற் பிரகாசிக்கின்றதந்
தபந்தியையுடைய பரமேஸ்வரியே நீங்களிருவரும் அடியேனுக்கு
மாத்திர மிரண்டுகண்களையுங்கொடுத்தீர்கள் ஆகையால் நீங்கள் எப்
போதும் வாழக்கடவீர்களென்று சொன்னேன் அதற்கவர்களிருவ
ரும் உனக்குமாத்திரமல்ல இந்தநதியானது தன்னிடத்திலவந்து ஸ்
நானம் பண்ணினபேர்களுக்கு நெருங்கிய மும்மலங்களையும் வே
ரோடுநீக்கும் வேண்டியபொன்னைக்கொடுக்கும் பூமியைக்கொடுக்
கும் தேவேந்திரபதத்தையுமன்போடுகொடுக்கும்-எ-று. (௨௬)

செட்டிமக்களிருக்கின்றார் செப்பிப்போவென்றுரைசெய்தார்
நிட்டையுடையீர்நீரும்போ மென்றேனேசமுடன்வணிகர்
கிட்டிமூழ்கியெழுந்திருப்பக் கிழவன்கிழவியாய்த்தோன்றி
யிட்டவரங்கொடுத்தளித்தா ரெந்தையெந்தாயிருவர்களும்.

(இ-ள்) ஆகையால் நீ அந்த மாத்தினிழலில் செட்டிப்பிள்ளைக ளி
ருக்கின்றார்கள் அவர்களுக்கிந்தச் சேதியைச்சொல்லிப்போவென்
று திருவுளம்பற்றியருளினார் ஆதலால் நிஷ்டையையுடையவர்களே
நீங்களும்போய் ஸ்நானம்பண்ணுங்களென்று சொன்னேன் அதைக்
கேட்ட செட்டிப்பிள்ளைகள் ஆசையுடனே புண்ணிய மடுவினிடத்
திற்போய் ஸ்நானஞ்செய்து எழுந்தபொழுது எமதுபிதாவாகிய ப
ரமசிவனும் மாதாவாகிய உமையவளும் பிராமணக்கிழவனுங் கிழ
வியுமாகவெழுந்தருளி அவர்கள்விரும்பிய வரங்களைக்கொடுத்து ர
க்ஷித்தருளினார்-எ-று. (௨௭)

வாலவணிகர்மனங்களித்து மறையின்கிழவன்மறைக்கிழவி
கோலங்கண்டுபணிந்தேத்திக் கும்பிட்டெழுந்துக்கூத்தாடிக்
காலகாலன்கோயிலிற்போய்க் களித்துப்பணிந்துவிடைகொண்டா
ரெலுமுத்தாநதிப்புதுமை யின்றேயென்றுமுளதாமால்.

(இ-ள்) அப்பொழுது இளமைப் பருவத்தையுடைய செட்டிப்பிள்ளைகள் மனமகிழ்வுகொண்டு பிராமணக்கிழவன் பிராமணக்கிழவியிவர்களுடைய திருவுருவலைக்கண்டு வணங்கித் தோத்திரஞ் செய்து இரண்டுகைகளையுந் தலைமேல்வைத்துக்கும்பிட்டு நின்று ஆனந்தக்கூத்தாடி மார்க்கண்டேயருக்காக நமனையுதைத்தருளிய திருவடிகளையுடைய பழமலைநாதராது சந்நிதானத்திற்குப்போய் ஆனந்தித்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு தங்கள்பட்டணத்திற்குப் போனார்கள் ஆனபடியினால் வேண்டிய வரங்களைக் கொடுத்தற் கிசைந்த திருமணிமுத்தாநதியின் மகத்துவம் இப்பொழுதுமாத்திரமோ எப்பொழுதுமுண்டாயிருக்கும்-எ-று. (உ௬)

தீர்த்தச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆ. சருக்கம் - ௩-ஞ, திருவிருத்தம் - ௱௧.

உ

நான்காவது

# விதர்க்கணச்சருக்கம்.

வேறு.

ஈசனைவந்தித்திறைவியுரைப்பாளெழின்முதுகிரிசேர்வார்
தேசவிமானத்துலவுவரென்னத்தெருள்பெறவருள்செய்தி
ரேசில்விமானத்தெவரெவர்சென்றாரத்தேசத்தார்தா
மாசறுமவர்செய்தவவலியேதெனவங்கணனருள்செய்வான்.

(இ-ள்) எல்லாப்பொருளுக்கும் முதல்வியாகியஉமையவள் பரமசிவனைவணங்கிச் சொல்லுகின்றாள் அழகிய விருத்தகிரியில் வந்து சேர்கின்றவர்கள் பிரகாசம்பொருந்திய தெய்வவிமானத்திலேறிக் கொண்டு எங்குஞ் சஞ்சரிப்பார்களென்று எனக்குத் தெளிவாகத்திருவுளம்பற்றியருளினீர் ஆதலால் அப்படிப்பட்ட குற்றமில்லாத விமானத்திலேறிச்சென்றவர்கள் எவரெவர்கள் அவர்களெந்தத்தேசத்திருந்தவர்கள் அஞ்ஞானநீங்கிய அவர்கள் செய்ததபோபலமெ

வகைப்பட்டது அவைகளை யெனக்குத் தெரியச் சொல்ல வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய திருவுளமகிழ்ந்து பரமசிவன் திருவுளம்பற்றி யருளுகின்றார்-எ-று. (௧)

திசைமுகனுக்கு மைம்பது வயதிற்றிரேதாயுகமாதே
வசிகரகோசலதேசமதன்கண் மணிபிங்கலையூரான்
மிசைதருமந்தணன் விபசித்தென்றொருவியனுளபேருள்ளான்
பசிகடொந்திடமிடிகள்வளர்ந்தொருபற்றொன் றற்றதனால்.

(இ-ள்) உமையவளே கேட்பாயாக பிரமாவுக்கு ஐம்பது வயதான காலத்தில் திரேதாயுகத்தில் சகலவசிகரமுநிறைந்த கோசலதேசத்தினிடத்தில் மணிபிங்கலை யென்னும் பட்டணத்தை யுடையவன் மேன்மைபொருந்திய பிராமண வமிசத்திற் பிறந்தவன் ஒப்பற்ற அழகுபொருந்திய விபசித்து என்னும் பெயரை யுடையவன் அப்படிக்கொத்தவனைப் பசி அதிகரித்து வருத்தும்படிக்குத் தரித்திரம் வளர்ந்துகொள்ள ஒருவருடைய சகாயமுமில்லாமற் போய்விட்டதனால்-எ-று. (௨)

நாடுகள்செல்லுநரபதிபின்செலுநல்லோர்முன்செல்லுங்
காடுகள்செல்லுங்காய்கனிகாணுங்கண்டோர்பின்செல்லும்
வீடுகள்செல்லுமேவலர்பின்செலும்விபசித்தொன்றிற்கு
மீடுகளில்லாதென்செயலன்றேதென்றுதிரிந்தனனே.

(இ-ள்) விபசித்துவானவன் மிகுந்த பசிவருத்தத்தினால் நாடுகடோறுந்திரிவான் அரசன் போகுமிடங்களில் அவன் பின்னே போவான் பெரியோர்களுக்குமுன்னே போவான் காடுகடோறும்போவான் அவ்விடத்திலும் காய்கள்கனிகள் காணுதலானே மனம்வருந்தி எதிரேநேரிட்டவர்கள் பின்னேபோவான் வீடுகடோறும்போவான் சத்துருக்களின் பின்னேயும்போவான் எப்படி யலைந்தும் ஒருவகையாலும் பசிவருத்த நீங்காதவனாகி இதுவெல்லாம் என்னுடைய செயலல்லவென்று நினைத்து வெகுகாலந்திரிந்து கொண்டிருந்தான்-எ-று. (௩)

வயிறுதளர்ந்தவன்மலையில்வனந்தனில்வருநாளொருநாளிற்
பயிறருசிரவியையரவமணைந்ததுபாங்கரிருஞ்சுனைகண்
டெயிறவிளக்கினன்மூழ்கினனங்கணிலிங்கபூமார்ச்சித்தான்
சயிறறுதண்டதுபோலவிழுந்துகடிதினடந்தனனே.

(இ-ள்) விபசித்துவானவன் பசியினாற் றளர்ச்சியடைந்து மலைகளிலுங் காடுகளிலுந்திரிந்து வருகின்ற தினங்களில் ஒருதினத்தில் பிரகாசம்பொருந்திய சூரியனைசர்ப்பந்தீண்டிற்று அதுசூரியகிரகண புண்ணியகாலமாகையால் அவ்விடத்தில் பெருமை பொருந்திய ஒரு சுனையைக்கண்டு அதிலிறங்கித்தந்தசுத்திபண்ணிக்கொண்டு ஸ்நானஞ்செய்து நித்திய அனுஷ்டான நியமங்களைமுடித்துக்கொண்டு

அவிடத்திலிருந்த சிவலிங்கத்துக்கு அர்ச்சனைசெய்து பின்பு கயிற றற்ற தடிபோல்சரீரத்தளர்வினால் தள்ளாடி விழுந்து விழுந்து அதி வேகமாகநடந்தான்-எ-று. (ச)

கல்வினிலிறடிக்காலிலிரத்தங்கறகறவென்னவீழச்
செல்லவுமுள்ளுகள்கல்லுமடைக்கச்செடிமுட்கொடிவீச
நல்லபலங்கனிதண்புனலுடன்பசைநண்ணுற்கண்முன்னே
பல்லுகளுவெம்பசைவாய்கொள்ளப்பறியவுநிழல்காணான்.

(இ-ள்) கல்லுகளினிடத்தி லிறடி விழுந்து இரண்டு கால்களிலும் இரத்தவெள்ளங் கறகறவென்று பீரிட்டொழுகும்படியாக நடக்கு ம்பொழுது முள்ளுகள் கல்லுகள் தைக்கவும் செடிகளிற்படர்ந்துள் ள முட்கொடிகள் வீசவும் அதிக பிரயாசத்தை யடைந்து நல்ல கா ய்கனிகள் தண்ணீர் முதலிய புசிக்கிறவஸ்துக்களொன்றுங் கண் ணுக்கெதிரே அகப்படாமல் பல்லுகளும் நாவும் பசைபிடித்து ஒ ட்டிக்கொள்ள அப்பொழுது ஒரிடத்தில் நிற்க நிழலுங்காணாமல் வரு ந்தினான்-எ-று. (ரு)

பூதபசாசம்புலிகரிகரடிகள்புடைமிலையுங்கானில்
வேதனையாகவோராறுதினம்பசிவிரவித்திரிகின்றான்
யாதொருமேனிகொளுங்கருவானதழற்காய்கின்றதுபோன்
மாதவஞானநிறைந்திடவோவியன்வயிறுடல்காய்வதுவே.

(இ-ள்) எந்தவிடங்களிலும்பூதங்களும் பேய்களும் புலிகளும்யா னைகளும் கரடிகளுந் திரிகின்ற காட்டினிடத்தில் ஆறுநாள் பரியந்த ம்பசியினால் வெகுவருத்தப்பட்டு திரிகின்றானெதாகிலும் ஒரு விக் கிரகந் திருவுருக்கொள்ள மண்ணினாற் கருக்கூட்டி அர்தக்கருவை அக்கினியிலுருகக் காச்சுவதுபோல [illegible]பசித்துவினுடைய வயி றும்சரீரமும் உதராக்கினியிற் காய்வதுமகாதபசும் பிரயஞானமும் பூரணமாக நிறையும்பொருட்டோ-எ-று. (சு)

நல்லகுலத்திலுதித்துமதிப்புடனற்கலைபலகற்றுஞ்
செல்வமுதித்திலகூனர்களுமார்கடிருவுளவும்பிலதா
யல்லலுழைத்தனனாயிரமோதினுமாயிரமாயினுமே
வில்லதுவாராதுள்ளதுபோகாதென்போலிகளேவார்.

(இ-ள்) நல்லகுலத்திற் பிறந்தும் யாவருமதிக்கும்படியாக நன் மை பொருந்திய [illegible]நேகநல்ல சாத்திரங்களைக் கற்றறிந்தும் செல் வமுண்டாகாமற் போயின கூனர்களுக்கு முதுகுஇருந்தும் நிமிர க்கூடாதது போலவும் ஊமர்களுக்கு வாயிருந்தும் வசனிக்கக்கூ டாததுபோலவும் விபசித்துவானவன் வறுமையால் துக்கமடைந்தி ருந்தான் ஒருவன் ஆயிரம்சாத்திரங்கள் படித்தாலும் அனேகமாகிய அவைற்றின்பொருள்களை ஆய்ந்து அறிந்தாலும் ஒருவனுக்கும் பிரா

ரத்வத்திலில்லாதது வரமாட்டாது உள்ளதுவிட்டு நீங்கமாட்டாது ஆகையினால் இதைக்குறித்து எப்போதும் அறிவீனர்கள் வருந்துவார்களேயல்லாமல் தெரிந்தபெரியோர்கள் வருந்தமாட்டார்கள்-எ-று.

அப்படி திரிபவன் முற்படமுற்சிவனர்ச்சனை செய்தனால்
வைப்புகள் கைக்குளகப்படலொப்பன வாழ்வுளவேழா நா
ளொப்பறு கற்சுனை நற்கரையின் கணிலோதமுழக்கெனவே
மெய்ப்படு மொப்பில் விமானமணைந்தது வேதியனுற்றனனே.

(இ-ள்) அப்படி ஆறுநாள் பரியந்தம் திரிந்துழல்கின்ற விபசித்துவுக்கு கெகிரோமுர் சென்னத்தில் செய்துள்ள நன்மைமிகுந்த சிவபூஜா பலத்தினால் தரித்திரனுக்குப் புதையல் அகப்பட்டதுபோல வாழ்வு பொருந்திய ஏழாவது நாளில் உவமையில்லாத கற்சுனையினது கரையினிடத்தில் சமுத்திர கோஷம்போல் உண்மையான ஒப்பற்ற தெய்வ விமானமொன்று வந்தது பிராமணனாகிய விபசித்துவானவன் கண்டு தரிசனஞ்செய்தான்-எ-று. (அ)

பாமலி மங்கையர் பாடப் பலர் நடனாடக் கொடியாடச்
சாமரை வீசத் துசணி வீசத் தகுவீசணி வீசத்
தேமலர் மூசப் பூமணம் வீசத் திகழ் தருபுகழ் வீசக்
காமர் குடைக்கணி ழற்றத் துன்னிய கன்னியர் புடைசூழ.

(இ-ள்) பல பாவினங்களையும் கற்றறிந்த தேவஸ்திரீகளிற்சிலர் இனிதாகிய இசையோடும் பாடவும் சிலர் அப்பாடலுக்கேற்க நாட்டியஞ்செய்யவும் கொடிகளாடவும் இருபுறத்திலும் வெண்சாமரைகள் வீசவும் பாவாடை வீசிவரவும் தந்தியாகியபல வாபரணங்கள் பிரகாசிக்கவும் தேனொழுகுகின்ற புஷ்பமாரி வருஷிக்கவும் அப்புஷ்பங்கள் பரிமளம் வீசவும் கீர்த்தியெங்கும் நிறைந்து பிரகாசம் வீசவும் அழகிய சந்திரவட்டக்குடைகள் நிழல் செய்யவும் மிகுந்த சம்பிரமத்தோடும் நெருங்கிய தேவஸ்திரீகள் பக்கத்திற் சூழ்ந்து நிற்கவும்-எ-று.

மந்தாகினி முடியங் கணனருளான் மதடக்கிரு முடியுஞ்
சந்தார் பிறையுந் திரிலோசனமுந் தகுநூலணி தோளுங்
கொந்தாரிதழிய மாலைக்களமுங் கோலச்சுடர் வடிவுஞ்
செந்தாமரை முகனுங் கணநாதர் திருவுங் கண்டனனே.

(இ-ள்) கங்கையைத்தரித்த சடாபாரத்தையுடைய பரமசிவனது கிருபையினால் கிரீடந்தரித்த அழகியமுடியும் குளிர்ச்சி பொருந்திய மூன்றாம்பிறையும் மூன்றுகண்களும் தகுந்த முப்புரிநூல்தரித்த புயங்களும் வாசனை வீசுகின்ற கொன்றைமாலையும் விடம்பொருந்திய கண்டமும் அழகிய அக்கினிஸ்வரூபமும் செந்தாமரைப் புஷ்

…யாத்த பூமெலவிபஇவற்றால் பிரகாசிக்கின்ற கணநாதருடை… சிறப்பையுங்கண்டு தரிசித்தான் விபசித்து-எ-று. (௰)

வேதியனக்கணநாதனுமுற்றுவிமானமிழிந்திடலு
மாதவவேதியன்வந்துவணங்கியிணங்கியுரைக்கின்றா
னேதவத்தைமயற்றினனுப்மையிறைஞ்சிவணங்குதலா
லாதியுருத்திரர்போலவிருந்திரறிகிலன்யானென்றான்.

(இ-ள்) கணநாதரானவர் விபசித்துவையக்கண்டு விமானத்தை விட்டுப் பூமியிலிறங்கினபொழுது விபசித்துவும்வந்து கணநாதரைச் சாஷ்டாங்கமாகவணங்கி வணக்கமாகச்சொல்லுகின்றது சுவாமீ அடியேன் உம்மைதரிசித்து வணங்கினதால் முற்பிறப்பில் என்னதபத்தைச்செய்தேனோ அலலாமலும் நீர் முதல்வனாகிய பரமசிவனைப்போலுமிருக்கிறீர் உம்மையடியேன் இன்னாரென்று அறிந்திலேன்யான் அறியும்படி திருவுளம்பற்றி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து நின்றான்-எ-று. (௰௧)

குணமாமறையோய்கேண்மோ நீமுன்குலவுதவஞ்செய்தாய்
பணமாரரவன்கணநாதனை நீபணிகைக்கெளிதன்றே
மணமாரிதழிச்சடையார்விடையார்வளர்பழமலையார்தங்
கணநாதனியான்முனமேசெய்திடுகதையைக்கேளென்றான்.

(இ-ள்) நல்லகுணத்தையுடைய விபசித்துவே கேட்பாயாக நீ முற்சென்னத்தில் பிரகாசம்பொருந்திய தவத்தைச்செய்தாய் அந்த தவத்தாலல்லவோ எமது தரிசனம் உனக்குக்கிடைத்தது படத்தையுடைய சர்ப்பாகாரணத்தைத்தரித்த பரமசிவனுடையகணங்களைத் தரிசனஞ்செய்து வணங்குவதெளிதல்லவா சடையுள்ள கொன்றைமாலையையணிந்த ஜடாபாரத்தையும் இடபவாகனத்தையும் வளருகின்ற பழமலையையுமுடையவராகிய பரமசிவனுடைய கணநாதன் நான் முற்சென்னத்தில் நடந்த எனது சரித்திரத்தை நீகேளென்று சொல்லுகின்றார் கணநாதர்-எ-று. (௰௨)

பாஞ்சாலத்தேசந்தனில்விசயன்பட்டணசெட்டிமக
னீஞ்சாமரபினில்வந்தவிதர்க்கணனிறைநிடியதனாலே
தாஞ்சாகைக்கோர்மருந்துபாரிகர்தானெனுமுறைகொண்டே
மாஞ்சேகூவிச்சுமைகள்சுமந்துவயிறுவளர்த்தனனே.

(இ-ள்) முற்பிறப்பில் நான் பாஞ்சாலதேசத்தில் விசையமென்னும் பட்டணத்திலிருந்தவன்பட்டணசெட்டியாருடைய குமாரன் நிலைகெடவாத தனவைசியகுலத்திற்பிறந்த விதர்க்கணசெட்டியென்றழைக்கின்ற பெயரையுடையவன் நிறைந்ததரித்திரத்தினால்தான் சாகாதற்கு மருந்தைத்தின்பவர்கள் உலகத்திலொருவருமில்லை

யென்கிற சொல்லைக்கொண்டு கூலிச்சுமைகள் சுமந்து வருத்தப்பட்டு வயிறுவளர்த்துக்கொண்டிருந்தேன்-எ-று. (௰௩)

கொன்னே சிலநாள்சென்றதோர்வணிகன்கூலிச்சுமைகொண்டு
முன்னேசென்றேனன்முதுகுன்றினின்முதுமார்கழிதன்னி
னன்றுளாதிரைநாடான்வந்ததுநல்லோர்பலவந்தா
ரந்நாண்முனிவர்கள்யோகிகள்வந்தாரவரைத்தரிசித்தேன்.

(இ-ள்) அப்படிவிபரீதமாகச்சிறிதுநாள்கழிந்தபின்பு ஒருநாள் ஒருவர்த்தகனுக்குக் கூலிக்குச்சுமை எடுத்துக்கொண்டு விருத்தாசலத்திற்குப் போனேன் அன்றைக்கு மார்கழிமாதத் திருவாதிரையாகிய புண்ணியகாலமாயிருந்தது அதனால் அத்தலத்திற்கு வெகு பெரியோர்களும் முனீஸ்வரர்களும் யோகீஸ்வரர்களும் வந்தார்கள் அவர்களைக்கண்டு தரிசனஞ்செய்தேன்-எ-று. (௰௪)

செட்டிசரக்கும்விற்றதெனக்குச்செப்பியபொருடந்தான்
மட்டறவந்தவரெல்லாரும்போய்மணிமுத்தாநதியிற்
கட்டறமூழ்கினர்கண்டவர்பூ[illegible]குதல்யானும்போய்மூழ்கி
யிட்டனனீறுமுருத்திரவக்கமுமெய்தினனாலயமே.

(இ-ள்) வர்த்தகனுடைய சரக்கும் விற்பனையாகிவிட்டது அவன் எனக்குப் பேசிய கூலிப்பொருளையுங் கொடுத்துவிட்டான் அன்றைக்கு அளவிறந்தவர்களாக வந்திருந்த எல்லாரும் திருமணிமுத்தா நதியினிடத்திற்போய் தங்கள் தங்கள் மலபந்த நீங்கும்படி ஸ்நானஞ்செய்தார்கள் அவர்களெல்லாரும்போய்ஸ்நானஞ்செய்வதைக்கண்டு நானும்ஸ்நானஞ்செய்துவிபூதியுமணிந்து உருத்திராக்ஷமுந் தரித்துக்கொண்டு சிவாலயத்திற்குப்போனேன்-எ-று. (௰௫)

பழமலைநாயகர்தம்மைவலஞ்செய்துபாதமலர்த்துணையைத்
தொழுதுவணங்கித்துதியுமுரைத்துக்கூலிச்சிலபொருளு
முழுதுமளித்தேயுணவையொழித்தனன்முட்டியநித்திரையுந்
தழுவறவிட்டுப்பரமொழிவிடுத்தங்கினனங்கிரவில்

(இ-ள்) பழமலைநாதரைப்பிரதட்சணஞ்செய்துஇரண்டுபாதாரவிந்தங்களையுந் தொழுதுவணங்கித் தோத்திரமுஞ்செய்து என்னிடத்திருந்த அற்பமாகிய கூலிப் பொருள்முழுதுந் தானஞ்செய்து ஆகாரமில்லாமல் மேலிடுகின்ற நித்திரையும் சற்றும்பொருந்தாமல் ஒழித்து அன்னியப்பிரசங்கமும்விட்டு அன்று இராத்திரியில அவிடத்திலிருந்தேன்-எ-று. (௰௬)

இரவினின்முழுதுஞ்சிவனொடுசேத்தியெழுந்தருளுந்திருநாள்
பரவிமதித்துப்பத்தர்களர்ச்சனைபரவப்புலர்காலை

விரவுநதிக்கணின்மூழ்கிச்சிவனடிமீளவும்வந்துதொழா
வுராமூளபிச்சையினிச்சயபாரணமுண்டுமகிழ்ந்தனனே.

(இ-ள்) இராத்திரி முழுமையும்பழமலைநாதரும் பெரியநாயகியம்மையாரும் எழுந்தருளிவருகின்ற மகோச்சவ விபவத்தைக்கண்டுவணங்கித் தோத்திரஞ்செய்து அடியார்களெல்லாரும் அர்ச்சனைசெய்ய விடியகாலத்தில் திருமணிமுத்தாற்றினிடத்திற்போய் ஸ்நானஞ்செய்யும்பொழுது நானும் ஸ்நானஞ்செய்து மறுபடியும் வந்து பழமலை நாதருடைய திருவடிகளில் வணங்கிஒரு சந்நியாசிகளுடைய மனையில் பிச்சைவாங்கி உண்மையாகிய பாரணஞ்செய்துமனமகிழ்ச்சி யடைந்தேன்-எ-று. (௰எ)

மீண்டும்பாஞ்சாலத்தேசந்தனில்விதையப்பதிபுக்கே
னுண்டுஞ்சிலநாட்செல்றதுவயதினவத்தைதிருத்திடலுந்
திண்டநமன்படர்வந்தனர்வருமுன்சிவகணம்வந்தனபின்
றுண்டவனீடுமைமைந்தர்கணந்தித்தலைவரும்வந்தனரே.

(இ-ள்) மறுபடியும் பாஞ்சாலதேசத்தில் விதையமென்கிற பட்டணத்தில் வந்திருந்தேன் அவிடத்திற் பின்னுஞ் சிலகாலஞ் சென்றபின்பு எனக்கு வயோதிகாவஸ்தை அதிகரித்துமரணகால மேவிடும்பொழுது என்னைப்பாசத்திற் கட்டுகிறதற்கு யமதூதர்கள் வந்தார்கள் அவர்கள் வருமுன்னமே சிவகணங்கள் வந்து நிறைந்தன பின்பு திருத்தானந்தராகிய பழமலைநாதரும் பெரியநாயகியம்மையாரும் சுப்பிரமணியரும் விநாயகமூர்த்தியும் நந்திகேஸ்வரரும் வந்தார்கள்-எ-று. (௰அ)

கண்டனன்பண்டைக்களைகடெளிந்ததுகவுரிதிருத்தோண்மே
லண்டர்களண்டன்கைத்தலம்வைத்துநகைத்தருள்செய்கின்றான்
பண்டைவிதர்க்கபயத்தையொழித்திடுபற்றுளசுற்றமியாந்
தண்டமுனக்கிலையென்றனதனைத்தரிசனமாயினனே.

(இ-ள்) அப்படி வந்தவர்களைத் தரிசனஞ்செய்தபொழுதே எனக்கு அந்நியாயுள்ள ஜநந மரணக்களைகளெல்லாந்தெளிந்துவிட்டது தேவதேவனாகிய பரமசிவன் உமையவளுடைய அழகிய திருத்தோளின்மேல்தம்முடைய திருக்கைகளை வைத்து புன்முறுவல்செய்துகிருபைகூர்ந்து ஓய்விதர்க்கனே நீமுன்னுள்ளபயங்களையெல்லாம் விட்டுவிடு உன்னிடத்தில் அன்புவைத் திருக்கின்ற வுறவினர் நாமே ஆதலால்உனக்குயமதெண்டனையொன்றுமில்லையென்றுதிருவுளம்பற்றியருளினார் அந்தத்திருவாக்கையங்கேட்டறிந்தேன்-எ-று()

உத்தரிகத்துகிலத்தால்வீசினனுமையவண்முறுகுன்றன்
சத்திபவுப்பதேசத்தையுணாத்தனனத்துணைசத்தியமாய்

வித்தகமெய்புமுருத்திரனுகிவிமானமுமுன்வரலாற்
சுத்தவிருத்தகிரிக்கிறைதாள்கடுதித்துவணங்கினனே.

(இ-ள்) மாதாவாகிய உமையவள் தன்னுடைய உத்தரிக வஸ்திரத்தினால் என்னுடைய ஜனனவிடாய்தீர்க்கும்படி வீசினாள் பிதாவாகிய பரமசிவன் உண்மைஞான உபதேசத்தை வலச்செவியினிடமாக வுபதேசித்தருளினார் அப்பொழுது உண்மையாக எனது ஞானதேகமும் சிவசொரூபமாகித் தெய்வவிமானமும் எதிரேவந்தபடியினால் பரிசுத்தமாகிய பழமலைநாதருடைய திருவடிகளைத் தோத்திரஞ்செய்து வணங்கினேன்-எ-று. (௨௰)

வணங்கியெழுந்துதுதிக்குமுன்மங்கைமணாளன்மறைந்திடலு
மிணங்கிவணங்கிவிமானமுமேறினனெவ்வுலகுந்திரிவே
னணங்குகள்சூழவிமானமதேறியனைந்திடுவீர்களெலாங்
குணங்களினின்றுபணிந்தவர்மாமுதுகுன்றைமதித்தவரோ.

(இ-ள்) அப்படி தெண்டனிட்டெழுந்து தோத்திரஞ்செய்கின்றபொழுது உமையவள் மணாளனாகிய பரமசிவன் மறைந்தருளினார் அப்பொழுது நான் தாழ்ந்துவணங்கி தெய்வவிமானத்திலேறி அவ்வுமுதல் எந்தவுலகத்திலுஞ்சஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன் அல்லாமலும் தெய்வகன்னிகைகள் சூழ்ந்துவர விமானத்திலேறி வருகின்றவர்களெல்லாரும் சத்துவகுணத்தில்நின்று பழமலைநாதனை வணங்கினவர்களும் பெருமைதங்கியவிருத்தகிரிஸ்தலத்தைமதித்தவர்களுமாகும்-எ-று. (௨௧)

குன்றைமதித்தவரிப்படியானற்குலவியமனதொன்றாய்ச்
சென்றவரொப்பதியாகார்தினகரர்தெரிசனபக்கமெலா
மன்றவிமானத்துடன்வருவார்முதுமலையைமதித்தவர்கா
ணன்றுடனீயுஞ்சென்றிடின்முதுகிரிநாதனையந்திடுமே.

(இ-ள்) பழமலையை மதித்தவர்கள் இவ்வகைப்பட்டபலனைப்பெற்றால் நானவிதமாகத் திரிகின்ற மனதொருமித்து அத்தலத்திற்சென்று வணங்கினபேர்கள் எவ்வகைப்பட்ட பலனையடையமாட்டார்கள் பழமலையை மதித்தபேர்கள் சூரியகிரணந் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் சிறந்த விமானத்திலேறித் திரிவார்கள் ஆதலால் நீயும் அந்தத்தலத்திற்கு நன்மையாகப் போனாயாகில் உன்னையும் பழமலைநாதர் ரக்ஷித்தருளுவார்-எ-று. (௨௨)

மறைகளுமுதுமலைவந்துவரம்பெற்றனையளக்கிலதா
விறைவனுமிறைவியுமார்வருவரென்மறைதிரோதிக்கின்றார்
முறைமையினீயும்வழிபடின்மு[illegible]கிரிநாதன்றிரு[illegible]
இறையருள்புரிவ[illegible]றுமறைந்[illegible]ர்கதைசொல்வாம்.

(இ-ள்) நான்குவேதங்களும் பழமலையில்வந்து வரம்பெற்றவர்களை அளவிட்டுச் சொல்லமாட்டாது அன்றியும் எவர்கள் வருவார்களென்று பரமசிவனும் உமையவளும் எதிர்நோக்கிநின்றார்கள் ஆகையால் நீயும் அத்தலத்திற்குச்சென்று முறையாகவழிபட்டால் சிவாக்கினைப்படிக்குப் பழமலைநாயகர் பூரணகடாக்ஷம்வைத்து உன்னை ரக்ஷித்தருளுவாரென்று சொல்லிக் கணநாதர் மறைந்துவிட்டார் இப்பால் அதைக்கேட்டுநின்ற விபசித்துமுனிவருடைய சரித்திரத்தைச்சொல்லுகின்றோம்-எ-று. (௨௧)

விதர்க்கணச்சருக்கம் முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் - ௪-று, திருவிருத்தம்-௱௨௪.

௨

ஐந்தாவது

## விபசித்துச்சருக்கம்.

வேறு.

நவசித்தன்கணநாதன் றான்மறைந்ததிசைநோக்கி
விபசித்துப்பணிந்தேத்தி மெய்மறந்துபொய்மறந்து
சிவசித்தப்பெற்றேனென் செல்வமேசெல்வமென
நவசித்தமுளதாகி நைந்துபலசிந்திப்பான்.

(இ-ள்) தபசுநிறைந்த இருதயத்தையுடையகணநாதர் மறைந்தருளிய திசையைக்குறித்து விபசித்துமுனிவர்தெண்டனிட்டுத் தோத்திரஞ்செய்து சரீரவாசனையையும் பித்தையாகிய பிரபஞ்சவாசனையையுமறந்து சிவசித்தனையைப் பெற்றேனாதலால் எனக்குக்கிடைத்த செல்வமேசெல்வமென்றுசருகிமனமுருகிப்புதிதானஞானசித்தையையுடையவராய்ப் பலவாகநினைக்கத்தொடங்கினார்-எ-று. (௧)

தாயிழந்துதமரிழந்து தாரமிழந்தரும்பசியாற்
பேயனைத்தவமுயலாப் பித்தனைத்திரிவேற்கு
மேயசிவன்வெளிப்படுதல் வித்தைகயோசத்தியமோ
மாயமோகனவோவென் மனத்தாலுநினைக்கரிதால்.

(இ-ள்) தாயுமில்லாமல் சுற்றமுமில்லாமல் மனையாளுமில்லாமல் பொறுத்தற்கரிய பசியினால் பேய்போலலைந்து யாதொருதவத்தை

யுஞ்செய்பவனுமென்றுகொண்டு திரிகின்றவெனக்குச் சர்வ வியாபி
யாகிய பரமசிவன் வெளிப்பட்டது இந்திரஜாலவித்தை போல ஆச்ச
ரியமாய்க் காணும் மனோகற்பிதமான சொற்பனமோ அது இ
ன்னபடியென் றென்னுடைய மனத்தினாலும் நினைத்தற்கரிதாயி
ருக்கின்றது-எ-று. (௨)

அரியதவமுன்செய்தா லரும்பலன்களவருங்காலந்
தெரிவரிதென் றறிவுடையோர் செப்புவரப்படிதானே
பரிபூழக்கமுகின்முழக்கம் பாவையர்கண்மனஞ்செல்வ
முரியமழைதான்மறுத்த லொருவருக்குந்தெரிவரிதால்.

(இ-ள்) இன்னவேளையில் குதிரை அனுமானிக்கும் இன்னவேளை
யில் மேகக்குமுறும் மாதர் மனம் இத்தன்மையத்து ஒருவனுக்குச்
செல்வம் இன்னகாலத்திற் கிடைக்கும் அது இன்னகாலத்தில் அவ
னைவிட்டு நீங்கும் உணவளித்தற்குரிய மழை இன்னகாலத்திற் பெய்
யும் இன்னகாலத்திற் பெய்யாதொழியுமென்று யாவர்க்கும் அறியக்
கூடாதது போல முற்செனனத்தில் அரியதவத்தைச் செய்திருந்தா
ல் அந்த அரியதவத்தின் பலன்கள் அனுபவிக்கவருங்காலம் இன்ன
தென்று ஒருவராலும் அறியக்கூடாதென்று சான்றோர்சொல்லுவ
ர் அப்படியே எனக்கு இந்தநன்மை கிடைத்ததோ-எ-று. (௩)

இப்படிமுற்றப்பலனை விலைக்கண்டோமெனவே
செப்பியபின் விப்பிரனுந் தெய்வசரசின்மூழ்கித்
தப்பொழாத்தொழில்முடித்துத் தளர்ந்திருந்தார்ச்சுனையி
லப்பொழுதே தெய்விமானத்தி லமரமடவாரணைந்தார்.

(இ-ள்) நாம் பூர்வபிறப்பிற் செய்த தபோபலத்தினால் இந்தக்க
ணநாதனுடைய தரிசனம் நமக்குக்கிடைத்ததென்று இப்படி பலவி
தமாக நினைத்தபின்பு பிராமணனாகிய விபசித்துவும் அவ்விடத்து
ள்ள தெய்வீகவாவியாகிய சுனையினிடத்தில் ஸ்நானஞ்செய்துநித்
தியகர்ம அனுஷ்டானாதி கிரியைகளை முடித்துக்கொண்டு மனத்தளா
ர்ச்சியடைந்திருந்தார் அப்பொழுது அந்தச் சுனையினிடத்தில் ஸ்நா
னஞ்செய்வதற்குச் சில தெய்வப்பெண்கள் விமானத்திலேறிக்
கொண்டு வந்தார்கள்-எ-று. (௪)

செந்துவர்வாய்வெண்டாளச் சிறுமுறுவற்பெருமதியந்
தந்தமுகந்தனஞ்சுமந்து தளருமிடைவளரல்கு
லந்தளிர்மெய்நீலவிழியன்ன நடைக்கன்னன்மொழி
யிச்சவியன்மடவார்களெழின்மின்னுக்கொடிபோலும்.

(இ-ள்) சிவந்தபவளம்போன்றவாயும் வெள்ளிய முத்துகள்போ
ன்ற சிறியமந்தகாசத்தையும் பூர்ணசந்திரனைப்போன்றமுகமும் ஸ்த

னபாரத்தைச் சுமந்துதளர்கின்ற இடையும் நோக்குவாருடைய அவாவுக்கொப்ப வளர்கின்ற நிதம்பமும் அழகிய மாந்தளிர்போன்ற மேனியும் நீலோத்பலம்போன்ற கண்களும் அன்னநடைபோன்ற நடையும் கரும்பினிரதம்போன்ற வசனமும் ஆகிய இவ்வகைப்பட்ட சௌந்தரியத்தையுடைய தெய்வப்பெண்கள் அழகிய மின்னற்கொடியைப்போலப் பிரகாசித்தார்கள்-எ-று. (௫)

தோன்றினார்பணிகழற்றிச்சுனையாடிக்கரையேறி
யான்றதுகிலுடுத்தணிகளணிந்தார்களவ்வளவின்
மூன்றுவிழியார்தோழன்றங்கையவண்மூக்கிலணி
யென்றணியக்கண்டிலதாலியாவர்களுந்துயருழந்தார்.

(இ-ள்) அப்படித்தோன்றியபெண்கள் ஆபரணங்களைக் கழற்றிவைத்துச் சுனையினிடத்தில் ஸ்நானஞ்செய்து கரைமேல்வந்து மாட்சிமைப்பட்ட வேறுவஸ்திரத்தையுடுத்தி ஆபரணங்களைத் தரித்துக்கொண்டார்கள் அப்பொழுது திரிநேத்திரத்தையுடையபரமசிவனுடைய சினேகனாகிய குபேரனுடையதங்கையினதுமூக்குத்தியொன்று எடுத்துத் தரிக்கப்பார்க்கையில் அது காணாமற் போனபடியினால் அந்தப்பெண்களெல்லாருந் துயரமடைந்தார்கள்-எ-று. (௬)

அலைவிலாவமரரெலாமளகேசன்றனக்களித்த
விலையிலாமாணிக்கம்வேய்ந்தமூக்கணியென்னச்
சிலைநுதலாடிகைத்திருப்பச்சிச்சிலிவந்ததனையெடுத்
துலைவிலாமரத்திலிருந்துணவென்னக்கொத்துதலும்.

(இ-ள்) தன் தமையனாகிய குபேரனுக்கு என்றுந் திரமாயிருக்கின்ற சகலதேவர்களுங் கூடிக்கொடுத்த விலையில்லாத மாணிக்கம்பதித்துள்ள மூக்காபரணத்தை யிழந்துவிட்டோமேயென்று வில்லையொத்த புருவத்தையுடைய அந்தக் குபேரனுடைய தங்கையானவள் மகாவருத்தப்பட்டு திகைத்திருக்கையில் ஒரு சிச்லிக்குருவியானதுவந்து அந்தமூக்குத்தியை மூக்கிற் கவ்வியெடுத்துச்சென்று உயர்ந்த மரத்தின்மேல் வைத்துக்கொண்டு தான்புசிக்கும் உணவென்று நினைந்து அதனை மூக்கினாற்கொத்தவும்-எ-று. (௭)

மீனெரிந்துவிழுவதுபோல்விபசித்தன்மடிமீதே
யானபணிதவறிவிழவவனடுங்கியெழுந்திருந்து
தானதனைக்கைக்கொண்டான்றத்தையர்களீதறியார்
தேனமருமொழியாலேசிலசபதஞ்செய்கின்றார்.

(இ-ள்) அந்தமூக்குத்தியானது தவறி நக்ஷத்திரமெரிந்து விழுவதுபோல் விபசித்து முனிவருடைய மடிமேல் வந்துவிழுந்தது அதுகண்டு விபசித்து முனிவர் நடுக்கங்கொண்டெழுந்து அதைக்கையி

ல்வைத்துக்கொண்டிருந்தார் அந்தச்செய்தியைக்கிளிமொழிபோலவசனிக்கின்ற அந்தத்தெய்வப்பெண்கள் தெரியாதவர்களாகித் தேன்போலும்மதுரம்பொருந்திய வசனத்தினாற் குபேரனுடைய தங்கையைப்பார்த்து சிலசபதவார்த்தைகளைச்சொல்லுகின்றார்கள்-எ-று.()

மின்களரும்பணிகரக்கில்விரதமிழந்தான்பதிதன்
பொன்கள்வன்மறையிழந்தான்பூசுரருக்குரைவழங்கிப்
பின்புதவான்சிவதலத்திற்பெருமபாவிபூசிக்கு
முன்புண்பான்குருநிந்தைமொழிவான்றன்னரகுறுவோம்.

(இ-ள்) மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற உன்னுடைய ஆபரணத்தை நாங்களபகரித்தோமேயாகில் விரதந்தவறினவன்-மகாபாதகஞ்செய்தவன்-பொன்னைத்திருடினவன்-வேதவொழுக்கத்தைக் கைவிட்டவன்-பிராமணர்களுக்குஒன்றைக்கொடுக்கின்றேனென்று முன்னேவாக்குத்தத்தம்பண்ணிப் பின்புகொடாதவன்-சிவஸ்தலத்தில் பெரியபாதகங்களைசசெய்தவன்-சிவபூஜைசெய்வதற்குமுன் புசிக்கின்றவன்-சற்குருவைத்தூஷிக்கிறவன்-ஆகியஇவர்கள்எந்தநரகத்தையனுபவிப்பார்களோ அதனையாங்களுமனுபவிக்கக்கடவோம்-எ-று

மணவாளன்பசிக்குதவாள்வஞ்சித்தாள்முன்புண்பாள்
குணமாகாளெதிர்சொல்வாள்குலம்பழித்தாள்வேறொருவற்
புணர்வாடன்கணவனைத்தன் புத்திரரைக்கொலைசெய்தா
டணவாநோய்செய்தாடன்றனிநகரிற்புகக்கடவோம்

(இ-ள்) புருஷனுடைய பசியறிந்து புசிப்புதவாதவள்-புருஷனுக்குமுன்னே புசிப்பவள் - புருஷன் குணத்திற்கிசைந்த குணமில்லாதவள்-புருஷன்சொல்லுக்கு எதிர்மொழிசொல்லுகின்றவள்-வேறொருபுருஷனைக்கூடுகின்றவள் - புருஷனையும் பிள்ளைகளையுங்கொன்றவள்-புருஷனுக்கு நாபிமுதலானவைகளையூட்டி எப்போதுநீங்காதவியாதியைச்செய்தவள் ஆகிய-இவர்கள் எந்தநரகத்தையனுபவிப்பார்களோ அதனை யாங்களு மனுபவிக்கக்கடவோம்-எ-று. (௰)

என்றுமுரையுடன்பின்னுமிசைத்தார்களதுதந்தாற்
றன்னுடையபணிகளெலாஞ்சிவனுனைத்தருகுவனென்
றன்னவளுமுரைசெய்தாளத்துணையிலந்தணன்போ
யென்னதுதான்றுயர்கின்றீரிதுவோவென்றதுகொடுத்தான்.

(இ-ள்) என்றுசொல்லப்பட்ட சபதத்தோடு இன்னம் மேலானசத்தியவசனங்களையுந் தெய்வப்பெண்கள் சொன்னார்கள் அதுகேட்டுக் குபேரனது தங்கையானவள் இந்தமூக்குத்தியைக் கொடுத்தவர்களுக்கு எனது ஆபரணங்கள் முழுவதும் சிவாக்கினைப்படிக்குக்

கொடுப்பேனென்றுசொன்னான் அந்தச்சமயத்தில் அவர்கள் பெரி
க்கொள்வதைக்கண்டிருந்த விபசித்துமுனிவர் அவர்களிடத்திற்
போய் நீங்கள் என்னபயமடைகின்றீர்கள் உங்களாபரணத்துக்கா
க ஏன் வருந்துகிறீர்கள் அந்தமூக்குத்தியைக்கொடுத்தார்-எ-று. (௰௧)

மட்டாருங் குழலாளுநயனங்களித்துவாங்குதலுங்
கிட்டாதுகிட்டுதல்போற்கண்டையங்கண்டனிலொற்றி
வெட்டாத வெண்மெலாமெண்ணிமனமிருந்துயரானை
யொட்டாமற்றந்தபணிபூணவையருகுவையென்றாள்.

(இ-ள்) தேனிறைந்த புஷ்பமாலையணிந்த அளகபாரத்தையுடை
யவளாகிய குபேரன் தங்கையாரும் மனமகிழ்ந்து அந்தமூககுத்தி
யை இரண்டுகைகளாலும் வாங்கினவளவில் கிடையாது கிடைத்தது
போலக் கண்டையைபொத்த இரண்டுகண்களிலும் ஒற்றிக்கொண்
டு எமது மிகுந்தவிசனத்தினால் என்னுதவென்னமெல்லாமெண்ணி
வருந்தினேன் அங்ஙனம்வருந்தாதபடி இந்தமூக்குத்தியைக்கொடு
த்த நீ எனக்குத் தமையனாகுவாயென்றுசொல்லி-எ-று. (௰௨)

அந்தணநீயெந்தநகரணையப்போம்பதியேது
இந்தவனத்தேன்வந்தாயிளைத்துமுகங்குறுவேர்வாய்
நொந்திருந்ததென்னுனக்குநுண்பணிதான்வந்ததெவன்
றந்ததுவென்மொழியென்றாள்சதுமறையோன்மொழிகின்றன்.

(இ-ள்) ஓய்பிராமணா நீ எந்ததேசத்திலிருப்பது இப்போது எந்
தத்தலத்தை நாடிப்போகின்றாய் இந்தவனத்தில் ஏன்வந்தாய் என்
னநிமித்தம் சரீரமிளைத்து முகத்திற் குறுவேர்வைகொண்டு மனம்
வருந்தியிருக்கின்றாய் உன்னிடத்தில்யாவராலும்விலைமதிக்கக்கூடா
த இந்தமூக்குத்தி எப்படிவந்தது இதை என்னிடத்திற் கொண்டுவந்
துகொடுத்தவிதமென்ன விவரமாகச்சொல்லுமென்றுசொன்னாள் அ
துகேட்டு விபசித்துமுனிவர் சொல்லுகின்றார்-எ-று. (௰௩)

பிறைநுதலாய்கோசலதேசத்தில் மணிபிங்கலையூர்க்
குறைவிலேனென்னுடையகுலத்தாதைதன்னுடனே
முறைமையுளதாயிறந்தாண் மூத்தவர்களறுவருளார்
இறைபுடனேயிறந்தார்களேனிழையாருடனிறந்தார்.

(இ-ள்) மூன்றாம் பிறையையொத்த நெற்றியையுடைய ஓய் அம்
மா நான் கோசலதேசத்தில் மணிபிங்கலையென்னும் பட்டணத்தில்
குறைவில்லாதசெல்வத்தோடு மிருந்தேன் அப்படியிருக்கும்போ
து என்னுடையசிரேஷ்டமாகிய பிதாவினோடு நல்லொழுக்கமுள்ள
தாயாரிறந்துவிட்டாள் எனக்குமூத்தவர்களாறுபேரிருந்தார்கள் அவர்

களும் செல்வத்துட னிருந்து இறந்துவிட்டார்கள் அவர்கள் மனைவியருங் கூடவேயிறந்துபோனார்கள்-எ-று. (௰௪)

மனையவளு நானுமாய் மனையிலிருந்தோஞ் சிலநாள்
புனையிழையும் பிச்சைக்குப் புகன்றழன்று கிடையாம
வினையவகையாலிறந்தா ளியானொருனிறவாம
னினைவரிய பேய்போல நிற்கின்றேனிலைகுலைந்து

(இ-ள்) பின்பு சிறிதுகாலம் என்மனையாளும் நானும் இல்வாழ்க்கையிலிருந்தோம் அப்படியிருந்தகாலத்தில் தரித்திரமேலிட்டு அதனால் என்பெண்சாதியும் வீடுகள்தோறும் பிச்சைக்குப் போயலைந்துபிச்சைகிடையாமல் இவ்வகைத்துன்பத்தினாலிறந்துபோனாள் பின்பு நானொருவனுஞ்சாகாமல்நிலைகெட்டுநினைத்தற்கரியபேய்போலலையாநிற்கின்றேன்-எ-று. (௰௫)

குணத்தினாலழகாலென் குணங்களறிந்தினிதூட்டும்
வணக்கினாலறிவாலென் மனையாளுக்கிணைகாணேன்
பிணத்தைநேராயிருந்தேன் பேய்கண்மிருகங்களுக்கு
மிணக்கமொருபெண்ணுளதா லென்போலும்பாவிகளார்.

(இ-ள்) குணத்தினாலும் அழகினாலும் என்குணங்களைத் தெரிந்து இனிமையாகவுண்பிக்கின்ற வணக்கத்தினாலும் அறிவினாலும் என்மனையாளுக்குச்சமானம் இந்தவுலகத்தில் ஒருவரையுங் கண்டறியேன் நான் இப்போது நடைபிணத்துக் கொப்பாயினேன் பேய்களுக்குமிருகங்களுக்காவது கூற்றுறவிற்கு ஒவ்வொருபெண் இருக்கின்றது அதுதானுமில்லாதஎன்னையொத்தபாவிகள் இந்தவுலகத்திலெவர்களிருக்கின்றார்கள்-எ-று. (௰௬)

சம்பத்திற்கருத்துமிலேன் றனிமுத்தியடைவனென்
சம்பத்திலொன்றுமிலேன் றனிமுதுகுன்றுண்டதிலே
சம்பத்திற்சென்றக்காற் சகலமுமுண்டாமென்றான்
சம்பத்திற்கணநாதன் றனிமுதுகுன்றறிகிலனே.

(இ-ள்) இனி எவ்வகைப்பட்ட சம்பத்திலுமிச்சையில்லை தனிமையாகிய மோட்சசம்பத்தைப்பெறவேண்டிநிற்கின்றசம்பத்தையல்லாமல் வேறொருகருத்துமில்லை அதுவல்லாமலும் ஒப்பற்றவிருத்தகிரியென்று ஒன்றுண்டு அத்தலத்தில் சந்தோஷசம்பத்தோடேபோய்த்தரிசித்தவுடன் சகலசித்திகளுமுண்டாகுமென்று ஞானானந்தசம்பத்தையுடையகணநாதர்திருவுளம்பற்றியருளினார் ஆதலால் ஒப்பற்று விளங்குகின்றபழமலையென்பு யின்னமும் அறிந்திலேன்-எ-று. ()

படுத்திருந்தேன்மரத்தின்கீழ்ப் பணிவிழுந்ததென்மடி[illegible]
லெடுத்துமக்குத்தந்தேன்மற் றிவ்வளவேயெனச்சொன்ன

எடுத்துநின் றமங்கையரு மளகேசன் றங்கையருந்
தடுத்துரையாமொழியினையுந் தளர்வினையுங்கண்டிரங்கி.

(இ-ள்) ஒரு விருக்ஷத்தினிழலின்கீழ்ப் படுத்துக்கொண்டிருந்தே
ன் அப்பொழுதுஇந்தமூக்குத்திஎன்மடிமேல்வந்துவிழுந்தது அதை
எடுத்துவந்து உங்களிடத்திற் கொடுத்தேன். இவ்வளவே யல்லாமல்
வேறே ஒன்றுமில்லையென்று விபசித்து முனிவர் சொன்னார் அது
கேட்டு சமீபத்திலிருந்ததெய்வப்பெண்களும் குபேரனுடையதங்
கையாரும் அவரது மறுத்துச்சொல்லாத வசனத்தையும் சரீரத்தளர்
வையும்பார்த்து மனதில் இரக்கங்கொண்டு-எ-று. (௰௮)

தெய்வமுனியிவனளவிற்சிவன்விளையாட்டெனத்தெளிந்து
பொய்கைவாயிவனுண்ணப்பொதிசோறுபரிந்தளித்துத்
தையலாளாபரணந்தன்னையிவன்கையிலீந்
தையன்முதுகுன்றனுக்கேயாக்குவாயெனவறைந்து

(இ-ள்) தெய்வத்தன்மைபொருந்திய இந்தவிபசித்து முனிவரள
விலே உண்டானவைகளெல்லாம் பரமசிவனது திருவிளையாட்டெ
ன்று ஆலோசித்துத்தெளிந்து இவன் பொய்கையினிடத்திற் புசிக்கும்
படி அன்புடன்கட்டமுதுகொடுத்து குபேரனதுதங்கையார் தான
ணிந்திருந்தஎல்லாவாபரணங்களையும்விபசித்துமுனிவர்கையிற்கொ
டுத்துஇவைகளைநமதுகர்த்தாவாகியபழமலைநாதரது திருப்பணிக்கு
உபயோகமாகும்படி செய்விப்பாயென்றுசொல்லி-எ-று. (௰௯)

அருமறையோன்றன்னையும்வைத்தாகாசவிமானத்திற்
றிருமுதுகுன்றத்தளவுந்தெய்வமடவாரணைந்து
கருணையனைத்தொழுதேத்திக்காதலுடன்முதுகிரியின் [கள்
பெருமையவன்றனக்குரைத்துப்பெயர்ந்துதடங்கொண்டார்

(இ-ள்) அந்ததெய்வப்பெண்கள் விபசித்து முனிவரையும் அந்த
ரத்திற்செல்லுகின்ற விமானத்தில்வைத்துக்கொண்டு அழகியவிருத்
தகிரிபரியந்தம்போய் கிருபாமூர்த்தியாகிய பழமலைநாதரைவணங்
கித்துதித்துப் பழமலையின்மகத்துவத்தை விபசித்துமுனிவருக்குஆ
சையோடு வற்புறுத்திச்சொல்லி அவ்விடம்விட்டுத் தெய்வலோகத்
தின்வழிபற்றிப்போனார்கள்-எ-று. (௨௰)

தேவரவரிவன்மனிதன்செல்வரவரிவன்கட்டக்
கோவணமிலான்வந்துகூடியவாகணநாதன்
காவன்மொழிதானன்றோகற்பகமுங்குருமொழியு
மேவுபெரியோர்மொழியும்விதிதவறினுந்தவறு.

(இ-ள்) அவர்கள் தேவமாதர்கள் இவர்மனிதர் அவர்கள் செல்வத்
தையுடையவர்கள் இவர்கட்டுதற்குக் கோவணமில்லாதவர் இங்ஙன

மிருக்கக் கணநாதானுக்கிரகஞ்செய்தவுண்மைவாக்கியத்தினாலல்ல
வோ அவர்களிவரிடத்தில்வந்து தரிசனமானது பிர்ம்மவிதிதவறிப்
போய்விட்டாலும் கற்பகவிருக்ஷமும்குருவாக்கியமும்சிவஞானம்,
பெற்றமகான்கள் வாக்கியமும் ஒருக்காலுந்தவறாதலால்-எ-று. (௨௧)

வேறு.

தணிவுற்றகருத்துளதாபதனு
மணிமுத்தநதிப்புனலாடியபோ
பணிவைக்குமிடம்பலசிந்தைசெயூஉ
மணிமுத்தநதிக்கரைமன்னினனே.

(இ-ள்) சாந்தியைப்பெற்ற உள்ளத்தையுடைய விபசித்துமுனிவ
ரும் திருமணிமுத்தாநதியினிடத்திற்சென்று ஸ்நானஞ்செய்து தம்
மிடத்தில் இருக்கும் ஆபரணங்களைவைத்தற்குப் பலஇடங்களைச்சி
ந்தித்துக்கொண்டுமணிமுத்தாநதிக்கரையிற்சேர்ந்து நின்றார்-எ-று.

அப்போதருள்வானின்மொழிந்ததுதான்
மெய்ப்பாவிபசித்திஙன்வந்தனையே
வைப்பாய்பணிவன்னியில்வன்னியையு
மிப்போதுயர்கற்பகமென்றறிவாய்.

(இ-ள்) அப்பொழுது பரமசிவனது திருவருளினால் ஆகாயத்தில்
அசரீரிகூறிய தியாதெனில் உண்மையுடைய விபசித்துவே நீ இந்த
ஸ்தலத்திற்குவந்தாயே இப்போது உன்கையிலிருக்கும் ஆபரணங்
களை இந்த வன்னிவிருக்ஷத்தில்வை இந்த வன்னிவிருக்ஷத்தையும் உ
யர்ந்த கற்பகவிருக்ஷமென்றறிந்துகொள்-எ-று. (௨௩)

சிறையிற்பிறவிக்களைதீர்ந்தனையே
யிறையிற்பரமுத்தியையெய்தினையே
முறையுற்றவுரோமசர்முன்னமரீஇ
யுறையுற்றுபதேசமுணர்ந்திடுவாய்.

(இ-ள்) அறுதியாக்ப் பிறவியாகிய சிறைச்சாலையில் அகப்பட்டி
ருந்த உனது துன்பமெல்லாம்நீங்கினாய் ஒருகணப்பொழுதில் மே
லானமுத்தியையடைந்தாய் ஆதலால் வேதசாஸ்திரமுறைமையைத்
தெரிந்த உரோமச முனிவருடைய சந்நிதானத்தில் மருவியிருந்து
பிர்ம்மோபதேசத்தைப் பெற்றுக்கொள்-எ-று. (௨௪)

நிறையாததவத்தைநிறைத்திடுவா
யிறையோனும்வெளிப்படுமென்றிடலான்
மறையோனதுகேட்டுமனங்குளிரா
வுறையாத்தருவிற்பணியுய்த்தனனே.

(இ-ள்) அங்ஙனம்பெறுவையாகில் முற்பிறப்பிற்செய்துமுடியாத தவக்குறைவைப் பூரணமாகமுடித்துக்கொள்வாய் அத்தவமுடிவில் அஞ்ஞானவிடுதியுண்டாகி உன்னிடத்திற் பரமசிவமும்வெளியாகுமென்று அனுக்கிரகமுண்டானபடியால் அதுகேட்டு விபசித்து முனிவர் மனம்குளிர்ந்து வணங்கி அங்கிருந்த வன்னி விருக்ஷமே பெட்டியாக அதனிடத்துஅவ்வாபரணங்களைவைத்துவிட்டு-எ-று()

அன்புற்றவுரோமசனாப்பணியா
முன்புற்றருள்வானின்மொழிப்புகலா
வின்புற்றிவனுக்கிவையென்கொலெனாப்
பின்புற்றபெருந்தவமென்றனரே.

(இ-ள்) உரோமச முனிவரிடத்திற்குச்சென்று அன்புடன்வணங்கிப் பரமசிவனருளினா லுண்டான அசரீரிவாக்கியத்தைச்சொன்னார் அதை அந்த உரோமசமுனிவர்கேட்டு ஆனந்தித்து இந்த விபசித்துவுக்கு இவ்வகைப்பட்ட தெய்வானுகூலம் எதினா லுண்டாயிற்றென்று ஆலோசித்துப் பின்பு முற்சனனங்களிற் செய்துள்ள தபோபலனென் றுணர்ந்தருளி-எ-று- (உசா)

உண்மைச்சிவநல்லுபதேசமெலாந்
திண்மைத்தவரோமசர்செப்புதலால்
வண்மைத்தவர்கேட்டுமனங்குளிரா
வண்மைத்தவமேவவணைந்தனனே.

(இ-ள்) திடம்பொருந்திய பராஞானத்தையுடைய ரோமசமுனிவர் உண்மையாகிய நன்மைமிகுந்த சிவஞான உபதேசமுழுமையும் அனுக்கிரகஞ்செய்தலால் வளம்பொருந்திய தவத்தையுடையவிபசித்துமுனிவர் அதுகேட்டு மனங்குளிர்ந்து அந்தரோமசமுனிவரது சமீபத்திற்றானே யிருந்து நிஷ்டைசெய்யத்தொடங்கி-எ-று- (உஎ)

வேறு.

நலங்கொண்டநதிமூழ்கி நல்லமுதுகுன்றர்தமை
வலங்கொண்டுபணிந்தேத்தி வனசமலராற்பூசித்
திலங்கமுதுசெபப்பண்ணி யெட்டயிலத்தாலெய்யா
லலங்கவிளக்கேற்றியெழுத் தைந்தையுமேசெபஞ்செய்து.

(இ-ள்) விபசித்துமுனிவர் நன்மைபொருந்திய திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து நலமிகுந்த விருத்தாசலேஸ்வரரைப்பிரதக்ஷணஞ்செய்து வணங்கித்துதித்து.தாமரைப்புஷ்பங்களா லர்ச்சனைசெய்து பிரகாசிக்கின்ற திருவமுது நிவேதித்து எள்ளினெய்யினாலும் பசுவினெய்யினாலுந் திருவிளக்குகள் எங்கும் பிரகாசிக்க வேற்றிப் பஞ்சாக்ஷர செபஞ்செய்து-எ-று. (உஅ)

துறவுநிலைகைகூடிக்குருசேவைதொலையாமன்
மறமிலாச்சருகுசலம்வாயுவேயுணவாகி
நிறமுளபஞ்சாக்கினியினிலத்திலொருவிரலேறிய
வுறவுடையதவமுடுகிப்போனாந்துமுள்ளடக்கி.

(இ-ள்) துறவு நிலையைப்பெற்று பரமாசாரியருடையதரிசனநீங்காமலிருந்துகுற்றமற்ற சருகுஜலம் வாய்வுஇவைகளே பக்ஷணமாகக்கொண்டு ஒளிபொருந்திய பஞ்சாக்கினிமத்தியில் பூமியிற்பெருவிரலை யாதாரமாகவூன்றிக்கொண்டு ஆத்மலாபமாகியமகாதவத்திலதிகரித்துப் பஞ்சேந்திரியங்களையும் அகமுகத்தி லாமையைப்போலொடுக்கி-எ-று. (௨௧)

ஆகமதன்கணைநான்குமழிவிலாக்குணமூன்றும்
போகபுலனைந்தும்பொறியைந்துநாற்கரணம்
வேகவிகாரம்பூதவிகாரங்களிவைமாறி
யேகமாய்ச்சிவனுடனேயிரேசகவாயுவைவிட்டு.

(இ-ள்) இருதயஸ்தானத்திலிருந்து மன்மதனால்விடப்பட்டநிலைமல்லாத நான்குபாணமும்கெடாதமுக்குணங்களும் மோகத்திற்குக் காரணமாகியபஞ்சவிஷயங்களும்பஞ்சேந்திரியங்களும்வேகமாகிய அந்தக்கரணவிகாரமும் பஞ்சபூதவிகாரமுமாகிய இவைகள் நீங்கிச்சிவத்தோடு கலந்து இடைகலைவழியாகவாயுவைரேசகஞ்செய்து ()

பிங்கலையால்வாயுவினைப்பெறவாங்கிச்சுழிமுனையா
லங்கமலநேர்நிறுத்தியாதாரவழிதிறந்து
தங்குகபாலத்தினடுவெளியாக்கத்தலாக்கினிபோய்ப்
பொங்குமலம்பற்றறித்துப்புறத்தலத்திற்புறப்பட்டு.

(இ-ள்) பிங்கலைவழியாகவாயுவை உள்ளுறவாங்கிச்சுழுமுனைவழியால் வாயுவைச் சகஸ்திரதளகமலத்திற்குநேராகநிறுத்திஆறுதாரவழிகளைத்திறந்து பொருந்தியகபாலமத்தியை வெறுவெளியாகச்செய்ய அப்பொழுது அதிலுண்டானதபாக்கினியானதுசென்று அகமுகத்தில் அறுதியாய் நிறைந்துள்ளமலபந்தங்களைவேரறச்சுட்டெரித்துப் பூர்ணவியாபகமாகப் பகிர்முகத்திற்புறப்பட்டு-எ-று. (௩௧)

புவனங்களொருமூன்றும்புகைபரந்துகனல்பரப்பத்
தவனங்கொண்டுயிர்சலிப்பச்சாகத்திற்சராசரங்கள்
கவனங்கொண்டலங்கல்செயக்கடவுளருநடுநடுங்கப்
பவனன்றனுடல்வேகப்பனிமதியம்பாதவிப்ப,

(இ-ள்) அந்தத்தபாக்கினியானது மூன்றுலோகத்திலும்புகையைப்பரப்பியெங்கும் அக்கினிசுவாலையை வீசினமாத்திரத்தில் சகலவு

யிர்களுந் தாபமேலிட்டுமனஞ்சலிக்கவும் சமுத்திரத்திலுள்ள சரவு
யிர்களும் அசரவுயிர்களும்கலக்கமடைந்துபதைக்கவும் தேவர்களு
ம்மிகுந்தநடுக்கங்கொள்ளவும் வாயுவின் சரீரம்வெந்தெரியவும் கு
ளிர்ச்சிபொருந்திய சந்திரன் பாதவிப்படையவும்-எ-று. (௫௨)

உலகிலுள்ளோர்படுந்துயரமுமையம்மைகண்டருளி
யலர்கொண்டுபதம்போற்றியண்ணலேவிபசித்தி
னிலவுதவக்கனன்முடுகிநெடிதுயிர்கடவிக்கின்றா
ரிலகவெழுந்தருளியவனெதிர்நிற்கவேண்டுமென.

(இ-ள்) இப்படி உலகத்திலுள்ளவர்கள் படுகின்ற துன்பத்தை உ
மையவளாகியபெரிய நாயகியார்கண்டுதிருவுளமிரங்கிப்பழமலைநா
தருடைய பாதத்திற்புஷ்பங்களைக்கொண்டு பூசித்துவணங்கிநின்று
சுவாமீவிபசித்துமுனிவர் செய்கின்றபிரகாசம்பொருந்தியதபாக்கி
னியானது எங்குமுடுகியபடியால் சகலவுயிர்களும் மிகுந்ததாபத்தை
ப்பொருந்தி வருந்துகின்றனர் ஆதலாற்றேவரீர் அந்தவிபசித்துமு
னிவனெதிரே சுயம்பிரகாசமாகவெழுந்தருளிநின்று தரிசனங்கொடுத்த
ருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தருளினாள்-எ-று. (௫௩)

தக்கதிருமலைக்கிழத்திதருமொழியைக்கேட்டருளி
முக்கண்ணுநாற்றோளுமுகிலஞ்சுங்குழலாறும்
பக்கமதிச்செஞ்சடையும்பான்மொழியாளிடப்பாலுஞ்
செக்கர்வடிவுந்தோன்றச்சிவபெருமான்முன்னின்றான்.

(இ-ள்) தகுதியாகிய விருத்தகிரிக் குரியவளாகிய பெரிய நாயகி
யார் விண்ணப்பஞ்செய்தருளியதிருவாக்கைக்கேட்டவளவில்முன்
றுகண்களும் நான்குபுயங்களும்மேகமஞ்சுகின்ற அளகபாரத்தையு
டையகங்கையையும் அர்த்தசந்திரனையுந் தரித்திருக்கின்ற சிவந்தஜ
டாமகுடமும்பால்போலும்வசனத்தையுடையஉமையவள்வசிக்கின்
றஇடப்பாகமும்செவ்வானம்போன்ற திருமேனியும் பிரகாசிக்கும்
படி பரமசிவன்விபசித்துமுனிவனெதிராக வெழுந்தருளிநின்றார். ()

தம்பிரான்றோன்றுதலாற்சகலவுயிருந்தோன்ற
வெம்பிராணுளங்குளிரவெவ்வுயிருமுடல்குளிர
வும்பர்முழவிடிமுழங்கவொளிர்மலர்மாரியும்பொழிய
விம்பரோவிபசித்துவெதிர்பணிந்துமுறையிடுவான்.

(இ-ள்) பரசிவன் இங்ஙனம் பிரகாசித்து நின்றபடியால் சகலவு
யிர்களும் பிரகாசித்துநின்றார்கள்எமதுபிதாவாகியபழமலை நாதரு
டைய திருவுளமகிழ்வு கொண்டபடியினால்எல்லாவுயிர்களுமுன்னை
யதாபநீங்கிச்சரீரங்குளிர்ந்துமனமகிழ்வுகொண்டார்கள் அப்போ
து அந்தரதுந்துபிகள் இடிபோல முழங்கியது தேவர்களெல்லா

ரும் பிரகாசம்பொருந்திய புஷ்பவருஷம்வருஷித்தார்கள் இவ்வகை ப்பட்ட சம்பிரமங்களை இவிடத்திற்றவஞ்செய்துள்ள விபசித்துமு னிவர்கண்டு எழுந்து பரமசிவனுக்கெதிரேவிழுந்து அஷ்டாங்கமு தலிய தண்டன்பண்ணிக் குறையிரந்து துதிக்கின்றனர்-எ-று. (௫௫)

மருளுறும்பெரும்பாசவலைவளைத்தைம்பொறியாம்
வெருளுறுநாயேவிப்புலவேட்டைவிளையாடி
யிருளாயவெறுவெளியினின்றேனையேன்றாண்ட
கருணைமுதுமலையிலருட்கடலேநின்பதம்போற்றி.

(இ-ள்) மயக்கப்பொருந்திய ஈஷணாத்திரயமென்னும் பெரியபா சமாகிய வலையைவளைத்துச் சிரோத்திராதிபஞ் சேந்திரியங்களாகி ய மயக்கங்கொண்ட நாய்களையேவிச் சத்தாதி விஷயங்க ளாகிய வேட்டை விளையாடிக்கொண்டு அஞ்ஞானமாகிய வெறுவெளியி லிருந்த அடியேனைக் கருணையினாலெடுத்தாட்கொண்ட பழமலையி ன் கண்ணெழுந்தருளிய கிருபாசமுத்திரமே உன்னுடைய திருவடி களுக்கு நமஸ்காரம் நமஸ்காரம்-எ-று. (௫௬)

காவலிலாப்பெரும்பாசக்காட்டுவழிதிசைதப்பிப்
பாவமெனும்புலியலைப்பவிடயத்திப்பரந்துசுடத்
தாவிவருமாசைப்பேய்தழீஇக்கொள்ளத்தடமாறிக்
கூவல்வாய்வீழ்வேற்குன்குளிர்ந்தமலர்ப்பதஞ்சரணம்.

(இ-ள்) காவலில்லாத பெரும்பாசமாகிய காட்டுவழியிற் சென்று திசைதடுமாறிப் பாவங்களாகிய புலிகள் பயமுறுத்தி வருத்தவும் ச த்தாதி விஷயாக்கினியானது பரவிச்சுடவும் தாவிவருகின்ற ஆசை யாகிய பசாசங்கள் பிடித்துத்தழுவிக்கொள்ளவும் இவற்றால் வழித ப்பிப் பிறவியாகிய பாழ்ங்கிணற்றில் விழுகின்ற அடியேனுக்கு உ ன்னுடைய குளிர்ச்சிபொருந்திய பாதாரவிந்தங்களே அடைக்கல ம் அடைக்கலம்-எ-று. (௫௭)

## வேறு.

அஞ்சுவிதத்தாலாறுமதத்தா
னெஞ்சுசுழற்றுநினைவால்வினையா
லெஞ்சுநடிப்பாலெய்த்தேனத்தா
தஞ்சநிருத்தாசரணஞ்சரணம்.

(இ-ள்) சுரோத்திராதி ஐந்தும், சத்தாதியைந்தும், வாக்காதியை ந்தும், வசனாதியைந்தும், காமாதியைந்துமாகிய அஞ்சுவிதத்தாலு ம் சைவமாதியறுவகையுட் சமயங்களாலும் மனத்தைச்சுழற்றுகின்ற நினைவினாலும் இருவினைகளாலும் ஈனமுள்ளபொய்க்கூத்தினாலும் இளைத்துப்போனேன் என்னத்தனே சகலலோகாதாரமாகிய நடன விநோதனே உன்னுடைய திருவடிகளுக்கு அடைக்கலம்-எ-று. ()

அந்தகர்தொடையாலமேதர்படையா
னிந்தனைவிழைவானிரயக்குழியா
லுந்தியினிளையாலுறுபிணிவலையா
லைந்தனன்முதுகிரிநாதாசரணம்.

(இ-ள்) யமதூதர்கள்கட்டுகின்ற பாசக்கயிற்றினாலும் மன்மதபாணத்தினாலும் பெரியோர்களை யறியாமையால் நிந்திக்க விரும்பியதினாலும் நாகக்குழிகளிற்கிடந்து வாதைபடுதலினாலும்வயிற்றுக்கிரைதேடுதலினாலும் மிகுந்த வியாதிகளாகிய வலையினாலும் வருந்தினேன் பழமலைநாதனே இப்பொழுது உன்னுடைய திருவடிகளுக்கு அடைக்கலம் அடைக்கலம்-எ-று. (௩௯)

எய்யாநான்முகனென்றுருளனன்றே
யய்யாவுடலமெடுத்தேனுன்றன்
மெய்யாக்கண்டிலன்மெய்யிதுகரியே
யையாமுதுகிரியப்பாசரணம்.

(இ-ள்) சிருட்டித்தொழிலி லிளைப்படையாத பிரம்மதேவர் என்றுண்டாகினாரோ அன்றுமுதல் நிலையில்லாத பலசரீரங்களையெடுத்தெடுத்துழன்றேன் இதுவரையிலும்தேவரீருடைய பாததரிசனத்தை உண்மையாகக் கண்டறிகிலேன் அப்படி காணாமைக்கு இந்தச்சரீர மிருப்பதே சாக்ஷியாம் ஆதலால் ஐயனே பழமலையிலெழுந்தருளிய என்னப்பனே இப்பொழுது உனதுதிருவடிகளுக்கு அடைக்கலம் அடைக்கலம்-எ-று, (௪௰)

விதமாமுறையோவெனும்வேதியனை
நதிசேர்சடையான்மகிழ்வாய்நந்த
முதுமாமலையிற்பணியேபண்ணியா
விதமாமறையோய்முயல்வாயென்றான்.

(இ-ள்) இப்படி விதம்விதமாக முறையிடுகின்ற விபசித்து முனிவரைப்பார்த்து கங்கையையணிந்த ஜடாபாரத்தையுடையபரமசிவன்றிருவுளமகிழ்ந்தூய்நன்மைபொருந்தியவிபசித்துமுனிவரேநீநயதுவிருத்தாசலத்திற்றிருப்பணியேதொழிலாகஎப்போதும் முயன்றுகொண் டிருப்பாயென்று திருவுளம்பற்றியருளினார்-எ-று. ()

வேறு.

விப்பிரனும்பழமலையின் மெய்ப்பொருடான்விளம்பக்கேட்
டப்படியேசெய்கின்றேனடியேற்குமுன்னின்று
செப்பியதுநினைந்தபடி செய்தருளியுமையுடனே
யிப்படியேநில்லென்று னெம்பெருமானுமென்றான்.

(இ-ள்) பழமலையின்கண்ணெழுந்தருளியஉண்மைப்பொருளாகியபரமசிவன்திருவுளம்பற்றியருளினதை விபசித்துமுனிவர்கேட்டு

சுவாமீ அப்படியே செய்துவருகின்றேன் அடியேனுக்கெதிராக எழுந்தருளிநின்று அநுக்கிரகஞ்செய்த திருப்பணித்தொழிலைத் தேவரீருடைய திருவுளத்திற் குறித்தபடி நிறைவேறச்செய்வித்து எப்போதும் இந்தத்திருவுருவமாகவே நீர் உமையவளோடும் எழுந்தருளிநின்று தருசனங் கொடுத்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தருளினார் அதுகேட்டு எமது பிதாவாகிய பழமலைநாதரும் அங்ஙனே நல்லதென்று திருவாய்மலர்ந்தருளினார்-எ-று. (௪௨)

அருள்செயக்கேட்டிறைஞ்சியந்தணனும்வன்னியின்மேற்
பொருளெடுப்பானேறுதலும்பூசுரனேகற்பகநான்
றெருளுலாஞ்சிவபூசைசெய்யவந்தேன்றிருப்பணிக்கு
வெருளிலாப்பொருடருவேனெனவன்னிவிளம்புதலும்

(இ-ள்) பரமசிவன் றிருவுளம் பற்றியருளினதைக் கேட்ட விபசித்துமுனிவரும் அவரைவணங்கி வன்னிவிருக்ஷத்தில் வைத்துள்ள ஆபரங்களை எடுப்பதற்கு அந்தவிருக்ஷத்தின் மேலேறின பொழுது அவ்விருக்ஷமானது ஓய் விபசித்துமுனிவரே நான் கற்பகவிருக்ஷம் இந்தஸ்தலத்தில் தெளிவுபொருந்திய சிவபூசைசெய்யவிரும்பி வந்தேன் ஆதலால் பழமலைநாதருடைய திருப்பணியைக்குறித்து வேண்டியமட்டும் உத்தமமான பொருளைக்கொடுப்பேனென்று அந்த வன்னிமரம் சொன்னமாத்திரத்தில-எ-று. (௪௩)

எழில்வன்னிப்பொருடனையெடுக்கெடுக்கவளர்ந்தேறப்
பழமலையார்திருக்கோயிற்பணியெல்லாநிறைவேறச்
செழுமையுளவிடையேறிதேரோறித்தெருவேறக்
கொழுமையுடன்சிவனடியார்குடியேறச்செய்தமைத்தார்.

(இ-ள்) அழகிய வன்னிவிருக்ஷத்திலுள்ள திரவியங்களை எடுக்க எடுக்கவளர்ந்து விர்த்தியாகிக்கொண்டிருப்பதால்பழமலைநாதருடைய அழகிய சந்நிதியின் திருப்பணி முழுமையும் நிறைவேறும்படி செய்துவளம்பொருந்திய ரிஷபவாகனத்தையுடைய பரமசிவனை எழுந்தருளும்படி அழகுபொருந்தியதேரும் அத்தேரோடுகின்றவீதியும் திருத்தமாகமுடிப்பித்து அந்தஸ்தலத்திற் சிவனடியார்கள் செல்வத்தோடுங் குடியேறும்படியாகவும் செய்துவைத்தருளினார்.

நித்தவிழாமாதவிழாநிறைசோலைநந்தவன
மத்திமொலிவாச்சியங்களரம்பையர்களானிரைகள்
பத்தர்மடம்பயில்வித்துப்பரமசிவன்பதத்தடைந்தான்
முத்தனவன்பதம்போற்றிமுதல்வனடம்புகல்கின்றும்.

(இ-ள்) நித்தியவிழாக்கள் மாதவிழாக்கள் புஷ்பங்கள் நிறைந்த சோலைகள் நந்தவனங்கள் ஆனைகள் சத்திக்கின்ற பலவாத்தியங்கள்

தேவதாசிகள் பசுக்கூட்டங்கள் அடியார்கள்வசிக்கின்ற மடாலயங்கள் முதலியபல்வளப்பங்களுஞ்செய்வித்து விபசித்து முனிவரும் பரமசிவனுடைய திருவடியிற்கலந் தொன்றுகினார் அப்படிப்பட்ட மகாத்மாவாகிய விபசித்துமுனிவருடைய திருவடிகளை வணங்கி யாவருக்குமுதல்வனாகிய பரமசிவன்செய்தருளிய திருநடனச்சருக்கத்தைச் சொல்லுகிறோம்-எ-று. (௪௫)

விபசித்துச்சருக்கம்-முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் - ௫-ம், திருவிருத்தம் - ௱௨௪.

௬

ஆறாவது

# நிருத்தச்சருக்கம்.

வேறு.

தேவர்தேவன்றிருமுதுகுன்றினிற்சென்றுசென்றுசிறிதுந்தவம்பிலா
பாவகாரிகளாயினரெல்லாம்பரமர்பாதமடைகின்றனரெனக் [ப்
காவலாளர்களெண்வகையோருங்கடவுளாகியதேவர்கள்யாரும்
பூவின்மேலயனைவணங்கப்பூமகன்றிருமாலைவணங்க.

(இ-ள்) தேவர்களுக்குத் தேவனாகிய பரமசிவனது அழகிய விருத்தகிரியிற்போய் அணுவளவுந் தவம்புரியாமல் அவமேபுரிந்துள்ள பாவசொரூபமானவர்க ளெல்லாரும் அப்பரமசிவனது திருவடியைப்பெறுகின்றார்களென்று அஷ்டதிக்குப்பாலகரும் சகலதேவர்களும் செந்தாமரைப் புஷ்பத்தில்வசிக்கின்ற பிர்ம்மதேவனை வணங்கிச்சொல்ல அந்தபிர்ம்மதேவரும்மகாவிஷ்ணுவைவணங்கிச்சொன்னமாத்திரத்தில்-எ-று. (௧)

நாரணன்பிரமன்முதற்றேவர்கணங்களெல்ல முதுகுன்றினை நண்ணி, யாரணந்திசைதோறுமுழங்கவண்டர்தொண்டர்களோசை முழங்கப், பேரணங்கொடுவாழ்முதுகுன்றர்தம்பெரியகோயிலின் முன்னர்வணங்கிச், சீரணங்குதிருமாமலறயோதித் திகழுமஞ்சலி செய்துமுன்னின்றார்.

(இ-ள்) மகாவிஷ்ணு பிர்ம்மாமுதலிய சகலதேவர்களும் தன்மை பொருந்திய் நமதுவிருத்தகிரிக்குப்போய்ச்சேர்ந்து திசைகள்தோ

றும் வேதங்கள் கோஷிக்கவும் தேவர்களுடையவாழ்த்தொலியும் அடியார்களோதுகின்ற திருப்பதிகத்தொலியும் முழங்கவும் பெரியநாயகியாரோடு வாழுகின்ற பழமலைநாதருடைய ஆலயத்தில்பெரிய சந்நிதியின்முன்வந்து நமஸ்காரஞ்செய்து சிறப்புமிகுந்த அழகிய வேதவாக்கியங்களை யெடுத்தோதி அஞ்சலியஸ்தராய் நின்றார்கள்.()

வந்ததேவர்கடங்கள்கருத்தைமாறுபாகர்திருவுள்ளமறிந்தே
சிந்தைசெய்துதிருவாய்மலராதசெயலறிந்துவிபசித்துவணங்கி
நந்ததேவர்தமக்குரைசெய்யநந்தியெம்பெருமாற்குரைசெய்ய
வந்தணாளன் விபசித்தினிடத்தினருளினாலமலன்வெளியானான்.

(இ-ள்) இங்ஙனம் வந்துநிற்கின்ற தேவர்கள்கருத்தைப்பெரியநாயகியை யிடப்பாகத்திலுடைய பரமசிவன் திருவுள்ளத்தில்தெரிந்து சிந்தித்து அவர்கள்வரும்படி திருவாய்மலர்ந்தருளாத செய்கையை விபசித்துமுனிவரறிந்து நந்திதேவருக்குத்தெண்டனிட்டு விண்ணப்பஞ்செய்யநந்திதேவரும்எமதுகர்த்தாவாகிய பழமலைநாதருக்கு விண்ணப்பஞ்செய்தார் அதுகேட்டு நிருமலராகியபரமசிவனும்அந்தணாளனாகிய விபசித்துமுனிவரிடத்தில்வைத்தகிருபையினாலேவெளிப்பட்டருளினார்-எ-று. (௯)

அண்டகோளகைவிண்டுவிளக்கவமரர்துந்துமியாவுமுழங்கத் [ங்க
தொண்டரார்ப்பொலிவேலைதூரக்கசதொக்கபூதகணதுந்துமியோ
வெண்டிசைக்கணிலங்கணநாதரொள்விழும்படியின்றிநெருங்க
மண்டுபேரொளியே வடிவாகியவானநாயகன்வந்துமுன்னின்றான்

(இ-ள்) அண்டகோளகை அநேகபிடங்களில்வெடிபட்டுப்பிளக்கும்படிதேவதுந்துமிகளெல்லாஞ்சத்திக்கவும் அடியார்களுடைய வாழ்த்தொலி சமுத்திரகோஷத்தை ஓட்டிவிடவும் நிறைந்தபூதகணங்கள்முழங்குகின்றவாத்தியங்கள்மிகுந்துசத்திக்கவும் அஷ்டதிக்குகளினிடங்களில் அழகியகணநாதர்கள் எள்விழுதற்கொத்தபூமியில்லாமல்நெருங்கவும் பரிபூரணஞானப்பிரகாசமேசொரூபமாகியபரமசிவன் தேவர்கள்முன்னேவந்து நின்றருளினார்-எ-று. (௰)

விண்ணவர்க்குவெளியாகியவண்ணறன்மெயபேரொளிகண்டு
நடுங்கிக்,கண்ணைமூடிமுறையோமுறையோவெங்கண்கள்கண்டிட
நின்றருளென்றார், பெண்ணணங்கருட்கண்ணருள்செய்தாள்பே
தைபாகருங்காட்சிகொடுத்து,நண்ணுதேவரைக்கண்டுநகைத்துநன்
ஸ்மதான்பெரிதோவுமக்கென்றார்.

(இ-ள்) தேவர்களுக்குமுன் வெளிப்பட்டுநின்றபரமசிவனுடைய உண்மையொருந்திய சுயம்பிரகாச சொரூபத்தைக்கண்டு சகலதே

வர்களு நடுக்கங்கொண்டு கண்களைமூடி அபயமபயமையா எங்கள் கண்கள் காணும்படி நின்று தரிசனங்கொடுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள் அதுகேட்டுப் பெண்ணாங்காகிய வுமையவள் கிருபாதிருஷ்டியினாலேபார்த்தாள் பேதையாகிய உமையவளையிடப்பாகத்திலுடைய பரமசிவனும் தரிசனங்கொடுத்துநின்று அவ்விடத்தில்வந்திருந்த தேவர்களைப்பார்த்துநகைத்துஓய்தேவர்களேஉங்களுக்குநன்மையான சுகம் மிகுந்துள்ளதோவென்றுகேட்டருளினார்-எ-று. (௫)

சிறந்ததேவர்கள்செப்புகின்றார்கள்தேவதேவசிவசங்கரவெங்கட்
கறங்களாமதிகாரமளித்தாயப்பதத்தில்வந்தேறுநரில்லைப் [க்
பிறந்தயோனிகள்பாலவையுமிந்தப்பெரியமுத்தாநதிக்கணின்மூழ்கி
கறங்கிலாதுநின்பாதம்வணங்கிக்கதிகள்சேர்ந்துகளித்திடலாலே.

(இ-ள்) அங்ஙனம்பரமசிவன் றிருவுளம்பற்றி யருளினபொழுது மேன்மைபொருந்திய தேவர்களசொல்லுகின்றார்கள் தேவர்களுக்கெல்லாந்தேவனேசிவசங்கரமூர்த்தியே நால்வகை யோனிகளிலும் பிறந்த சகலவுயிர்களும் பெரிதாகியஇந்தத்திருமணி முத்தாநதியில் வந்துஸ்நானஞ்செய்து ஒருவருந்தமுமில்லாமல்உமது திருவடிகளை வணங்கி மோக்ஷத்தைப்பெற்று நித்தியானந்தத்தை யடைதலினால் எங்களுக்கு நன்மையாகிய அதிகாரங்கொடுத்தீர் அவ்வதிகாரங்களுக்குரியஎங்கள் பதவிகளில் வந்தடைகின்றவர்களொருவருமில்லை.(௬)

பிரமர்மாயர்பதமேறினரில்லைப்பெண்கடானமும்பூசையுமில்லைச்
சுரர்களுண்டியுட்வேள்வியுமில்லைத்துரகயாகமும்போகமுமில்லை
விரவுமாதவர்க்கன்னமுமில்லைவீரசொர்க்கமுமபோர்களுமில்லை
யிராவிசெல்வமும்போனமுமில்லையியமனுணையுந்தானமுமில்லை.

(இ-ள்) பிரமபதத்திலும்விஷ்ணுபதத்திலும்வந்தேறினவர்களுமில்லை கன்னிகாதானங்களும் சிவபூசைகளுமில்லையாகங்களும்அவற்றில்தேவர்களுக்குக்கொடுக்கும் அவிர்ப்பாகங்களுமில்லை அசுவமேதயாகங்களும் அதனாலனுபவிக்கும்சொர்க்காதிபோகங்களுமில்லை பசித்துவருகின்ற பெரியோர்களுக்கன்னங் கொடுப்பதுமில்லையுத்தங்களும் அதனாலனுபவிக்கும் வீரசொர்க்கங்களுமில்லை சூரியநமஸ்காரபிரதக்ஷிணநைவேத்தியங்களுமில்லை யமதர்மராஜனுடைய ஆக்கினையுந் தானங்களுமில்லை-எ-று. (௭)

மற்றுமற்றுளதேவர்பதத்தில்வந்தபேருமிலையந்தவதான
மற்றிறந்தனபாதகரின்றியாழ்ந்தகும்பிகமுர்ந்தவெமக்கு
மித்தைநாள்வரையின்றதிகாரமெங்களுக்கதிகாரம்வழங்கச்
சத்தநீவைட்க்கண்ணருளென்றார்சந்தமுத்தநதிவாணனுடைப்பான

(இ-ள்) அல்லாமலும் வேறுவேறாயுள்ளதேவர்கள்பதத்திலும்வந்தேறினவர்களுமில்லை யாதலால் அழகியதவத்தாற்பெறத்தக்கஸ்தானங்களெல்லாம் அற்றுப்போய்விட்டன ஆழ்ந்தநரகமெல்லாம்பாதகர்களில்லாமல்தூர்ந்துவிட்டன, எங்களுக்கிதுவரையிலு மதிகாரமில்லை இனியாகிலும் எங்களுக்கதிகாரமுண்டாகும்படி நீர் சற்றே கிருபாகடாக்ஷம்வைத்தருளவேண்டுமென்று தேவர்களெல்லாரும்விண்ணப்பஞ்செய்தார்கள் அதுகேட்டு அழகியமணிமுத்தாநதியின் கண்வாழுகின்ற பரமசிவன் திருவாய்மலர்ந்தருளுகின்றார்-எ-று. ()

வருகதேவர்முதுகுன்றநமக்குவடிவமுத்தநதிசத்தியின்மேனி
யொருமையாயதின்மூழ்கி வணங்கிலுயாவைக்குமஃதியாவர்தடுப்
தருவசேதனமீவதுகண்டீர்சத்தளிப்பதுதனியல்பன்றே [பார்
பெருகநீர்தவஞ்செய்தபின்றேபெரியதேவர்களாயினீர்முன்னே

(இ-ள்) வாருங்கள்தேவர்களே விருத்தகிரியானது நமது சொரூபம் திருமணிமுத்தாநதியானது சத்திசொரூபம் ஆதலால்மனோவாக்குக்காயமொன்றுபட்டு அந்தநதியில் ஸ்நானஞ்செய்து நம்மை வணங்கினால் உயர்ந்த மோக்ஷபதத்தில் வைக்கும் அங்ஙனம்வைப்பதை எவர்கள் தடுப்பார்கள் அவ்விடத்திலிருக்கும் விருக்ஷங்களுக்கும் அசேதனமாகிய மிருகபக்ஷிகளுக்கும் மோக்ஷங்கொடுக்கின்றதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களே இந்தஸ்தலஞ் சத்தானபதத்தைக்கொடுப்பது சுபாவகுணமல்லவோ அதுவுமல்லாமல் முற்சனனத்தில்நீங்களிந்த ஸ்தலத்தில் வசித்து மிகுந்த தவத்தைச்செய்தபின் பல்லவோ பெரியதேவர்களானீர்கள்-எ-று. (க)

உங்களைத்தவஞ்செய்கை விலக்கிலொழிக்கைநீதி தவநீருமுய
ன்றும்,பொங்குமுத்திப்பதமெய்துவீரென்றபூதநாதனும்வானின்
மறைந்தான், றங்கவானவர் முத்தநதிக்கட்டோன்றி மூழ்கிநதிக்க
ரைதன்மேற், றிங்கள்சூடியைப்பங்கடமீதுதியானஞ்செய்துசிறந்
திருந்தார்கள்.

(இ-ள்) இப்பொழுது உங்களைத் தவஞ்செய்யவேண்டாமென்று விலக்கினால் மற்றவர்களுக்கும் விலக்கிவிடுவது நீதியாகும் ஆதலால் நீங்களும் இந்தஸ்தலத்திற்பொருந்தித்தவஞ்செய்தால்பதகர்த்தத்துவமொழித்து பதிகர்த்தத்துவமாகிய உயர்ந்த மோக்ஷபதத்தைப்பெறுவீர்களென்று திருவாய்மலர்ந்து பரமசிவனும் சிதாகாசத்தில் மறைந்தருளினார் அதுகேட்டுப் பரிசுத்தராகிய தேவர்கள் திருமணிமுத்தாநதியினிடத்தில்வந்து ஸ்நானஞ்செய்து அந்தநதிதீரத்தில் சந்திரனைச் சடையிற்றரித்த பரமசிவனை இருதயகமலத்தில்தியானஞ்செய்து சிறப்புற்றிருந்தார்கள்-எ-று. (உ)

## வேறு.

திறமுதுகுன்றிறைசிறிதுநினைக்கத்திசைதோறு
மருமறைவந்தனவாகமம்வர்தவரிவந்தான்
பெருகியவிமையவர்குழுவிற்சிவனும்பிரகாசித்
தொருமையுமுண்மையுமமரர்க்கருள்வானுட்கொண்டு.

(இ-ள்) அங்ஙனம் சகலதேவர்களுந் தியானித் திருந்த பொழுது அழகிய பழமலையின்கண்ணெழுந்தருளிய பரமசிவன் சற்றேதிருவுளத்தினினைத்தமாத்திரத்தில் திக்குகள்தோறும் அரியவேதங்களும் ஆகமங்களும் வந்துநிறைந்தன மகாவிஷ்ணுவும்வந்தார் அப்படிநிறைந்த தேவர்கூட்டத்தினடுவிற் பரமசிவனும்பிரகாசித்துநின்று அந்தத்தேவர்களுக்கு ஒருமைப்பாட்டையும் உண்மைப்பாட்டையுமனுக்கிரகஞ்செய்யும்படி திருவுளங்கொண்டு-எ-று. (௰௪)

வித்தகமாகியசித்தர்கண்மெத்தியமெய்ப்பொன்னைச்
சித்திரமானதிருப்பதமெண்டிசையுந்தோன்றச்
சத்திமுகத்தும்பத்தர்முகத்துந்தன்கண்ணு
முத்தநதிக்கணிருத்தமளித்தான்முதுகுன்றன்.

(இ-ள்) ஞான சொரூபமாகிய சித்தத்தையுடைய பெரியோர்களிடத்தில் விளங்குகின்ற உண்மைஞானப் பிரகாசம்போல அழகிய திருவடிகளெட்டுத்திக்குகளிலும் பிரகாசிக்கும்படி பராசத்தியின் முகத்திலும் அடியார்கள்முகத்திலும் தமதுகிருபாதிருஷ்டிபொருந்தத் திருமணிமுத்தாநதியினிடத்தில் பழமலைநாதர் திருநடனஞ் செய்தருளினார்-எ-று. (௰௨)

ஞானந்தங்கியவடிவனடஞ்செயநந்தேவன்
வானந்தங்கியதேவர்கள்காணுமனந்தோன்று
மானந்தந்தனையமுதாவுண்டனராசைவற்று
றூனந்தங்கியவுடலைமறந்தாரொன்றுனார்.

(இ-ள்) நமதுதேவனாகிய பரமசிவன் ஞானானந்தசொரூப நிருத்தஞ்செய்கின்றவளவில் சொர்க்காதிலோகவாசகராகிய சகலதேவர்களுங்கண்டு மனவொருமையைப்பெற்றுப் பிரமானந்தத்தையமிர்தமாகப்புசித்து நிவாததீபம்போலசைவற்று நாசப்படுகின்ற சரீரஸ்மரணமொழிந்து ஆனந்தமயரானார்கள்-எ-று. (௰௩)

அமைவுபிறக்குமமரர்கள்சித்தமதுகாணு
வுமையைநகைத்திங்கிமையவருக்கன்புளதாகச்
சல்மயுநிருத்தப்பிணையுநடித்துத்தனிநின்றான்
கமைவுதரித்தங்கிமையவர்சித்தங்களிவானார்.

(இ-ள்) பரமசிவனானவர் அங்ஙனம் பரப்பற்று அமைவுபெறுகின்றதேவர்களிருதயத்தைத் தெரிந்து உமையவளைப்பார்த்துநகைத்துத் தேவர்களுக்கன்புண்டாகும்படி முயன்றநடனத்தை மேன்மேலும் நடித்துத் தனிமையாக நின்றருளினார் அதுகண்டு தேவர்களுபசாந்தமடைந்து மனமுருகி நின்றார்கள்-எ-று. (௰௪)

அஞ்ஞானக்கணமார்க்ககலும்படியெண்ணி
யுஞ்ஞானப்பதமைந்தையுபதேசஞ்செய்தான்
மெய்ஞ்ஞானக்கண்டன்னைவிழித்திருளவெளியில்லாக்
கைஞ்ஞானத்திரையற்றகடற்போனிலையென்றான்.

(இ-ள்) பரமசிவனானவர் தேவர்களுக்கு அஞ்ஞானதிருஷ்டி நீங்கும்படி நினைந்து உய்தற்குரிய ஞானசொரூபமாகிய ஐந்தெழுத்தையு முறையே சிகாரஞ்-சிவமென்றும், வகாரம் - அருளென்றும், யகாரம்-ஆன்மாவென்றும், நகாரம்-திரோதமென்றும், மகாரம்-மலமென்றும், உபதேசஞ்செய்து உண்மையாகிய ஞானதிருஷ்டியைத்திறந்து இருளும் வெளியுமில்லாத மாயைவித்தைகளென்னும் அலைகணீங்கிய சமுத்திரம்போல நிற்பது சொரூபசமாதி நிலையென்று அனுக்கிரகஞ்செய்தருளினார்-எ-று. (௰௫)

பூதாகாசம்மற்றுளநாலிற்புணர்வாகிப்
பேதாகாசம்மாகிப்பிறியாநிறைபோலப்
பேதாகாசமாகிப்பொருளாய்நிறைவாகி
நாதாதீதப்பரசிவமாவதுநாமென்றான்.

(இ-ள்) பூதாகாசமானது மற்ற பிருதிவு-அப்பு-தேயு-வாயுவென்னும் நான்குபூதங்களிற்கலந்தும் கலவாமல் பேதாகாசமாகியும் அபேதமாகியுமிருக்கின்ற தன்மையைப்போல் சிதாகாசமாகியும் எல்லாப்பொருளுந் தானேயாகியும் பரிபூர்ணசொரூபமாகியும் நாதத்துக்கதீதமாகியும் விளங்குகின்ற பரமசிவமாவது நாமேயென்று பரமசிவன் றிருவுளம்பற்றியருளினார்-எ-று. (௰௬)

சடசித்தெங்கணுநாமேநாமேசகலமுமென்
றுடலிற்கண்டவனேசிவனுமொருவர்க்குந்
தொடாத்தெரியாவாகமமுடிவுஞ்சொல்லுமரோ
வடரப்பிரமனுமரியுஞ்சத்தியுமறியாரால்.

(இ-ள்) எவ்விடத்தும் தேகந்தோறும் விளங்குகின்றசித்தாகிய ஆன்மாக்களும் நாமேயென்றும் சகலவஸ்துக்களும் நமது சொரூபமேயென்றும் தனதுசரீரத்திற் றரிசனஞ்செய்த மகாபுருஷன் எவனோ அவனேசிவசொரூபமாவான் ஒருவராலுந்தொடர்ந்தறியப்ப

டாத ஆகமத்தின்முடிவும் அவ்வாறேசொல்லும் அதனைப் பிர்ம்மாவும் மகாவிஷ்ணுவும் பராசத்தியும் காணவறியார்கள்-எ-று. (௰எ)

ஞானாசாரியரிடமாயல்லதுநம்முண்மை
தானாவறியார்தற்பொருளுடலாவிகண்மூன்றுங்
கோனார்தங்கைகொடுத்தருளுபதேசங்கொள்வா
ரானாநிழலுஞ்சாகையுமெனவவர்வழிநிற்பார்.

(இ-ள்) நம்முடைய உண்மைவடிவைஞானாசாரியரிடமாயிருந்து தெரியவேண்டுமேயல்லாமல் ஒருவருந்தானே தெரிந்துகொள்ளார்கள் அல்லாமலுந் தங்களுடல் பொருளாவி மூன்றையும் ஆசாரியரிடத்தில் தத்தஞ்செய்து அருளுடையஞானோபதேசத்தைப்பெறுகின்ற சற்சீஷர்கள் கெடாதநிழலும் விருக்ஷமும்போல நீங்காதிருந்து அவரதுவழிபட்டுநிற்பார்கள்-எ-று. (௰அ)

சாதிகுணங்களுரைத்தவர்குரவன்றனைநம்மிற்
பேதகமாகநினைத்தவர்பெருமைகுறைசொன்னோர்
வாதினின்யாதினின்மாறுகள்கொண்டவர்வணையாதார்
சூதுகள்செய்தவரவரேநரகந்தொலையாதார்.

(இ-ள்) ஆசிரியருடையகுலத்தையுங்குணங்களையுமிழிவாகச்சொன்னவர்கள் அவர்நம்மில்வேறாக நினைத்தவர்கள் அவரதுபெருமையைக் குறைவாகச்சொன்னவர்கள் அவரைத்தர்க்கங்களிலாகிலும் மற்றெந்தவிதத்திலாகிலும் விரோதஞ்செய்தவர்கள் அவரைவணங்காதவர்கள் அவருக்குவஞ்சனைகளைச்செய்தவர்கள் எவர்களோ அவர்களே எந்தக்காலத்திலும் நரகக்குழியைவிட்டுநீங்காதவர்கள்-எ-று. ()

குரவர்தமக்கர்ச்சனைகள்கொடுப்பதெமக்காகும்
விரவுநமக்குப்புரிபிழையாசான்விடுவிப்பான்
கரவிலவர்க்குப்புரிபிழையெம்மாற்களைவாகாப்
பரமபதத்தைத்தருவதொருத்தன்பணியன்றே.

(இ-ள்) பரமாசாரியருக்கு அர்ச்சனைகள்செய்வது நமக்குச்செய்வதாகும் எல்லாச்சீவர்களிடத்திலும் எள்ளுக்குள்ளெண்ணெய்போற்பொருந்திய நமக்குச்செய்தகுற்றத்தைப் பரமாசாரியர்நீக்கிரக்ஷிப்பார் அவருக்கு வஞ்சகத்தினாற்செய்த குற்றத்தை நம்மால்நீக்கப்படாது அஃதெதினாலென்றால் மோக்ஷத்தைக்கொடுப்பதுஅவரது தொழிலேயல்லால் வேறொருடைய தொழிலல்ல-எ-று. (உ௰)

ஆசாரியர்பேரின்பமளித்தாலளித்தார்கண்
மாசாய்நரகமுழுதுமழுந்துவர்வந்தாசா

னேசார்பிறவியறப்பரிருந்தவரோகேளீர்
தேசார்நம்முடவுண்மைகள்பெற்றவர்தேர்வாரோ.

(இ-ள்) பரமாசாரியரானவர் பேரின்பமாகியதமதுசொரூபத்தைக் கொடுத்தருளினால் அதற்குக் கைம்மாறாகத் தங்களுடல் பொருளாவியைத் திரிகரணமும் ஒவ்வாமல் மலினசித்தராய்த் தத்தஞ்செய்த சீஷர்கள் எப்போதும் நரகங்களிலெல்லாமழுந்துவார்கள் அங்ஙன மழுந்திநிற்பவர்களுக்குத் தெய்வகதியாய் விடுதலைக்கால நேரிடுமாயினும் அப்போதும் அவ்வாசிரியரோ கிருபையாக எழுந்தருளிவந்து குற்றமுள்ள பிறவியைக்களைந்து ரக்ஷிப்பார் ஆதலால்பெருமையிருந்த தவத்தையுடைய தேவர்களே கேட்பீர்களாக ஞானப்ரகாசம் பொருந்திய நமது உண்மைவடிவைப்பெற்ற பெரியோர்களிதனைத் தெளிவார்கள்-எ-று. (௨௧)

உத்தமசத்தியமித்தனைப்பொய்யென்றுணராதா
ரத்தலைவெட்டுண்டாயிரசின்னப்பொடியாகிப்
பொய்த்தலையெரிவாய்நரகிற்புகுதுவர்நம்மாணை
சத்தியமிதுவேசத்தியம்வானோரானோரே.

(இ-ள்) உத்தமமாகிய இந்தச் சத்தியவசனத்தை உண்மையென்றறியாதவர்களெவர்களோ அவர்களது சிரசானது வெட்டுண்டு ஆயிரம்சிறுபிளவாகப்பிளக்கப்பட்டு அவர்களும்பொய்யாகி யலைக்கின்றஎரிவாய்நரகத்தில் நமதாணைப்படிக்குச்சேருவார்கள் இதுவே சத்தியஞ் சத்தியந் தேவர்களேயென்றுதிருவுளம்பற்றியருளி-எ-று. ()

நிருத்தமருத்தமறைந்துமறைந்தானிவ்வானோர்
இருக்கபதத்தைவணங்கினர்செல்வார்சொல்வார்கள்
குருக்கிடைபெற்றதவத்தினரோமுதுகுன்றூடே
தருக்கியிருப்பாசத்தரிராதுசபித்தார்கள்.

(இ-ள்) நிருத்ததரிசனங்கொடுத்து அதற்குப்பொருளான ஞானநிலையையுமுபதேசஞ்செய்துபரமசிவன்மறைந்தருளினார் அப்பொழுதுபரமசிவனது நிருத்தமாகிய திருவடிகளைவணங்கிச்சொல்லுகின்ற சகலதேவர்களும் சொல்லுகின்றார்கள் அஃதியாதெனில் ஆசிரியரிடமாகப்பெற்றதவத்தையுடையபெரியோர்களே பழமலையினிடத்திவ்மண்களிப்பாகவிருக்கக்கடவார்கள் அப்படிபெறாதஅசத்தையுடைய மூடர்களிருக்கக்கூடாதென்று சபித்தார்கள்-எ-று. ()

முத்தநதிக்கணிருக்தவிருத்தமுயன்றேறதும்
பத்தர்சரிக்கிருதிற்பலகோடிபலன்மேவிச்
சத்துருவற்றிருள்பொய்ப்பிறவிப்பணிதானீவிச்
சித்தியுமுத்தியுமெய்துவரொன்றனர்திகழ்நாதர்.

(இ-ள்) திருமணிமுத்தாநதியின்கண்பரமசிவன்செய்தருளியதிரு நடனமாகியஇந்தச்சரித்திரப்பாடலை முயன்றுபடிக்கின்றஅடியார் கள் அஸ்வமேதயாகபலனிலும்கோடியங்கதிகமான பலனைப்பெற்று ச்சத்துருக்களில்லாமல் அஞ்ஞானத்தைப்பற்றிவருகின்ற பொய்யா கிய ஜனனவியாதியும்ஒழித்துச்சகலசித்திகளையும் மோக்ஷத்தையும் பெறுவார்களென்று அனவர்த்தியையென்னுந்தேவிக்கு ஞானப்பி ரகாசமிகுந்தநாதசன்மாவானவர்திருவுளம்பற்றியருளினர்-எ-று. ()

திருத்தச்சருக்கம்-முற்றுப்பெற்றது.

ஆ. சருக்கம் - சு-இ; திருவிருத்தம் - ௱கூரு.

௭

ஏழாவது

# அகத்தியச்சருக்கம்.

வேறு.

ஐயன்முதுகுன்றமர்ந்தபிரா னளித்தநடத்தையுரைசெய்தோ
முய்யும்படிநங்குறுமுனிவ னுகந்துவருமாறுரைக்கின்றோம்
பையவித்தப்பருப்பதந்தான் பானுபதத்தைக்கடந்தோங்கிச்
செய்யவெய்யோன்சந்திரனுஞ் செல்லும்வழியைத்தடைசெய்ய.

(இ-ள்) எமது பிதாவாகிய பழமலையின்கண் ணெழுந்தருளிய ப ரமசிவன் அருளிச்செய்த திருநடனச்சரித்திரத்தைச் சொன்னோம் இப்பால் உலகத்திலுள்ள சகலஜீவராசிகளும் பிழைக்கும்படியாகந மது அகஸ்தியமுனிவர் விருத்தாசலத்திற்கு அதிகவிருப்பமாய் வ ருகின்ற சரித்திரத்தைச் சொல்லுகின்றோம் அஃதெப்படியென்று ல் விந்தியபர்வதமானது மெல்லவளர்ந்து சூரியமண்டலத்தையும் அதிக்கிரமித்துயர்ந்து சிவந்தகிரணங்களையுடையசூரியசந்திரருஞ் செல்லுகின்றவழியைத் தடைசெய்ததினல்-எ-று. (க)

இரவுபகலற்றனுட்டான மின்றிமறையோரவியின்றிச்
சுரர்கள்பசியால்வாடுதலாற் சுரத்துமேகம்பொழியாதே
திரணமுதலாத்தீய்ந்தபடி தேவர்முனிவர்விதிக்குரைப்பப்
பிரமன்றானுந்தன்சிறுவன் பெரியகும்பமுனிக்குரைப்பான்.

(இ-ள்) இராப்பகலில்லாமையால்பிராமணர்களனுஷ்டானமில்லாமலும் தேவர்கள் அவிர்ப்பாகமில்லாமலும் பசியினால் வாடுகின்றமையால் மேகமானது நீர்சுரந்து பூமியில்மழைபெய்யாமல்தரும்புமுதலானவையுங் கரிந்துபோன தன்மையைத் தேவர்களும்முனிவர்களும்பிர்ம்மதேவருக்குச்சொல்லபிர்ம்மதேவரும் தன்குமாராகியதவத்தான்மிக்க அகஸ்தியமுனிவருக்குச் சொல்லுகின்றார்-எ-று.

விந்தவரையைமதமடக்கி மிகவில்வலனைவாதாவி
யந்தவிருவர்தமைமாற்றி யணைவாயென்றேயயன்மறைந்தான்
முந்தவிடைகொண்டகத்தியனு மூன்றுசுடருமுதித்ததெனச்
சந்தக்கரத்திலங்குட்டந் தனைப்போனடந்துவருகின்றான்.

(இ-ள்) விந்தியபர்வதத்தினுடைய அகங்காரத்தையொடுக்கிமிகுந்தவல்லமையுடைய வில்வலன் வாதாவியென்னும் இவ்விரண்டுராக்ஷதர்களையு மழித்துவிட்டு வருவாயென்று சொல்லிப்பிர்ம்மதேவர் மறைந்துவிட்டார் அப்பொழுது அகஸ்தியமுனிவரும்முதன்மையாக விடைபெற்றுக்கொண்டு மூன்றுசுடர்களும் ஏககாலத்தி லுதயமானதுபோல அழகிய கையினிடத்துள்ள பெருவிரல்போன்ற சிறியவுருவமாய்ப் பூமியில் நடந்துவருகின்றார்-எ-று. (௩)

அமரர்கணங்கள்சித்தர்கண மமரமுனிவர்நரமுனிவர்
தமரமறைகணவக்கிரகஞ் சகலகணமும்புகழ்ந்தேத்தத்
திமிலமலைகள்குலமலைகள் செம்பொன்மேருபுடைசூழ
விமலர்மலர்மாரியும்பொழிய மின்னுக்கொடிகணின்றாட.

(இ-ள்) தேவர்கூட்டங்கள் - சித்தர்கூட்டங்கள் - தேவரிஷிகள்-நரரிஷிகள் - சத்திக்கின்ற வேதங்கள் நவக்கிரகங்கள் முதலான சகலகணங்களும் புகழ்ந்து தோத்திரஞ்செய்யவும் திமிலமச்சங்கணிறைந்துள்ள எழுகடல்களும் அஷ்டகுல பர்வதங்களும் செம்பொன்மயமாகிய மகாமேருகிரியும் பக்கங்களிற் சூழ்ந்துவரவும் தேவர்கள் புஷ்பவருஷிப்பொழியவும் பிரகாசம்பொருந்திய கொடிகள் நின்றாடவும்-எ-று. (௪)

பஞ்சமுழவம்விண்ணதிரப் பாடும்புலவரிசைபாடத்
தஞ்சவுதயனெழுங்காலைத் தருக்கூகைக்குநெருக்கப்போ
லஞ்சியசுரர்நடுநடுங்க வரிபதீர்த்தம்பலமூழ்கி
விஞ்சுபாமன்றலம்பலவு மேவிவிந்தமலைசார்ந்தான்.

(இ-ள்) தோற்கருவி - துளைக்கருவி - கஞ்சக்கருவி - மிடற்றுக்கருவி-நரம்புக்கருவியென்னும் பஞ்சவாத்தியங்களுமாகாயத்தில்முழங்கவும் இசைபாடுகின்ற வித்வஜனங்கள் சங்கீதம்பாடவும் பெரு

மைபொருந்திய ஸூரியோதயகாலத்தில் விருக்ஷங்களிலுள்ள கோட்டான்கள் எப்படி பயந்துநடுங்குமோ அப்படி ராக்ஷதர்களெல்லாம் பயந்து நடுநடுங்கவும், அகஸ்தியமுனிவரானவர் அரிதாகிய பல தீர்த்தங்களிலும்போய் ஸ்நானஞ்செய்து பெருமைமிகுந்த பலசிவஸ்தலங்களிலும்போய்த் தரிசனஞ்செய்து அப்பால் விந்தபர்வதத்தி னருகேவந்துசேர்ந்தார்-எ-று. (௫)

அளவினூறாயிர முயர்ந்த வந்தவிந்த மகத்தியனுக்
கிளகியெதிரே சென்றுபணிந் தினிய பூசை பலவியற்றி
யுளமுநடுங்கமெய்நடுங்க வொடுங்கிநின்ற நிலைகண்டு
வளமைமுனிவன் றிருவுள்ள மகிழ்ந்துவிந்தமலைக் குரைப்பான்.

(இ-ள்) அப்போது அநேக நூறாயிரயோசனைதூர முயர்ந்திரா நின்ற அந்தவிந்தபர்வதமானது அகஸ்தியமுனியைக்கண்டு மனமுருகி எதிர்கொண்டுபோய்வணங்கி இனியவாகிய பலபூசைகளைச் செய்து மனநடுங்கவும் சரீரநடுங்கவும் அடங்கிநின்ற நிலைமையைக்கண்டு தவசிரேஷ்டராகிய அகஸ்தியமுனிவர் திருவுளமகிழ்ந்து விந்தபர்வதத்திற்குச் சொல்லுகின்றார் எ-று. (௬)

தென்பூமிக்கட்டம்பரியச் செல்கின்றோம்பாஞ்செல்லுங்கா
லுன்பாலேறியிறங்கியிட வொண்ணாதுநீ தாழ்ந்திடுக
வன்பாலிதனைச்செய்யாயே லதிர்ந்துச்சாம்பராக்கிடுவோ
நின்பாலென்றான்விந்தமலை நிலத்திலொடுங்கிப்புக்கதுவே.

(இ-ள்) தெற்குத்திசைக்கண் தவஞ்செய்யவென்று நாம்போகின்றோம் போகின்றபோது உனதுமேலேறி யிறங்கிப்போகவொண்ணாது அதுவொருதடையாகின்றது ஆகையால் நீதாழ்ந்து சிறுமையாயடங்குவாயாக இப்படி நீ அன்பாகச்செய்யாவிட்டால் உன்னையழித்துச் சாம்பலாக்குவோமென்று அகஸ்தியமுனிவர் சொல்லியருளினார் அதுகேட்டு விந்தபர்வதமானது பூமியிலடங்கிப்போயது-எ-று. (௭)

ஆடுமரவமந்திரங்கேட் டளைசென்றன்னமலையொடுங்க
நீடுஞ்சுடர்கள்வழிநடப்ப நிறைந்தமலர்மாரியும்பொழிய
வாடுமுனிவர்தேவரெலா மகிழ்ச்சேர்பவர்போன்முகங்குளிர்ந்தார்
தாடளசுராரிருவருழி தனித்துச்சென்றான் குறுமுனிவன்.

(இ-ள்) படமெடுத்தாடுகின்றசர்ப்பமானது பிடாரனுடையமந்திரத்தைக் கண்ணேசெவியாகக் கேட்டவுடன் படத்தை யொடுக்கித் தன்னுடைய வளையிற்புகுந்ததுபோல விந்தபர்வதமானது பூமிக்குள் ஒடுங்கினபொழுது பிரகாசமிகுந்தசந்திரசூரியரிருவரும் வழிகண்டு நடக்கவும் தேவர்கள் நிறைந்தபுஷ்பவருஷம்பொழியவும்வாடிதி

ன்றமுனிவர்களும் சகலதேவர்களும் மழையைக்கண்ட பயிரைப்போல முகமலர்ச்சியடைந்தார்கள் இப்பால் அகஸ்தியமுனிவரானவர் பலமிகுந்த அசுரராகிய வில்வலன் வாதாவியென்னு மிருவரிருக்கு மிடத்திற்குத் தனிமையாகச்சென்றார்-எ-று. (அ)

சதிராமுனிவன்செல்லுங்காற் றனிவில்வலனை வாதாவி
யெதிரேசென்றுபூசையுஞ்செய் தினியவிருந்துபகர்தலினு
லதிகமுனிவன்பொருந்தியபின் னாட்டுவடிவாந்தம்பிதனை
முதியோனறுத்துச்சமைத்திட்டான் முனிவனமுதுசெய்திருந்தான்

(இ-ள்) அங்குஷ்டப் பிரமாணமாய் மிகுந்தவல்லபமுடைய அகஸ்தியமுனிவர்போகும்போது ஒப்பற்றவில்வலன் வாதாவியென்னு மிருவருமெதிரேவந்து பூசைசெய்து இனிதாகிய விருந்துசொன்னதினால் அதுகேட்டு மேன்மைபொருந்திய அகஸ்தியமுனிவர்சம்மதித்திருந்தபின்பு ஆட்டுவடிவமாகிய தம்பியைத் தமையனாகியவில்வலன் அறுத்துச்சமைத்து அகஸ்தியமுனிவருக்குப் படைத்தான் அகஸ்தியமுனிவரும் அதை யமுதுசெய்திருந்தார்-எ-று. (௯)

வம்பன்றமையன் வாதாவி வருகசுவாகாவெனநொடித்தான்
கும்பமுனிவனதறிந்து குலவுஞ்சிவனைத்தியானித்துத்
தம்பிதனையுந்தமையனையுஞ் சாம்பராகப்பொடிசெய்தா
னும்பர்குழுவு முனிவர்களு மோதங்கிளர்ந்ததெனவார்த்தார்.

(இ-ள்) அங்ஙனம் அகஸ்தியமுனிவ ரிருந்தகாலையில் வம்பனாகிய மூத்த வில்வலனென்பவன் வாதாவிவருக சுவாகாவென்று சொல்லியழைத்தான் அதையறிந்து அகஸ்தியமுனிவர் பிரகாசிக்கின்ற பரமசிவனைத் தியானஞ்செய்து தம்பியையுந் தமையனையுஞ் சாம்பலாகும்படியழித்துவிட்டார் அப்பொழுது தேவர்கள்கூட்டமும் முனீஸ்வரர்களும் சமுத்திரங்கோஷித்ததுபோலக்கோஷித்தார்கள்.

நெருப்புக்குழியிற்புழுவிழுந்தா னீர்த்தாதென்னநினைத்திலமோ
யருப்புவிநாசகாலத்தி லவரவரறிவுமேவிடுமே
விருப்புவிந்தவரைகுறைக்கு வேலையதனைவிழுங்கினரை
வருக்கப்புழுத்தன்சதுராலே வெல்லவெண்ணிமடிந்தனரோ.

(இ-ள்) நாசகாலமுண்டானபோது தூர்ப்புத்தி மேலிடுமாதலால் மூத்த வில்வலன் வாதாவியென்னுமிருவரும் நெருப்புக்குழியில் புழுவானதுவிழுந்தால் தீர்த்திக்கரைசேரதென்று நினையாதவர்களாகிப்புழுவர்க்கமானது நெருப்புக்குழியை நீர்தநினைந்து விழுந்திறந்ததுபோலமதங்கொண்ட விந்தபர்வதத்தையடக்கிச் சமுத்திரஜலத்தைஆசனமாகக்கொண்டருளிய அகஸ்தியமுனிவரைத் தங்கள் திறமையினால் வெல்லும்படி நினைத்திறந்தார்கள்-எ-று. (௰௧)

காலமறிதலிடமறிதல் கண்டான் றிருவும்பெரியோர்கள்
சீலமறிந்துவழிபடுவான் றிருவும்பெருகுவரைசான்று
மாவிலொருவன்றனைக்கெடுத்து வாழ்வான்றனக்குவருங்கேடு
மேலும்பெரியோர்க்கிடர்செய்வான் கேடுமிருவர்களியன்றே.

(இ-ள்) காலமும் இடமுந்தெரிந்து நடக்கின்றவனுக் குண்டாகின்ற செல்வத்திற்கும்பெரியோர்களுடையதன்மையையறிந்துவழிபடுகின்றவனுக்கு உண்டாகின்ற செல்வத்திற்கும் பெருகிய விந்தபர்வதமே சாக்ஷியாகும்ஆகையினால் ஒருவனைக்கெடுத்து வாழுகின்றவனுக்குண்டாகின்ற நாசத்திற்கும் யாவரும் ஏற்கப்பட்ட பெரியோர்களுக் கிடர்செய்கின்றவனுக்கு உண்டாகின்ற நாசத்திற்கும் வில்வலன்வாதாவியென்னு மிருவர்களே சாட்சியாகும்-எ-று. ()

கொடியவிந்தங்கண்டபவங் கொடியோன்றசையையுண்டபவந்
தடியவேண்டிக்கூட்டமுடன் சார்ந்துமுத்தாநதிமூழ்கி
யடியார்க்கெளியன்முதுகுன்ற னடிகளதனையருச்சித்தான்
வடிவங்கொண்டுமுதுகுன்றன் வந்துமுனிக்குநடஞ்செய்தான்.

(இ-ள்) அகஸ்தியமுனிவரானவர் கொடியதாகிய விந்தபர்வதர்பூமியி லழுந்தச்செய்தபாவத்தையுங் கொடியனாகிய வாதாவியின்மாமிசத்தைபுசித்த பாவத்தையும் நீக்கவேண்டி மேற்சொல்லிய சகலகூட்டங்களோடும்விருத்தாசலத்திற்குவந்து திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து அடியார்க்கெளியவராகிய பழமலைநாயகருடைய திருவடிகளை யர்ச்சனைசெய்து வணங்கினார் அப்பொழுதுபழமலைநாதராகிய பரமசிவன் திருமேனிகொண் டெழுந்தளிவந்து அகஸ்தியமுனிவருக்குத் திருத்தரிசனங் கொடுத்தருளினார் எ-று. (௰௩)

நட்டங்கண்டுகுறுமுனிவ னயந்துபணிந்துதிருவடியை
விட்டுநீங்காக்கைம்மாறே கைம்மாறென்று மிகவுருகி
யட்டதிசையுமுனிவர்களை யனுவித்திறையையருச்சித்தான்
கட்டுவிடுத்தபதம்போற்றிக் கலிங்கன்பெற்றகதையுரைப்பாம்.

(இ-ள்) அகஸ்தியமுனிவரானவர் நடனதரிசனம்பண்ணிப் பேரின்பமுற்றுவணங்கிநின்று சுவாமீ அடியேன் உமதுதிருவடியைவிட்டுநீங்காத பதிலுபகாரமே தேவரீருக்கு யான்செய்யுங்கைம்மாறென்றுமிகவும் அன்பினாலுருகி அஷ்டதிக்குகளிலுமிருந்துவந்த முனீஸ்வரர்களெல்லாரையுந் தத்தமிடங்களிற்செல்ல விடைகொடுத் தனுப்பிவிட்டு பரமசிவனைச் சதாகாலமும் அர்ச்சித்துக்கொண்டிருந்தார் அவரதுபந்தநீங்கிய திருவடிகளைப் போற்றிசெய்து கலிங்கராஜன்பேறுபெற்ற சரித்திரத்தைச்சொல்லுகின்றோம்-எ-று. (௰௪)

அகத்தியச்சருக்கம்-முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் - ௭-இறு, திருவிருத்தம் - ௱௨௭.

௮

எட்டாவது

# கலிங்கச்சருக்கம்.

வேறு.

நல்லகுன்றநாதர்தம்மைநண்ணிமாதவஞ்செயுஞ்
செல்வர்தம்மைநிந்தைசிந்தைசெய்யினுமுரைக்கினு
மல்லலாயவலகையாகியானுறாதகானகத்
தெல்லையொல்லைசெல்லுவாரியாவரென்னிலோதுவாம்.

(இ-ள்) நன்மைபொருந்திய பசுடமலைநாதனையடைந்து பெருமை பொருந்தியதவத்தைச்செய்கின்ற பாக்கியவான்களை நிந்தைசெய்யமனத்தில் நினைத்தாலும் வாக்கினால்தூஷித்தாலும் அப்படி செய்கின்றவர்கள் துன்பரூபமான பிசாசுவடிவமாகிமனிதசஞ்சார மில்லாத காடுகளில் அதிகவிரைவில் சென்று திரிவார்கள் அப்படிப்பட்டவர் எவரென்றால் அவரைச் சொல்லுகின்றோம்-எ-று. (க)

சரோருகக்கரங்கள்கொண்டுசமிதைபுற்கள்பூவிலை
யுரோமசப்பிரானெடுத்துலாவுகானகத்திலே
விரோதமார்பசாசமொன்றுமெய்கடுங்கவாய்புதைத்
தரோவிறைஞ்சிநின்றதங்கணையார்கண்டியம்புவார்.

(இ-ள்) உரோமசரிஷியானவர் தாமரை புஷ்பத்தையொத்த கைகளினால் ஓமவிறகு தருப்பைப்புல் பத்திரபுஷ்பங்களெடுத்துத் திரிகின்றவனத்தில் பெரியோர்களை நிந்தித்ததனால் பிசாசரூபம்பெற்ற ஒருவன் சரீரநடுங்க வாய்பொத்திக்கொண்டு அவிடத்தில்வணங்கிநின்றான் அவனைக்கண்டுரோமசரிஷி சொல்லுகின்றார்-எ-று. (உ)

எங்கணேகுவாயுனக்கிந்தமேனிவந்ததே
னுங்கணென்றுகூறலுமுரோமசர்க்குரைத்திடுந்
துங்கமானசூத்திரக்குலக்கலிங்கனென்பெய
ரங்கநாடுவிங்ஙன்மேனியானவாறுகூறுகேன்.

(இ-ள்) நீ எங்கேபோகின்றாய் உனக்கு இந்தச்சரீரம் யாதினால்வந்ததுஎன்றுசொன்ன வளவில் அந்தப் பிசாசரூபமானவன் ரோமசரிஷிக்குச் சொல்லுகிறான், என்பெயர் உயர்ச்சிபொருந்திய சூத்திரவம்சத்திற் பிறந்தகலிங்கனென்று சொல்லுவார்கள், என்னுடையதேசம் அங்கதேசம், அதுவல்லாமல் இப்படிப்பட்டசரீரம் வந்த வரலாற்றையுஞ் சொல்லுவேன்-எ-று. (௩)

துன்றுநாடுவீடுமாடுசுற்றமைந்தர்மாதரா
ரொன்றிலொன்றுகுறைவுமில்லையுற்றவர்க்குமுதவுவேன்
மன்றவேபசித்துநொந்துவந்தவர்க்குமிட்டியான்
சென்றுதுன்றுசேனையோடுதிண்ணைமீதுநண்ணுநாள்.

(இ-ள்) செல்வநிறைந்தநாடு-வீடுமாடுகள்-சுற்றத்தார் பிள்ளைகள் _ ரதர்கள்-மாதர்கள்-முதலானசம்பத்துகளில் ஒன்றிலொன்றுகுறைவுமில்லை அல்லாமலும்என்னையடுத்தவர்களுக்குங்கொடுத்துதவுவேன் மிகப்பசித்துவருந்திவந்தபேர்களுக்கும் போசனாதிகள் கொடுத்து இந்தவாழ்வையே சத்தியமென்றுநினைந்து என்னிடத்துவந்துநிறைந்தசேனைகளோடும் நான் வாழ்ந்திருக்கின்றகாலத்தில்-எ-று. ()

வாழ்வுபெற்றவாழிலென்றுவலியயோகிவந்தனை
ஞாழெணக்கிருந்துகால்கையொன்றையுமுடக்கிலேன்
ருழ்வரச்செய்யாமைகண்டசந்தயோகிநிர்லதையா
லாழமுற்றகுழிவிழுந்துளச்சமற்றிருந்தவா.

(இ-ள்) ஐயிஸ்வரியமுள்ளவாசலென்று நினைந்து சாபானுக்கிரக சாமர்த்தியமுள்ள ஒரு யோகீஸ்வரர்வந்தார் அவரைக் கண்டவுடன் நான்முற்செய்த கர்மவசமிருந்தபடியால் அவரை வணங்காமலுங் கைகாலொன்றையு முடக்காமலுங் கெர்வித்திருந்தேன் அப்படி நான் குறைவில்லாத வணக்கஞ்செய்யாதிருப்பதை அந்த அழகியயோகீஸ்வரர் கண்டு இகழ்ச்சியாய் செல்வமாகிய ஆழ்ந்தகுழியில்விழுந்து பயமில்லாம லிருந்தவனேயென்று அடியேனையழைத்து-எ-று.

என்னவாழ்வுவாழ்வையென்றிரண்டுகையையுமெடுத்
தன்னவன்சிரித்துநின்னையறிஞர்காணிலிரவிதன்
வன்னமேனிகாணவேண்டுமக்களுக்குன்வாழ்வளித்
துன்னுமாதவத்தினோர்பின்னொல்லைசெல்லுகென்றனன்.

(இ-ள்) நீ என்னவாழ்வு வாழ்கின்றாயென்று இரண்டுகையையுமுயரவெடுத்து அந்தயோகீஸ்வரர்நகைத்து உன்னைப் பெரியோர்கள்கண்டால் சூரியனுடைய திருமேனிகண்டு நமஸ்காரம் பண்ணவேண்டும் ஆதலால் உன்னுடையவாழ்வை உன்பிள்ளைகளுக்குக்கொடுத்துவிட்டுச் சிவத்தியானஞ் செய்கின்ற மகாதவத்தையுடைய பெரியோர்கள் பின்னே சீக்கிரத்திற் றவஞ்செய்யும்படி போவாயென்று சொன்னார்-எ-று. (௩)

யானுமந்தயோகிதன்னையிங்குமங்குமெங்கணுந்
தானுலந்துமணிபணிந்துதுணியணிந்துசாம்பரு
மேனிரம்பவேயணிந்துமிடியனாகிவீடெலா
நீறழைந்துதிரிதிநீயுநிந்தகர்க்குநிந்தகன்.

(இ-ள்) அதைக்கேட்ட அடியேனும் அந்தயோகீஸ்வரனைப் பார்த்து நீ இவ்விடத்திலும் அவ்விடத்திலும் எவ்விடத்திலும் இருப்பிடங்கிடையாமல் அலைந்து நல்லஆபரணத்துக்குக்கதியில்லாமல் ருத்திராக்ஷமணிகளைத்தரித்து நல்ல வஸ்திரத்துக்குகதியில்லாமல்கிழிபட்ட சீலையைச்சுற்றிக்கொண்டு நல்லசுகந்தாதிகளுக்குக் கதியில்லாமல் சரீரமுழுதும் சாம்பலைப்பூசிக்கொண்டு நல்லபோஜனாதிகளுக்குக் கதியில்லாமல் தரித்திரனாகி வீடுகள்தோறுநுழைந்து பிக்ஷை வாங்கித்திரிகின்றாயாகையால் நீயும் நிந்தகர்க்கு நிந்தகன்-எ-று. (எ)

ஆயநின்னையானகைப்பலென்றுருத்தறைந்தனன்
றூயயோகிவேதியாவோர்ருத்திரப்பிசாசுநின்
னேயமாகநன்மைசொல்லநிந்தைசெய்தனைநீயடா
பேயதாகுவாயெனப்பிணிப்புறச்சபித்தனன்.

(இ-ள்) அப்படியாகிய உன்னைப்பார்த்து நானுஞ் சிரிப்பேனென்று கோபித்துச்சொன்னேன் அதுகேட்ட பரிசுத்தராகிய யோகீஸ்வரர் அதிககோபங்கொண்டு அடா ஒப்பற்றருத்திரப்பிசாசே நாம் உன்னிடத்திலன்பாக உனக்கு நன்மையான வார்த்தையைச்சொல்ல அதுதெரியாமல்நம்மைத்தூஷித்தநீபிசாசுரூபமாகக்கடவாயென்று துன்பமுண்டாகச் சாபங்கொடுத்தார்-எ-று. (அ)

ஈண்டவன்சபித்தல்கண்டியானுமந்தயோகிதாள்
பூண்டுகொண்டிமையைப்பொறுக்கவேண்டுமென்றனன்
மீண்டவன்சிரித்துநீவிருத்தவெற்பிலேகினு
லாண்டரோமசன்னிருப்பனவனகற்றுமென்றனன்.

(இ-ள்) இப்படியாக அந்தயோகீஸ்வரர் சாபமிட்டதுகண்டு அடியேனும் பயந்துநின்று அவருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு எனதுகுற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தேன் அதற்குத் திருப்பவும் அந்த யோகீஸ்வரர் நகைசெய்து நீ விருத்தாசலத்திற்குப்போனால் அவ்விடத்தில் என்னையடிமைகொண்ட ரோமசமகாரிஷியிருக்கின்றார் அவர்இந்தச்சாபத்தை நீக்கி ரக்ஷிப்பாரென்று திருவுளம்பற்றியருளினார்-எ-று. (௯)

முட்டினற்குனிந்தியான்முயன்றபோதுயோகிதா
கிட்டுமோமுனிட்டவாழ்வுகெட்டபோதிலெய்[illegible]மோ
சிட்டயோகியிட்டசாபத்திட்டினற்பிசாசமாய்
விட்டனன்றெருத்தவென்னைமீண்டு[illegible]ண்டினாரிலர்.

(இ-ள்) தலைமுட்டிக்கொண்டு [illegible]குனிந்ததுபோல யோகீஸ்வரருடைய சாபஞ்செய்தபோது பின்பு [illegible]

ளுல் அவருடைய பாதங்கிடைக்குமோ அல்லாமலும் தரித்திரம் வந்தபோது முன்னனுபவித்த செல்வங்களை விரும்பிளுல் அச்செல்வம்வருமோ அதுபோல அர்த்தமேன்மைபொருந்திய யோகீஸ்வரர் கொடுத்த சாபத்திளுல் பேயுருவமாகினேன் அதுமுதல் மறுபடியும் என்னைத் தீண்டினபேரொருவருமில்லை-எ-று. (௰)

மாறிலாதவயிரவேசர்வடுகநாதர்கிங்கரர்
சோறுபாணிமற்றெருண்டிதொட்டபோதில்வெட்டுவார்
வேறிருக்கநிற்கொளுதுவெயின்மழைக்கண்வாயுவி
ஞாறுபட்டலைந்துலைந்துறக்கமற்றுநின்றனன்.

(இ-ள்) எப்போதும் நீங்காதிருக்கின்ற வயிரவர்கள் வடுகநாதர்கள் அவர்களுடையகிங்கரர்கள் தான்சோறுசலமுதலான வேறொரு பதார்த்தங்களையும் கையிளுற்றொட்டபொழுதே கையையறும்படி வெட்டுவார்கள் அல்லாமலும் இருக்கவும் நிற்கவுமோரிடங்கிடையாமல் வெய்யிலிலும் மழையிலும் காற்றிலும் வருந்தியலைந்தமிழ்ந்து நித்திரையுமில்லாமற் றிரிந்துநின்றேன்-எ-று. (௰௧)

எலும்பொழிந்துடம்பிலிங்கிறைச்சியில்லையென்செய்கேன்
மலங்கினேனலங்குதாகமட்டுமில்லையிந்தநோய்
விலங்கவேதுலங்குநின்னைமேவினேனெனச்சொலுங்
கலிங்கனுக்குரோமசன்கடைக்கணுக்களித்தனன்.

(இ-ள்) என்னுடைய சரீரத்தில் அஸ்தியல்லாமல் அணுவளவாகிலும் மாமிசமில்லை என்ன செய்யப் போகிறேன் மிகவும் வருந்தினேன் அதனுல் என்சரீரமுழுதும் உளைக்கின்றது அந்தத் துன்பத்திற்கு ஓரளவுமில்லை இந்தவருந்தமெல்லா நீங்கும்படியாகப்பிரகாசிக்கின்ற தேவரீருடைய திருவடியில்வந்து சரணுகதி யடைந்தேனென்று சொல்லுகின்ற கலிங்கராஜன்மேல் ரோமச ரிஷியானவர் கிருபாகடாக்ஷம் வைத்தருளினுர்-எ-று. (௰௨)

அளித்தரோமசன்னுரைப்பனங்கலிங்கநின்வயிற்
கிளைத்தயோகிசாபம்வந்துகிட்டல்பாசமோசன
முளைத்ததீயகன்மமுண்ணுமுன்னிலைக்கிபோகிதான்
விளைத்தலஞ்சலஞ்சலென்றுமெய்க்கரத்தமைத்தனன்.

(இ-ள்) அப்படி கடாக்ஷம்வைத்த ரோமசரிஷியானவர் சொல்லுகின்றுர் ஓய் அழகிய கலிங்கனே உன்னிடத்திற் பூரணமானயோகிஸ்வரருடைய சாபம்வந்து பொருந்தினதே உனக்குமலபரிபாககாலம்வந்துதோன்றினதாகும் முற்சனனத்திற்செய்துள்ளஉனதுபாவகன்மங்களைத்து மனுபவித்துத்திருமுன்னிலைக்கேஅர்தயோகி

ஸ்வரர் சாபம்நேரிட்டது ஆகையால் நீயஞ்சாதே யஞ்சாதேயென்று உண்மையாகிய சின்முத்திரைபிடித்தகையினால் அபயங்கொடுத்தருளினார்-எ-று. (௰௩)

அதிகமான துறவர்யோகரையர் துய்யவேதியர்
மதிநிலாவுகுரவர்தம் மனைக்கண்வந்தபோதரோ
விதிகளில்லையேனுடம்பைவிற்றுமொன்றைநல்கியே
துதிமொழிந்துதனையிழந்துதொன்மைநன்மைகூறுவார்.

(இ-ள்) பெருமைபொருந்திய துறவிகள் யோகீஸ்வரர்கள் முனீஸ்வரர்கள் பரிசுத்தமாகிய பிராமணர்கள் ஞானப்பிரகாசமிகுந்த ஆசிரியர்கள் ஆகிய இவர்களிலெவர்களாகிலும் தன்மனையினிடத்தில் வந்தபொழுது விவேகியானவன் தன்னிடத்தில் ஒருபொருளுமில்லாமற்போனாலும் தன்சரீரத்தை ஒருவனுக்கடிமையாக விற்றாகிலும் ஏதேனுமொருபொருளைத் திரிகரணசுத்தியாகக் கொடுத்துத் தோத்திரஞ்செய்து தற்சுதந்தரமற்றுப் பழமையாகியநன்மைபொருந்திய உபசாரவசனங்களைச்சொல்லுவான்-எ-று. (௰௪)

கருணைநாயன்மார்பதங்கள்காண்டல்பாசமோசனந்
தருமவாசகந்தரிப்பதேதவங்கள்கேள்விக
ளொருமையாயுரைத்தல்கேட்டிருத்தல்சீவன்முத்தியா
மருமையானபரமமுத்தியந்தயோகர்மகிழ்வதே.

(இ-ள்) கிருபாவடிவமாகிய சிவபக்தர்களுடைய திருவடிகளைத்தரிசனஞ்செய்வதுவே அஞ்ஞானநாசமாகும் அவர்சொல்லுகின்றதர்ம்மவாக்கியத்தை மனதிற்கொள்வதுவேபலதவங்களும்பலகேள்விகளுமாகும் அவர்ஒருமையாகச்சொல்லுகின்றவேதார்த்தங்களைக்கேட்டிருப்பதுவே ஜீவன்முத்திப்பதாகும், அவர் மனமகிழ்ச்சியடைவதுவே அருமையாகிய மேலானமோக்ஷபதமாகும்-எ-று. ()

வாழவைத்தலுங்கெடுக்கவைத்தலுந்தவத்தினோர்
பாழறுத்தபார்வையென்றுபற்றிநற்றவத்தினோர்
தாழ்வறுத்தபாததாமரைக்கணர்ச்சனைசெய்வா
னூழமுற்றகுழியழுந்தவவரைநிந்தைபண்ணுவான்.

(இ-ள்) விவேகியானவன் நம்மைவாழ்விப்பதும் அழிப்பதும்தவத்தையுடைய பெரியோர்களது குற்றமில்லாத ஞானதிருஷ்டியேயென்றறிந்து நல்லதபாக்கியரானவர்களின் மேன்மைபொருந்திய திருவடித்தாமரைகளில் அர்ச்சனைசெய்வான் அல்லாமல் ஆழ்ந்தநரகக்குழியில் விழவேண்டினவன் அவர்களைநிந்தைசெய்வான்-எ-று.()

கேட்டியோகலிங்கநங்கிளர்ந்தபார்வைமுற்பிறப்
பேொட்டிமானிடப்பிறப்புனக்களித்தலாதலால்
னாட்டமானநல்லமுத்தநதியின்மூழ்கிமுதுகிரிச்
சேட்டமானசிவனையின்றுதரிசியென்றுசெப்பினான்.

(இ-ள்) ஓய்கலிங்கனே நீகேட்பாயாக நமது திருபாதிருவடியா னது உனக்கு முன்னுள்ள பேய்ப்பிறவியைக்கெடுத்து மனிதப்பி றவியைக்கொடுத்தது ஆதலால் இப்பொழுது நிலைபெற்ற நன்மை பொருந்திய திருமணிமுத்தாநதியிற்போய் ஸ்நானஞ்செய்து பழ மலையின்கண்ணெழுந்தருளிய சிறந்தபரமசிவனைத்தரிசனஞ் செய் வாயென்று ரோமசமகாரிஷி சொல்லியருளினார்-எ-று. (௰எ)

இனியரோமசப்பிரானியிங்ஙனக்கலிங்கனை
மனிதனாகவிடைகொடுக்கவந்துமுத்தநதியினிற்
புனிதமாகமூழ்கியெங்கள்புண்ணியன்பதத்தையும்
பனியவேரிமிகுகுழற்பதத்தையும்பணிந்தனன்.

(இ-ள்) இனிதாகிய ரோமசரிஷியானவர்போதனையாகவந்தகலிங் கராஜனை மனிதவுருவமாக விடைகொடுத்தருளினவளவில் அந்தக் கலிங்கராஜனும் திருமணிமுத்தாநதியில் வந்து புனிதமாகஸ்நான ஞ்செய்து எங்கள்பழமலைநாயகருடைய திருவடிகளையுங்குளிர்ச்சி பொருந்திய புஷ்பங்களைத்தரித்த அளகபாரத்தையுடையபெரியநா யகியம்மையாரது திருவடிகளையும்வணங்கினான்-எ-று. (௰அ)

கலங்கனீர்குதித்தலைப்பகண்சடா[illegible]ந்திடக்
கலிங்கனுந்துலங்குமேனிகண்டுகொண்டுவெரியா
கலிங்கனைமலங்கள்செற்றகாலகாலவேதனே
கலிங்கனேயெனத்துதித்தருத்தியாற்சலித்தனன்.

(இ-ள்) கலிங்கலிலிருந்து ஜலமானது தத்திவிழுகிறதுபோலக் க ண்களிலிருந்து ஜலமானது தாரைதாரையாய்ச்சிந்தி விழும்படியாகக் கலிங்கராஜனும் உருவாருவமாகப் பிரகாசியாநின்ற பரமசிவனுடை ய திருமேனியைத் தரிசித்து உமையவளை இடதுபாகத்திலுடையவ னே லிங்கஸ்வரூபனே மும்மலங்களையுங் கெடுத்து ரக்ஷித்த காலா ந்தகமூர்த்தியே யானைத்தோலை யாடையாகத் தரித்தவனேயென்று அன்பினாற் ஸ்தோத்திரஞ்செய்து மனக்களிப்படைந்தான்-எ-று. ()

பொருந்திராஜபோகமும்புரந்தராதிபோகமு
மருந்திநற்கலிங்கனத்தர்சுற்றமுத்திபெற்றனன்
றிருந்துயாதவத்தினோர்கள்சேர்வையோர்க்குநின்னைநான்
கரந்துடைத்தவர்க்குமக்கலிங்கன்சான்றுகாணிலே.

(இ-ள்) இகத்திற்பொருந்திய ராஜபோகங்களும்பரத்திலடையத்தக்க தேவேந்திராதிபோகங்களுமனுபவித்தொழித்துநல்லகலிங்கராஜனும் பரமசிவனடியார்கள்பெறுகிற மோக்ஷத்தைப்பெற்றான் ஆதலால் திருத்தமாகிய மகாதவசிரேஷ்டர்களுடைய தரிசனஞ்செய்தபேர்களுக்கும் அவர்களைத் தூஷித்தபேர்களுக்கும் அந்தக்கலிங்கராஜனே சாக்ஷியாகும்-எ-று. (உஎ)

தீயவாவிள ம்பிநின் றசிதடரும்பராக்கினின்
மாயகூவல்லாய்விள ம்பின் மைந்தருந்நிகர்த்திடுஞ்
சேய்கள்பின்னரும்பிறந்துசெல்வராவர்தீயவாய்
நாய்களோர்மொழிக்கோரோர்நாசமுற்றுழலுமால்.

(இ-ள்) பெரியோர்களைத் தூஷணையாக நிந்தித்த மூடர்களும் பராக்கோடிப் இடிந்தகரையையுடைய கிணற்றருகின்ற சிறுவர்களுஞ்சமானமாவார்கள் அங்ஙனங் கிணற்றருகில் நின்றுவிழுந்த சிறுபிள்ளைகள் திரும்பவும் பிறந்து செல்வத்தை யடைவார்கள் அதுபோலப்பெரியோர்களை நிந்தித்த கொடியவாயையுடைய நாய்களானது நிந்தைசெய்த ஒவ்வொரு சொல்லுக்கு ஒவ்வொரு நரகத்திலுழன்று வருந்துவார்கள்-எ-று. (உக)

கலிங்கச்சருக்க முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம்-அ-டு, திருவிருத்தம்-உஉஅ.

உ

ஒன்பதாவது

## கலிமலர்ச்சருக்கம்.

வேறு

பூதநாயகர்திருமுதுகுன்றினிற்புகழுடைச்
சூதமாதுமென்றிருடிகளோக்குநிலையமாப்ப
வோதுவார்திகழுருத்திரகங்கைதன்னி
லாதிநாளினிலருங்கலிதொலைத்தவப்புராணம்.

(இ-ள்) நைமிசாரண்ய வாசிகளாகிய முனிசிரேஷ்டர்களனைவருஞ்சேர்ந்து சூதமுனிவரைவணங்கி நின்று ஓய் சுவாமீ அடியேங்கள் கேளவிப்பட்டமட்டும்படியாகச் சகல சிவஸ்தலங்களிலும் பரமசிவன் எழுந்தருளியிருக்கிற ஒப்பில்லாத விருத்தகிரியின் பெருமையைத்

திருவுளம்பற்றியருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தவளவில் அந்தச் சூதமுனிவரும் பிரகாசிக்கின்ற ஸ்காந்தத்தில் உருத்திரசங்கிதையிற் சொல்லப்பட்டிருக்கின்ற முற்காலத்தில் அரியகலியைத் தொலைத்தருளிய அந்தச்சரித்திரத்தைச் சொல்லுகின்றார்-எ-று. (க)

சனற்குமாரரோதலைவராமுனிவர்கள்சென்று
கனத்தமேருவினான்முகன்கழலிணையிறைஞ்சி
மனக்கருத்தினையுரைப்பதாய்நின்றனர்மலரோ
னினைத்துளோர்மனக்கவலைகளென்கொலென்றிசைத்தான்.

(இ-ள்) சனக்குமாரர் முதலானவராகிய முனியீஸ்வரர்களெல்லாரும் பெருமைபொருந்திய மகமேருகிரியினிடத்திற்சென்று பிர்ம்மதேவருடைய இரண்டுபாதங்களையும் வணங்கித் தங்களுடைய எண்ணத்தைச் சொல்வதாகநின்றார்கள் பிர்ம்மதேவரும் அங்ஙனகூட்டமாகநின்றமுனிவர்களைப்பார்த்து ஓய் முனிவர்களே உங்களுக்குச் சம்பவித்த மனோதுக்கமென்னவென்று கேட்டருளினார்-எ-று. (உ)

அயனைநோக்கிநின்றருஞ்சனற்குமாரருமறைவார்
மயரும்வன்கலிவசத்தினான்மாதவரியாருந்
துயரமுற்றனர்சூத்திரனாயினன்வேந்தன்
புயல்வறுத்ததுபூசையுந்தேவர்கட்கிலதால்.

(இ-ள்) அங்ஙனம் வினாவின பிர்ம்மதேவனைப்பார்த்து நின்ற அரிய சனக்குமாரமுனிவரும் சொல்லுகின்றார் ஓய்பிர்ம்மதேவரே முனியீஸ்வரர்களெல்லாரும் மயக்கத்தைத் தருகின்ற வலிமை பொருந்திய கலியின் வசப்பட்டதினால் துன்பத்தை யடைந்தார்கள் அரசனுஞ் சூத்திரனாகிவிட்டான் மேகமும் மழைமறுத்தது அதனாற் றேவர்களுக்குப் பூசையுமில்லை-எ-று. (௩)

தன்மதானமுந்தவங்களுமிறந்ததுவேதக்
கன்மநீத்தனர்கண்டவர்மறைபடிக்கின்றார்
மன்னரேவலின்மறையவர்திக்கின்றார்மறையி
னன்மையெண்ணிலரோதிலர்நிந்தையேநவில்வார்.

(இ-ள்) தர்ம்மங்களும் தானங்களும் தவங்களு மில்லாமற்போய் விட்டது வேதவழியாகச் செய்கின்ற சற்கருமங்களையு மொழித்து விட்டார்கள் கிரமமில்லாமல் கண்டவர்களெல்லாம்வேதபாராயணஞ்செய்கின்றார்கள் அரசர்களுடைய ஏவலின்வழியே பிராமணர்கள்செய்யாநின்றார்கள் வேதங்களிற்கூறிய நன்மைகளை நினைத்திலர் ஓதுகின்றிலர் தூஷணையே சொல்லுகின்றார்கள்-எ-று. (ச)

உத்தமக்குணம்விட்டனரியோகமும்விட்டார்
சித்தியெட்டையும்விட்டனர்செபங்களும்விட்டார்
புத்திமேற்புலன்போகலாற்பொறுமையும்விட்டார்
முத்திதன்னிலுங்குடும்பநன்றென்றனர்முனிவர்.

(இ-ள்) முனியீஸ்வரர்களெல்லாரும் உத்தமமாகிய குணங்களை விடுத்தார்கள் யோகஞ் செய்வதையும் விடுத்தார்கள் அஷ்ட சித்திகளையும் விடுத்தார்கள் செபஞ் செய்வதையும் விடுத்தார்கள் விஷய வழியாக விவேகஞ் செல்லுதலால் சாந்தத்தையும் விடுத்தார்கள் மோக்ஷத்தைப்பார்க்கிலுங் குடும்பமே நன்மையை யுடையதென்று வாதிக்கின்றார்கள்-எ-று. (௫)

மாதர்வார்த்தையுமைந்தர்கள்வார்த்தையுமேலாய்ச்
சாதியில்லவர்பெரியராய்ச்சற்குருவுடனே
வாதுசெய்குனர்மைந்தர்கள்வண்சிவபூசை
நீதியில்லையாற்குத்திரபூசையேநிகழ்ந்தார்.

(இ-ள்) மனையாளுடையசொற்களும்பிள்ளைகளுடையசொற்களுமே மேன்மையாகி நின்றது சாதியீனர்கள் சாதியி லுயர்ந்தவர்களானார்கள் சீஷர்கள்ஆசிரியர்களிடத்தில் தாங்கள்கற்றகல்வியகங்காரத்தினால் தர்க்கஞ்செய்பவர்களானார்கள்வளப்பம்பொருந்தியசிவ பூசைவிதியைவிட்டுவஞ்சகமாகியபூசையேசெய்கின்றார்கள்-எ-று()

பொய்களேயொழிந்துண்மையையாவரும்புகலார்
துய்யயாகமுஞ்சூத்திரர்செயும்படிதொடுத்தார்
மையல்வேட்கையுமங்கையர்கோட்டியுஞ்சூதும்
வெய்யமாதனந்தேடலுமாயினன்வேந்தன்.

(இ-ள்) எவர்களும் அசத்தியவசனத்தைப் பேசுகின்றதே யல்லாமல் சத்தியவசனத்தைப் பேசார்கள் சூத்திரர்களெல்லாம் பரிசுத்தமாகிய வேள்விகளைச் செய்யும்படி யெத்தனப் பட்டார்கள் அரசனானவன் மோகவிருப்பமும் ஸ்திரீகள் சங்கமும் சூதாடுவதும் நடுவுநிலைமையில்லாமல் மகாகொடுமையான வழியில் திரவியத்தைத் தேடுவதுமாகினான்-எ-று. (௭)

ஒருவர்செய்யுமாசாரமற்றொருவர்செய்கின்றார்
தருமவேடத்தையாவருந்தரிக்கிலரியாரு
மிருவர்காண்பருமொருவனையிகழ்ச்சிசெய்கின்றார்
பொருளின்மேற்கருத்தாயினர்மெய்ப்பொருள்போட்டார்.

(இ-ள்) ஒருவர் செய்யத் தகுந்த ஆசாரங்களைச் செய்யத்தகாத வேறொருவர் செய்கின்றார்கள் எவர்களும் புண்யவேடமாகிய சிவ

வேடத்தைத் தரிக்கின்றிலர் பிரம்மவிஷ்ணுக்களாகிய இருவராலும் காண்டற்கரிய ஒருவனாகிய பரமசிவனை எவர்களுந் தூஷிக்கின்றார்கள் திரவியந்தேடுவதில் நினைவுகொண்டவர்களாகி உண்மைப் பொருளாகிய ஆத்மஞானத்தை விசாரித்துத் தேடுகின்ற நினைவை விட்டுவிட்டார்கள்-எ-று. (அ)

குடும்பசாகரந்தன்னிலே கொலைகளவாதி
யிடும்பையாகிய முதலைவந்திழுத்தனவவைதாம்
விடும்படிக்குநீமீகாமனாகிநில்லென்றார்
நடுங்கியக்கலிதொலைந்திட நான்முகனவில்வான்.

(இ-ள்) குடும்பமாகிய சமுத்திரத்தில் கொலைகளவு முதலான துன்பமாகிய முதலைகள்வந்து எங்களை யிழுக்கின்றன ஆதலாலவைகள் விட்டு நீங்கும்படியாக நீர்மாலுமியாகிநின்று கரையேற்றி ரக்ஷிக்கவேண்டுமென்று சனத்குமாரரிஷிசொன்னார் அதுகேட்டுப்பிரம்மதேவன் யாவருநடுங்குகின்ற அக்கலிநடுங்கி நீங்கும்படி ஒரு க்ஷேத்திரத்தைச் சொல்லுகின்றார்-எ-று. (௯)

கலிமலர்ப்பதியென்றொருதலமுளகருத்தி
னலியுமிக்கலியெந்தநாளினுமில்லை
மலியுநோய்விடும்வன்னிபோற்சத்தியுஞ்சிவமு
நிலவுமத்தலநித்தியகல்யாணமாய்நிகழும்.

(இ-ள்) கலிமலர்ப்பதியென்று ஒருஸ்தலமிருக்கின்றது அந்த ஸ்தலத்தில் மனத்தைவருத்துகின்ற இந்தக் கலியானது ஒருகாலத்திலுமில்லை அந்தஸ்தலத்திற்சென்றவர்களுக்கு அதிகரிக்கின்றவியாதிகள்நீங்கிப்போம் அந்தஸ்தலத்தில் அக்கினியுஞ் சூடும்போல் அபேதமாய்சத்தியுஞ்சிவனும் பிரகாசிப்பார்கள் அந்தஸ்தலமானது எப்போதும்நித்தியமங்களமாய்ப்பிரகாசிக்கும்-எ-று. (௰)

பழமலைப்பதியாகியகலிமலர்ப்பதியின்
முழுதும்வித்தையுஞ்சித்தியுமுத்தியுமுண்டு
செழியபூசையாற்கிருட்டியாம்பெற்றனமாங்கே
வழுவின்மாயனும்வஞ்சனைவெல்வரம்பெற்றான்.

(இ-ள்) விருத்தாசலஸ்தலமாகிய கலிமலர்ப்பதியினிடத்திற்போய் தரிசித்தவர்களுக்குச் சகலவித்தைகளு மஷ்டசித்திகளு மோக்ஷமுமுண்டாகும் முற்காலத்தில் நாமும் அந்தஸ்தலத்தி லிருந்து வளப்பொருந்திய சிவபூசைகள் செய்ததினால் சிருஷ்டித்தொழிலைப் பெற்றோம் அல்லாமலும் குற்றமில்லாத விஷ்ணுவும் அந்தஸ்தலத்திற்சிவபூசைசெய்து வஞ்சகராகிய ராக்ஷதர்களைச் செயிக்கும்படியான வரத்தைப்பெற்றார்-எ-று. (௰௧)

மத்தியார்ச்சுனத்திருந்தவர்வரமுநாய்ப்பெற்று
நித்தியத்துவம்பூசையாற்பெற்றனர்நினைக்கிற்
சித்தியாகியவாச்சியர்சிவார்ச்சனைபாலே
பித்திலாமறையத்தமுஞ்சித்தியும்பெற்றார்

இ-ள். மத்தியார்ச்சுனமென்னும் திருவிடைமருதூரிலிருந்துதவஞ் செய்தவொரு பெரியவரும் பழமலையிலிருந்து சிவபூசைசெய்து சகலவரங்களையும்பெற்று நாமமடையாத நித்தியத்துவத்தையு மடைந்தார் அல்லாமலு நினைக்குமளவில் சர்வாநசித்திகளுங் கைவசமாகத்தக்கவர்ச்சியரிஷியும் அப்பஸ்தலத்திலிருந்து சிவபூசை செய்ததினாலே மயக்கமில்லாத வேதார்த்தத்தையுஞ் சகலசித்திகளையுமடைந்தார்-எ-று

சுக்கிரன்சிவபூசையாற்றெக்கதானவர்க்கே
மெய்க்குருத்தானமிருதசஞ்சீவனியைப்பெற்றான்
நக்கசித்தியுஞ்சிகண்டியுந்தானைநிற்றரித்தான்
மக்கண்மித்திரர்பெலசீராபரைபூசியானார்

இ-ள். சுக்கிராசாரியரும் விருத்தாசலத்திலிருந்து சிவபூசைசெய்து ராக்ஷசகுலத்துக்கெல்லாம் உண்மையான ஆசிரியத்துவமும் மிருதசஞ்சீவனியென்கின்ற மந்திரசித்தியையும்பெற்றார் சிகண்டியென்கின்ற பெரியவரும் அந்தஸ்தலத்தில் சிவபூசைசெய்து தகுதியான சகலசித்திகளையும்பெற்றார் விசுவாமித்திர முனிவரும் அந்தஸ்தலத்திற்பிள்ளைகளோடு உறவினரோடிருந்து சிவபூசைசெய்து வேதமுனிவரானார் —எ-று. (௰௩)

வசிட்டருப்பழமலைப்பணப்புதுமலராலே
விசிட்டபூசையுஞ்செய்தனரவேள்வியுஞ்செய்தார்
அசிப்பலன்வியின்முனிவோரகத்தியரண்ணிப்
புசிக்கலாயங்கனைவிமுனிவருப்புசித்தார்

இ-ள். வசிட்டமுனிவரும் பழமலைநாயகரைப் புதிதாகியமலர்களைக் கொண்டு மேன்மையான பூசைகளைஞ்செய்து யாகமுஞ்செய்தார் அவ்வியாகத்தில் கொடாசயாகசாலையில் அகஸ்திய முனிவரும் பலமுனிவர்களுடனேவந்து வைசேஷ்ட ஆவிர்ப்பாகத்தையவாங்கிப்புசித்தார் மற்ற முனிவர்களுமவாங்கிப்புசித்தார்கள்—எ-று. (௰௪)

இந்திரன்முதற்கடவுளோனையதேவர்
சந்திரன்பகல்சதுமறைநங்கள்கொண்டா
நந்தரத்துநம்பழமலைநாதனுட்வடிவாய்
வந்திருந்துதன்னகையிஞல்வாங்கினவியே

இ-ள். இந்திரன்முதலான அஷ்டதிக்குப்பாலரும் மற்றதேவர்களும் சந்திரனும்-சூரியனும்-நான்குவேதங்களும் அந்தயாகசாலையில்வந்து அவிர்ப்பாகத்தைக்கொண்டார்கள் அப்பொழுது மதுபமாலையாபாகரும் நம்போல உருவங்கொண்டெழுந்தருளியந்த அவர்களோடிருந்து தமது திருக்கரங்களால் அவிர்ப்பாகத்தைவாங்கிப்புசித்தார்—எ-று (௰௫)

அண்டர்தாளசுரனைவெல்லுவான்றிரண்டு
மிண்டிவந்தவசுரரும்வேலையிலொளித்தார்
கண்டகதியன்கடலினீரைகையினால்வாங்கி
யுண்டபின்வெளியாயினாசுரரையொழித்தார்

இ-ள். முற்காலத்தில் ராக்ஷதர்களைச்செயிக்கும்படி நினைத்து சகலதேவர்களுங் கூட்டமாகக்கூடிவந்தார்கள் அப்பொழுது ராட்சதர்களெல்லாரும் சமுத்திரத்திலொளித்துக்கொண்டார்கள அதுகண்டு அகஸ்தியமுனிவரும் சமுத்திரசலத்தைக் கையில்வாங்கி ஆசமனமாக வுட்கொண்டபின்பு ராட்சசர்கள்வெளிப்பட்டார்கள் அந்தசமயத்தில் அவர்களெல்லாரையுந் தேவர்கள்சங்கரித்துவிட்டார்கள்—எ-று. (௰௬)

அவர்களெண்ணினைபெற்றனரேனையமுனிவோர்
தவர்கடேவர்கடலத்தினர்பிலத்தினர்தக்கோ
ரெவர்களும்முதுகுன்றனையிறைஞ்சிடவரங்க
ளவரளித்தனர்நீவிருஞ்செல்லுமென்றறைந்தார்

இ-ள். நாம்இப்போது சொல்லிய இவர்களெல்லாரும் நினைத்தவரங்களைப்பெற்றார்கள் அல்லாமலும் மற்றமுனிவர்களும் தபோதனர்களும்-தேவர்களும்-பூலோகத்தாரும்-நாகலோகத்தாரும் மற்றப்பெரியோர்கள்-யாவர்களும் அந்தஸ்தலத்திற்சென்று பழமலைநாதனை வணங்க அவரும் அவர்களுக்குச் சகலவரங்களையுங்கொடுத்தருளினார் ஆதலால் நீங்களும் விருத்தாசலத்திற்குச்செல்லுங்களென்று சனற்குமார முனிவர்முதலியசகலமுனிவர்களுக்கும்பிர்ம்மதேவரனுக்கிரகஞ்செய்தார்-எ-று

திசைமுகன்றிருவாக்குபதேசமாக்கொண்டு
நசையினன்முதுகுன்றினின்முனிவர்களெண்ணி
யிசையுமஞ்சனமலர்கடங்கரத்தினலெடுத்து
வசையிலாதமுத்தாநதிப்புண்ணியமடுவில்

இ-ள். அதுகேட்ட சகலமுனிவர்களும் பிர்ம்மதேவருடையதிருவாக்கை உபதேசமாகக்கொண்டு விருப்பத்தோடும் விருத்தாசலத்

திற்குப்போய்ச்சேர்ந்துதங்களுக்கிசைந்த- திருமஞ்சனமும்-பத்திரபு ஷ்பங்களும் தங்களுடைய கைகளாலெடுத்துக்கொண்டுகுற்றமில்லா த திருமணிமுத்தாநதியின் கணுள்ளபுண்ணிய மடுவினிடத்தில்வந்து

மூன்றுகாலமுமூழ்கிமழுந்துகிரியிறையை
யேன்றபூசையுமியற்றினர்வலஞ்செய்துசெபித்தார்
மான்றிருந்துயரமாற்னர்வரங்களும்பெற்றூர்
தோன்றிஞானமுங்கலியிலாச்சுகத்தையுமடைந்தார்,

இ-ள். திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து நமது பழமலைநாதரை மே ன்மையாகபூசித்து பிரதக்ஷணஞ்செய்துசெபஞ்செய்தார்கள் அங்ஙன ஞ் செய்தபொழுது மயக்குகின்றதுன்பநீங்கிச் சகலவரங்களையும் பெ ற்றார்கள் அன்றியே பிரமஞானமும் உண்டாகிக் கலியில்லாத சுகத்தையும் பெற்றார்கள்—எ-று. (௰௯)

உடற்றிப்பட்டைப்பபயொருத்தலும்வெறுத்தலுமின்றித்
தடத்துறையருகிருந்துகாலந்தோறுநறுமலர்கள
பறித்தமென்றுமரங்களிலேறிப்பப்பட்டுப்
படைப்படைத்தலைத்திருந்தனாபூசைமேற்புரிந்தார்.

இ-ள். சரீரத்தைப்பலர்த்தி ஒறுக்கலும்வெறுத்தலுமில்லாமல்இந்தஸ் தலத்தின்விசேஷத்தினால் சிற்றநாளில் தபோபலன்கள் சித்தியாயிற் றென்று சகலமுனிவர்களும் கண்களிக்க ஆச்சரியப்பட்டு அந்தஸ் தலத்தில் ஸ்திரமாகவிருந்து சிவபூசைசெய்தார்கள்—எ-று. (௨௰)

கலிமலர்ச்சருக்கமுற்றுப்பெற்றது.

௯ சருக்கம்-௩௯-க்கு-திருவிருத்தம்-௨௱௮.

பதினாலாவது

# சீமேயதச்சருக்கம்

வேறு.

அருமைமாதவரிடைவிடாதிருந்தனரப்பா
லொருதுவாபரயுகத்தினிற்சுவேதனென்றொருவன்
குருகுலத்தினின்மன்னவனைப்பருகோடி
பிருதிவிப்பரபாலனம்பெருவயதிருந்தான்.

இ-ள். அந்தஸ்தலத்தில் அருமையாகிய முனிவர்கள் இடைவிடாமல் சிவபூசைசெய்திருந்தார்களா அப்பால் ஒருதுவாபரயுகத்தில் குருகுலத்திற் பிறந்துள்ள சுவேதனென்னு பெயரையுடைய ஓரரசன்ஐம்பது கோடி யோசனைவிசாலமுள்ள பூமிமுழுதும் ஏகசக்கிரதினால் ஒருகுடைநிழலில் அரசாட்சிசெய்து முதிர்ந்த வயதையுடையவனாகியிருந்தான்—எ-று. (௧)

மகரவக்ககரம்வல்லினந்துறந்திடையினத்தி
விகலறத்தினைமாக்கியியகரமதிறய்
வகரவக்கரத்தடங்கிடவொடுக்குமெற்றவைபோற்
றுகளிலாவினைஞசேர்ந்துறுந்துமவர்பாலின்றான்

இ-ள். மகாரவக்ஷரமாகிய திரோதாயியை வல்லினமாகிய சிகாரவக்ஷரத்தைவிடுத்த இடையினமாகிய யகாரவக்ஷரமென்னும் ஆன்மாவிற் பிறிவறவொடுக்கு நகாரவக்ஷரமாகிய மலமானதுவகாரவக்ஷரமாகிய அருளிலொடுக்கி அவைகளை யொழிக்கினதுபோலக்குற்றமற்ற இணக்கமொன்றும் யகாரவட்சரமாகிய ஆன்மாவை, வகாரவட்சரமாகிய அருளிலொடுக்கி அவ்வருளும் சிகாரவட்சரமாகிய சிவமும்பேதமற்று அபேதமான அத்துவிதானந்த நிலையிலெனப்புகன்ற ஞானத்திகளான பெரியோர்களிடத்தி லனுசரித்திருந்தான் சுவேதராஜன்—எ-று. (௨)

இதற்குகாரணம்-நிஷ்டாநுபூதிவிளக்கம்.

நகரமொடு மகரங்கள் சடங்கு ஞ்காரணமா-நாடுபிணைசேய்கியிலே கையைய நவிலுதுங்கேள், வகரத்திலகரமுசல் யகரத்துற்றிலை மகரமு நீக்கிடுமிய சிகரமனுகன்றும், யகரமெய்ய வகரமுந்தான் சிகரத்திலொடுக்க-மாகுமிறைநீங்கருயிரமுறத் பெய்துமெய்ம்மை, தகரமுறங்கியகுருனகமாதுக்கிறைவன் - முனைதுதிருவுளமகிழ்ந்து சாற்றினான்குணர்ந்தே. (௩)

வேற்றுமைப்பெயர்விரிந்தவும்பலபெயர்க்கொருபேர்
தோற்றமென்னவுமாம்மலர்க்கணந்தமாய்த்தோன்றி
யாற்றுபேர்வினையெச்சநெஞ்சவர்களுக்குகவித்
தோற்றமெய்க்குயிரெழுத்தெனத்துணைசெயூச்செறிந்தான்

இ-ள். வேற்றுமைகளையால்ஒருபொருளுக்குப்பலபெயர்விரிந்தது போல வெவ்வேறு குணங்களாலே அநேகமாகவிரிந்த பெயர்களையுடையவனாகியும் அப்படி விரிந்த பலபெயர்களுக்கும் ஒரு பொருளே தோற்றுவதுபோலச்சத்துருக்களுக்கு அநேகனாகியுந்தன்னையடுத்தவர்களுக்கொருவனாகியுந்தோன்றி,பெயரெச்சவினையெச்சங்களின்வகையைத்தெரிந்து செய்யுளியற்றுங்கல்வி நிறைந்தமனத்தையுடைய புலவருக்

குலேவண்டியவைகளையுகவிதோன்றுகின்றமெய்யெழுத்திற்குஉயிரெழுத்துதவியாயிருப்பதுபோலயாவருக்குமுதவிசெய்திருந்தான்—எ-று.

கூப்பிலைம்பதுகோடியோசனையுலகாண்டோன்
பூப்பிரதக்கணம்பண்ணினன்பூக்குழற்றேவி
வாய்ப்பிலங்குதாணமோண்டனன்பொராரசுவேதனையைத்
தாப்புமன்னவன்கண்டனன்கொண்டனன்றளர்வே.

இ-ள். குறைதவில்லாத ஐம்பதுகோடி யோசனை விசாலமுள்ளபூமி முழுதும் அரசாட்சிசெய்த சுவேதராஜனானவன் தனதுமனைவியோடும் பூப்பிரதட்சணஞ்செய்தான், அங்ஙனஞ் செய்தகாலத்தில்புஷ்பமாலையணிந்த அளகபாரத்தையுடைய மனைவியானவள் ஆயுளிறுதியாகுமுறையினாலிறந்துவிட்டாள் அப்படிப்பட்ட மனையாளின் சவத்தை அருகிலிருந்த சுவேதராஜன்கண்டு மனக்கலக்கமடைந்தான்—எ-று. (௪)

குறைதுறத்துயர்ச்சுகப்படுங்கடலினின்றான்
மதுமெனச்சிவசிந்தையுடனேசமுடையபெற்றான்
விராவிநிற்பதென்னிதுகசந்திணைம்பெற்று
னைதுமறப்பயனெனப்பிரத்தமைதலையெழுந்தான்.

இ-ள். சுவேதராஜனானவன் அங்ஙனமுண்டாகிய துன்பமடைந்து சுக்கிரபட்சமுடைய நிர்மலமனமுடையவனாகையால் அதிதீவிரமாகச் சிவசாயுஜ்யத்தைத்தரத்தக்க ஞானமும் வைராக்கியமும் பெற்று அநித்தியமான தேகம் முதலியவற்றை நித்தியமென்றெண்ணும் பெற்றுக்கொண்டமானையுமான யாதொன்றுமில்லையென்று விசாரித்து எழுந்து புறப்பட்டான்—எ-று. (௫)

காவிரிப்புனல்மூழ்கினன்கரியமைமிறைஞ்சிக்
காவிரிந்தெழுஞ்சூழ்ந்துறைதனைமுறைப்படி
மாவிருக்குமையாளுடன்வதிட்டையுமடைந்தான்
மாவிருப்புறுமுனித்துவம்வதிட்டையிற்பெற்றான்.

இ-ள். சுவேதராஜனானவன் காவிரிநதியில் ஸ்நானஞ்செய்து திருவானைக்காவலமைந்த பூஞ்சோலைகள் விரிந்துவளர்கின்ற திருத்தலத்திலுள்ள பெருமைபொருந்திய ஸ்ரீகுருபாதியும் வைசாக்கியவாசஞ்செய்கின்ற நித்தியாரும் நிருவதிட்டையுமாய வனையகி அந்தத்திருவதிட்டையென்னும் ஸ்தலத்தில் யாவருமதிகவிருப்பங்கொள்ளுகின்ற சுவேதமுனிவனென்னும் பெயரையும் பெற்றான்—எ-று. (௬)

கரியிராசனைக்கெழுமிமுத்தாநதிமூழ்கித்
திரிவலஞ்செயூத்திருமுதுகுன்றனைப்பணிந்து

பரிவினாற்குறுமுனிவரும்பணிந்தருந்தவங்கள்
புரிதரத்தலம்புகன்றருள்செயவெனப்புகன்றான்.

இ-ள். சுவேதராஜனானவன் மலைகளுக்குட் சிரேஷ்டமாகிய விருத்தாசலத்திற்குவந்து திருமணிமுத்தாநதியிஸ் ஸ்நானஞ்செய்து அழகிய பழமலைநாதனை மூன்றுதரம் பிரதட்சணஞ் செய்துவணங்கி அன்பினால் அகஸ்தியமுனிவனையும் வணங்கிநின்று சுவாமீ அடியேன்தவங்கள் செய்யும்படி மேன்மையான ஒருஸ்தலத்தை யனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்—எ-று. (எ)

விருத்தவெற்பினிற்றவஞ்செயின்மிருத்துவமிலை
திருத்துபிங்கலன்கோசிகன்றேவரிற்பெரியோர்
பெருத்தநான்முகன்பூசையாற்பெருவரம்பெற்றா
ரொருத்தர்வந்தவர்வரம்பெறாதொழிந்தவரிலை.

இ-ள். இந்த விருத்தாசலத்தில் தவஞ்செய்தால் அவர்களுக்கு இறப்பில்லை அல்லாமலும் குறைவற்ற செல்வத்தையுடைய குபேரனும்விஸ்வாமித்திரமுனியும் தேவர்களிற்சிறந்த பெரியோர்களும் பெருமை பொருந்திய பிர்மதேவரும் இந்தஸ்தலத்திற் பூசைசெய்து பெரிதாகிய வரங்களைப்பெற்றார்கள் இந்தஸ்தலத்தில் வந்தவர்களில்வரம்பெறாமற் போனவர்களொருவருமில்லை—எ-று. (அ)

அனாதியாஞ்சுயம்புலிங்கமுமருணாநதியும்
வினாவிவேலர்தம்மேவலானாமிங்கணைந்து
பினாகியோகமுஞ்சித்தியுஞானமும்பெற்றோ
மனாதியாலுமித்தலத்தினையளக்கலாம்வரைத்தோ.

இ-ள். அனாதியாகிய சுயம்புலிங்கத்தின் பெருமையும், அருள்வடிவமாகிய திருமணிமுத்தாநதியின் பெருமையும், எனது ஆசிரியராகிய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியக்கடவுளனுக்கிரகஞ்செய்யக்கேட்டு அவரது ஆக்கினையினால் நாமும் இந்தஸ்தலத்திற்குவந்து பூசித்த பின்பு சிவயோகமுஞ் சகலசித்திகளும் பிரமஞானமும் பெற்றோம் ஆதலால் இந்தஸ்தலத்தின் மகிமையை மனமுதலானவைகளாலும் அளவிட்டுச்சொல்லலாகுமோ—எ-று. (௯)

நீயுநின்மனக்கவலையைநீக்கியித்தலத்திற்
றூயமாதவஞ்செய்யெனச்சொற்றனன்முனிவ
னாயமன்னனுமகத்தியனுரைத்ததைநயந்து
காயவாழ்க்கையைக்கானலுங்கனவுமாய்க்கருதி.

இ-ள். ஆசையினால் நீயும் இந்தஸ்தலத்தி லிருந்து உன்னுடைய மனோசஞ்சலத்தை யொழித்துப் பரிசுத்தமாகிய மகா தவத்தைச்செ

ய்வாயென்று அகத்தியமுனிவர் சொல்லியருளினார் அதுகேட்டு அந்தச் சுவேதராஜனும் அகஸ்தியமுனிவர்சொன்ன வாக்கியத்தை உபதேசமாகக்கொண்டு சரீரவாழ்க்கையைக் கானற்சலமுங்கனவிற்கண்ட பொருளுமாக நினைந்து—எ-று. (௰)

சீதளப்பசுஞ்செம்பொனான்மேய்ந்துநிரைத்திலத்தாம்
பாதலப்பணிமணியினாற்பதித்தியற்றுயிற்று
மீதலர்நிரைனின்மின்னிளங்கொடிமுலைத்தடந்தோய்
மாதளைத்திருமலர்நிறமன்னனுந்துறந்து

இ-ள். குளிர்ச்சியையுடைய பசுமைதங்கிய செம்பொற்றகட்டால் வேய்ந்து இடையிடையே முத்துகளாலும்பாதாளலோகத்திலுள்ள நாகரத்தினங்களினாலும் பத்திபத்தியாகப் பதிக்கப்பட்டிருக்கிற மேலுப்பரிகையினிடத்தில் இளமைபொருந்திய மின்னற்கொடிபோன்றஸ்திரீயினுடைய ஸ்தனபாரத்திற்புனருகின்ற குங்குமச்சேறணிந்து மாதளம்புஷ்பத்தையொத்து விளங்குகிற திருமேனியினிறத்தைச் சுவேதராசனுந்துறந்து—எ-று. (௰௧)

மூன்றுகாலமுத்தாநதிமூழ்கிநீறணிந்து
கோன்றளிர்க்கையான்மஞ்சனங்கொழுமலரேந்தி
யேன்றதம்பிரான்பூசைமுக்காலமுமியற்றி
யான்றதக்கணஞ்செய்தெழுத்தஞ்சுமேசெபித்து

(இ-ள். சுவேதராசன் திருமணிமுத்தாநதியில் திரிகாலங்களிலும் ஸ்நாநஞ்செய்து சரீரமுழுவதும்விபூதியைத்தரித்துக்கொண்டு தனது மார்தளிரையொத்தகைகளாற் றிருமஞ்சனமும் வளம்பொருந்தியபத்திரபுஷ்பங்களுமெடுத்து உயர்வானபழமலைநாதனை மூன்றுகாலங்களிலும்பூசனைசெய்துமேன்மையானபிரதட்சணநமஸ்காரங்களுஞ்செய்து பஞ்சாட்சரத்தையுஞ்செபஞ்செய்துமுடித்து-எ-று (௰௨)

நிச்சயித்தநல்லடிசிலானெய்தயிர்பாலா
னச்சுமின்சுவைக்கறியினானறுஞ்சுவைக்கனியால்
வைச்சபஃணியஞ்சருக்கரைப்பாணியவகையா
லிச்சையின்படியடியவர்பூசையுமியற்றி.

இ-ள். சுவேதராஜன் தன்மனதினால் இனியவென்றுநிச்சயஞ்செய்த நன்மைபொருந்திய போசனத்தினாலும்-நெய்-தயிர்-பால்-முதலானதுகளாலும் யாருமவிரும்பத்தக்கஇனிதான சுவைபொருந்திய கறிவகைகளினாலும் நல்லமதுரமாகிய பழவகைகளினாலும் ரசம்பொருந்தியசிற்

றுண்டிகளாலும் பாயசமுதலியவற்றாலும் சிவனடியார்கள் மனவிருப்ப த்தின்படி திருப்திசெய்து பூசித்தும் இருந்தான்.எ-று. (௫௩)

நாற்றிசைப்பயன்சுமந்து நாற்றிசையெலாமின்னிச்
சீற்றவைம்புலன்கறுத்திருந்தி வினையிடித்துச்
சாற்றுமன்பர்தாள்வீழ்ந்துதம்பழமலையேறித்
தோற்றுபொன்மழைபொழிந்தது சுவேதமாங்கொண்டல்

இ-ள். சுவேதராசனென்னு மேகமானது சொல்லுகின்ற அடியார்களுடைய திருவடியாகிய கடலில்வீழ்ந்து நான்குதிசையிலுமுள்ள பொருள்களாகிய நீரைக்கிரகித்து நான்குதிசைகள்தோறுங் கீர்த்தியாகிய மின்னலைமின்னிக் கொடிய பஞ்சேந்திரியங்களைக்கோபிக்கலாகிய கறுப்பையடைந்து பெரியதீவினைகளாகிய இடிகளையிடித்துத் தனது பழமலையாகிய விருத்தாசலத்தில் வந்தேறித் தோன்றுகின்ற சுவர்ணமாகிய மழையைச்சொரிந்தது-எ-று (௫௪)

சுந்தரர்கருன்முதுகிரிச்சோதியுமந்நாள்
வந்துநான்முகற்களித்தமந்திரத்தை யுமியம்பி
நந்தமேனியிந்நகரமாநதிகளுக்கரசா
மிந்தமாநதியிதிற்றவம்புரியெனவிசைத்தது

இ-ள்-சுந்தரசுவாமிகள் ஓதிய திருநட்பாடற்கிரங்கித் திரவியங்கொடுத்தருளிய பழமலைநாதரும் சுவேதராஜனிடத்தில் வந்து முற்காலத்தில் பிரம்மதேவருக்கு உபதேசஞ்செய்த மந்திரத்தையும் உபதேசித்து இந்தஸ்தலம் நமதுவடிவமாகும் இந்நதி மணிமுத்தாநதி நதிகளுக்கெல்லாமரசாகும் இந்தஸ்தலத்தில் தவஞ்செய்வாயாக வென்றுசொல்லி —எ-று. (௫௫)

அகிலகாரணன்மறைந்தனனத்திசைவணங்கி
யகலமுச்சிவபூசையுமகேசுரபூசை
சகலதானதன்மங்களுந்தருக்கினாற்பெருக்கிப்
புகலருந்தவமகிழ்ச்சியாய்ப்புரிந்தனன்சுவேதன்

இ-ள், உலககாரணனாகிய பரமசிவன் மறைந்தருளினார்அந்தக்கணமே சுவேதராஜனும் அந்தத்திசையை நோக்கி நமஸ்காரஞ்செய்து அஞ்ஞானவல்லமைநீங்கும்படி சிவபூசையும் மகேஸ்வரபூசையும் சகலதானதர்மங்களும்,மனோற்சாகத்தோடும் விருத்திபண்ணிச் சொல்லற்கரியதவத்தைச்சந்தோஷத்துடன்-எறு (௫௬)

குகலையாங்குழக்கன்றளிக்கிச்சையாம்போல
வதிபன்றோற்றிநின்றருள்செய்வான்சுவேதனேயுனக்குச்

சுதபனுமமுந்தந்தன நந்திக்குட்சுகமும்
பதமுந்தந்தனமென்றனன்சுவேதனும்பகர்வான்

இ-ள். மழலையையுடைய இளங்கன்றைநினைந்திரங்கி வருகின்ற பசுவைப்போலப் பரமசிவனும் சுவேதமுனிவனுக்கிரங்கிப் பிரத்தியட்சமாகிநின்று சொல்லுகின்றார்; ஓய்சுவேதமுனிவனே நாம் உனக்குச்சுதபனென்னும் பெயரையுங்கொடுத்தோம் அல்லாமலும் நந்தீஸ்வரருக்குட்பட்ட சுகத்தையும் பதவியையும கொடுத்தோம் என்று திருவுளம்பற்றியருளினார், அதுகேட்டுச் சுவேதமுனிவனும் விண்ணப்பஞ்செய்கின்றான். (௰எ)

கலிப்பிறப்பினாற்காலனாலாகிலடியேன்
சலிப்பிலேன்பிறப்பினாற்றலைதடுமாறி
வலித்துநின்பதமறப்பனேல்மாறுகள்வருமேற்
பலிப்பிழப்பனேயென்றியான்பயந்தனன்பிறப்பை

இ-ள் அடியேன் கரித்திரவாதையினாலும், யமவாதையினாலும், நரகவாதையினாலும்சலிப்படையவில்லை பிறப்பினாலும், இறப்பினாலும், இடமயங்கியவற்றோடென்பட்டு உம்முடையதிருவடிகளைமறந்துவிடுவேனாகில் மாறுகளுண்டாகும் அதனால் இப்போதுகிடைத்துள்ள தபோபலத்தை யிழந்துவிடுவேனேயென்று நினைந்து அடியேனும் பிறவிக்குப்பயந்தேன்—எ-று. (௰அ)

பொன்றுமிப்பிறப்பொழிக்கருள்புரிந்திடவேண்டு
மென்றுகூறவானுமையுடனின்றுபோவென்று
நின்றிடும்படிவேண்டுநின்னிணையடிநேசங்
குன்றிடாவரங்கொடுத்திடவேண்டுமென்றுரைத்தான்

இ-ள். நாசப்படுகின்ற இந்தப்பிறவித்துன்பத்தை நீக்கி ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து சுவேதராஜன்பின்னையுஞ்சொல்லுகின்றான் சுவாமீ இப்பொழுது தரிசனங்கொடுத்ததுபோலஎப்பொழுதும் இந்தஸ்தலத்தில் உமையவளோடெழுந்தருளியிருந்து ரட்சிக்கவேண்டும் அல்லாமலுமடியேனுக்கு உமமுடைய உபயதிருவடியின்கண் அன்பு நீங்காதிருக்கின்ற வரமுங்கொடுத்து ரட்சிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்—எ-று. (௰௯)

சுதபன்முன்னமேதிரிபுரந்தூளெழநகைத்த
வதிபனுஞ்சிரித்தப்படியாகுவதென்று
முதல்வனின்றனன்சுவேதனுந்தவ்வரம்பெற்
றுதவுந்தம்பிரானடியவர்பூசையுமுறைப்பாம்

இ-ள். சுவேதராஜனாகிய சுதபனுக்குமுன்பாகமுப்புரங்களும்பொடியாகும்படி நகைசெய்த முதல்வனாகிய பரமசிவனும்நகைத்துஅப்படியேயாகக்கடவதென்று திருவுளம்பற்றி நின்றருளினார் சுவேதராஜனும் முதன்மையாகத் தானினைந்த வார்த்தைப்பெற்றிருந்தான். இப்பால் அந்தத்தலத்திலிருந்து சகல நன்மையையுந்தருகின்ற பரமசிவனடியார்களுக்குப் பூசையைச் செய்வதினால் வருகிற பலனையுஞ்சொல்லுகின்றோம்—எ-று. (உ௰)

சுவேதச்சருக்கமுற்றுப்பெற்றது

ஆக சருக்கம்-௰-க்கு-திருவிருத்தம்-உசுஅ

பதினோராவது

# அன்பர்பூசைச்சருக்கம்

வேறு.

பதினெட்டதனிற்பதின்மூன்றாவதுசிவகண்டத்
ததிகச்சிரகிரியன்பர்கள்பூசையையறைகின்றோ
மதிபெற்றுளவோர்வணிகற்கொருநால்மகவுள்ளார்
முதிரக்காசித்தவரார்ச்சனைசெய்தான்முன்னோன்

இ-ள். சிவகண்டமென்னும் ஆகமத்தில் வகுத்துள்ள பதினெட்டத்தியாயங்களில் பதின்மூன்றாவது அத்தியாயத்திற் சொல்லுகின்றமேன்மையானபழமலையில் அடியார்களைப் பூசிப்பதினா லுண்டானபலனைச் சொல்லுகின்றோம் பூர்வத்தில் விவேகமிகுந்துள்ள ஒருவைசியனுக்கு நான்கு குமாரர்களுண்டு அவர்களிற் பிரதமபுத்திரனானவன் தவமுதிர்ச்சி யடையும்படியாகக் காசிவாசிகளாகிய பெரியோர்கள் வரக்கண்டு அவர்களை விஸ்வநாதராகப் பாவித்துப் பூசைசெய்தான்—எ-று. (க)

காசிப்பாமன்கழலிற்புக்கான்முற்றோன்றல்
வாசிச்சோமீசத்திலிரண்டாவானன்பர்
நேசப்பூசைநிறைத்தருள்பெற்றான்மூன்றாவான்
பாசத்தாருடமக்கள்பறித்ததனத்தாலே

இ-ள். அங்ஙனம்பூசித்தபிரதமபுத்திரன் தேகாந்தத்தில் காசிவிஸ்வநாதருடைய திருவடியிற்சேர்ந்தான் இரண்டாவது புத்திரனானவன் நன்மைபொருந்திய சோமீஸ்வரமென்னுந்தலத்திலிருந்து வருகின்ற அடியார்களைக் கண்டு அன்புடனே சோமீஸ்வராராகப் பாவித்துப் பூசைசெய்து தேகாந்தத்தில் சோமீஸ்வராருடையதிருவடியிலடைந்தான் மூன்றும்புத்திரனானவன் பந்துக்களுடைய பிள்ளைகள் வியாபாரத்தினின்று பசற்பறியாகக்கொண்டதிரவியத்தினால்—எ-று. (உ)

தனபதியாகிக்கனகசபைப்பத்தர்க்கன்பாய்த்
தினமுமருச்சனைசெய்திறைபாதத்திற்புக்கா
னினமொருசிறுவன்சிறு துணிகைக்கொண்டிடவெட்டிப்
பனவனைவெட்டிச்சிறுவனைவெட்டிப்பறிகொள்ளும்

இ-ள் குபேரனைப்போற் செல்வத்தின் மிகுத்துள்ளவனாகிச் சிதம்பரத்திலிருந்து வருகின்ற அடியார்களைகண்டு சபாநாயகராகப்பாவித்து நாளதோறும் அன்பாகப் பூசைசெய்து தேகாந்தத்திற்சபாநாயகருடைய திருவடியிற்சேர்ந்தான் இன்னமொருவனாகிய நான்காம்புத்திரனானவன் ஆராகிலும்ஒரு சிறியவஸ்திரம்வைத் திருந்தாலும் அதையும் அபகரிக்கும்படி நினைந்து அவர்களைவெட்டியும்பிராமணர்களாயிருந்தாலும் சிறுபிள்ளைகளா யிருந்தாலும் வர்ச்சிக்காமல் வெட்டியும் அவர்களிடத்துள்ள பொருளைப்பறிப்பதே தொழிலாகஇருந்தான்—எ-று(௩)

படருங்கொலைசெய்துதிருடும்பலபொருள்பழிஞருடன்
விடரொடுநடரும்வேசையர்நீசர்கடாமுண்பா
ரடருங்கொலைசெயவதிபிணைமூடிப்பிணிமூடிக்
கடவியபிரமன்றெட்டுக்கட்டக்களையானான்

இ-ள் துன்பப்படுத்துகின்ற கொலைபாதகத்தைச்செய்துதிருடுகின்ற அந்தப்பல பொருள்களையும் நல்லோர்களுக் கனுபவமாகாததாகிப் பழிபாதகர்களும்-தூர்த்தர்களும்-கூத்தர்களும்-வேசையர்களும் - நீசர்களும்-அனுபவிப்பார்கள் இவனு மிகுந்த கொலைத்தொழிலைச் செய்தபடியினால் இம்மையில் அதிகபாதகங்கள் மேலிட்டுப்பலவியாதிகளுமதிகரித்து அப்பாதகங்களால் தூண்டப்பட்ட பிர்ம்மஹத்திதோஷம்பிடித்துவருத்த அதனால் மூர்ச்சையாகினான்—எ-று (௪)

மைந்தன்படுதுயர்கண்டொருநாண்முதுமறையோன்முன்
றந்தையுரைப்பச்சகலபுராணக்கடன்மூழ்கு
மந்தணன்மொழிவானமருமுனிவரும்வரமெய்திப்
புந்திசெய்முதுகிரிசென்றாலப்பிணிபோமென்றான்.

இ-ள். இப்படி நான்காம் புத்திரனானவன் படுகின்ற வருத்தத்தையொரு
நாள் பிதாவானவன்கண்டு ஒருவயோதிகரான பிராமணனைவணங்கிச்
சொன்னமாத்திரத்தில் சகல புராணங்களாகிய சமுத்திரத்தில்முழுகியு
ள்ள அந்தப்பிராமணோத்தமருஞ்சொல்லுகின்றார் நீங்கள்தேவர்களும்
முனிவர்களும்-தங்களுக்கு வேண்டிய வரங்களைப்பெற்று இடைவிடா
மல் தியானிக்கப்பட்ட மேன்மையுடைய விருத்தாசலத்திற்குச் சென்
றால் இந்தவியாதிகள் நீங்குமென்று சொல்லியருளினார்—எ-று. (௫)

மறையவன்மொழியைப்பிரமாணித்தவன்மகனொடு
நிறைகிளையுடனும்வணிகனுமுதுகிரிபோர்புக்கா
னறைகமழ்முத்தாநதியினின்மூழ்கிச்சிரமெற்பி
லிறையுடனுமைதனையெய்திவணங்கினரிவரெல்லாம்.

இ-ள். அந்தப்பிராமணனுடைய சொல்லைப் பிரமாணமாகக்கொண்டு
அந்தவசியனும் தன்னுடைய புத்திரனோடும் கிளைஞசுற்றத்தாரோடும்
சேரக விருத்தாசலத்திற்குப்போனான் வாசனை பரிமளிக்கின்ற திரும
ணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலையின்கண்ணெழுந்தருளிய
பரமசிவனையும் பெரியநாயகியம்மையாரையும்இவர்களெல்லாரும்போ
ய் வணங்கினார்கள்—எ-று. (௬)

நாடொறும்வணிகனுமைந்தனுமுத்தாநதிமூழ்கித்
தேடருநாற்றடனெட்டுவலஞ்செய்துசிவனையுன்
றுடனைநம்பனையென்றுவணங்கித்தருதொண்டர்
நீடியபூசையுநித்தமுயன்றார்நெறியோடும்

இ-ள். இந்த வசியனும் அவனுடையகுமாரனும் நாள்தோறும் திரு
மணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து யாவராலுந் தேடுதற்கரிதாகிய ப
ழமலைநாதனை நூற்றெட்டுப் பிரதட்சிணைஞ்செய்து எமது கர்த்தாவாகி
ய பரமசிவனே யும்முடைய திருவடிகளையே நம்பினோமென்றுதுதித்
துவணங்கிச் சிறப்புப்பொருந்திய அடியார்களதுமேன்மையானபூசை
யையுந் தினந்தோறும் விதிமுறையாகச்செய்தார்கள்—எ-று. (௭)

மடமுங்கட்டிப்பொருளுநிரப்பினர்வருதொண்டர்க்
கிடமும்பூசையுமியல்பினளித்துப்பரிவாலே
யடருந்தனமுந்துகிலுமமுதுமருளன்பும்
திடமுளவடியவரிச்சைப்படியேசெயுநாளில்

இ-ள். அந்தஸ்தலத்தில் மடாலயப் பிரதிஷ்டையுஞ்செய்து அதற்
கு வேண்டிய திரவியங்களும் வைத்தார்கள் அல்லாமலும் அவிடத்தில்

வருகின்ற அடியார்களுக்கு இடமுங் கொடுத்து அவர்களை விதிமார்க்கமாகப் பூசித்து வணங்கிப்பரஞானமும் பரபத்தியும் இடமாகநிறைந்துள்ள அந்த அடியார்களுடைய மனவிருப்பத்தின்படி மிகுந்தபொருள்களும் வஸ்திரங்களும் அமுதும் அன்பாகக்கொடுத்துத் திருப்திசெய்து வருகின்றகாலத்தில்—எ-று (அ)

ஒருவரிடத்திற்பிணியும்பிரமனுமொழிவாகிக்
கருதருஞ்சிவனடியவர்மேல்வைத்தகருத்தாலே
மருவருஞ்சிவனடிமைந்தனடைந்தான்வணிகனுடன்
கருவளர்கிளைஞருமதுவழியாகக்கதிசேர்ந்தார்

இ-ள் அந்தவசியனுடைய குமாரனானவன் ஒருவருஷத்தில் சகலவியாதிகளையும் பிரமஹத்தி தோஷத்தையும் நீங்கி மனத்தினால்நினைத்தற்கரிய பரமசிவனடியார்களிடத்தில்வைத்த அன்பினால் தனது பிதாவோடும் பொருந்துதற் கரிதாகிய பரமசிவனுடைய திருவடிகளிற்சேர்ந்தான் அவன் வமிசத்திலுண்டானசுற்றத்தாரும் அதுவேவழியாக மோட்சத்தைப்பெற்றார்கள்—எ-று (கூ)

வேறு.

இந்தவணிகர்நால்வரினுமிளையோன்பெற்றபேறதனை
யந்தமில்லாக்குறுமுனிவனரியசுவேதமுனிக்குரைப்ப
வந்துமுனிவனேவலினான்மணிமுத்தாறுதனின்மூழ்கி
யெந்தைபெருமான்முதுகுன்றனிணைத்தாமரைத்தாள்பணிந்தேத்தி

இ-ள். இந்த வசியகுமாரர்கள். நாலுபேரிலும் இளையவன் பெற்ற மோக்ஷத்தை ஒருநாளும் அழிவில்லாத அகஸ்தியமுனிவரானவர் அரிதாகிய சுவேத முனிவருக்குச் சொல்ல அந்தச் சுவேதமுனிவரும் அகஸ்தியமுனிவரது ஆக்கினை வழியாக விருத்தாசலத்திற்கு வந்து திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து எமது பிதாவாகியும் கடவுளாகியும் விளங்குகின்ற பழமலைநாதருடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் வணங்கித் தோத்திரஞ்செய்து—எ-று (ய)

தன்பூசையினாலாட்டியநீர்தன்னாற்சுவேதநதியாக்கி
யன்பர்பூசைபலநாளுமன்பார்செய்யுநெறியாலு
மின்பமொழிகளவர்க்குரைக்குமியல்பினாலுமிதத்துடனே
நன்பாய்கறிகளெல்லமுதுநயந்துபடைக்குநன்பாலும்

இ-ள் தான்செய்தபூசையில் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்ததிருமஞ்சனஜலத்தைத்தன்பெயரால் சுவேத நதியென்று சொல்லும்படி செய்வித்துப்பலகாலமும் அடியார்கள் பூசையை யன்போடு செய்துவருகின்ற கிரமத்தினாலும் அவர்களுக்கு இன்பமுண்டாக உபசாரவசன

ங்களைச் சொல்லுகின்ற தன்மையினாலும் இனிமையோடும் அவர்களு க்கு நல்ல பால்தயிர்களும் நல்லஅமுதும் சந்தோஷித்துப்படைக்கின் ற நட்பினாலும்—எ-று. (௰௧)

நல்லமுதுகுன்றுடையபிரானயந்தசுவேதன்முற்றோன்றி
யல்லற்பிறவியறுத்தருளவதனைநைம்மிசாரணியத்
தெல்லைமுனிவர்கேட்டுருகியீசனடியார்ப்பூசைசெய்யத்
தில்லையிறைவன்முனிவர்கட்குத்திருக்கூத்தாடியருள்செய்தான்

இ-ள். நன்மைபொருந்திய பழமலைபின்கண் ணெழுந்தருளிய பரமசிவன் திருவுளமகிழ்ந்து சுவேதமுனிவனுக்கு முன்பிரகாசித்து நின்று துன்பமாகிய பிறவியை நீக்கித் தமது, ஈருவடியைக் கொடுத்தருளினார் அந்தமகிமையை நைம்மிசாரணியஸ்தலத்தி லிருந்து தவஞ்செய்கின்றமுனிவர்கள் கேள்விப்பட்டு மனமுருகி அந்த ஸ்தலத்திற்குவந்து பரமசிவனடியார்களைப் பூசித்து வரும்பொழுது சிதம்பரத்தி லெழுந்தருளி விளங்காநின்ற சபாநாயகரும் அம்முனிவர்களுக்குப் பிரத்தியட்சமாகின்று அழகிய நடன தரிசனங் கொடுத்தருளினார்—எ-று.

சுமந்தமுனிவன்விருத்தகிரிச்சோதிப்புராணஞ்சொல்லுங்கா
லமைந்ததெய்வவன்மனனுமரசன்கேட்டுவாமுத்திச்
சமைந்தமுத்தாநதிமூழ்கித்தானுமுடையான்றனைபணிந்து
நமஞ்சேர்பரமசிவனடியார்களுக்கும்பூசைசெய்திருந்தான்

இ-ள் சுமந்தமுனிவரானவர் விருத்தாஜலத்தினது பிரகாசம்பொருந்திய புராணத்தைச் சொல்லுங்காலத்தில் பொருந்திய தெய்வவன்மனென்னு மரசனானவன் கேள்விப்பட்டுவந்து ஸ்நானஞ் செய்தவர்களுக்குச் சகல நன்மையும மோக்ஷத்தையுங் கொடுக்கும்படி பிரகாசித்திாநின்றதிருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்துபழமலைநாதனைவணங்கிப்பரிபூரண,ஞானசொரூப சுபாவமாக விளங்குகின்ற பரமசிவனடியார்களையும் அந்தஸ்தலத்தில் அன்பாகப் பூசித்திருந்தான்எ-று(௰௨)

எந்தைபெருமானடியார்களியாவர் மனையிற்சென்றாலு
மந்தமனையின்முனிவர்குழாமமரர்குழாமுநெரிங்கியிடுந்
தந்தமனையிற்றிரவியங்கடாமேநின்றுகூத்தாடு
முந்துமடியார்பூசையினான்மூவேழ்சுற்றங்கரையேறும்

இ-ள் எமதுபிதாவாகிய பரமசிவனுடைய அடியார்களானபேர்கள் எவர்களுடைய வீட்டிற்சென்றபோதிலும் அந்த வீட்டினிடத்தில் முனிவர்கூட்டமுந் தேவர்கூட்டமும் வந்து நெருங்குவார்கள் அல்லாமலும் அவ்வவர்கள்வீடுகளிலுள்ளதிரவியங்களாகிய அமுது ஆடைபொருள் முதலானதுகள் நாம் சிவனடியார்கள் உண்ண உடுக்க அர்ச்சிக்க

அனுபவமாகின்றேமென்னும் ஆனந்தத்தினால் கூத்தாடும் முதன்மையாகிய சிவனடியார்களைப் பூசித்த தபோபலத்தினால் அவர்களது இருபத்தொரு தலைமுறைகளிலுள்ள சுற்றத்தார்களும் பிறவிக் கடலை நீந்தி மோக்ஷமாகிய கரையிலேறுவார்கள்—எ-று. (௰௪)

தலையானடந்துமுத்திநிலஞ்சார்ந்தாலொக்கும்பசுதன்மங்
கலையார்கரத்தான்சிவசரிதைகாலானடந்தாம்பறைந்தடைத
ன்றலையேயொக்குஞ்சிவபூசைதொண்டர்பூசையாலணைதன்
மலையாவாயுவேகத்தான்மனவேகத்தான்ஞானநிலை

இ-ள். பசுதன்மத்தினால்மோக்ஷபூமியையடையக்கருதுவதுதலையால் நடந்து அடைவதை ஒக்கும் கலைமானை யிடக்கரத்திற் றாங்கியபரமசிவனுடைய திவ்வியசரித்திரத்தினால்மோட்சபூமியை யடையக்கருதுவது காலால்நடந்து அடைவதை ஒக்கும் சிவபூசையினால் மோட்சபூமியை யடையக் கருதுவது சீக்கிரத்திற்பறந்து அடைவதை ஒக்கும் அன்பர்பூசையினால் மோட்சபூமியை அடையக் கருதுவது கெடாத வாயுவேகத்தினால் அடை வதை ஒக்கும்-குருமுகமாகப் பெற்றஆத்மஞானநிலையில் மோட்சபூமியை அடையக் கருதுவதுமனவேகத்தினால்அடைவதைஒக்கும்—எ-று. (௰௫)

அன்பர்பூசைச்சருக்க முற்றுப்பெற்றது

ஆ சருக்கம்-௰க,க்கு-திருவிருத்தம்-உ௱௬.

பன்னிரண்டாவது

# சிவபூஜாவிதிச்சருக்கம்.

0*0

வேறு.

சேயிழைகேட்சநாகர்சிவபூசைவிதியைச்சொல்வா
ராயுங்காற்சிவலிங்கத்தனருச்சனையதிகநன்மை
யேயமுப்போதுஞ்செய்வானிருபொழுதொருபோதேனுந்
தூயவாம்பூசைசெய்வான்சுத்தத்திற்பத்திநன்றாம்

இ-ள். உமையவள்கேட்கப் பரமசிவனானவர் சிவபூஜா விதியைத்திருவுளம்பற்றி யருளுகின்றார் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் சிவலிங்கபூ

சையானது எவ்வகைப் பட்ட பூசையிலும் அதிக நன்மையைத் தருவதாகும் விவேகியானவன் இந்தப் பரிசுத்தமான சிவலிங்கப் பூசையைப்பொருந்திய மூன்றுகாலத்திலுஞ் செய்வான் அங்ஙனஞ்செய்வது கூடாதாயின் இரண்டுகாலத்திலாகிலும் ஒருகாலத்திலாகிலுஞ் செயவான் இங்ஙனம்பூசிப்பவனுக்கு அங்கசுத்தியிலும் அந்தக்கரணசுத்தியாகிய சம்பத்தியே மகாநன்மையாகும்—எ-று (௧)

முச்சுடரிதயஞ்சென்னி முறைமணல்மண்மாநீறு
விச்சையாங்கும்பங்கொன்றை வில்லநீர்குசைபால்வேதி
கைச்சுவரெழுத்துச்சாணகந்தனிலாதிபூசை
யிச்சையாற்செய்வானின்றே லளற்றினிலியானைக்கொப்பான்

இ-ள் சோமசூரியாக்கினியாகியமூன்றுசுடர்கள் இருதயம்-பிர்ம்மரந்திரம் திருமுறை-மணல்-மண்-மா-திருநீறு-ஞானசொரூபமாகியபூரணகலசம் கொன்றை-வில்வம-ஜலம்-தருப்பை-க்ஷீரம்-வேதிகை - சுவரிலெழுதிய சித்திரம்-சாணம்-ஆகிய இவற்றில் எவற்றிலாகிலும் பரமசிவத்தைஆவாகனம்பண்ணி அன்பினாற்பூசிக்கக்கடவன் அங்ஙனம்பூசியாவிட்டால்சேற்றிலழுந்திய யானையைப்போல்கரையேறமாட்டான்—எ-று. (௨)

எத்தனைபடித்தானேனு-மெத்தவுஞ்செய்தானேனு
மத்தனையாகமெல்லா மடைவுடன்செய்தானேனு
நித்தனைப்பூசைசெய்யா னெடுஞ்செயற்போகமெல்லாஞ்
செத்தவற்களித்தாலொக்குந்தீங்கானன்மழையுமொக்கும்

இ-ள்- பரமசிவனைப் பூசியாதவன் எவ்வளவு கல்விகற்றவனானாலும், எந்தெந்தத் தவங்களைச் செய்தவனானாலும் அவ்வளவு யாகங்களெல்லாம் முறையாகச்செய்தவனானாலும், நூல்களிற் கூறிய அவனாற்செய்யப்பட்ட மேன்மையானசெய்கைகளுமவனனுபவிக்கின்ற சகலபோகபோக்கியங்களும் செத்துப்பிணமானவனுடைய செய்கைக்கும் அப்பிணமானவன் அனுபவிக்கப்பட்ட போக போக்கியஙகளுக்குஞ் சமானமாகும் அல்லாமலும் கானலிற்பெய்த மழையையும் ஒக்கும்—எ-று (௩)

தவத்தினுக்கரசனான சங்கரன்பூசைசெய்யான்
கவர்த்ததீநரகில்வீழ்வனேறினுங்காகம்போல
வவத்தனாய்நோயும்பேயுமல்லலுமிடியுஞ்சுற்றிச்
சுவர்த்தலைப்பூனைபோலச் சுற்றுவன்யோனிதோறும்-

இ-ள். தவங்களுக்கிறைவனாகிய பரமசிவனுடைய பூசையைச்செய்யாதவன் துன்பப்படுத்துகின்ற தீமையாகிய நரகத்தில் விழுவான் அங்ஙனம் விழுந்து கிடப்பவன் விமோசனகால முண்டாகிப் பிறவிக்க

னாயிலேறித் தேகமெடுத்தானாயினும் காக்கைபோலக் கருநிறமுடைய வனாய் வியாதிகளும்பிசாசமும்-வருத்தமும்-தரித்திரமுஞ்சூழ்ந்துவினை னாகி-சுவரினிடத்துள்ள பூசையைப்போல் பலயோனிகள்தோறுஞ் சுற்றித்திரிவான்—எ-று. (ச)

பூசையிலாதானுண்டிப்புழுப்பிணம்புலையன்கட்ட
மாசுளபாவமொக்கும்வாளினிற்றீயில்வீழ்ந்து
நாசமாவதுவேநன்றுநற்குலம்பிறந்தானேனும்
தேசுளாரவனைத்தீண்டிற்றெரிசிக்கினினைக்கிற்பாவம்.

இ-ள். பூசையில்லாதவனுண்ணப்பட்ட போஜனமானது புழுத்தபிணமும்-புலையனுடைய கஷ்டமுமாகும், மாசுபொருந்திய பாதகத்திற்குச்சமானமாகும் அவன்வாளினிடத்திலாகிலும் நெருப்பினிடத்திலாகிலும்விழுந்து இறந்துபோவதேநன்மையாகும் அவன்உயர்ந்தகுலத்திற்பிறந்தவனாயிருந்தாலும் அவனைச் சிவபூசைசெய்கின்ற பரிசுத்தவான்கள்கையால் தீண்டினாலும் கண்ணாற்பார்த்தாலும் மனத்தால்நினைத்தாலும் பாவமுண்டாகும்—எ-று. (ரு)

உவலைசேர்காட்டுவேனிற்குதவியகற்பகத்தி
னிழலினையொக்கும்பூசைநிகழ்ந்திடிற்றவந்தானங்க
ளழலுறுவேள்விதீர்த்தமடங்கலுஞ்செய்தாலொக்குங்
கழலடைந்திடுவனபின்னர்க்கணநாதனவன்முன்னே

(இ-ள்) சிவபூசையானது அடைந்தவர்கட்கெல்லாந் தாபத்தைத்தருவதான பாலைவனத்தின் கட்கோடையால்படுகின்ற வருத்தத்திற்குஉதவிசெய்த கற்பகவிருக்ஷநிழலுக்குச்சமானமாகும் அல்லாமலும்அப்படிப்பட்ட சிவபூசையைச்செய்தால சகலதவங்களும் சகலதானங்களும் அக்கினியினும்செய்கின்றசகலயாகங்களும சகலதீர்த்தஸ்நானங்களுஞ் செய்ததற்குச்சமானமாகும் அங்ஙனஞ்செய்தவன் தேகாந்தத்தில்முன்புகணநாதனாகித் தெய்வவிமானத்தலேறிமெய்யுலகாளுஞ் சஞ்சரித்துப் பின்பு பரமசிவனுடையதிருவடியிற்சேருவா—எ,று. (சா)

சிவலிங்கத்தொருகைநீர்பூச்செலுத்திடில்விருத்தவெற்பிற்
கவனமின்மருதமேருகாசிசாகரத்திற்கங்கை
பிவர்பிரயாகைகேளையிமகிரியாதிதன்னிற்
றவநெடுங்காலஞ்செய்துதருமமுஞ்செய்தாளொக்கும்

(இ-ள், விருத்தாசலத்திலிருந்து சிவலிங்கத்தில் ஒருகைசலம் விட்டபிஷேகஞ்செய்தாலும் ஒருபுஷ்பத்தைச்சாத்தினாலும், சஞ்சலத்தை நிவர்த்திக்கின்ற திருவிடைமருதூரிலும்- மகமேருவிலும் வாரணாசியி

டிக.

லும் சமுத்திரதீரத்திலும் கங்காதீரத்திலும் கனைபெருச்சினையுடைய பிரயாகைநதியிலும்கேகைநதியிலும்இமயகிரிமுதலானகிரியிடங்களிலு ம்வசித்துநெடுநாள்தவஞ்செய்துதருமமுஞ்செய்ததற்குச்சமானமாகு ம்—எ-று. (எ)

வெகுவிதவிரதஞ்சாந்திமெய்ப்பரிமேதங்கோடி
தருபலமொருநாட்பூசைதனைச்செயின்பரணை தூக்க
மருதிலைமகவான்செல்வமவன்கொடுத்தவர்க்கேயுண்டா
மகிபதிசெல்வந்தானுமற்றவன்கொடுத்தாலுண்டாம்

இ-ள் ஒருநாள்சிவபூசைசெய்தால்வெகுவிதவிரதங்களுஞ்சாந்திகளும் உண்மையாகிய கோடி அசுவமேதயாகங்களுஞ்செய்தால் உண்டாகின் றதகுதியான பலனுண்டாகும் அவனுக்கு மரணவருத்தமுமில்லை இந் திரபோகத்தை அவன் எவர்களுக்கு விரும்பிக்கொடுக்கின்றனனோ அவர் களுக்குண்டாகும் அங்ஙனம்சக்கிரவர்த்திபோகமென்கிற பூலோகச் செல்வத்தை எவர்களுக்குவிரும்பிக் கொடுக்கின்றனனோ அவர்களுக்கு ண்டாகும்—எ-று. (அ)

எப்பெருந்தப்பதமிச்சித்தாலோ தகாமிடமிச்சித்தா
னந்தந்தச்செல்வமுண்டாமட்டமாசித்தியிந்தை
கிடைக்கையிற்றையராசித்த யாக்கையைசதீர்ந்து
சிந்தையாஞ்சலப்பூக்கொண்டு சிவனையர்ச்சித்தாலுண்டாம்.

இ-ள். உள்ளன்பினுல் நிர்மலமானமையுடைய பக்திபுருடருங்கொண்டு பரமசிவனைப் பூசைசெய்வார்களானால் அவன் எங்கெங்கப் பதங் களை விரும்பி எண்ணிப் பூசிக்கின்றனனோ அந்தப்பதங் களுடைய செல்வம் அவனுக்குண்டாகும் அணிமாவுடன் அஷ்ட மாசித்திகளும் நினைத்தவண்ணம் தவபோகமும் நித்திய மங்களமும் கிடைக்கப்படுமுண்டாகும்—எ-று, (கூ)

வாசவன்மலரோன்மாயன் மகிழ் சிவபூசைசெய்து
தேசுடைக்கடன்மாதோடு திருவாணியிந்திராணி
யீசுரன்பூசையாலே யிருகலான்முகத்தின்மார்பிம்
பாசமின்மூவர்தம்பாற் பரிவிடம்பெற்றாரன்றே

இ-ள் தேவேந்திரனும்-பிர்ம்மாவும்-விஷ்ணுவும்-மகிழ்ச்சியைத்தரு கின்ற சிவபூசைசெய்து பிரகாசம்பொருந்திய தேவர்களிற் றலைமைபெ ற்றார்கள் அலைமாமலும்-லட்சுமி-சரஸ்வதி-இந்திராணி-இவர்களமூவரு ம் சிவபூசைசெய்த அதனால் லட்சுமியானவள் பந்தமில்லாதமூவர்களி ல் விஷ்ணுவினுடையமார்பிலும், சரஸ்வதியானவள் பிர்ம்மாவினுடை

யமுகத்திலும் இந்திராணியானவள் தேவேந்திரனுடையபெருமையொ
ருந்தியதுடையிலுமாக அன்போடும்வசிக்குமிடம்பெற்றார்கள்—எ-று.

ஆரிடங்தேவலிங்க மிராக்கதம்படிகந்திர்த்தரு
காரபுடைச்சுயம்புவெற்பும்தாபிதத்தியற்றிற்பூசை
யேருடைமறலிதானு மிவர்தமக்கடிமையாவன்
சேர்வர்சாருபங்தேவர்க் கிறைபதிருல்வர்காலம்

இ-ள். ஆரிட லிங்கம்-தேவலிங்கம்-ராக்ஷதலிங்கம்-படிகலிங்கம்-தீர்த்தலிங்கம்-சாரபுடையசுயம்புலிங்கம் மலையில்லிங்கம்-ஆகி இவைகளிற்பூசித்தால், அழகுபொருந்திய யமதர்மராஜனும் இவர்களுக்கு அடிமையாவான் ஆ[illegible] காலபரியந்தம் சாருபபதத்தில் [illegible] —எ-று. (௰௧)

கல்[illegible]போவிக் [illegible] க[illegible]செய்தபூசை
மி[illegible]ருள்[illegible]பூசை [illegible]பதந்
பு[illegible]மையோளை [illegible]ருமிடை[illegible]
று[illegible]ருடபபூசைசெய்வான் க[illegible]முத்தந்சேர்வன்

இ-ள் ஒருவர்செய்யக்கண்டு அருமையாய்பாவித்துச்செய்த பூசையினும் [illegible] பூசையினும் [illegible] தங்களும், [illegible] பெறுவான்
—எ-று. ௰௨

நாய்க்கொர்த்[illegible]ட்டுவானிசனன்றிகொன்றவனுக்கொன்றான்
தீகருணன்விரதபங்க செயிமைமறையோர்க்கொன்றான்
பாக்கியபூசைசெய்யிற் பாவம்போய்ப்பானுபோல்வ
னுக்கவன்செல்வந்தானே செல்வமென்றறையும்வேதம்

இ-ள். சோறு மாமிசமும் எரியிற்சமைத்து நாயையுண்பித்து தானுமுண்பவனுலும் புலையனுலும் ஒருவர்செய்தநன்றியைமறந்தவனுலும் பசுவைக்கொன்றவனுலும் கொடியகுணத்தையுடையவனுலும் விரதபங்களுலும் ஸ்திரீகளையும் பிராமணர்களையுங் கொன்றவனுலும் சகலபாக்கியத்தையுந் தருகின்ற இந்தச்சிவபூசையைச்செய்

தாகில் அவனது பாதகங்கள் நீங்கிச் சூரியனுக்கொப்பாக விளங்குவான் அல்லாமலும் அவன் தேடப்பட்ட செல்வமே செல்வமென்று நான்குவேதங்களுமுரைவிடும்—எ-று. ௰௩

துறவிகடாமும்பூசை தொடுத்தவர்க்கொப்பரன்று
மறவனும்மறவார்க்கூடி மருவினும்பூசைசெய்யி
லறவனுமவன்செய்பாவ மம்புயவிலைநீர்போலும்
பிறவிவேரறுக்கும்பூசை பெருவயித்தியனேடொக்கும்

இ-ள். துறவறத்தைப்பெற்ற பெரியோர்களும் சிவபூசையைச்செய்பவர்கட்குச்சமானமானவரல்ல ஒருவன்வஞ்சகனாகி வஞ்சகரைக்கூடிச் சிநேகித்திருந்தானாலும் சிவபூசைசெய்தால் புண்ணியனாவான் அவன்செய்த பாதகங்களெல்லாம் கமலபத்திரோதகம்போல அவனைவிட்டுப்பிரிந்துவிடும் ஆகலால் இந்தச்சிவபூசையானது ஜனனவியாதியைவேரொடொழிக்கின்றபெரியவயித்தியனுக்குச்சமானமாகும்-எ-று. ௰௪

காலமத்தியானஞ்சாயங் காலமுங்கடவுட்சேவை
மேலதாஞ்சுவர்க்கவாசி மேதமேபாவநாசஞ்
சாலநற்பலன்களுண்டாங் தலைவனைப்பிரதோடத்திற்
சீலமாய்வணங்கின்மூன்று சேவையிற்பலனுமுண்டாம்

இ-ள். காலைப்பொழுதிலும் உச்சிகாலத்திலும் மாலைப்பொழுதிலும், பரமசிவனை இடைவிடாமல் தரிசனஞ்செய்தால் மேலாகியசுவர்க்கபோகமும் அஸ்வமேதயாகபலனும் பாவவிமோசனமுமாகிய மிகுந்த நன்மைபொருந்திய பலன்களுண்டாகும் அன்றியும் பரமசிவனைப்பிரதோஷகாலத்தில் ஆசாரமாய்வணங்கினால் திரிகாலத்திலும் தரிசனஞ்செய்தபலனுமுண்டாகும்-எ-று. ௰௫

குழந்தைதாய்தந்தைகர்ப்பங் குதிரைகோவறையோர்மாத
ரழுங்கவேகொன்றபாவ மாலயக்களவுசெம்பொன்
பழங்கணூற்கரந்தபாவம் பதின்மூன்றும்பிரதோடத்திற்
செழுஞ்சிவபூசைபண்ணத் தெரிசிக்கப்பரிசிக்கப்போம்

இ-ள், குழந்தையையும்-தாயையும்-தகப்பனையும்-கருவையும்-குதிரையையும்-பசுவையும்-பிராமணர்களையும்-ஸ்திரீகளையும்- வருந்தும்படியாகக்கொன்ற பாவங்களும் தன்வருத்தநிமித்தம் சென்மாந்தரங்களிற்செய்த சிவாலயப்பொருட்களவினாலும் செம்பொன்களவினாலுமுண்டான பாதகங்களும் பதின்மூன்றாந்திதியில் பிரதோஷகாலத்தில்மேன்மைபொருந்திய பரமசிவனைப்பூசித்தாலும் தெரிசித்தாலும்பரிசித்தாலும் நீங்கிவிடும்-எ-று. ௰௬

வானளவடைந்தபஞ்சிற் றீப்பொறிமாறுமீசன்
மேனியைப்பிரதோடத்தின் மிகத்தெரிசித்தார்பாவம்
பான்மையாம்பதின்மூன்றாநாட் பானுவத்தமிக்குமுன்பின்
னானதோரியாமந்தானே பிரதோடமாவதம்மா.

இ-ள். பிரதோஷகாலத்தில் பரமசிவனுடைய திருமேனியைக்கண்டு மிகுந்த அன்பாகத் தெரிசனஞ் செய்தவர்களுடைய பாதகங்களானது ஆகாயவளவாக அடைத்துவைத்துள்ள பஞ்சில் தீப்பொறிபட்டதை ஒக்கும், பிரதோஷகாலமாவது எல்லாப்பான்மையையுமுடைய திரயோதசிதினத்தில் சூரியன் அஸ்தமனமாகுமுன் மூன்றேமுக்கால்நாழிகையும் அஸ்தமனமானபின் மூன்றேமுக்கால்நாழிகையுமாகிய ஒருஜாமப்பொழுதேயாகும்—எ-று. (௰௭)

அஞ்சினன்மறைக்காச்சென்றா னடல்பாடலுக்காச்சென்றான்
மிஞ்சியவிமலற்காணின் விஞ்ஞானந்தவங்களுண்டாம்
வஞ்சகமன்னன்றானும் வந்தகைகம்பிரதோடத்திற்
செஞ்சவேபாவநீங்குந் தின்னடிச்சாரூபஞ்சேர்வன்.

இ-ள். பிரதோஷகாலத்தில் ஒரு ஆபத்திற்குப் பயந்து போனவனாயினும், மறைக்கொதுங்கினவனாயினும், ஆடல்பாடல்களைப் பார்க்கப் போனவனாயினும், பரமசிவனைக்கண்டு தரிசிப்பானாகில் அவனுக்கு விவேகமுந் தவங்களுமுண்டாகும் வஞ்சகத்தையுடையவரசனும் பரமசிவனைப் பிரதோஷகாலத்தில்வணங்கினால் அவன்செய்த பாதகங்கள் முழுதும் நீங்கிவிடும அல்லாமலும் பரமசிவனைப் பரிசித்துப்பூசைசெய்தால் சாரூபபதத்தைப் பெறுவான்—எ-று. (௰௮)

நெய்தயிர்பால்தேனெண்ணெய் நிறைகரும்பிளநீர்கந்தந்
துய்யவாங்கனிநீராட்டிற் றோயம்பத்ததிகமற்றை
யையமின்மஞ்சனநீ யொன்றுகொன்றதிகநூறுஞ்
செய்யசாரூபஞ்சேர்வன் றிகழ்பிரதோடகாலம்.

இ-ள். பிரகாசிக்கின்ற பிரதோஷகாலத்திற்-நெய்-தயிர்-பால்-தேன்-எள்-நெய்-இரசநிறைந்த கரும்பு-இளநீர்-சந்தனம்-பரிசுத்தமாகிய பழரசங்கள் ஆகிய இவைகளால் பரமசிவனை யபிஷேகஞ்செய்யும்பொழுது இடையிடையே யபிஷேகஞ்செய்யப்பட்ட சுத்தஜலம் பத்துப்பங்கதிகநன்மையாகும் அப்படி ஐயமில்லாமல் செய்யப்பட்டதிருமஞ்சனமுதலான அபிஷேகங்கள் ஒன்றுக்கொன்று நூறுபங்கதிமாகும் அங்ஙனஞ்செய்தவன் செவ்விதாகிய சாரூபபதவியையடைவான்—எ-று. ()

வில்லமெய்யிலையேகோடி வெந்நீராலிறைவற்காட்டி
னல்லகோதானங்கோடி நல்வினைபயனையொக்கும்

மல்லறீரமரபக்கத் தட்டமியெனுனெய்நெய்யால்
வல்லவாஞ்சிவனுக்காட்டின் மற்றுமாதானங்கோடி.

இ-ள். பிரதோஷகாலத்தில் உண்மையாகியவில்வபத்திரத்தைச்சோ திப்பொடித்து வெண்ணீரிற்கலந்து பரமசிவனுக் கபிஷேகஞ் செய்தால் நன்மைபொருந்திய கோடி கோதானஞ்செய்த பலனுக்குச் சமானமா கும், வருத்தத்தைத்தீர்க்கின்ற அமரபக்ஷத்து அஷ்டமிதிதியிலுள்ள நெய்யினாலும் சகலவல்லபமுமுடைத்தாகிய பரமசிவனுக்கு அபிஷே கஞ்செய்தால் கோடிகோதானஞ்செய்தபலனுக்குச்சமானமாகும்-எ-று

அன்றருக்காவினெய்யா லருங்காரொட்டயிலத்தாட்டிற்
றன்றவனூறுகோடி காதந்தூய்ச்சிவலோகத்தற்
றன்றுணைதிருநீராட்டிற் சந்தரனுகவாழ்வ
னன்றியான்றயிலையாட்டி னாரணனுவனமறே

இ-ள். அந்த அஷ்டமிதிதியில் அப்போதுகறந்த பசுவின்னெய்யினா லும், அரிதாகிய கருமையொருந்திய எள்ளெய்யினாலும் பரமசிவனுக் கு அபிஷேகஞ்செய்தால் நூறுகோடிகாலமளவும் பரிசுத்தமாகிய சிவ லோகத்திற்பொருந்துவான். அவனுக்குத் துணையாகிய திருநீற்றால் அபிஷேகஞ்செய்தால் சந்திரனுகவாழ்வான். நன்மை பொருந்திய பசுவின் தயிரினால் அபிஷேகஞ்செய்தால் நாராயணனாகு வான்—எ-று. (உக)

பொன்னினுற்குளம்புகொம்பு பொதிந்துபட்டாடைபோர்த்துத்
தன்னுவானனந்தகோடி சூரியகிரகணத்தல்
நன்மைநான்மறையோர்க்கீந்த நற்பலன்பசுவின்பாலான்
மன்னுமட்டமியிலீசன் மணிமுடியாட்டின்மாதோ.

இ-ள். நிலைபெற்றுள்ள அந்த அஷ்டமிதிதியில் பசுவின்பாலினால் பரமசிவனது திருமுடியிலபிஷேகஞ்செய்தால் சுவர்ணத்தினால் குளம் புகளும் கொம்புகளுஞ் செய்துதரித்து பட்டுவஸ்திரத்தைப் போர்த்து நெருங்கிய அனந்தகோடி பசுக்களைச் சூரியகிரகணபுண்ணியகாலத் தில் நன்மையாகிய நாலுவேதங்களையுமுணர்ந்த பிராமணர்களுக்குத் தானஞ்செய்தால் நல்லபலனுண்டாகும்—எ-று. (உஉ)

தேனயந்தாட்டிலெட்டாந் திதிகளைக்கடவுளாவன்
பானியம்வருணனுவன் பானுவின்மதிசேர்முனனு
ஞானமில்சோமவார மொன்றுநாட்பசுவின்பாலா
லானுகந்தானுக்காட்டி லழிவிலாப்பரமமுத்தி.

இ-ள். அந்த அஷ்டமிதிதியில் பரமசிவனுக்கு விருப்பத்தோடுந் தேனபிஷேகஞ்செய்தால் அக்கினிதேவனுவான், ஜலாபிஷேகஞ்செய்

தால் வருணனாவான், அல்லாமலும் சூரியனிடத்தில் சந்திரன் சேருகின்ற அமாவாசிக்கு முன்வரும் சதுர்த்தசிதிதியிலும் அமாவாசியிற் குற்றமில்லாத சோமவாரங்கூடிய நாளிலும் பசுவின்பாலினால் இடபவாகனத்தை உகந்துநடாத்துகின்ற பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால் ஒருக்காலுமழிவில்லாத மேன்மைபொருந்திய மோக்ஷபத முண்டாகும்—எ-று. (௨௩)

அட்டமிபமரபக்கத் தாதித்தவாரங்கூடின்
மட்டவிழிளநீராட்டில் வாசவன்பதத்திற்சேர்வன்
கிட்டியபதினான்காய கிளர்திதிதன்னிற்றேனெய்
லெட்டயிலத்தாலிக்கா லாட்டினாலிறைவன்முத்தி.

இ-ள் அமரபக்ஷத்து அஷ்டமிதிதியின் ஆதிவாரங்கூடியநாளில் மட்டில்லாத இளநீரினால் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால் தேவேந்திர பதவியைப்பெறுவான் அல்லாமலும் நெருங்கிய சதுர்த்தசிதிதியில் தேனினாலும்-நெய்யினாலும்-எள்நெய்யினாலும்-கருப்பஞ்சாற்றினாலும்-பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால் சாயுச்சியபதவியடைவன்.()

படித்தகார்த்திகைமாதத்திற் பதினொன்றாந்திதிபூர்வத்திற்
கொடித்துநெய்யாட்டிற்கோடி கிளையுடன்கயிலைச்சேர்வன்
வடித்தமஞ்சனத்தாற்றன்கை வைத்தபூவனத்திற்பூவாற்
றொடுத்தமந்திரமூலத்தாற் சுத்தனாய்ப்பூசைசெய்வான்.

இ-ள். வாசமிகுக்க திருமஞ்சனத்தினாலும் தன்கையினால் வைத்துள்ள நந்தவனத்தி லெடுத்த புஷ்பங்களினாலும் செபிக்கின்ற மூலமந்திரத்தினாலும் இடைவிடாமல் நாள்தோறும் பரிசுத்தனாகிச் சிவபூசை செய்கின்றவன் நன்மைபொருந்திய கார்த்திகைமாதத்தில் பூர்வபக்ஷத்து ஏகாதசிதிதியில் நெய்யைக்கொடுத்துப் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்வித்தால் அவன்கோடிதலைமுறைகளிலுள்ள உறவினரோடும் கயிலாசத்திற் பொருந்திவாழ்வான்—எ-று. (௨௫)

பொன்பதின்கழஞ்சுவேதம்பொதிந்தவர்க்களித்தாலொக்குந்
தன்னொருக்கொருபூச்சாத்திற்சகத்திரமொன்றுக்கொன்று
துன்னியவலரிவில்வமதுமத்தந்தும்பைதர்ப்பை
வன்னிநாயுருவிநெய்தன் மற்றலைக்கதிகமாகும்.

இ-ள். சிவலிங்கத்தில் தன்னால் பயிர்செய்த ஒருவெள்ளெருக்கம்பூவைத்தரித்துப் பூசித்தால் பதின்கழஞ்சு சுவர்ணத்தை நான்குவேதங்களையுமறிந்த பிராமணர்கட்குத் தானஞ்செய்ததற்குச் சமானமாகும் அல்லாமலும் நெருங்கிய அலரி-வில்வம்-தேனொழுகுகின்ற கருஊமத்

தம்-தும்பை-தருப்பை-வன்னி-நாயுருவி - கருநெய்தல் ஆகிய இவைக ளைத்தரித்துப் பூசித்தால் ஒன்றுக்கொன்று ஆயிரம்பங்கதிகமாகும் இவற்றினு மதிகமாகும் அஃதியாதெனில்—எ-று. (உசு)

ஆயிரநெய்தற்பூவா லலங்கல்செய்தரனைச்சாத்தின்
மேயவாம்பரமமுத்திவிளைந்திடுமியாதும்பூவாந்
தீயவாமணமுநாறுந்திமலர்விழுப்பூமொட்டுத்
தூய்தலாப்பூ்பயிர்ப்பூத்துளைத்தபூவலர்ந்ததாகா.

இ-ள். ஆயிரம்கருநெய்தல் புஷ்பங்களால் மாலைதொடுத்துச் சிவலிங்கத்திற்குச்சாத்தினால் மேன்மைபொருந்திய மோக்ஷபதமுண்டாகும் ஆகையால் எல்லாப்புஷ்பங்களும் தரிக்கலாகும் அங்ஙனமென்னும் துர்க்கந்தம் வீசுகின்ற புஷ்பங்களும் அரும்புகளும் பரிசுத்தமில்லாத புஷ்பங்களும மயிரச்சிக்குண்டபுஷ்பங்களும் வண்டுகள்துளைத்தபுஷ்பங்களும் நன்றாய்மலர்ந்துவிட்ட புஷ்பங்களும் தரிக்கலாகாது—எ-று.

மலரின்றேலிலைகாய்புல்லு வனத்தினிற்பயிரின்பன்ன
மலதுநற்றியானநல்கா மல்விருள்மத்தஞ்சாத்தி
னலசிவலோகஞ்சேரவ னல்லநாயுருவிப்பன்னம்
பலனுளபதனுலாநாட் சாத்தினுற்பரனைச்சேர்வன்.

இ-ள் முற்சொல்லிய புஷ்பங்களில் ஒன்றாகிலுங் கிடையாதகாலத்தில் முன்சொன்ன புஷ்பச்செடிகளில் இலை-காய்-புல்லுகள்-நந்தவனத்திற் பயிராகியுள்ள பத்திரங்களுந்தரிக்கலாகும், அவைகளுங்கிடையாத காலத்தில் பாவனையாகத் தியானஞ்செய்தால் நன்மையாகும, அல்லாமலும் அர்த்தராத்திரியில் கருவூமத்தம் புஷ்பஞ்சாத்தினால் நன்மை பொருந்திய சிவலோகத்தைச்சேர்வான், அதுவுமல்லாமல் தரிசித்தவர்களுக்குச் சர்வபலனையுந் தருகின்ற சதுர்த்தசிதிதியில் நன்மையாகிய நாயுருவியின் பத்திரத்தைச்சாத்தினால் பரமசிவனுடையதிருவடிகளிற் பொருந்துவான்—எ-று. (உஅ)

நெய்யுங்குக்குலுவுந்தூபங்மிர்தொருமாதம்போற்றி
செய்யவெட்டயிலத்தீபஞ் செலுத்திற்சாலோகஞ்சேர்வன்
மெய்தாம்பசுவினெய்யால் விளக்கிடினொருகொழுந்துக்
குய்யவாயிரஞ்சதுர்த்த யுகஞ்சிவலோகம்வாழ்வன.

இ-ள். நெய்யுங் குங்கிலியமுங்கலந்து ஒருமாதபரியந்தம் பரமசிவனுக்குத் தூபத்திருப்பணிசெய்தாலும் செவ்விதாகிய எண்ணெய்வார்த்துத் தீபத்திருப்பணிசெய்தாலும் அவன் சாலோகபதவியைப் பெறுவான், அல்லாமலும் உண்மையாகியபசுநெய்யினால் விளக்குவைத்தால்

அவன் அதின்சுடர்க்கொழுந்து ஒவ்வொன்றிற்குப்பெருகுகின்ற ஆயிரஞ்சதுர்யுகபரியந்தஞ் சிவலோகத்தில்வாழ்வான்—எ.று, (௨௯)

ஈனரேயெனினுமீச னெண்வகைப்பத்தியுள்ளார்
வானவர்தலைவனவர் மறைவலோர்க்கில்லையாகி
லூனரேயாவரீச னுறையுமாலயஞ்செய்வாரை
மானிடரென்பார்க்கன்றே வைத்தநரகமெல்லாம்

இ-ள். பரமசிவனை எண்வகைப்பத்தியாற் பூசிக்கின்ற புண்ணியவான்கள் ஈனசாதியிற்பிறந்தவர்களானாலும் தேவர்களுக்கரசனாகியதேவேந்திரனாவார்கள், பிராமணஜாதியிற் பிறந்தவர்களுக்கும் அந்தப்பத்தியில்லாவிட்டால் அவர்களும்ஈனராவார்கள் அல்லாமலும் பரமசிவனைப் பிரதிஷ்டை பண்ணப்பட்ட சிவாலயத்திருப்பணிசெய்கின்றவர்களைச் சிவனென்றறியாமல் தம்மையொத்தமனிதர்களென்று சொல்லுகின்றவர்களுக்கல்லவோஎல்லாநரகங்களும்வைத்திருக்கின்றன-எ-று

எண்வகைப்பத்தியாவன, நந்தவனம்வைக்கல், அம்மலர்பறித்தல் அம்மலர்மாலைதொடுத்தல் சிவஸ்துதிசெய்தல், சிவாலயமலகிடல், சிவாலயமெழுகல, சிவாலயம்விளக்கிடல், சிவனடியார்களைப்பூசித்தல் என்பனவாம. (௩௰)

கண்ணினுக்கினியபண்டங் கடவுளுக்களித்தானென்னிற்
புண்ணியவுலகஞ்சேர்வன் பூசையையிழந்தநாளி
லண்ணலைக்கோயில்சூழ்ந்து பணியிலர்ச்சனையதாகு
முண்மையாங்குருவாற்பெற்றவுபதேசங்கொண்டேசெய்வான்.

இ-ள். கண்ணுக்கினிமையானபண்டத்தைப் பரமசிவனுக்குப்பிரீதியாககொடுத்தானானால் அவன் புண்ணியலோகத்திற் பொருந்துவான் அல்லாமலும் மெய்யஞ்ஞானகுருவினாற்பெற்றுள்ள உபதேசவாக்கியத்தைக்கொண்டு சிவபூசைசெய்கின்றவன் யாதோரிடையூறினால் சிவபூசையையிழந்தநாளில சிவாலயத்திற்குப்போய்ப்பரமசிவனைப்பிரதட்சணநமஸ்காரஞ்செய்து வணங்கினால் சிவபூசைசெய்ததுபோலாகும்-எ

புத்திவித்தாரந்தன்னாற் பொருகலிவசத்தாற்பூண்ட
வித்தையாற்பொருளிச்சிப்பால் வேதத்தின்வழியைவிட்டுக்
குத்திரமார்க்கங்காட்டுங் குரவனும்புதல்வன்றானும் .
•பத்திரநரகில்வீழ்வார் பன்னிரத்தியாயஞ்சான்று

இ-ள். புத்திவிரிவினாலும்போராடுகின்றதரித்திரவசத்தினாலும்-கற்றுள்ளகல்வியல்லமையினாலும், திரவியஇச்சையினாலும், வேதமார்க்கத்தைவிடுத்து வஞ்சகமார்க்கத்தைஉபதேசஞ்செய்கின்றகுருவும்,அவ்வு

பதேசத்தைக்கேட்கின்றசிஷனும் தப்பாமல்வருத்துகின்றநரகத்தில்வி ழுவார்கள் இதற்கு வேதத்தில் பன்னிரண்டாவது அத்தியாயம் சாட்சி யாகும்—எ-று. (கஉ)

பரம்பரையாசான்பாதம் பணிந்துபதேசங்கேட்பா
னரம்பரன்றனையாசானை யொருமுகமாகக்காண்பான்
கரந்திரண்டாகக்காணிற் கற்பமாநரகில்வீழ்வன்
வரம்புளஞானவானை மற்றிறையாகக்காண்பான்

இ-ள். பரம்பரையாகவரும் ஞானாசிரியருடைய திருவடிகளைவணங் கிப் பிரமோபதேசங்கேட்கின்ற சற்சிஷனானவன் ஞானமூர்த்தியானப ரமசிவனையும் சற்குருவையும் சமதிருஷ்டியாகக்கண்டு தரிசனஞ்செய் வான் அங்ஙனங்காணாது அஞ்ஞானவஞ்சகத்தினால் இரண்டுபடுத்திப் பேதமாகத்தரிசனஞ்செய்தால் கற்பகாலபரியந்தம் நரகத்தில்விழுவா ன் அங்ஙனம் சற்குருவைச் சிவமாகக்காண்கின்ற சற்சிஷன்வேதவரம் வையையுணர்ந்துள்ள ஞானவானையும் ராசதரிசனங்கண்டாலுண்டாகி ன்ற பயகம்பனாதிகளோடு நின்றுவழிபடுவான்-எ-று. (கங)

தேவர்கண்முனிவர்மண்ணோர் சித்தர்கள்செய்தலிங்கம்
பாவனைசுயம்புவாணம் படிகமேபஞ்சலோக
மாவகையிரதங்காந்த மணிபொன்பாஸிரசிதம்பொன்
யாவுநாற்சாதிக்காகு மிதரர்க்குமாதர்க்காகா

இ-ள். தேவர்கள்-முனிவர்கள்-மனிதர்கள்-சித்தர்களாகிய இவர்க ளாற்செய்தலிங்கங்களும்-பாவனைலிங்கம்-சுயம்புலிங்கம்-வாணலிங்கம்-படிகலிங்கம்-வகைவகையாகப் பஞ்சலோகங்களாற்செய்தலிங்கம்-ரசலி ங்கம்-காந்தலிங்கம்-நவரத்நங்களாற்செய்தலிங்கம்-வெள்ளிலிங்கம்- சு வர்ணலிங்கமாகிய இவைகள்அனைத்தும் பிரம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூ த்திரனென்னு நான்குசாதியிலுள்ளவர்களுக்கும் பூசிக்கலாகும்- இவர்க ளல்லாத அன்னியசாதியிற்பிறந்தவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பூசிக்க லாகாது-எ-று. (கச)

அரிவையர்க்கிதரசாதிக் கருணையிலிங்கமாகுந்
தெரிவையரிரதலிங்கந் தீண்டினுநரகஞ்சேர்வர்
விரிவுளபழுதுபின்னம் வெந்ததுவெடித்தலிங்கம்
பெரியநீர்வைப்பானின்மேற்பிணியினன்முடியானேவன்

இ-ள். ஸ்திரீகளும்-அன்னியசாதிகளும் திருவண்ணாமலையிலுண்டா னலிங்கத்தைப் பூசிக்கலாகும் ஸ்திரீகளானவர்கள் ரசலிங்கத்தைப்பரி சித்தாலும் நரகத்தில்விழுவார்கள் அதுவுமல்லாமல் இந்தவிதிமார்க்க ந்தெரிந்து பூசிக்கின்றவன் மிகுதியாகப்பழுதுபட்டலிங்கத்தையும் பி

ன்னமான லிங்கத்தையும், வெந்தலிங்கத்தையும் வெடித்தலிங்கத்தையு ம் ஒருக்காலுஞ்செலமாறுதந்திகூபம்-தடாகமுதலியவற்றில் விட்டுவிடு வான் அங்ஙனம்விட்டுவிடாமல் பூசிப்பானாகில் வியாதியினாலும் தரித் திரத்தினாலும் வருந்துவான்-எ-று. (௲௫)

மற்றுளதிசைகளாகா வடமுகமாயர்ச்சிப்பா
னுற்றுளவுபசாரத்தா லொருமையாற்பூசைசெய்வான்
றெற்றெனவழிந்தாள்பாவி தீண்டிற்பிரதிட்டைசெய்வான்
சொற்றுமாரிடலிங்கத்திற் சுயம்பிற்பிரதிட்டைவேண்டா.

இ-ள், சிவபூசைபண்ணுமிடத்து வடதிசைநோக்கியன்றி மற்றத்தி சைநோக்கியிருந்து பூசிக்கலாகாது தனக்குக்கிடைத்துள்ள உபகரண ங்களைக்கொண்டு மனவொருமையாற்பூசிக்கக்கடவன் ருதுவானஸ்திரீக ளும் பாதகர்களுந் தீண்டினால் பிரதிஷ்டைசெய்யக்கடவன்சொல்லுகி ன்ற ஆரிடலிங்கத்திற்கும் சுயம்புலிங்கத்திற்கும் பிரதிஷ்டைசெய்ய வேண்டியதில்லை-எ-று. (௲௬)

இரண்டுநாட்பூசைநீங்கி னிரட்டிமைச்செய்வான்மூன்று
மூரண்டுறுமதிகபூசை முயலுவான்மாதர்பக்கந்
திரண்டநாட்பூசைநீங்கிற் செழும்பிரதிட்டைசெய்வா
னரன்றனைக்கோயில்போற்றி யாசானுஞ்சாந்திசெய்வான்

இ-ள், இரண்டுநாளையபூசையை யாதோரிடையூறினாற்செய்யாதொ ழிந்தவன் நாலுநாளையபூசையைச்செய்யக்கடவன் மூன்றுநாளையபூசை முட்டுப்பட்டாலும் அவ்வகையேஇரட்டிப்பானபூசையைச்செய்யக்கட வன் அல்லாமலும் ஒருமாதம்ஒருபட்சம் அல்லதுஅநேகநாள்பூசைசெ ய்யாதிருந்தால் பிரமாசாரியரால் வளம்பொருந்தியபிரதிஷ்டைசெய்து சிவாலயத்திற்சென்று பரமசிவனைவணங்கிச் சாந்திசெய்துகொள்ளக்க டவன்—எ-று. (௲௭)

சத்தியிற்சத்தன்கூடித் தாய்தந்தையாகிநின்ற
வுத்தமவிரதலிங்க மொன்றொருபத்துக்கோடி
யத்தகைலிங்கமொக்கு மதனுழிபூசைசெய்தாற்
சத்துருநாசம்புத்தி முத்திகடாமேயுண்டாம்

இ-ள். சத்தியுஞ் சிவமுமொன்றாகக்கூடி உயிர்களுக்குமாதாவும் பி தாவுமாகிப்பிரகாசிக்கின்ற உத்தமமாகிய ஒருரசலிங்கமானது ஏனைய அந்தத்தகுதியாகிய பத்துக்கோடிலிங்கங்களுக்குச்சமானமாகும அல் லாமலும் அந்தலிங்கத்தினிடத்திற்பூசைசெய்தால் சத்துருநாசமும்வி வேகமும்-மோட்சமுமுண்டாகும்-எ-று. (௲௮

இரதலிங்கத்திற்பூசை யியற்றியதீர்த்தங்கொண்டோர்
கரவுளபிணியுஞ்சன்மக் களைகளுமிடருநீங்கும்
பிரமன்மான்மகவான்மற்றும் பெரும்பதமடையலாகும்
விரவுபாதங்களெல்லாங் கனல்படுவிறகைபோலும்

இ-ள். இரசலிங்கத்திற்பூசைசெய்த தீர்த்தத்தை உட்கொண்டவர்களுக்குச் சரீரத்தில்மறைந்துள்ள வியாதிகளும்பிறவிமூர்ச்சைகளும் சகலதுன்பங்களும் நீங்கிவிடும் அல்லாமலும் பிர்மபதமும் விஷ்ணுபதமும் தேவேந்திரபதமும் மற்றுமுண்டானபெரியபதங்களும் அடையலாகும் அனுதியாய்ச்சேர்ந்துள்ள மகாபாதகங்களெல்லாம அக்கினியாற்பற்றப்பட்ட விறகைப்போல் நாசமாய்விடும்—எ-று. (௩௬)

நீடியவிரதலிங்க நிந்தித்தார்நரகில்வீழ்வர்
நாடியபிறப்பில்வந்தா னாய்நரிபூனையோந்தி
வாடியகழுகுகாக்கை வடிவமாய்ப்புலையர்க்காளாய்க்
கோடியகூனரூமர் குருடராய்ப்பிறப்பரன்றே

இ-ள். பெருமைமிகுந்தரசலிங்கத்தைத் தூஷித்தபேர்கள் நரகத்தில்விழுவார்கள் அங்ஙனம்விழுந்தவர்கள் தெய்வகதியாய்க்குறித்த பிறவிக்கரையில் வந்தேறினால்-நாய்-நரி-பூனை-ஓணான்-மெலிவடைகின்ற-கழுகு-காக்கை-இவைகளினுருவெடுத்துப் பின்புமனிதராய்ப்பிறந்து சண்டாளர்க்கு அடிமைப்பட்டுப் பின்புவளைந்தகூனராகவும்ஊமராகவும் குருடராகவும் பிறப்பார்கள்-எ-று. (௩௭)

அந்தியகாலந்தன்னி லணிவயிற்றிரதநிற்கிற்
றந்தைதாய்பிறவுங்கோறலுஞ்சுராபானங்கோடல்
பந்தபாதகங்கணீங்கிப் பரிமேதயாகங்கோடி
யிந்தநற்பலனுமுண்டா யாவர்க்குமேலதாவன்

இ-ள். தேகாந்தத்தில் ஒருவனுடைய அழகியவயிற்றின்மேல் இரசலிங்கமிருக்குமானால் மாதாபிதாக்கள்முதலானவர்களைக்கொல்லுதல்-மதுபானஞ்செய்தல்-சென்மாந்தரத்திற்கட்டுப்பட்டபாதகங்களாகிய இவைகளெல்லாமநீங்கிக் கோடிஅசுவமேதயாகஞ்செய்த நல்லபலன்களுமுண்டாகி அவன் சகலமானபேர்களுக்குமேலானவனாகியிருப்பான்-எ-று

மனிதர்கண்முனிவர்தேவர் வகுத்தலிங்கத்துக்குண்டா
மினியநின்மாலியங்கள் மற்றைலிங்கத்துக்கில்லை
புனிதமாந்துளசியோடு பூசைநீருள்ளேகொண்டாற்

இ-ள். இனியவாகிய நிர்மாலியங்களானது மனிதர்களாலும் முனிவர்களாலும்-தேவர்களாலும் பிரதிஷ்டை பண்ணைப்பட்ட லிங்கங்களுக்கேயன்றி ஏனையலிங்கங்களுக்கு இல்லை ஆனபடியினால் பரிசுத்தமாகிய நிர்மால்ய துளசியோடு அபிஷேகதீர்த்தத்தையும் உட்கொண்டால் தனித்தனியே வருகின்ற பிறவித்துன்பங்களுக்கும் சாபங்களுக்கும் பிரமஞானமுண்டாகும்—எ-று. (சஉ)

தத்துவஞானியோகிதனக்காநின்மாலியங்கள்
பத்தரல்லாதாருண்டாற்பதினுலிந்திரர்கள்கால
மெத்தியநரகில்வீழ்வர்வேதத்தின்பூசைக்கில்லை
யத்தனின்மாலியங்களாகமபூசைக்குண்டாம்.

இ-ள் தத்துவஞானத்தையறிந்த பெரியோர்களும், யோகீஸ்வரர்களும, நிர்மால்யங்களை உட்கொள்ளலாகும் சிவனடியாரல்லாதபேர்கள் உட்கொண்டால பதினாலுதேவேந்திரர்களுடையகாலபரியந்தமும வருத்தமேலிடுகின்ற நரகத்தில்வீழ்வார்கள் அல்லாமலும் பரமசிவனை வேதவிதியாற்பூசிக்கும் பூஜாதிரவியங்கள்நிர்மாலியமல்ல சிவாகமவிதியாற்பூசிக்கும பூஜாதிரவியங்கள் நின்மாலியமென்று சொல்லப்படும்-எ-று

அந்தணரலாதமூவராகமம்விதித்தவாற்றால்
சிந்தையாற்சிற்பன்செய்தசிவலிங்கபூசைசெய்வா
ரிந்தமாதவத்தினோர்கட்கேதுமாலிங்கபேதம்
பந்தமில்திருநீற்றுண்மைபாக்கியஞ்செய்தார்கேண்மின்.

இ-ள் பிராமணர்களல்லாத மூன்றுசாதியாரும் சிவாகமங்களிற்சொல்லியவழியே சிற்பாசாரியன் மனப்பூர்வமாகச்செய்த சிவலிங்கத்தைப் பூசிப்பார்கள் இப்படிப்பட்ட சிவலிங்கத்தைப்பூசிக்கும்படியான தவத்தையுடையவர்களுக்கு மகாலிங்கபேதங்கள் ஏது இப்பால்பந்தத்தை கெடுக்கின்ற திருநீற்றின் மான்மியத்தைக்கேட்கும் பாக்கியஞ்செய்தவர்களெல்லாருங் கேளுங்கள்—எ-று. (சங)

சிவபூஜாவிதிச்சருக்க முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் - ௰உ - க்கு, திருவிருத்தம் - ௬உஎ.

உ

## பதின்மூன்றாவது

# விபூதிச்சருக்கம்.

—— 00* ——

வேறு.

விரதிவானப்பிரத்தன்வீட்டுளோன்பிரமசாரிக்
கரனுணாசெய்தவெண்ணீறவரவர்தமக்கேயாகும்
பரதவர்பாழிநீறுமியாகதித்ப்பயின்றநீறு
மரபின்மூவர்க்குமாகுமறையவர்தமக்குமாகும்.

இ-ள் சன்னியாசி வானப்பிரஸ்தன் கிரகஸ்தன் பிரமசாரியென்னும் நால்வருக்கும் பரமசிவன் அனுக்கிரகித்தபடி அவரவர்களால் விளைவிக்கப்பட்ட வெண்ணீறு அவர்களுக்கேயாகும் அல்லாமலும் மேலானதவத்தையுடைய அடியார்களது மடாலயத்தில விளைந்த கற்பநீறும் யாகசாலையில்விளைந்தநீறும் க்ஷத்திரியாதிய முக்குலத்தவர்களுந் தரிக்கலாகும் எடுத்தவுடனே பிராமணர்களுந் தரிக்கலாகும்—எ-று. (௧)

காட்டநன்னீறுங்கோயிற்கருதருநீறுநல்லோர்
வீட்டினிற்சமைந்தநீறுமெல்லியரிதரர்க்காகு
நாட்டுமுச்சந்திதோறுநாற்குலத்தவருநீற்றைத்
தீட்டிநீர்குழைத்துச்சாத்தச்செழுந்தவர்க்கென்றுமாகும்.

இ-ள் விறகினால்விளைந்த நல்ல நீறும்; சிவாலய மடப்பள்ளியில் விளைந்த நினைத்தற்கரிய திருநீறும், பெரியோர்களது மனையில் விளைந்த திருநீறும், ஸ்திரீகளும் அன்னியஜாதியோரும் தரிக்கலாகும் திருநீற்றை வடித்துக்கொண்டு சலத்திற்குழைத்து நான்கு குலத்திலுள்ளவர்களும் வளமைமிகுந்த தவத்தையுடையவர்களும விதிக்கப்பட்ட மூன்றுகாலங்களிலுந் தரிக்கலாகும்—எ-று. (௨)

மங்கையர்சந்நியாசிமறைவானப்பிரத்தன்றேவி
தங்கியபிரமசாரிசலத்தினிற்குழைக்கலாகா
வங்குபதேசமில்லானந்தநீர்குழைக்கலாகா
துங்கவெண்ணீற்றையள்ளித்துகிலினால்வடித்துக்கொள்வான்.

இ-ள் ஸ்திரீகள்-சந்நியாசி-பிராமணனாகிய வானப்பிரஸ்தன் அவன் மனைவி பொருந்திய பிரமசாரி சலத்திற்குழைத்துத் தரிக்கப்படாது, அல்லாமலும் ஆசிரிய ருபதேசமில்லாதவனும் அழகிய நீற்றைச் சலத்திற்குழைத்துத் தரிக்கப்படாது, பரிசுத்தமாகிய வெண்மைபொருந்

திய திருநீற்றைக் கைபினலுள்ள வஸ்திரத்தினல் வடித்தெடுத்துத் தரித்துக்கொள்ளுவான்—எ-று. (௩)

மறைகளாகமத்திற்சொன்னமாசிலாநீறுதன்னை
முறையினுத்தூளம்பண்ணிமூவிரலோன்றச்சாத்தி
னறைதருதீர்த்தமெல்லாமாடி நூறியாகஞ்செய்து
திறிபுவியடையத்தானஞ்செய்தவர்பலனையொக்கும்.

இ-ள் நான்குவேதங்களிலுஞ் சிவாகமங்களிலுஞ் சொல்லிய களங்கமில்லாத திருநீற்றை முறையாகச் சரீரமுழுதும் உத்தூளணஞ்செய்து மூன்றுவிரல் தோன்றும்படியாகத் தரித்தால் அதின்பலன் சொல்லப்பட்ட சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணி நூறுயாகங்கள்செய்து பிராமணர்களுக்குத் திரிலோகமுழுதுந் தானஞ்செய்தபேர் அடையப்பட்ட பலனுக்குச் சமானமாகும்—எ-று. (௪)

உச்சியேநெற்றிகண்டமுடம்பரைகால்கைபின்னர்
மெச்சிவெண்ணீறுமூன்றுவிரல்படச்சாத்திநின்று
நச்சியனயனமாலேநாரியோர்புலித்தோனவ்வி
யிச்சையாம்பரசுயானைத்தோலுமங்கிருக்குமன்றே.

இ-ள் உச்சி-நெற்றி-கழுத்து-உடம்பிற் பாதியான இடுப்பு-கால்-கை முதலிய மற்றைய ஸ்தானங்களிலும் இந்தவிபூதியே சகலவினையையுந் தீர்க்குமருந்தென்று உண்மையாகத்தியானித்து மூன்றுவிரல்பொருந்தத்தரித்தால் அவனிடத்தில் மூன்றாம்பிறையும், விஷமும், மூன்றுகண்ணும், கொன்றைமாலையும், ஒருபாகத்திற்பெண்ணும், புலித்தோலும், கலைமானும், இச்சிக்கப்படுகின்ற மழுவும், யானைத்தோலும், நீங்காமலிருக்கும்—எ-று. இங்ஙனங்கூறினமையால் அவனே சிவனுயிருப்பனென்பதாம். (௫)

பொட்டுடன்சதுரஞ்சூலம் புரிந்திடலாகாநீற்றின்
மட்டவிழ்சந்தனுதி மண்ணிடலாகாநீற்றை
யிட்டவன்றன்னைநிந்தை யெண்ணினேனுடனீபட்டோனுந்
திட்டமாநரகமெல்லாஞ் சிவனுணைதிறிவரன்றே.

இ-ள் திருநீற்றை நெற்றியிற்பொட்டாகவும், சதுரமாகவும், சூலம் போலவுந் தரிக்கப்படாது அல்லாமலும் திருநீற்றினிடத்தில் வாசனை வீசுகின்ற சந்தனமுதலானதுகளையும் திருமண்ணையுந் தரிக்கப்படாது திருநீறு தரித்திருக்கின்றவனைத் தூஷிக்க வெண்ணினவனும் அவனேடுடன்பட்டிருந்தவனும் திட்டமாகிய எல்லா நரகங்களிலும் சிவனுடைய திருவாணைப்படிக்குத் திரிவார்கள்—எ-று. (௬)

அந்தணாளர்தம்மை யரியரனுடையாளத்தைச்
சுந்தரத்தோளிற்காய்ச்சிச் சுட்டிடிற்சூடுண்டானு
முந்தவேசுட்டான்றானு முழுங்கெரிநரகில்வீழ்வ
ரிந்நாட்டவரையோட்டு மிராஜனேராசனாவான்.

இ-ள் விஷ்ணுவினுடையாளமான சங்குசக்கரத்தையும், சிவனுடையாளமான சூலத்தையும், அக்கினியிற் காயவைத்தெரித்துப் பிராமணர்களுடைய அழகியதோள்களிற்சுட்டால், அதற்குடன்பட்டுச் சூடுண்ட சீஷனும் முதன்மையாயிருந்து சுட்ட ஆசிரியனும் சத்திக்கின்ற எரிவாய் நரகத்தில் விழுவார்கள் அங்ஙனஞ்செய்தவர்களை இந்நாட்டைவிட்டுத் துரத்துகின்ற ராசனே ராசனாவான். (எ)

வேறு.

கவுதமனிந்தைசெய்த காதன்மறையோரைத்
தவரவர்சபித்தபடி தாழ்வுறுமண்ணிட்டுச்
சிவனையவனீற்றையருள் சேர்ந்தவடியாரைப்
புவனிதனினிந்தைசெய்து போம்நரகிலென்றார்.

இ-ள் முற்காலத்தில் கௌதமரிஷியைத்தூஷித்த காமிய புத்தியையுடைய பிராமணர்களைப்பார்த்து அந்தக்கௌதமரிஷி சாபமிட்டார், அதையாவன, இழிவுபொருந்திய மண்ணைத்தரித்துப் பரமசிவனையும் அவனது விபூதியையும் அவனருள்பெற்ற அடியார்களையும் பூலோகத்திற் றூஷித்து அதனால் எப்போதுந்தொலையாத நரகத்திற்போகக் கடவீர்களென்றுசொன்னார்—எ-று. (அ)

அப்படிசபித்தமையினன்றுமுதலர்கத்
தப்பிலிகணிந்தைசெய்வர் தூமறையைநம்பி
முப்புவனமும்புனையு மூவரோடுதேவ
ரெப்புவனமும்புனையு மெங்கடிருநீறே.

இ-ள் அங்ஙனம் கௌதமரிஷியானவர் சாபமிட்டபடியால் அந்நாண்முதலாக விவேகமில்லாத வைஷ்ணவர்கள் தூஷிப்பார்கள் அனால் பரிசுத்தமாகிய வேதவாக்கியத்தைநம்பி எங்களுடைய திருநீற்றைத் திரிலோகத்திலுள்ளவர்களுந் தரிப்பார்கள் மும்மூர்த்திகள் முதலான தேவர்களும் எந்தவுலகத்திலுள்ளவர்களுந் தரிப்பார்கள்—எ-று. (௯)

எண்டிசைகள்கீழுலக மேலுலகமெங்கு
மண்டுமறையன்றியில் வழங்கிலதுவேத
முண்டுதிருநீறதுயிர்க்குறுதிமுத்தி
விண்டெரும்வேறதுபோய் வேறதுபொய்யென்னும்.

இ-ள். எட்டுத்திசைகளிலும் கீழுலகத்திலும் மேலுலகத்திலும் எந்தவுலகத்திலு நிறைந்தவேதஞ் சொன்னபொருளையல்லாமல் வேறொன்றால் மோக்ஷமுண்டென்பது குற்றமாகும் திருநீறே எந்தகாலத்திலும் உள்ளது அதுவே உயிர்க்குறுதியான மோக்ஷபதத்தைக் கொடுக்கும் அதுவல்லாத மற்றவைகளெல்லாம் மாயை மாயையென்று சொல்லும் —எ-று (௰)

உண்டியியல்பொங்குமுள தாகுமஃதொப்ப
வெண்டிசையினோருமுயல் பாயணிவர்நீற்றைப்
புண்டரமுமக்கமு மகிழ்ந்துபுனைவார்பாற்
பெண்டுணையுடன்பரமர்பின்றிரிவரன்றே

இ-ள் உடற்குறுதியாகப்புசிக்கின்ற உணவின்தன்மை எந்தவிடத்திலும் சுபாவமாகஇருக்கின்றது அதுபோல உயிர்க்குறுதியாகத் தரிக்கின்ற திருநீற்றையும் எட்டுத்திசையிலுள்ளயாவர்களுஞ் சுபாவமாகத்தரிப்பார்கள் அதுவுமல்லாமல் மனமகிழ்ந்து திரிபுண்டரமும் ருத்திராக்ஷமணியுந் தரிக்கின்றவர்களைவிட்டு நீங்காமல் பரமசிவனானவர்உமையவளோடும் அவர்களபின்னேதிரிவார்—எ-று. (௰௧)

முத்தியெனுமங்கையை முயன்றுவசமாக்கி
லொத்தமணிமந்திர மருந்துகளுமுண்டா
மத்தகைதனைப்பகர் வமஞ்சபதநீறு
சத்தரணிகண்டிகை தரிக்கில்வசமாவாள்

இ-ள். முத்தியென்கிறஸ்திரீயை முயற்சிசெய்து வசப்படுத்தவேண்டுமாகில் அதற்குத்தகுந்த மணிமந்திரஅவுஷதங்களுமுண்டு அவையாவையெனில் அதையுஞ்சொல்லுகின்றோம் பஞ்சாட்சரமும் விபூதியும் சத்துக்கள்தரிக்கின்ற உருத்திராட்சகண்டிகையுமாம் இதுகளால பேரின்பத்தைத்தருகின்ற மோட்சமங்கையானவள்வசப்படுவாள்—எ-று. ()

நீற்றினொடுகண்டிகை நினைந்துபுனைவார்தம்
பேற்றினளவென்னவர் பிறந்ததுவேசென்மம்
போற்றியவருக்குதவு பூசையதுபூசை
யாற்றலுளநற்கொடையு மேகொடையதாமால்

இ-ள். விபூதியுடனே உருத்திராட்சகண்டிகையையும் இதுவேசிவமுத்திதாவென்று தியானஞ்செய்து தரிக்கின்றவர்கள் பெற்றபேற்றுக்கு என்ன அளவைசொல்லுவோம் அவர்களெடுத்தஜென்மமே ஜென்மம் அவர்களைவணங்கி அவர்களைப்பூசிக்கின்ற பூசையேபூசை அவர்களுக்குக் கொடுக்கின்ற உயிர்க்குறுதியான நல்லதியாகமேதியாகமாகும்—எ-று. ()

நீறுபுனைவார்வினையை நீறுசெய்தலாலே
வீறுதனிநாமமது நீறெனவிளம்புஞ்
சீறுநாகத்துயிர் செலாவகைமருந்தாய்க்
கூறுடையதேவிகையின் முன்னிறைகொடுத்தார்

இ-ள். விபூதியானது தன்னைத்தரிக்கின்றவர்களுடைய சகலவினைகளையும் நீறாகச்செய்தலினால் அதற்குப்பரிசுத்தமான ஒப்பற்றநாமமானது திருநீறென்று வேதஞ்சொல்லும் அந்தத்திருநீற்றை ஆன்மகோடிகள்சீறுகின்ற நரகத்தில்விழாதபடிக்குச் செனனவியாதிக்குப்பூர்வத்தில் பரமசிவனானவர் தமதுஇடப்பாகத்தையுடைய உமையவள்கையில்அவுஷதமாகக்கொடுத்தருளினார்—எ-று. (௰௪)

நோயகலும்வந்தவினை நுந்தும்வினையெல்லாம்
போயகலும்வெண்பொடி புனைந்தவுடனேமும்
பேயகலும்வஞ்சக பிறப்பிறப்பின்
றுயகலுநன்மைக டழைத்துவருமன்றே

இ-ள். வெண்மைபொருந்திய விபூதியைத்தரித்தவுடன்சரீரசம்பந்தமான சகலவியாதிகளுநீங்கும் சீவசம்பந்தமாய்ச் சரீரமெடுத்ததுமுதலுண்டானவினைகளும் மேல்வரும்வினைகளுநீங்கும் மனோசம்பந்தமாய் முன்னமேநானென்று தன்னையேமதித்திருந்த சகலபேய்களுநீங்கும் அல்லாமலும்-பிறப்பும்-இறப்பும்இல்லாமல்-நீங்கிப்போம்ஞானமானது மேன்மேலாகத்தழைத்தோங்குப்—எ-று. (௰௫)

தீர்த்தமுமிதிற்பெரிய தீர்த்தமவையில்லை
யேத்தரியசெல்வமுமிதிற்பெரியதில்லை
பேர்த்துரைமருந்துகளிதிற்பெரியதில்லை
தீர்த்தவருபண்டிதருமிதிற்றதிகரில்லை

இ-ள். சகலதீர்த்தங்களிலும் இந்தவிபூதியிற்பெரிதான தீர்த்தங்களில்லை துதிக்கப்பட்ட அரியசெல்வங்களிலும் இதிற்பெரிதானசெல்வங்களில்லை வேறுவேறாகச்சொல்லுகின்ற ஔஷதங்களிலும் இதிற்பெரிதானஔஷதங்களில்லை சகலவியாதிகளையுந் தீர்க்கவருகின்ற வயித்தியர்களிலும் இதிற்பெரிதானவயித்தியர்களில்லை...எ-று, (௰௬)

சந்தவயனரணர் பராசரர்வசிட்டர்
கந்தரனவேதிசெய மாமுனிகணந்தி
தந்தமிலுணர்ந்துதரு மந்தவமெனங்களும்
வெந்தபொடிநீங்கினவை வீணென்றுரைத்தார்

இ-ள். வேதகர்த்தாவாகிய பிர்ம்மா-விஷ்ணு-பராசர்-வசிஷ்டர் கந்தரையொத்த பிராமணர்கள் செயம்பொருந்திய மகாமுனிவர்கள்நந்திஸ்

வரர் இவர்களெல்லாம் தங்கள்தங்களில்-ஆலோசித்தறிந்து தருமந்தவமுதலானவைகளுக்கும் விபூதியொன்றுஇல்லாவிட்டால்அவைகள்விருதாவென்றுசொன்னார்கள்—எ-று. (௰எ)

வேகரிகளோமுறகவெந்தது சிவப்பு
மாகரிதுவெண்மையுள தத்தனையுமுத்திப்
போகமுதலானதுபேர்பூதியெனவைத்தா
ரேகவுருன்மேவிணிரம்கையெனவைத்தார்

இ-ள். நன்றாய் வேகாதவிபூதியும், வெந்துகரிந்தவிபூதியும், சிவந்தவிபூதியும்-தரிக்கலாகாது தவளநிறமாயுள்ள விபூதிகளெவ்வளவுண்டோ அவ்வளவுந்தரிக்கலாகும் அங்ஙனம் தரிப்பவர்களுக்கு மோட்சமும்- சர்வஐயிஸ்வரியமும் உண்டாதலினால்அதற்குப்பெயர்விபூதியென்றுவைத்தார்கள் அல்லாமலும் ஏகமாகிய திருவருளுண்டாதலினால் இரக்ஷையென்றுவைத்தார்கள்—எ-று. (௰அ)

விபூதிச்சருக்கமுற்றுப்பெற்றது.

ஆகசருக்கம் - ௰௩ - க்கு, திருவிருத்தம் - ௩௪௫.

---

பதினான்காவது

## உருத்திராக்ஷச்சருக்கம்.

---

திரிபுரனெனும்பெயர் திருந்தசுரனாலே
யரியயன்முதற்சுர ரழிந்துதுயரெய்தி
வரிபுலியுரிபுனையும் வானவனைநோக்கி
யுரியதவமாவருட மாயிரமுமைந்தார்

இ-ள். திரிபுரனென்று வழங்குகின்ற பெயரையுடைய ஒருராக்ஷசனால் விஷ்ணு பிரம்மா முதலான சகலதேவர்களும் மனவலிமை யழிந்து துன்பத்தையடைந்து வரிபரந்தபுலித்தோலை ஆடையாகத் தரித்தருளிய பரமசிவனைக்குறித்து ஆயிரந்தேவவருஷபரியந்தம்சிவதரிசனமுண்டாதற்குரிமையான பெருமைபொருந்திய தவத்தைச் செய்தார்கள—எ-று. (க)

வன்றிரிபுரன்புரியு[illegible] வாதைதனைநோக்கி
யன்றுவிடைமே[illegible]னு மம்பிகையும்வந்து

வன்றிகன்முராரியயன்வானவரைநோக்கி
மென்றுளிகண்முக்கணினும் விழ்ந்ததெனைமீடாழ்த்த

இ-ள். அங்ஙனம் அவர்களெல்லாருந் தவஞ்செய்தகாலத்தில் பரம சிவனானவர் கொடியதிரிபுரனானவன் செய்கின்றவருத்தத்தைக்கண்டுஉமையவளோடும் ரிஷபவாகனத்தின்மே லெழுந்தருளிவந்து மகாபலத்தையுடைய விஷ்ணு-பிரம்மா-முதலான சகலதேவர்களையும்பார்த்து அவர்கள்படுந் துன்பத்திற்குச் சகிக்கப்படாமலும் எம்மை ரட்சிக்கும்படியாகவும் பரமசிவனுடைய மூன்றுகண்களிலுமிருந்து மிருதுவாகிய நீர்த்துளிகள் விழுந்தன—எ-று (உ)

உருத்திரன்விழித்துளிகளேயுருத்திராக்கந்
திருத்திரவிசந்திரன்றிருந்துகனற்கண்ணி
லருத்தமிகுபேதயிரண்டாறுபதினாறு
பொருத்தொருபதென்பர்நிறம்பொன்றவளங்காரே

இ-ள். பரமசிவனது மூன்றுகண்களிலு மிருந்துண்டான நீர்த்துளிகளே உருத்திராட்சமணிகளாகும் அல்லாமலும் திருத்தமாகிய சூரியநேத்திரத்திலுண்டான செல்வமிகுத்தமணிகள் பன்னிரண்டு பேதமுடையதென்றும் சுவர்ணநிறமென்றும் சந்திரநேத்திரத்திலுண்டான மணிகள் பதினாறுபேதமுடையதென்றும் வெண்ணிறமென்றும் பிரகாசிக்கின்ற அக்கினிநேத்திரத்திலுண்டானமணிகள் பொருத்தமாகிய பத்துப்பேதமுடையதென்றும் கருநிறமென்றுஞ்சொல்லுவார்கள-எ-று,

வெண்மைமறையோருரியமவேந்துரிமைபொன்மை
வன்மைவணிகர்க்குமுன்வகுத்ததவளத்தி
லுண்மையுளசூத்திரருக்குள்ளதுகறுப்பே
முன்மணிகள்காய்க்குமரமுப்பதுடனெட்டே

இ-ள். பிராமணர்களுக்குரிமையானது வெண்ணிறமணிகளும்,க்ஷத்திரியர்களுக்குரிமையானது பொன்னிறமணிகளும்வளமைபொருந்திய வைசியர்களுக்குரிமையானது சொல்லப்பட்டவெண்ணிறமணிகளும், உண்மையுடையசூத்திரர்களுக்குரிமையானது கருநிறமணிகளுமாம் அல்லாமலும் அப்படிப்பட்டமுட்களையுடைய ருத்திராட்சமணிகள் காய்க்கின்றமரங்களும் முப்பத்தெட்டுவிதங்களாகும்-எ-று. (௩)

ஒருமுகமிரண்டுமுகமுஞ்சிவசொருபு
மருவுமறையோர்பசுவதைத்தயுரிமாறு
மருமையுளமூன்றுமுகமக்கினிசொருபம்
பெருகவணியிற்றெருகுதி பெண்கள்பழிமாறும்

இ-ள். ஒருமுகமணிகளும் இரண்டுமுக மணிகளுஞ்சிவஸ்ருபமாகும் அந்தமணிகளைத் தரித்தால் பொருந்திய பிராமணர்களையும் பசுக்களையும் கொன்ற பாதகங்கணீங்கும் அருமையாகிய - மூன்றுமுகமணிகள் அக்கினிஸ்வரூபமாகும் அந்தமணிகளை யதிகமாகத் தரித்தால் அனேகஸ்திரீகளை வதைசெய்தபாதகங்கணீங்கும் —எ-று. (௫)

நாலுமுகநான்முகவனாவதைகள்மாறங்
காலவனலஞ்சுமுகமூண்ட வினைகாலும்
வேலனுருவாறுமுகம்வேதிவதைமாறு
மேலவெழுசேடனுறுவேமகளவேகும்

இ-ள். நாலுமுகமுள்ள மணிகள் பிரமாவினுடைய ஸ்வரூபம் அந்தமணிகளைத்தரித்தால் மனிதர்களைவதைசெய்த பாதகங்கணீங்கும் ஐந்துமுகமுள்ளமணிகள் காலாக்கினிஸ்வரூபம், அந்தமணிகளைத்தரித்தால் சரீரத்தின்மூண்டுள்ள சகலவியாதிகணீங்கும், ஆறுமுகமுள்ளமணிகள் சுப்பிரமணியஸ்வரூபம், அந்தமணிகளைத்தரித்தால் பிரம்மஹத்தி மகாபாதகங்கணீங்கும், உயர்வாகிய ஏழுமுகமுள்ளமணிகள் ஆதிசேஷஸ்வரூபம் அந்தமணிகளைத்தரித்தால் பொன்களவினாலுண்டான பாதகங்கணீங்கும்-எ-று. (௬)

அட்டமுகமானைமுகனுறுகுருதாரந்
தொட்டதறுமொன்பதுமுகம்வடுகன்மேனி
யெட்டுமொன்முத்தியொடுபுத்தியிடக்கையிற்
கட்டிடுருகோடிமறையோர்வதைகள்காலும்

இ-ள். எட்டுமுகமுள்ளமணிகள்-கணபதிஸ்வரூபம், அந்தமணிகளைத்தரித்தால் குருதாரத்தைத்தீண்டினபழிநீங்கும், ஒன்பதுமுகமுள்ள மணிகள்-வைரவஸ்வரூபம்-அந்தமணிகளைத்தரித்தால்சிவசாயுச்சியமும்விவேகமுமுண்டாகும்-அதுகளை இடக்கரத்தில்மாலையாககோத்துத் தரித்தால் ஒருகோடிபிராமணர்களைக்கொன்ற பாதகங்களநீங்கும்-எ-று

பத்துமுகமாயவர்பசாசுமிருகம்போ
மத்தர்பதினொன்றுமுகம்யாகபலனெய்து
முத்திரவியீராறுமுகத்தையுடல்பூணின்
மெத்தவளயாகபலன்மெய்க்கொலைகளேகும்

இ-ள் பத்துமுகமுள்ளமணிகள்-விஷ்ணுஸ்வரூபம், அந்தமணிகளைத்தரித்தால் பைசாசவாதையும்-மிருகவாதையுநீங்கும், பதினொருமுகமுள்ளமணிகள் சிவஸ்வரூபம், அந்தமணிகளைத்தரித்தால்யாகஞ்செய்தபலனும் மோட்சமுமுண்டாகும் பன்னிரண்டுமுகமுள்ள மணிகள் சூரியஸ்வரூபம், அந்தமணிகளைத்தரித்தால் அளவில்லாதயாகபலனுமுண்டாகி அவயவபங்கம்பண்ணினபாதகங்களுநீங்கும்-எ-று. (௮)

கந்தர்பதின்மூன்றுமுகமுந்துகனபோகஞ்
சிந்தனையிலெட்டுவகைசித்திகளுமுண்டாந்
தந்தைதமர்தாய்குழவிதம்பிதமையன்பெண்
வந்தகருமாய்த்தவதைமாறுமதுபூணில்

இ-ள். பதின்மூன்றுமுகமுள்ளமணிகள் சுப்பிரமணியஸ்வரூபம் அந்தமணிகளைத்தரித்தால் கனம்பொருந்திய ஐஸ்வரியமும்யாதொருகலக்கமில்லாத எண்வகைச்சித்திகளுமுண்டாகும் அல்லாமலும்-பிதாவையும்-சுற்றத்தாரையும்-மாதாவையும்-குழந்தையையும்-தம்பியையும் - தமையனையும்-பெண்ணையும்பொருந்திய-கருவையும் வதைத்துக் கொலை செய்தபாதகங்களெல்லாம்-நீங்கும்-எ-று. (௯)

மிக்கபதின்மூன்றினுக்கு மேலுமுகமில்லை
தக்கதலையொன்றுதலைமாலையுநாலொன்பா
னக்கலையிரட்டிகளமாங்குரநாற்றெட்டாங்
கைக்கணிகள்பன்னிருவர்காணகலமைம்பான்

இ-ள். உயர்வாகிய பதின்மூன்றுமுகமுள்ள மணிகளுக்குமேற்பட்ட மணிகளில்லை-அல்லாமலும் தகுதியாகியசிகையினிடத்தில் ஒருமணியும், சிரமாலைமுப்பத்தாறுமணியும், கழுத்திற்குஇருபத்திரண்டு மணியும் மார்பிற்கு நாற்றெட்டுமணியும், கைகளுக்குப்பன்னிரண்டுமணியும் வாகுமணி ஐம்பதுமணியுந்தரிக்கலாகும்-எ-று. (௰)

ஆயிரமியாகபலனைப்படிதரிக்கிற்
றூயமணியோர்பொதிசுமைகழுதையொன்று
போயடவிவிந்தமலைபுக்குயிரிழந்து
மேயகயிலாயமலைமேவியதுகற்பம்.

இ-ள். அங்ஙனந்தரித்தால் தரித்தவர்களுக்கு ஆயிரம்யாகங்கள்செய்தபலனுண்டாகும் முற்காலத்தில் பரிசுத்தமாகியவொப்பற்ற ஒரு உருத்திராட்சப்பொதியைச்சுமந்த ஒருகழுதையானது ஆரண்ணியத்திற்சென்று விந்தபர்வதத்தைச்சேர்ந்து பிராணனைவிட்டு மேன்மைபொருந்திய கயிலாசகிரியில் கற்பகாலபரியந்தம் வசித்திருந்தது-எ-று. (௰௧)

வெள்ளிகனகந்தரளம்வித்துருமமாதி
கள்ளிடைநன்றுமுகமொன்றுவதுநன்று
மெள்ளரியநற்குலமுமெக்குலமுமென்றுங்
கொள்ளுவதுநன்றுமினிஞ்சுபதங்கூறி

இ-ள். இரசிதம்-சுவர்ணம்-முத்து-பவளம்-முதலானவைகளை இடை இடையே இட்டு மணிகளின்முகத்தோடு முகம்பொருந்தக் கோத்துத் தரிப்பது நன்றாகும் அதுவுமல்லாமல் இகழ்ச்சியில்லாத நல்லகுலத்திற் பிறந்தவர்களும் இழிவான எந்தக்குலத்திற்பிறந்தவர்களும் பஞ்சா

ஸ்நாநத்தியானஞ்செய்து எப்போதுந்தரிப்பது நன்மையாகும்—எ-று.

புண்ணியமிபற்றிலிறைபூசைநியமத்தி
னென்றுதவமாதிகளினண்ணினையைநன்று
மெண்ணரியபாதகருமீனவுயிரியாவுங்
கண்மணியணிந்தவர்கள்கண்பெறுவரன்றே

இ-ள். ஒருபுண்ணியங்களைச் செய்கின்ற காலத்திலும் சிவபூசை நியமங்களைச் செய்கின்ற காலத்திலும் பொருந்தியதவங்களைச் செய்கின்ற காலத்திலும் அக்க ருத்திராட்சமணிகளைத்தரித்தால்-நன்மையாகும் அல்லாமலும் அளவிறந்த பாதகங்களைச் செய்தவர்களும் இழிவையுடைய எல்லாவுயிர்களும் ருத்திராட்சமணியைத் தரித்தால் ஞானக்கண்ணைப் பெறுவார்கள்—எ-று. (௰௩)

மூழ்கினுமலங்கள்சலம்வீழ்கினுமுலைக்கண்
மாழ்கினுமருந்தினும்வருந்தினுமுறக்கஞ்
சூழ்கினுமொர்சூதகத்தொடக்கினுமிறைகட்
டாழ்வடமணிந்திடுவர்சத்தியதவத்தோர்

இ-ள். உண்மையான தவத்தையுடைய பெரியோர்கள் ஸ்நானஞ்செய்யும்போதும் மலவிசர்க்கஞ் சலவிசர்க்கஞ் செய்யும்போதும் ஸ்திரீகளுடைய முலையினிடத்துமுயங்கி மயங்கும்போதும் புசிக்கும்போதும் வருந்தும்போதும் உறங்கும்போதும் ஒரு சூதகங்கள் தொடர்ந்தபோதும் உருத்திராட்சத் தாழ்வடத்தைத்தரித்திருப்பார்கள்—எ-று()

சகத்திரமணித்திரள்கள்சார்முனிவர்கண்
மகத்துவமுரைப்பரிதுவண்சிரசுகாது
தொகுத்தகளமார்பிருகைதோளிருமணிகட்
டகத்தணியினக்கவடமுக்கணுளதாகும்

இ-ள்-இறந்துபோகுமுன் திரட்சியாகிய ஆயிரமணிகளைத் தரிப்பவர்களுடைய மகிமையையளவிட்டுச் சொல்வதரிதாகும் அல்லாமலும் உருத்திராட்சமாலைகளை வளம்பொருந்திய சிரசிலும் காதுகளிலும் சொல்லுகின்ற கண்டத்திலும் மாரிபிலும் இரண்டுகைகளிலும் தோள்களிலும் இரண்டுமணிக்கட்டினிடத்திலும் தரித்தால் அவன் மூன்று கண்களையுடைய சிவஸ்வரூபமாவான்—எ-று. (௰௫)

அக்கவடமஞ்சுபதமே[illegible]யணிவாரேன்
முக்கணுடையானவராமோதிவருமன்றிப்
புக்கவிடமுத்திதரிசித்தவர்கள்புத்தேள்
குக்கலணியிற்பிற[illegible]குன்றுமருளொன்றும்

இ-ள். உருத்திராட்சமாலையைப் பஞ்சாட்சரத்தியானஞ்செய்து தரிப்பார்களேயானால் அங்ஙனம் தரிப்பவர்களைவிட்டுநீங்காமல் திரிநேத்திரத்தையுடைய பரமசிவனானவர் கூடவேயிருப்பர் அல்லாமலும் அவர்கள்சென்றவிடமெல்லாம் சிதானந்தமாகிய - மோட்சஸ்தலமாகும் அவர்களைத் தெரிசித்தவர்களெல்லாரும் தேவர்களாவார்கள் அதுவுமல்லாமல் நாயானது தரித்தாலும் அதற்கும் பிறவித்துவடநீங்கும் ஞானமுமுண்டாகும்—எ-று. (௰௬)

நாதரனவர்த்தியைமுனமக்கதையுரைத்தார்
காதலினிகழ்ந்துவிழிகால்செவிகரங்கள்
பேதமெனவாடியமுதாடொழுதபின்னு
மீதறிகிலார்கதிகளேதிலுருவென்றாள்

இ-ள்- இந்த நன்மையுள்ள ருத்திராக்ஷமகிமைச் சரித்திரத்தை நாதனென்பவரானவர் அனவர்த்தியையென்னுந் தேவியாருக்குத்திருவுளம்பற்றினார் அதுகேட்டு அனவர்த்தியை,யம்மைபாரும் அன்பினால்மனங்கனிந் துருகிச்சகலவுயிர்களும் கண்கள்கால்கள் செவிகள் கை கன்முதலிய அவயவபேதமேயல்லாமல் அறிவினால் அபேதமாயிருந்தும் இவ்வகைச் சரித்திரத்தை யறிந்து முத்தியடையாமல் அஞ்ஞானத்திலழுந்திப் போகின்றதேயென்று வாட்டமுற்றழுதாள் அங்ஙனமழுதபின் மகிழ்ந்துதிரும்பவும் வணங்கிநின்று இந்தமான்மியத்தையறியாதஜீவர்கள் எந்தவிதத்தினும் கதிகளைச் சேர்வார்களென்றுவிண்ணப்பஞ்செய்தாள்—எ-று, (௰௭)

உருத்திராட்சச்சருக்கமுற்றுப்பெற்றது.

ஆ சருக்கம்-௰௪-க்கு-திருவிருத்தம் ௩௯௨.

பதினைந்தாவது

# சிவகீர்த்திச்சருக்கம்

வேறு.

மதுமலர்க்குழலாய்கலியுகவலியால் வரமுத்திபெறுவதரிது
பதிகளிலொழிந்துபலிப்பிலையனிம்பழமலையல்லதுபலியா
முதலொருவருடமிருக்கவக்கதையை மொழிந்திடக்கேட்டிடத்துதி
துதிகளைக்கேட்கவந்தியகாலந்துதித்திடமுத்தியையடைவார்

இ-ள், தேனொழுகுகின்ற புஷ்பமாலிகையணிந்த அளகபாரத்தையுடையஅனவர்த்தியையே நீகேட்பாயாக, இந்தக்கலியுகவலிமையினால் சகலசீவராசிகளும் இம்மைக்குவேண்டிய வரங்களையும் மறுமைக்கு

முத்தியையும் பெறுவது அருமையாகும் ஆயினும் அவைகள் விசேடமாகிய ஸ்தலங்களிலல்லாமல்வேறொருவிதத்திலுஞ்சித்திக்காது அந்தஸ்தலங்களிலும் விருத்தகிரிஸ்தலத்திலல்லாமல்வேறொருஸ்தலத்திலுஞ்சித்திக்காது ஆகலால் அந்தஸ்தலத்தில்சடநீக்குமுன்பாகவொருவருஷபரியந்தம் வசித்தலாலும் அந்த ஸ்தலபுராணத்தைப் படித்தலாலும் படிக்கக்கேட்டலாலும் துதித்தலாலும்- ஸ்துதிக்கக்கேட்டலாலும் தேகாந்தத்தில் துதிசெய்தலாலும் மோட்சத்தைபெறுவார்கள்—எ-று. (௧)

அரகரசம்புசங்கரமகேசவம்பிகைபாகமாதேவ
புரகரநீலகண்டவென்றரைக்கிற்புனிற்றிளங்கன்றினுக்காக்கள்
வருவதேபோலச்சிவன்விரைந்தோடிவந்திடுமரத்தின்மேற்பறவைக்,
கொருகலேபோலப்பாதகமனைத்தும்மோடிடும்வீடுசென்றடைவார்.

இ-ள், யாதாமொருவர் அரகரா சம்பு சங்கரா மகேசா அம்பிகைபாகா-மகாதேவா - புராந்தகா-நீலகண்டா-என்று-துதிசெய்தால் - மிகுந்த இளங்கன்றுகளுக் கிரங்கிவருகின்ற, பசுக்களைப்போலப் பரமசிவனும் அதிசீக்கிரத்தில வந்திரட்சிப்பார் அவர்களுடைய பாதகங்களெல்லாம் மரத்தின்மேலிருந்த பட்சிகள் பறந்துபோவதற்கு ஒருகல்லேபோதுமானதுபோல் நீங்கிவிடும், அல்லாமலும் தேகாந்தத்தில் மோட்சத்தைபெறுவார்கள்—எ-று. (௨)

சிவசிவவென்பாரவர்முன்னிருக்கஞ்செய்திடுமறலியும்பணியு
மவனைவிட்டகலானம்பிகைபாகனாணமவர்முகத்திருக்குந்
தவனைக்கண்டபனியெனப்பாவஞ்சரிந்திடும்பவக்கடலழுந்தார்
புவனியின்மரணகாலையிற்புகலிற்புலையருமடைவர்சாரூபம்.

இ-ள், சிவசிவவென்று மனமாரத்துதிசெய்பவர்களுக்கு முன்னே எப்போதும் பரமசிவன் திருநடனஞ்செய்தருளுவார் அங்ஙனந்துதித்தவர்களை யமனும் வணங்குவான், உமையவளை இடப்பாகத்திலுடைய பரமசிவன் அவர்களைவிட்டு நீங்காமலிருப்பார், அவர்கள்முகத்தில் நான்குருத்ரவதனங்களுமிருக்கும, அவர்கள்செய்தபாவமெல்லாம் சூரியனைக் கண்டபனிப்போல நீங்கிப்போம், அவர்கள் பிறவிக்கடலில் மூழ்கமாட்டார்கள், பூமியின்கண்ணுள்ள நீசர்களாயினும் மரணகாலத்தில் அங்ஙனம் துதித்தால் அவர்களும் சாரூபபதவியைப்பெறுவார்கள்—எ-று,

திருந்தமாபொருத்தன் செவிப்புலன்கேட்கச் சிவசிவவென்றிடும்பனேமே, விருத்தியவிடிபோலெரிந்திடும் பாவமிறப்பொடும்பிறப்பெலாமிரியு, மொருத்தன்வாயாரச்சிவவெனமுக்காலுரைத்திடி லொருவையதற்குக், கருத்தன்வாழ்பதத்திலிருந்திடுமிரவ்டுங்கடவுள்மேற்கடன்களாநிற்கும்.

இ-ள். ஒருவனுடையசெவியினிடத்திற் றெளிவாகக்கேட்கும்படிசிவசிவாவென்று திரிகாலசுத்தியுடனேசொன்னால் அவனது பாதகங்களெல்லாம் இடிவிழுந்தடவிபோல எரிந்துபோம் அவனது இறப்பும் பிறப்பும் நீங்கிபோம், ஒருவன் தன்னுடையவாயாரச்சிவாவென்று மூன்றுதரஞ்சொன்னாலமூன்றில் அந்த ஒருசொல்லுக்கு அவனைப்பரமசிவன் தமதுலகமாகிய சிவலோகபதத்தில் வைப்பார், மற்றவிரண்டு சொல்லும் பரமசிவன்மேற்கடன்களாகவிருக்கும்-எ-று. (௪)

பூசைகடருமமற்றவனேனும்புராரியைப்புகழ்ந்திடினவன்பாற்
காசினிசெட்யாள்கலைகுடிகொள்ளுங்கதிகளும்பலித்திடுமுயிர்ப்பி
னோசையாலரன்பெருநாத்திடின்மலைமேலுயரிடிபோல்வினையிடியு
மாசையான்முத்திப்பெண்கொளப்போவார்க்கவ்வுரைவாக்கியமாகும்,

இ-ள், பூசைகளுந் தருமங்களுஞ் செய்யாதவனாகிலும் பரமசிவனைத்துதிசெயதால் அவனிடத்தில் பூதேவியுஞ் சிதேவியுஞ் சரஸ்வதியுங் குடியாகவிருப்பார்க ளிவர்களுக்குக் கதிகளுமுண்டாகும் சுவாசவோசையால் சிவனது திருநாமததை உச்சரிப்பார்களாகில் அவாசளுடைய தீவினைகள் இடிவிழுந்தமலைபோல் இடிந்துபோகும், அல்லாமலும் மோக்ஷானந்தப்பெண்ணை அன்பாகக்கொள்ளப்போகின்ற வர்களுக்கு அந்தச்சொல்லே சுபவாக்கியமாகும்—எ-று. (௫)

இயன்றமாத்திரமஞ்செழுத்தையுமோதியிடதுபிசந்தனைத்தொட்டு
முயன்றிருகொம்பினடுவினிற்பரனைமுதற்பிரதோடமேகாணிற்
பயன்றருந்தருமந்தவமெலாமடையும்பதத்தினிற்பதம்படநடந்து
வியனுறுதானமஞ்சலிசெயினும்விரவினோர்வலம்பலகோடி.

இ-ள். முதன்மையாகிய பிரதோஷகாலத்தில்தம்மாலியன்றமாத்திரம்-பஞ்சாக்ஷரசெபஞ்செய்து நந்தீஸ்வரருடைய இடதுபீஜத்தைப்பரிசித்துக்கொண்டு இரண்டுகொம்புக்குமத்தியாகப் பரமசிவனைத்தரிசனஞ்செய்தால் சகலதர்ம்மங்களையும் தவங்களையுஞ்செய்த பலனுண்டாகும், அல்லாமலும் பாதத்திற்பாதம்படும்படியாக மெல்லநடந்து சிவத்தியானத்தோடு அஞ்சலியஸ்தராய் ஒருதரம் பிரதக்ஷணஞ் செய்தால் பலகோடிபிரதக்ஷணஞ்செய்தபலனுண்டாம்—எ-று. (௬

முதல்வலமொன்றுக்கவமிருத்தேகுமூன்றிலிற்கோரநோய்தீரு
மதிகமாமைந்திற்பத்திராதிகளாமந்தனர்கொலையறுநாறிற்
சுதமொருபத்தேலிந்திரனுவன்மனியிடம்வலம்வரிற்பிறவிக்
கதமறும்வலமுமிடமுமாய்நடக்கிற்கருதிடினெவ்வொருகோடி,

இ-ள். ஒருதரம் பிரதட்சணஞ்செய்தால் அவமிருத்துவுநீங்கும் மூன்றுதரம்பிரதட்சணஞ்செய்தால் கொடுமையாகிய வியாதிகணீங்கும்

அதிகமாகிய ஐந்துப்பிரதட்சணஞ்செய்தால் சந்தானமுதலானசம்பத்துக்களுண்டாகும், நூறுதரம்பிரதட்சணஞ்செய்தால் பிர்ம்மகத்திமாபாதகநீங்கும். ஆயிரம்பிரதட்சணஞ்செய்தால் தேவேந்திரனுவான், ஒப்பற்ற நந்தீஸ்வரரைப் பிரதட்சணஞ்செய்தால் பிறவித்துன்ப நீங்கும், வலமும் இடமுமாகப்பிரதட்சணஞ்செய்தால் ஒருபிரதட்சணத்திற்கு ஒருகோடிபிரதட்சணஞ்செய்தபலனுண்டாம்—எ-று. (௭)

உண்மதில்வலமொன்றெவ்வொருகோடிபுறமொன்றுகோடிபத்தாகு
மண்படவலஞ்சிவணங்கியேநடக்கின்மற்றதிற்கோடிபத்தாகு
முண்மையங்கப்பிரதட்சணமொன்றேபனைநூறாயிரங்கோடி
பண்ணினனவனேரூடனையெளிதும்பரபதமவனதுகாணி.

இ-ள். கர்ப்பக்கிரகத்தைச்சூழ்ந்த உண்மதிலை ஒருதரம்பிரதட்சணஞ்செய்தால் அக்கர்ப்பக்கிரகத்தைக் கோடிபிரதட்சணஞ்செய்ததாகும், மூன்றாம்பிரகாரமாகிய புறமதிலை ஒருதரம்பிரதட்சணஞ் செய்தால் அக்கர்ப்பக்கிரகத்தைப் பத்துக்கோடி பிரதட்சணஞ்செய்ததாகும், சரீரத்தில் மண்படவீழ்ந்து வணங்கிவலமாகித் தண்டப்பிரதட்சணஞ்செய்தால், அதனிலும் பத்துக்கோடியதிகமானபலனுண்டாகும், ஒருதரம் உண்மையாகியசிந்தையோடு அங்கப்பிரதட்சணஞ்செய்தால் அதனிலும் அளவில்லாத நூறாயிரங்கோடி பங்கதிகமான பலனுண்டாகும், அதனைஞ்செய்பவன் ஒப்பற்றமூடனாகிலும் சிவபுரம் அவனது காணியாகும்—எ-று. (௮)

மருவுசந்நியாசியிடம்வரப்பிரமசாரிதான்வலம்வரமற்றை, யிருவரும் வலமுமிடமுமாய் நடக்கிலிலக்கமுமீரைந்துகோடி, கருதொருகோடியிரண்டுகோடியதாங்கருக்கொலைபாதகரேனு, மொருவலம்வருவாரிரவியையொப்பாருணர்விஞேர்வலஞ்செயமொழியார்,

இ-ள். பொருந்தியசந்நியாசிகள் இடமாகவும் பிரமசாரிகள் வலமாகவும், வானப்பிரஸ்தன்-கிரகஸ்தன்- இவர்களிருவரும்வலமுமிடமுமாகவும், பிரதட்சணம் செய்வார்களாகில் அவ்வொன்றே பத்துக்கோடிபிரதட்சணம் செய்ததாகும், அல்லாமலும் எண்ணப்பட்ட ஒருகோடியிரண்டுகோடியாகும் கருவைக்கொலைசெய்த பாதகராலும் இந்த விதிப்படி ஒருதரம்பிரதட்சணஞ்செய்தால் அவர்கள் சூரியனுக்கொப்பாகப் பிரகாசிப்பார்கள் ஆதலால் அறிஞர்கள் பிரதட்சணஞ் செய்வதை எப்போதும்விடார்கள்—எ-று. (௯)

அக்கொடுதிருநீறணிந்தெழுத்தைந்துமறைந்தரன்பூசையும்மியற்றிச்
செக்கர்மேனியனைவலஞ்செய்துவணங்கிச்சிதம்பரமுதுகிரியொன்றி
ம்.பக்கமாயடியார்பூசையும்செய்துபணிவிடையியன்றவாறியற்றித்
தக்கவாறிதயமாரணூட்கொள்வர்தமயாரற்சிவனையாமறியோம்

இ-ள் உருத்திராட்ச கண்டிகையும் விபூதியும் தரித்துப் பஞ்சாட்சர ஜெபஞ்செய்து சிவபூசைசெய்து அந்த லிங்கமாகிய பரமசிவனைப்பிர தட்சணஞ்செய்து வணங்கிச் சிதம்பரத்திலாகிலும விருத்தாசலத்திலாகிலும் அன்பாக அடியார்கள் பூசையுஞ்செய்து தம்மால்யன்றமாத்திரம் திருப்பணிசெய்து தேகாந்தத்திலும் தகுதியாக இருதயத்திற் சிவத்தியானஞ்செய்கின்றபுண்ணியவான்களையல்லாமல் வேறொருசிவனை யாம் அறியோம்—எ-று. (௰)

சிவகீர்த்திச்சருக்கம்முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் ,௰௫ க்கு- திருவிருத்தம் ௩௭௨.

---

பதினாறாவது

# கோபர்வதச்சருக்கம்.

வேறு.

சிற்பரமன்முதுகுன்றன்றிருக்கதையைக்கேட்டவிவள்
இற்பளோகிற்கலளோவெனச்சிந்தைகெழுமாதே
முற்படநீரருள்செய்தீர்முதுகுன்றிற்கோவரையி
னற்கதையைநவிலுமெனவனவர்த்தியங்குரைத்தாள்.

இ-ள். அனவர்த்தியம்மையார் நாதசன்மாவை வணங்கி ஓய்சுவாமீ நீர் யான்கேட்குமுன்னமே சின்மயவடிவரான பழமலைநாதருடைய அழகிய சரித்திரத்தைக்கேட்குந் தகுதியுடையவளோ அல்லவோவென்று சற்றாகிலுந்திருவிளத்திற்குறியாமல் அனுக்கிரகஞ்செய்தீர் அதுபோலப் பழமலையின் கண்ணுள்ளகோபர்வதத்துடைய நன்மைபொருந்திய சரித்திரத்தையும் அனுக்கிரகம் செய்யுமென்று அன்பாகவிண்ணப்பஞ்செய்தாள்—எ-று. (க)

வரைக்கரசாங்கோவரையைவாயளக்குந்தகைமைத்தோ
வுரைக்கின்றேனெனநாதருரைக்கின்றாகயிலையினு
நரைத்தவிடைமேற்கொண்டிடற்கணங்கள்புடைசூழ
விரைக்கமழுமுதுகுன்றின்விளங்கினான்விமலசன்

இ-ள். அங்ஙனம் விண்ணப்பஞ்செய்தபொழுது நாதசன்மாவானவர் கிருபைகூர்ந்து ஓய் அனவர்த்தியையே நீகேட்பாயாகமலைக் கரசாகிய கோபர்வதத்தின் பெருமையானது நமதுவாயினால் அளவிட்டுச் சொல்லுந் தகுதியுடையதோ ஆயினும் யாமறிந்தமாத்திரஞ்சொ ச

ல் கின்றோமென்று திருவாய்மலர்ந்தருளுகின்றார் பூர்வத்தில் பரமசிவனானவர் கயிலாச பர்வதத்திலிருந்து வெண்மைபொருந்திய ரிஷபவாகனரூடராய் நல்ல சிவகணங்கள் புடைசூழ்ந்து வரவாசனை வீசுகின்ற மலர்ச்சோலைகள் நிறைந்துள்ள விருத்தகிரிக்கு விரைவாக எழுந்தருளிவந்தார்—எ-று. (௨)

தாருவனமுனிவர்செயுந்தவத்தினையுமவர்மாத
ரேருடையபதிவிரதவியல்பினையுஞ்சோதிப்பான்
காருருவத்திருமாலேகன்னிகையாய்ச்செல்கின்றோம்
நீயிருமிவ்வனமுமையைநிறுத்தினன்வடகீழ்பால்

இ-ள் அப்படியெழுந்தருளின பரமசிவனானவர் உமையவளைப் பார்த்துத் தாருகாவனரிஷிகள் செய்யப்பட்ட தபோவலிமையையும் அவர்களது பத்தினிமார்களுடைய பதிவிரதாதன்மையையும் சோதிக்கும்படி திருவுளங்கொண்டு மேகவண்ணனாகிய மகாவிஷ்ணு மோகினிரூபமாகிவர நாம்போகின்றோம் ஆகலால் நீ யிவ்விடத்திருந்தனை யிருப்பாயாகவென்றுசொல்லி உமையவளை விருத்தகிரிக்கு வடகீழ்த்திசையிலுள்ள ஓர் நந்தவனத்தில் விட்டு நிறுத்தியருளினார்—எ-று. (௩)

தனியிருப்பதெங்ஙனெனுந்தையலார்மெய்வருடிப்
புனிதனகைசெய்தருளிப்புகழ்நந்திதனைநிறுத்தி
யனிதமிலாச்சிவனகன்றானவ்வளவிலந்தவனத்
தினியதொருசிவலிங்கமுமையம்மையெதிர்கண்டாள்

இ-ள். அதுகேட்டுத் தனியாக இவ்விடத்திலிருப்பது எப்படியென்று விண்ணப்பஞ் செய்தருளிய வுமையவளைப்பார்த்துப் பரமசிவன் நகைத்துச் சரீரத்தைத் தடவிக் கொடுத்து யாவராலும் புகழப்பெற்ற நந்திஸ்வரரையும் உமையவளுடனிருக்கும்படி நிறுத்தினதனாலும் அழிவில்லாமல் நித்தியத்துவமாக விளங்குகின்ற பரமசிவன் சென்றருளினார் அங்ஙனஞ் சென்றவளவில் உமையவளும் அந்தவனத்தில் கண்ணொருசிவலிங்கத்தை எதிரேகண்டருளினார்—எ-று. (௪)

உத்தமமாமீசானகங்கையுமங்கெதிர்கண்டாள்
புத்திதரும்புகழ்நந்தியேவல்செயப்பூசித்தா
ளத்தலமுநந்திபெயராலேகோபருப்பதமாய்ச்
சத்திபெயராற்சத்தீச்சுரமுமாய்த்தழைத்தனவாம்

இ-ள். அதுகண்டவுடனவ்விடத்தில் உத்தமமாகிய அந்த ஈசானத்திக்கிலொருதீர்த்தத்தையுங்கண்டருளினாள் அதுகளைக்கண்டுமனக்களிப்பாக உமையவளும் தம்மைத் துதித்தவர்களுக்கு அரிவைத்தருகின்ற புகழையுடைய நந்திஸ்வரர் பணிசெய்ய அந்தசிவலிங்கத்தைப் பூசித்தாள் அதனால் அந்தஸ்தலம் நந்தீஸ்வரருடைய பெயரால் கோபர்வத

மென்றும் சத்தியினுடைய பெயரால் சத்தீஸ்வரமென்றும் இரண்டு தி
ருநாமங்கள் தழைக்கப் பெற்றனவாம்-எ-று. (௫)

அவ்வளவிற்றுருவனமகன்றருணர்கோடி குழாஞ்
செவ்வொளிபோற்சத்தீசன்றிருவுருவிற்சிவன்றோன்ற
வவ்விழியாள்பணிந்துபூசித்தாளலருஞ்சிறக்க
மெய்வரங்கேளெனப்பரமன்விளம்பினனுமைகேட்பாள்

இ-ள். அங்ஙனம் பூசித்தபொழுது பரமசிவனானவர் தாருகாவனத்
தைவிட்டு நீங்கிக் கோடிசூரியர்களுடைய சிவந்த பிரகாசம்போலச் சத்தீ
ஸ்வரமென்னும் சிவலிங்கத்தினிடமாகப் பிரகாசித்துத் தரிசனங்கொடு
த்தருளினார் அதுகண்டு மான்போன்றகண்களையுடைய உமையவளும
வணங்கிபூசைசெய்தாள் அதற்குப்பரமசிவன் மகிழ்வுகொண்டு உமை
யவளைப்பார்த்து உனக்கு நன்மையுண்டாகும்படியாக உனக்கு வேண்டியவ
ரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தருளினவளவில்உமையவள் விண்
ணப்பஞ்செய்கின்றாள்—எ-று. (௬)

யானுகந்துபூசிக்குமினியகோபருப்பதத்திற்
றானதருமஞ்செய்வார்சகலதிருபெறவேண்டு
ஞானகங்கைமூழ்கினவர்ஞானமேபெறவேண்டு
பானுமனைப்பதம்பணிவார்பதம்பெறவேண்டுமென்றாள்

இ-ள். நான் சந்தோஷகரமாய்ப் பூசிக்கின்ற இனிமையான இந்த
கோபர்வதத்தினிடத்திலவந்து தானதருமங்களைச் செய்கின்றவர்களெல்
லாம் சர்வஐஸ்வரியங்களையுமடையவேண்டும் ஞானசொரூபமாகிய இ
ந்த ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்தவர்களெல்லாரும் ஆத்மஞானத்
தையடையவேண்டும் அல்லாமலும் சூரியனைப்போற்பிரகாசிக்கின்ற உ
மது திருவடித்தாமரைகளை வணங்குகின்றவர்களெல்லாம் உமது சாயுச்
சியபதத்தையடையவேண்டும் என்கின்றவரங்களை விரும்பினேனென்
று உமையவள் விண்ணப்பஞ்செய்தருளினார்-எ-று. (௭)

சிவனுங்கேட்டுமையவட்குச்சிறந்தவரங்கொடுத்தருளிப்
புவனமெலாநந்திவனைப்புகழ்பொலியப்புரிந்தருளிப்
பவனுமவன்மேவியுமாய்ப்பணிந்தவர்க்குப்பலிக்கின்று
ரிவணெளிதாய்ப்பிழையாதவிவர்களோகதிபெறுவார்

இ-ள். அதுகேட்டுப் பரமசிவனும் உமையவள் கருத்தின்படி சிற
ப்பாகிய வரங்களை யனுக்கிரகஞ்செய்து அல்லாமலும் கோபர்வதத்தின்
கீர்த்தியானது சகலபுவனங்களிலும் பிரகாசிக்கும்படி செய்து அந்தஸ்
தலத்திலும் தாம் சத்தீஸ்வரனும உமையவள் சத்தியுமாக எழுந்தருளி
யிருந்து தம்மைவணங்கினவர்களுக்கெல்லாஞ் சகலநன்மையையுங்கொ
டுத்து ரக்ஷிக்கின்றார்கள் ஆதலால்இப்படிப்பட்ட ஸ்தலத்திலெளிதாகப

போய்க்கதியைப்பெறுதவர்களோ அரியதவங்களைச்செய்து கதியடை யப்போகிறார்கள்—எ-று. (௮)

ஈசானகங்கையினிராடியிறைதாள்பணிந்து
பேசாதேநூற்றெட்டுப் பிரதக்கணஞ்செய்தர்ச்சனைசெய்
தாசாறும்பன்னிருநூற்றயிரநல்லஞ்செழுத்தைத்
தேசாகச்செபித்தவர்கள் சிவனூணைபதம்பெறுவார்.

இ-ள். கோபர்வதத்தில் ஈசானகங்கையில்ஸ்நானஞ்செய்து பரமசி வனது திருவடிகளை வணங்கி மௌனமாக நூற்றெட்டுப் பிரதட்சணஞ் செய்து அர்ச்சனைசெய்து பரமாசாரியராற்பெற்ற பஞ்சாட்சரத்தைஅ நுகாசப் பன்னிரண்டிலட்சம் செபஞ்செய்தால் அவர்கள் சிவாக்கினைப் படிக்குச் சிவபதவியைப்பெறுவார்கள்—எ-று. (௯)

தவாவாதேபசுவரையிற் றங்கிவரம்பெற்றோருங்
கணநாதரானவருங்கதியினருமளவில்லை
புனர்வாயதவாகருணைபூரணருமங்கிருப்ப
ருணர்வாகச்சேவைசெயவார்க்குற்றவரமுந்தருவார்.

இ-ள். கோபர்வதத்தைவிட்டு நீங்காமல் வசித்திருந்து வரங்களைப் பெறறவர்களும் அந்தஸ்தலத்தில் கணநாதரானவர்களும்மோட்சத்தை பெற்றவர்களும் இவ்வளவென்று அளவுசொல்லமுடியாது அல்லாம லும் அந்தஸ்தலத்தில் சிவசம்பந்தமான மகாதவங்களைச்செய்துமுடித் த கருணைபரிபூரணமென்னும் ஒருமகாத்மாவுமிருக்கின்றார் அவரைத்தெ ரிந்து அறிவுதானகச் சேவைசெய்தவர்களுக்கு அவர்கள்விரும்பிய சக லவரங்களையும் அவர்கொடுத்தருளுவார்—எ-ற. (௰)

தேட்டமுறப்பூசித்துச்செபித்துண்டிதனைவிட்டுக்
காட்டசமாதியிலிருக்குங் கணநாதபூரணரை
நாட்டமுறப்பார்த்திருந்தானொருபாவிநயந்தவனை
யாட்கொள்ளும்படியிவன்றானோவென்றாராய்ந்தார்

இ-ள். பரமசிவனை அன்போடுபூசைசெய்து ஜெபஞ்செய்து உண வையொழிந்து தம்பத்தைப்போல அதைவின்றிச்சமாதியிலிருக்கின்ற கணநாதராகிய கருணைபரிபூரணரென்னு மகாத்மாவை ஒருபாவியானவ ன் கண்கள்பொருந்தப் பார்த்திருந்தான் அந்தப்பாவியையும் கருணைப ரிபூரணனவா தடுத்தாட்கொள்ள நினைத்து. இவன்யாவனென்று திரு வுளத்தில் ஆலோசித்தருளினார்—எ-று. (௰௧)

பெண்வதையுங்கோவதையும் பிறவதையும்பெரும்பவமும்
பண்ணினவனெனநினைந்துபரலோகமில்லையந்தோ
தண்ணியவனைத்தூரச்சன்னிதியினிற்பித்தார்
நண்ணியசந்நிதியினெடுநாளாகநின்றளவில்

இ-ள் ஸ்திரீவதையையும் கோவதையையும் - இன்னமனேகவதைகளையும் கோடிபாதகங்களையுஞ்செய்தவனென்றுதெரிந்து ஐயோஇவனுக்கு மோட்சமில்லையே இவன்மெத்தவெளியவனென்று நினைந்து அவனைத்தமது சந்நிதானத்தில் தூரமாகநிற்கும்படி செய்தருளினார்அங்ஙனே அந்தப்பாவியானவன் கருணாபரிபூரணரது ஞானபிரகாசம்பொருந்திய சந்நிதானத்தில் அனேகநாளாகநின்றகாலத்தில்—எ.று, (௰௨)

பாம்பின்றோலுரிந்ததுபோற்பனவன்றன்பாதகங்கள்
போம்பரிசினாற்கருணாபூரணனையும்பணிந்து
தாம்புனலுளீசானந்தனின்மூழ்கியோகியையும்
வாம்புனற்செஞ்சடையனையுங்கூடவேவலஞ்செய்தான்

இ-ள். அந்தப்பாவியாகிய பிராமணனானவன் தன்னுடையபாதகங்களெல்லாம்பாம்பினதுதோலுரிந்ததுபோல்நீங்கிபோயினமையால்கருணாபரிபூரணரையும்வணங்கி அலைகளைமோதுகின்ற நீர்நிறைந்த ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்து அந்தக்கருணாபரிபூரணரையும் தாவுகின்றகங்கையைத்தரித்த சிவந்தசடாபாரத்தையுடைய சத்தீஸ்வரரையும் கூடப் பிரதட்சணஞ்செய்தான்—எ-று, (௰௩)

காவகற்றுமீசானகங்கையிற்றினமூழ்கித்
திருவருளார்பாகனுடனியோகியையுந்தினம்பணிந்து
சருகுதிரணந்தண்ணீர்தனைய நுந்தித்தவவடிவாய்
மருளகன்றபின்யோகிமறையவனைவரவழைத்தான்

இ-ள். மேலும் அந்தப்பிராமணன் பிறவியைக்கெடுக்கின்ற ஈசானகங்கையினில் நாள்தோறும் ஸ்நானஞ்செய்து அருவநுருவமாகிய உமையவளெழுந்தருளியிருக்கின்ற இடதுபாகத்தையுடைய சத்தீஸ்வரரையும் கருணாபரிபூரணரையும் நாள்தோறும்வணங்கிச் சருகுகள்திரணங்கள் தண்ணீர்முதலியவைகளைப் புசித்துத் தவவடிவாயிருந்துசகலபிராந்தியுமொழிந்தபின்பு அந்தப்பிராமணனைக் கருணாபரிபூரணரானவர் சமீபத்தில்வரவழைத்தார்—எ-று. (௰௪)

எந்தநாடுன்பெயரென் னிந்தவனத்தேன்வந்தாய்
முந்தவுரையென்றுரைப்பமொழிகின்றானெந்தூரஞ்
சுந்தரநாடென்பெயருந்துருவிருத்தன்மறையவனேன்
வந்ததுவுமிவ்விடத்தில்வழிபறிக்கவென்றுரைத்தான்

இ-ள். அங்ஙனம்வரவழைத்து அந்தப்பிராமணனைப்பார்த்து நீயெந்தத்தேசம் உன்பெயரென்ன நீ இந்தவனத்திற்கு எதைக்குறித்துவந்தாய் இதுகளை விவரமாக நீமுன்னேசொல்வாயென்று கருணாபரிபூரணர் திருவாய்மலர்ந்தருள அந்தப்பிராமணன்சொல்லுகின்றான் ஓய் சுவாமி அடியேனிருப்பது வெகுதூரமாகிய சுந்தரதேசம் என்பெயருந்

னாவியிருத்தனென்று சொல்லுவார்கள் நான் பிராமண குலத்திற்பிறந்த
வனாயினு மீனத்தொழிற்றுவங்கு வழிபறித்துப் பறிப்பதற்கேயென்
று வில்லம்பைப் பற்றிச்செய்து பன்னுஞ் சொல்லுகின்றான்-று (௰௫)

பாவியானழியாத பலமரபுதானுமிலை
பாவியான்றிருடாத பலகளவுதானுமிலை
பாவியான்கொல்லாத பல்லுயிர்கடானுமிலை
பாவியான்பண்ணாத பாதகங்கடானுமிலை

இ-ள். இந்தவுலகத்தி லிருக்கின்ற முறைமையாகிய பலமரபுகளிலும் பாவியாகிய நானழித்துவிடாத மரபுகளுமில்லை பலகளவுகளிலும் நான் களவுசெய்யாத களவுகளுமில்லை பலவுயிர்களிலும் நான் கொலைசெய்யாத வுயிர்களுமில்லை பலபாதகங்களிலும் நான் செய்யாதபாதகங்களுமில்லை—எ-று. (௰௬)

கரவினையுமென்னுடைய கடுங்கொலையுங்கடுஞ்சினமும்
விரகினையுங்கண்டஞ்சி விறலினருநடுநடுங்கி
மரநடுங்கு மன்னனடுங்கு மாதர்களுநடுநடுங்கு
நரர்நடுங்குஞ்சுரர்நடுங்கு நமனடுங்குமெனச்சொன்னான்

இ-ள். அடியேன்செய்கின்ற வஞ்சகத்தையும் கொடிய கொலைத்தொழிலையும் கடுமையாகிய கோபத்தையும் உபாயத்தையும் பார்த்துப்பயந்து மகாபராக்கிரம சாலிகளானவர்களும் நடுங்குவார்கள் அல்லாமலும் என்னைக்கண்டால் மரங்களுநடுங்கும் மண்ணும் நடுங்கும் மாதர்களும் நடுங்குவார்கள் மனிதர்களும் நடுங்குவார்கள் தேவர்களும் நடுங்குவார்கள் யமதர்மராஜனும் நடுங்குவானென்று சொல்லிப் பின்னையும் விண்ணப்பஞ்செய்கின்றான்-எ-று (௰௭)

குருடனுக்குக்கண்பெறுவான் குணநீர்த்தங்கிடைத்ததுபோல்
மறவனுக்குவெளிப்பட்டீர் மனந்தெளிந்தேனின்னமுநா
னிருளாறுகாவழித்தன்னை யிதுவென்றுகாட்டியக்கால்
பொருளாப்பெறவேனெனவேயோகி திருப்பாதந்தனில்வீழ்ந்தான்

இ-ள். பிறவிக்குருடனுக்கு கண்கிடைக்கும்படியாக ஒரு புண்ணிய தீர்த்தங்கிடைத்ததுபோலப் பாவியாகிய அடியேன்முன் தேவரீர் வெளிப்பட்டுக் கொண்டீர் அதனாலடியேனுஞ் சித்தசுத்தியைப் பெற்றேனாதலால் இனிமேலும் அடியேன் அஞ்ஞானவழியிற் செல்லாத உண்மை ஞானவழியை இதுவென்று உபதேசஞ்செய்தருளினால் ஆத்மஞானத்தைப்பெற்றுக கிருதார்த்தனாவேனென்று சொல்லிக் கருணாபராபரனுடைய திருவடித்தாமரைகளில்விழுந்து நமஸ்காரஞ்செய்தான்—எ-று. (௰௮)

என்றுநீயித்தலத்தி லெய்திறுபுன்பாவ
மன்றகன்றதெம்முடைய வருள்ஞானப்பார்வையினுற்
சென்றுகங்கைமூழ்குதலாற் சிவன்சத்திதிருநோக்கா
னன்றிகிடைத்திருக்கின்றாய் நமையகலாயெனவுரைத்து

இ-ள். அங்ஙனம் வணங்குகின்ற பிராமணனுக்கு இரங்கிக் கருணைபரிபூரணராமவர்சொல்லுகின்றார் ஓய் பிராமணனே நீ இந்தக்கோபர்வதமென்னும் திவ்வியஸ்தலத்திற்கு எப்பொழுது வந்தாயோ அப்பொழுதே உன்னுடைய பாதகங்களெல்லாம் நீங்கிவிட்டது அல்லாமலும் எமது கிருபா ஞானதிரிஷ்டியினாலும் தினந்தோறும் போய் ஈசானகங்கையில் முழுகினபடியினாலும் சத்தீஸ்வரர் சிற்சத்தியிவர்களது திருவருட்பார்வையினாலும் நீ சகல நன்மையும் பெற்றிருக்கின்றாய் ஆதலால்-நீ எப்போதும் நமைவிட்டு நீங்காம லிருப்பாயென்று சொலவி-எ-று. (௰௯)

தஞ்சநியமங்களையுந் தமத்தினையுமுண்மையுட
னஞ்செழுத்துமுபதேச மருளினனவ்வழியில்
விஞ்சுதவமிகமுடுகி மெய்ஞ்ஞானியாயிறைவன்
கஞ்சமலர்ச்சேவடிக்கே கலந்தொன்றியுடனானன்

இ-ள். பற்றுக்கோடாகிய சகலநேமானுஷ்டானங்களையும் தவத்தையும் உண்மையாகிய பிரணவத்தோடு பஞ்சாக்ஷரத்தையும் யுபதேசஞ்செய்தருளினர் அந்தப்பிராமணனும் அவர் அனுக்கிரகித்தருளிய உபதேசவழியாக மேன்மையான தவத்தில் மிகமுடுகிநின்று மெஞ்ஞானத்தையுடையவனாகிச் சத்தீஸ்வரருடைய திருவடித்தாமரைகளில் இரண்டறக்கலந்து ஒன்றாகிய அத்துவிதானந்த நிலையைப்பெற்றான்

நந்திகோபப்பதத்தி னரர்சுரர்களியாரேனும்
வந்தவர்கண்மூன்றுநாள் மகிழ்ந்துநியமத்துடனே
கந்தலறத்துறந்திருக்கிற் கண்ணுதலோன்பதமடைவர்
பந்தமுட னிருந்தவரும் பரமன்றன்வடிவாவர்

இ-ள்· நந்தீஸ்வருடையபெயரால் விளங்குகின்றகோபர்வதத்தினிடமாகவந்தவர்கள் மனிதர்களானாலும் தேவர்களானாலும்-மற்றெவர்களானாலும்-அந்தஸ்தலத்தில் மூன்றுநாள்வரைக்கும் நியமமாகக்கெடுதலில்லாமல் சகலவாசனையையும் ஒழித்து மனமகிழ்ச்சியாக வசித்திருந்தால்அவர்கள் சத்தீஸ்வரருடைய திருவடியைப்பெறுவார்கள் அல்லாமலும்அந்தஸ்தலத்தில் குடும்பத்தோடு வசித்திருந்தவர்களும் - சிவசொருபமாகிய சாருபபதவியை அடைவார்கள்-எ-று. (௨௧)

கோபர்வதச்சருக்க முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் - ௰௯ - க்கு, திருவிருத்தம் - ௩௯௩,

பதினேழாவது

# பிருடிச்சருக்கம்

---

வேறு.

நாதர்மாதுமுனேதுவாமொரு நாலுவேதபபிருடிதன்
மாதுமாதருமுருசியென்பவள்மகதமென்பெருநாட்டுளோர்
பேதபூமி பரதக்கணத்தினிற்பணைவப்பதிவந்தனர்
மீதுவாரகையேகிவித்துருமத்துமேவினர்கன்னையே

இ-ள். நாதசன்மாவானவர் அனவர்த்தியென்னுந்தேவியாரைப்பார்த்துச் சொல்லுகின்றார் ஓய் அனவர்த்தியையே நீகேட்பாயாக பூர்வத்தில் ஒப்பற்ற நான்குவேதங்களுந்தெரிந்த பிருடியென்னும்பெயரையுடைய ஒருபிராமணன் அவனது ஆசையாகிய மனையவளும் முருசியென்னும் பெயரையுடையவள் அவர்கள் மகதமென்கிறபெரியதேசத்திலிருந்தவர்கள் அவர்களிருவரும் நானாபேதங்களையுடைய பூப்பிரதட்சணஞ்செய்யும்படி நினைத்துவருகையில் முன்னே பரதவர்ஷத்திற்குவந்து பின்பு மேலானதுவாரகாபுரிக்குச்சென்று வித்துருமமென்னுந்தலத்திற்குப் போய் கன்னையையடைந்தார்கள்—எ-று. (க)

கனகவைப்பிரியாவகந்திரிவிக்கிரமங்கழுக்குன்றமும்
வினவுசாயவனமுவெண்காடுவதரியாஞ்சதுமறைவன
நனிவருங்கடவூர்குடந்தைநாகேச்சுரமாதவை
யினியராமன்றீசரக்குமரித்துறைதனிலெய்தினார்

இ-ள். எப்போதும் சகலசம்பத்துநீங்காத திருவிக்கிரமம் திருக்கழுக்குன்றம்-சொல்லுகின்ற திருச்சாயாவனம்-திருவெண்காடு-திருவதரியாச்சிரமம்-திருமறைக்காடு-நன்மைபொருந்திய திருக்கடவூர்-திருக்குடந்தை-திருநாகேஸ்வரம் திருமாதவை-இனிமையானராமேஸ்வரம்-முதலான-ஸ்தலவாசஞ்செய்து கன்னியாகுமரித்துறையில் வந்தார்கள்-எ-று.

சுவணவக்கிரம்பகவற்புரிதுதிதருங்கலைபதுமிட
மௌனிகோகரணஞ்சயிந்தவமற்றுமப்பதியும்மபின்
றுவாரவந்தனரவரையங்கொரசுந்தரச்சிவயோகிதாம்
முவனமாயினிவாயகேளெனிர்சாற்றுமென்றனர்சாற்றுவார்

இ-ள். பின்பு சுவணவக்கிரம்-நன்மைபொருந்திய பகவற்புரியாலருந்துதிக்கப்பட்ட விநாயகபுரி-மௌனிகோகரணம்-சயிந்தவ முதலாகிய

ஏனைய திவ்வியஸ்தலங்களிலும்போய்த் தரிசித்தபின்பு துவாரகாபுரிக்குவந்தார்கள் அவிடத்திலும்வசிக்கின்ற அழகிய ஒருசிவயோகியார்அவர்களைக்கண்டு நீங்கள் இவ்வளவுசரீரப்பிரயாசமுண்டாகும்படி எவ்விடத்திற்குப்போனீர்கள் அதைச்சொல்லுமென்றுகேட்க அவர்கள்சொல்லுகின்றார்கள்—எ-று, (௩)

பிருடிதன்னுடைதருவன்மாதவபிருதிவிப்பிரதக்கணை
முருசியாளொடேபரமனாலயமுற்றும்வந்தனைமுன்பதத்
தெரிசனத்தையுமுற்றனம்மெனவந்தயோகிசிரித்துநீர்
பெருமைபெற்றதலங்களுற்றிலிர்பெரிதுகாணடைவந்திரால்

இ-ள். பிருடிதனுன்வன்சொல்லுகின்றான் ஓய் மகாயோகீஸ்வரரே அடியேனும் முருசியென்னுமென்மனைவியும சிவாலயமுழுவதும் பூப்பிரதட்சணைஞ்செய்துவந்தோம் அல்லாமலும் உம்முடைய பாததரிசனமும் பெற்றோமென்று சொன்னவளவில் அந்த யோகிஸ்வரர் நகைசெய்து நீங்கள் விருதாவிற் கால்கள் வருந்தும்படி வெகுதூரம் திரிந்து பிரயாசமடைந்தீர்களேயல்லாமல் பெருமைமிகுந்த ஒருஸ்தலங்களுக்காகிலும் போகவில்லையேயென்றுசொல்லி—எ-று, (௪)

சென்றவன்றுவிமானமுற்றிடுதெய்விகத்தலமுள்ளடோ
வென்றுரைத்தனரிருவருந்தொழுதேதுதானெனவோதுவர்
ரன்றுகண்டகிபீமையச்சதைதாவில்கிட்டினவேணியே
மன்றகர்ணிகைசரயுநர்மதைமாகளங்கரிகாளமே

இ-ள். சென்றபொழுதே தெய்வவிமானம் வருகின்றதெய்விகஸ்தலங்கள் அனேகம்இருக்கின்றதேயென்று சொல்லியருளினார் அதுகேட்டு அந்தஇரண்டுபேரும் வணங்கிநின்று அந்தஸ்தலங்கள் எதுஎது அதுகளை எமக்குத்தெரியச்சொல்லவேண்டுமென்றுகேட்க அந்தயோகீஸ்வரர் அப்போதுசொல்லுகின்றார்-கண்டகி-பீமையச்சதை-குற்றமற்ற கிருஷ்ணவேணி மேன்மைநிறைந்த மணிகர்ணிகை-சரயுநர்மதை-மாகாளமகரிகாளம்—எ-று. (௫)

பாவநாசம்விசாலைசந்திரபாகையற்புதையிரவியூர்
தேவரார்க்கிருதஞ்சிராப்பளிசிந்துகோமதிகிரணியே
காவிரிக்கனகக்குளம்பிரவாளமேயுறைகைத்தல
மரவனஞ்சிகிவளையணுக்கமலாலயந்திருவம்பலம்

இ-ள். பாவநாசம்-விசாலை-சந்திரபாகை அற்புதை-இரவியூர்- தேவர்களமுதம்பொசித்த திருச்சிராப்பள்ளிசிந்துகோமதி கிரண காவிரி-அழகியகம்குளம்-பிரவாளர்-திருவுறைகைப்பதி-திருவானைக்கா-திருமயிலைத்துறை-திருவண்ணாமலை-திருவொற்றூர்சிதம்பரம்—எ-று, (௬)

துருத்திசந்திரரேகைதொன்மழபாடிசுந்தரமாயலை
திருத்துமெய்த்தலமங்கலந்திருவாஞ்சியந்திருமருதமோரா
கருதத்தனென்கவையயூரமாவடுதண்டுறைக்கமழ்கோடிகா
விருத்தவெற்பொடுங்கோபருப்பதமிக்கவென்றுவிளம்பினர்

இ-ள். திருத்துருத்தி-சந்திரரேகை-பழமையாகிய திருமழபாடி-சுந்தரமாய் - திருத்தமாகிய திருநெய்த்தானம்-திருமங்கலம்- திருவாஞ்சியம்-திருவிடைமருதூர் - பரமசிவனெழுந்தருளிய திருவெண்காடும் திருவாரூரும் - குளிர்ச்சிபொருந்திய திருவாவடுதுறை - திருக்கோடிகா விருத்தாசலம் - கோபருப்பதம் இவைகளெல்லாம் முக்கியஸ்தலமென்று சொல்லியருளினார்—எ-று. (௧)

அத்தலங்களிலேநடாவிடினீதுறும்கதியென்றனை
னைத்தவமழிசடையினிவ்வினியேகுதற்கரிதென்னருட்
சித்திதருமெனமனோசவயோகியுள்ளமகிழ்ந்துநீ
ரித்தலத்திருநீர்மையெய்திவிட்டமாத்திரைதன்னிலே

இ-ள். அப்படிப்பட்ட ஸ்தலங்களிற்செல்லாவிட்டால் மோக்ஷங்கிடைப்பது அரிதென்று சிவயோகி சொல்லியருளினார் அதுகேட்டு ராஜகுமாரர்களிருவரும் வழிநடந்தப்பிரயாசத்தினால் மிகுந்த இளைப்புற்றிருக்கின்றோம் இனிமேல் நடக்கமுடியாதாதலால் உமது திருவருட்பார்வையைக் கொடுத்து ரக்ஷிக்கவேண்டுமென்று சொன்னார்கள் அதுகேட்டு சிவயோகியானவரும் மனமகிழ்ந்து நீங்கள் இத்தலங்களைப்பொருந்திய திருநீர்மை பெற்றதாகத்தரித்துக்கொண்டமாத்திரத்தில்—எ-று, (௨)

நல்லதாகியகோபருப்பதமொன்றுமீதொருமூன்றுநா
ளெல்லைசிந்திடவரனையர்ச்சியுடன்கலசித்தியுமனையுமென்
றெல்லைநீர்மையளித்தனன்னதுதன்மையென்றுயர்வாங்கின
ரெல்லைபெற்றுவிட்டனர்பசுவலையிலெய்தினரிருவரும்.

இ-ள். நன்மைபொருந்திய கோபர்வதத்தை யடைந்து அவ்விடத்தில் உங்களுடைய பிறவித்துன்பம் நீங்கும்படி மூன்றுநாள்பரியந்தம் பரமசிவனைப் பூசைசெய்யுங்கள் அங்ஙனம் செய்தால் சகலசித்திகளுமுண்டாகுமென்று சொல்லி விபூதிப்பிரசாதங்கொடுத்தருளினார் அதை அவர்களிருவரும் உண்மையென்று இரண்டுகைகளாலும் வாங்கிப்பெற்றுவிடைபெற்றுக்கொண்டு கோபர்வதத்திற்குச்சென்றார்கள்-எ-று.

கங்கைசூழ்நின்மலங்கைநாயகர்கழல்பணிந்தனர்மூன்றுநா
ளங்கணீர்த்திரையுண்டுவிட்டனரஞ்செழுத்தையுமோதினா
ரங்கிளையருமெய்கலம்பையுமிடபவாகனராகியே
சங்கராட்சிசேர்நீணரவர்தாமகிழ்ந்துபணிந்தனர்.

இ-ள் அவிடத்திற்சென்று ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்து சத்தீஸ்வாருடைய திருவடிகளை வணங்கி மூன்றுநாள்பரியந்தம் உணவு முறக்கமுமில்லாமலிருந்து பஞ்சாட்சரஜெபஞ்செய்தார்கள் அப்பொழுது எமது பிதாவாகிய சத்தீஸ்வாரும் மாதாவாகிய சிற்சத்தியும் ரிஷபவாகனரூடரா யெழுந்தருளிப் பிரத்தியட்சமாகத்தரிசனங்கொடுத்தருளினார் அதைக்கண்டு அயாகளிருவருமனங்களித்து நமஸ்கரித்து நின்றார்கள்—எ-று (ய)

வரங்கள்கேளுமினென்றனன் சிவன்மங்கையும்மறையவனுமாடக்
கரங்கள்கூப்பிவணங்கியேபவக்கடல்கடக்திடுமாறெமக்
கிரங்கிநின்சரணத்தடைந்தருளென்றனரங்கிருந்தனர்
தரங்கியாதுநம்யோகிசொற்படிதலமூலாவுகவென்றனர்.

இ-ள்- அங்ஙன நிற்பவர்களைப்பார்த்துப் பரமசிவன் உங்களுக்குவேண்டியவரங்களைக் கேளுங்களென்று திருவாய்மலர்ந்தருளினார் அதுகேட்டு முருசியம்மையும் பிருதிதனும்கைகளைபஞ்சலியாககூப்பிவணங்கிசுவாமி தேவரீர் அடியேங்களுக்காக இரக்கமுற்றுப்பிறவிச்சமுத்திரத்தை நீந்தும்படி உமது திருவடிகளைத் தெப்பமாகக் கொடுத்துரட்சிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள் பரமசிவனும் அங்ஙனே அந்தவரத்தைகொடுத்தருளி நீங்கள் மனஞ்சலியாமல்நமதுயோகியாருடைய வாக்கியப்படி ஸ்தலவாசஞ் செய்யுங்களென்று சொல்லி—எ-று, (யக)

உமாபதிச்சிவனருளினுலொளியால்விளங்குகளங்கமில்
விமானநல்கினர்பிருதிதன்சிவன்மேனியாயினனுமைதனைச்
சமானமாயினள்முருசியுந்தடையின்றியெங்குமுலாவியே
தமாதிடத்தினர்கோபருப்பதர்தக்கசேவடிபுக்கினர்.

இ-ள். உமாபதியாகிய பரமசிவனவர் தமதுகிருபையினால் திவ்வியப்பிரகாசம்பொருந்திய களங்கரகிதமான ஒருதெய்வ விமானத்தையுங்கொடுத்தருளினார் அதில் ஏறினவுடன் பிருதிதன் சிவசாரூபம்பெற்றனன் முருசியம்மையார் உமையவளாகிய சத்திசாரூபம்பெற்றனள் இப்படிச்சாரூபம்பெற்ற இருவரும் ஒருதடையு மில்லாமல் எந்தஸ்தலங்களிலும் வாசஞ்செய்து பின்பு தமது சிற்சத்தியாகிய உமையவளை இடபாகத்திலுடைய சத்தீஸ்வாரது அழகிய திருவடி களிற்சேர்ந்தார்கள்—எ-று. (யஉ)

பிருதிச்சருக்க முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம்-யஎ-க்கு-திருவிருத்தம் சாஅ.

## பதினெட்டாவது

# சசிவன்னச்சருக்கம்.

### வேறு.

நாரணர்தம்மைநோக்கிநம்பர்தாமருளிச்செய்வார்
சீரணிதவத்தினோர்கள்சேவையின்பெருமைகேளா
பேரணிபாவவெச்சனென்றொருமறையோன்மைந்தன்
ஞாரணந்தன்னிற்பாவிசசிவன்னனென்பான்மன்னோ

இ-ள், மகாவிஷ்ணுவைப்பார்த்துப் பரமசிவன் திருவுளம்பற்றியருளுகின்றார், ஓய மகாவிஷ்ணுவே சிறப்புப்பொருந்திய தவத்தையுடைய பெரியோர்கள் தரிசனத்தின் பெருமையைக் கேட்பாயாக, அஃதியாதெனில் அழகுமிகுந்த பாவவெச்சனென்றுசொல்லுகின்ற ஒருபிராமணனுடையகுமாரன் உலகத்திற்கொடிதான பாவங்களைச் செய்தவன் சசிவன்னனென்னும்பெயருடையவன்—எ-று. (க)

பத்தரையும்மையெம்மைப்பரவுவேதத்தைநீற்றை
மெய்த்தருமத்தைநிந்தைவிளம்புவதவன்றன்கல்வி
நித்தலுங்கோறல்செய்தனியமந்தானடுத்தார்தம்மைக்
குத்திரஞ்செய்தலேகுலாசாரமாவதம்மா,

இ-ள், அடியார்களையும் உம்மையும் எம்மையும் யாவருந்துதிக்கப் பட்ட வேதத்தையும் திருநீற்றையும் உண்மையாகிய அறத்தையும் நிந்தைசொல்வதே அவனுக்குக்கல்வியாகும் தினந்தோறும் உயிர்க்கொலை செய்வதே அவனுக்குநியமமாகும் அடுத்தவர்களைவஞ்சித்துக் கெடுப்பதே அவனுக்குகுலாசாரமாகும்—எ-று (உ)

மாதரைக்கிளைஞர்தம்மை வாலரைக்கருவைக்கோவை
வேதியர்தம்மைக்கொல்லும்விரதமேவிரதநல்ல
நீதிகளுடையோர்வீட்டி னெருப்பிட்டுமவிடங்களிட்டும்
பாதகப்பொடிகடூவிப் பறிப்பதேயவன்றன்கேள்வி

இ-ள், ஸ்திரீகளையுஞ்-சுற்றத்தாரையும்-வாலிபரையும்- கர்ப்பத்தையும்- பசுக்களையும்-பிராமணர்களையும்-கொல்லுகின்ற விரதமேயவனுக்கு விரதமாகும், நல்லநீதியையுடையவர்களுடைய வீட்டில் நெருப்புவைத்தும் அவர்களுக்கு விஷமருந்துகளையூட்டியும் சொக்குப்பொடிகளைத்தூவியும் அவர்களிடத்திலுள்ள பொருள்களைப்பறித்துக்கொள்வதே அவனுக்குக்கேள்வியாகும்—எ-று, (ங)

பத்திரமெழுதியேவற்பணியினர்போலச்சென்று
குத்திரஞ்செய்துகோளுங் குறளையுமுரைத்துமுன்னே

மித்திரிபோலச்சென்று சிறுக்குலங்களைவுகொண்டு
சத்துருவைப்பேசித்தனிப்பழிதீராநின்றான்

இ-ள், பொய்யாகிய கடன்பத்திரமெழுதி ஒருவனுடைய யேவலாள னைப்போலப்பேசிக் கடன்கேட்டு வஞ்சனைசெய்து அவன்போற் டறம் கூறியுங்கோள்சொல்லியும் முன்புசிநேகிதனைப்போலப்போய்விருந்து சாப்பிட்டு அவர்கள்வீட்டில்களவுசெய்தும்பின்புசத்துருவைப் போலப் பேசித்தனிவழியில் அக்கப்பழியைத்தீர்த்துக்கொள்வான்—எ-று (௪)

நிறைத்தபொய்யோலைகாட்டி நிலங்களுந்தனமுங்கொண்டு
மறைத்தவேடங்கொண்டு வழிக்கரைவநுந்தியிட்டுப்
பறைச்சியைமனைவியாக்கிப் பாதகரிலைக்கஞ்செய்து
மிறைச்சியுமீனுங்கள்ளு மீபலுமருந்தாநின்றான்

இ-ள், பொய்யைநிறைத்து எழுதிபசீட்டைக்காண்பித்துப் பூமிகளை யும்பொருள்களையும் அபகரித்துக்கொண்டு பிராமணசந்நியாச வேஷங் கொண்டுவழிக்கரையில்இருந்துவழியேவருகின்றவர்களைவஞ்சனைசெ ய்து அவர்களிடத்துள்ள பொருள்களைப்பறித்துக்கொண்டு புலைச்சியை மனையாளாகக்கொண்டு பாதகர்களோடு சிநேகஞ்செய்தும் மாமிச மும் - மச்சமும்- கள்ளும்-ஈசலும், உணவாகப்புசித்துக் கொண்டிரு ந்தான்—எ-று (௫)

காரர்களாயிவர்தம்வர்க்கஞ் சுவர்க்கத்தையடைந்தோரெல்லாம்
தரமிலாநரகில்வீழ்ந்தார் சசிவன்னன்செய்தபாவ
மூரன்முயலகனும்பேயு நோயுமாய்மொய்த்துவீழ்ந்தா
னரகமும்வருவனென்று நடுங்கிடத்தொடங்கிற்றம்மா -

இ-ள், இவனுடைய குலத்திலுள்ளவர்கள் தேவர்களாய்சுவர்க்கத்தி ற்குபோனவர்களெல்லாரும் கொடுமையாகிய நரகத்தில்விழுந்தார்க ளசசிவன்னனெனவன் அவன்செய்த பாவங்களேவலிதாகிய முயலகவி யாதியும் பசாசமும்மற்றெல்லாவியாதிகளுமாகிச்சூழ்ந்துவருத்தஞ்செ ய்ய அதனாற்பாயிற்கிடந்துவருந்தினான் அல்லாமலும நரகமும்இவன் நம்மிடத்தில்வருவானோ இவனை எப்படிநாம்சகிப்பதென்றுநடுங்கத்தொ டங்கிற்று—எ-று, (௬)

வெறுத்திடவொருவன்செய்த பாவங்கண்மிக்குமான்று
பொறுக்குமோதெய்வமிம்மை தன்னிலேபுடைத்துப்பின்னர்
மறுத்திடநரகில்வாட்டும் புண்ணியமிக்கதுமன்று
நிறுத்துமோவிம்மைகாட்டு நெருப்புநீர்மிகுதிபோலும்,

இ-ள். யாவரும்வெறுக்கும்படியாக ஒருவன்செய்தபாதகங்கள் அதி கமாகமேலிட்டகாலத்தில்-தெய்வம்பொறுக்குமோபொறுக்காமல்இகத் திலேயேவருத்தி மறுமையிலும்ஒருவராலும் தடுக்கப்படாத கொடிய நரகத்தில்வீழ்த்திவருத்தும்- அதுபோலபுண்ணியங்கள் மேலிட்டகா லத்திலும் அதன்பயனைக்கொடாமல் நிறுத்துமோநிறுத்தாமல்இப்பொ

ழுதேகாண்பிக்கும் அஃதெய்வமெனில். நெருப்புமிருந்தால் நீரடங்குவதுபோலும் நீரிருந்தால் நெருப்படங்குவதுபோலும்—எ-று. ()

சசீவன்றன்றந்தையாருந் தரையிடைப்பணிந்துபோற்றி
யிசையுளதெய்வபத்த னென்னுமாதவனைநோக்கி
விசையுளமைந்தன்செய்த வினையெலாம்விளங்கச்சொன்னார்
கசிவுடைதெய்வபத்தர் கருணையாலுபதேசிப்பார்

இ-ள். சசீவன்னன்படுகின்றதுன்பத்தை அவன்பிதாவாகிய பாவவெச்சர்கண்டு மனஞ்சகிக்காதவராகிக் கீர்த்தியுள்ளதெய்வபத்தனென்னும் ஒருபெரியவனைப்பார்த்துப் பூமியில்விழுந்து வணங்கித்துதித்து நின்று குரூரமான தனதுபுத்திரன்செய்த சகலதீவினைகளையும் நன்றாகத் தெரியும்படி விண்ணப்பஞ்செய்தார் அதுகேட்டு அன்பையுடைய அந்தத்தெய்வபத்தரும் கிருபையினாலனுக்கிரகஞ்செய்கின்றார்—எ-று. ()

அழுங்கியபாவவெச்ச வருந்துறாதுகுன்றன்முத்தி
வழங்குவான்வைத்தநந்திவரையுநாற்காதவெல்லைச்
செழுந்திருமலையாள்பூசைசெய்தசத்தீசுரத்திற்
கொழுந்துபட்டயனார்பூசைகொடுத்தபின்சிருட்டிபெற்றார்

இ-ள். வருத்தங்கொண்ட பாவவெச்சனென்னும் பிராமணனே - நீ கேட்பாயாக கிருபாவடிவமாகியபழமலைநாதர் சகலவுயிர்களுக்கும்மோட்சத்தைக்கொடுக்கும்பொருட்டு வைத்திருக்கின்றகோபர்வதமும் நாற்காதவழியிலிருக்கின்றது செழுமைபொருந்திய அழகிய பர்வதராசபுத்திரியாகிய உமையவள்பூசித்த அந்தச்சத்தீஸ்வரத்தில் முன்பு-பிர்ம்மதேவரும் அன்புகொண்டு சிவபூசைசெய்தபின்பு சிருஷ்டித்தொழிலைப் பெற்றார்—எ-று. (கூ)

பூருவமகவான்பூசை புரிந்துவானரசனானா
னேருறுமிந்திராணிபூசையாலவனைச்சேர்ந்தா
டாருகாசுரன்பூசித்துதானவர்க்கரசனானா
னாருறுவெள்ளிபூசித்தவர்புரோகிதருமானார்

இ-ள். பூர்வத்தில் தேவேந்திரன் அந்தஸ்தலத்தில்வந்து பூசைசெய்து சுவர்க்கலோகத்திற்கு அதிபதியாகினான் அழகுபொருந்திய இந்திராணியானவள் பூசைசெய்து அந்ததேவேந்திரனைப் புருஷனாகப்பெற்றாள்-தாருகாசுரன் பூசைசெய்து ராட்சதர்களுக்கு அதிபதியாகினான் ராட்சதர்களுக்கு உரிமைசெய்கின்ற சுக்கிராசாரியார் பூசைசெய்து அந்த ராட்சதர்களுக்குக்குருவாகினார்—எ-று. (௰)

உருவசிபூசையாலேயுயர்மகவானைச்சேர்ந்தா
ணிருமலநந்திவெற்பினியுநின்மகனும்போகிற்

தருமதானங்கள்செய்துசத்திநாதனையும்போற்
பருவநாதனின்மாநந்திபராயணரிருப்பாகேன்மோ

இ-ள், உருவசியானவள் பூசைசெய்துஉயர்ந்த தேவேந்திரனைக்கூடினன் ஆதலால் அந்தப்பரிசுத்தமாகிய கோபர்வதத்திற்கு நீயும் உன்குமாரனும்போய் தர்மதானங்களைச்செய்து சத்திஸ்வரனையும் வணங்கித்துதித்து பின்புஅந்தபருத்தகோபர்வதத்தில் மாநந்திபராயணரென்னும் பெரியவரிருக்கின்றார் அவரையுங்கேட்பாயாக—எ-று. (௰௧)

அந்தமாயோகிதன்னையாளுதசேவைபண்ணின்
மைந்தனேபகலுமென்றானமைமுனிவாக்கைநம்பி
யிந்தமாலவனாயினன்ஈசானகங்கையாடித்
தந்தையுமகனுஞ்சத்திதலைவனைப்பணிந்துபோற்ற

இ-ள், அந்தமகாத்மாவாகிய போகீஸ்வரரையும் நீங்காதிருந்து தரிசனஞ்செய்தால் உன்குமாரனுடையபிணிகளெல்லாம் நீங்கிவிடுமென்று அனுக்கிரகஞ்செய்தார அதுகேட்டு அந்தத்தெய்வபத்தருடையதிருவாக்கை உபதேசமாகநம்பி பாலவெச்சரும் அவர்குமாரனாகிய சசிவன்னனும இப்படிப்பட்ட பெருமையையுடைய கோபர்வதத்திற்குப்போய் ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்துசத்தீஸ்வரனைவணங்கித்துதித்து-எ

பரமதேசிகர்மாநந்திபராயணர்தம்மைப்போற்றி
யுரமுறப்பணிந்துசேவையுமபின்மைந்தன்செய்த
கரவுடைப்பவங்கள்சொன்னான்கடைக்கணால்யோகிநோக்க
விரவுபாதகங்களெல்லாமேலிடாதகன்றதன்றே

இ-ள். பரமாசாரியராகிய மாநந்திபராயணரைத்துதித்துப் பூமியிற் சரீரம்பொருந்த வணங்கிதரிசனஞ்செய்தபின்பு பாலவெச்சனென்னும்பிராமணர் தன்புத்திரன்செய்த வஞ்சகமுள்ள பாதகங்களைவிண்ணப்பஞ்செய்தார் அதுகேட்டு அந்தமாநந்திபராயணர் தமதுகிருபாகடாட்சத்தினால் பார்த்தமாத்திரத்தில் அவனிடத்திற்சேர்ந்துள்ள சகலபாதகங்களும் மேலிடாமல் நீங்கிவிட்டன-எ-று. (௰௩)

யோகிதன்பூசைக்கேற்றவுபகரணங்கள்செய்தும்
போகமார்பசுக்களைமேய்த்தும்பொற்பதம்பிடித்துநின்றான்
வேகியபவங்கணீங்கிவியாதியும்வலியும்பேயு
மேகியதுடனேபின்னர்ப்பரிகலச்சேடமீந்தார்

இ-ள். அதன்பின்பு சசிவன்னனானவன் அந்தயோகீஸ்வரருடையபூசைக்குத்தகுந்த உபகரணங்களைச்சேர்த்தும் செல்வத்தைத்தருகின்றபசுக்களைமேய்த்தும் அவரது அழகியதிருவடிகளைப்பிடித்துமிருந்தான் இங்ஙனமிருக்குங்காலையில் அவன்செய்துள்ள கொரோமாகியபாவங்க

ளெல்லாம்நீக்கி உடனேபலவியாதியும் பிரதானமான முயலகவலியும் பசாசும்-நீங்கினபிற்பாடு அவரது பரிகலப்பிரசாதத்தைகொடுத்தருளினார்-எ

பரிகலச்சேடங்கொண்டு பகத்தினிற்பூசைசெய்தா
னரியகீர்த்தியோகிசாந்தி யடியிணைதலைமேல்வைத்துத்
தெரிவுறவுபதேசித்தான் றிவ்வியஞானம்பெற்றுத்
தரிவுளமுத்திபெற்றான் றம்மையுமுத்திபெற்றான்

இ-ள், சசிவன்னனென்பவன் பரிகலப்பிரசாதத்தைப்பெற்றுக்கொண்டு அவரது திருவடியிற் பூசைசெய்தான் அங்ஙனம்பூசைசெய்தவளவில் அநுக்கிரகியாகவல்லவர் அரியதாகிய கிருபையுற அவனது நெற்றியில் லலாட இரண்டுபாதங்களையும் அவன்சிரசின்மேற்சூட்டிப் பரமோபதேசத்தைத் தெளிவுபொருந்த உபதேசித்தார் அதனாற்றிவ்விய ஞானத்தைப்பெற்று சதாகாலமும் நித்தியத்துவமாயுள்ள மோட்சத்தைப்பெற்றான் அவனது பிதாவாகிய பாவஞ்செய்தவனும் பராமனைநம மோட்சத்தைப்பெற்றா—எ-று. (௰௫)

பிறர்க்கருநரகைவிட்டுப் பெருஞ்சிவலோகஞ்சேர்ந்தார்
சுற்றச்சசிவன்னன்காதற் புலைச்சியுங்கதியிற்சேர்ந்தாள்
மற்றதிருமாலேமேலாய மாதவப்பெருமைதன்னைத்
துற்றவர்க்கின்றுஞ்சொல்வோஞ் சுவையனையென்றெருத்திலேவி

இ-ள். அவனுடைய பிதாக்களும் நரகத்தைவிட்டுப் பெரிதாகிய சிவலோகத்திற்சேர்ந்தார்கள் அங்ஙனமுத்தியைப்பெற்ற சசிவன்னனுடைய ஆசைமனைவியாகிய புலைச்சியுங் கதியைப்பெற்றாள் ஆதலால் விசேஷ தன்மையுடைய மகாவிஷ்ணுவே மேம்பாடாக பெரியோர்களுடைய பெருமையைச் சொல்லுமளவிற் குறையுமோ பின்னும் இன்னொருவிசேஷ வர்றும அம்மையாகிய தெளிவில் சுவகையென்னும் பெயரையுடைய ஒருவேசை யிருந்தாள்-எ-று. (௰௬)

நகையினனைக்கப்பன்னொறு நடையினனடையைமாற்றுந்
தகையினுந்நகைவகுப்புத் தனைத்தனுந்தனத்தைவாங்கு
மிகையினல்விழிமதுநோக்கி விழிகளிடப்பன்னுறுமிக்க
வகையினன்மகரிதாருசும் வானவர்காமுமஞ்சும .

இ-ள். அவள் நகைக்கின்ற நகைப்பினால் ஞானவலிமையை யுடையவர்களாயினும் அவர்களுள்ளத்திலும் காமமுண்டாகுமாறு நகைக்குமபடி செய்வாள், அவளது நடையினால் அவர்கள் ஞானநடையையுந் தடுமாறச் செய்வள் அவளது அழகினால் அவர்களைப் பயமுறுத்தும் செல்லவொட்டாமலும் தஸ்மானைதருமமுறுமபவொட்டாமலுங் கடுத்துவிடுவள், அவளது ஸ்தனங்களால் அவர்கள் கல்விப்பொருளையுஞ் செல்வப்பொருளையும் பறித்துக்கொள்வள், அல்லாமலும் வஞ்சகமிறைந்தகண்களால்விழித்து

ப்பார்த்து எவர்களையும் பிரமிக்கச்செய்வள் இப்படிப்பட்ட தன்மையி னால் அவளைக்கண்டால் மனிதர்களும்பயப்படுவார்கள் தேவர்களும் ப யப்படுவார்கள்-எ-று. (௰௭)

வழுவிலாப்பொருண்மிக்குள்ளார் மணந்தவர்தனந்தனான்று
மழும்விழுமாசைகூறி யருக்கிடுநல்லோர்க்காணிற்
றொழுதுளேயிருத்துந்துஞ்சிற்சோரமுஞ்செய்யுமன்றித்
தழுவியும்பொருளைவாங்குந் தவறினற்கோரல்செய்யும்

இ-ள். குற்றமில்லாத அதிகதிரவியத்தையுடையவர்கள் கூடிப்பிரிந் தகாலத்திலும் அழுவள், அல்லாமலும் ஆசைப்பெருக்கங்கூறி அவர்க ள்மேல்விழுவள் அச்சமுற்றவள்போல்நிற்பவள், நல்லவர்களைக்கண்டா ல் கும்பிட்டழைத்து மனையினுள்ளிருக்கச்செய்வள் அவர்கள் நித்திரை செய்தால் அவர்களிடத்துள்ளபொருள்களைக் களவுசெய்வள் அதுவும ல்லாமல் அவர்களைக்கூடியும்பொருளைப்பறிப்பள் அதற்குந்தவறிப்போ னால் கொன்றுவிடுவள்-எ-று. (௰௮)

வேசிதானிளைஞர்க்காணில் விருந்திட்டுமருந்தையிட்டும்
பாசமாய்த்தழுவிப்பொய்யே பழமைபாராட்டிச்சேர்ந்தும்
வாசமார்பொடிகளிட்டுவதைசெய்தவ்வாழுநாளி
லாசினற்பிணிகள்மூடி யவயவமழிந்துபோனாள்

இ-ள். அந்தவேசையானவள் வாலிபனைக்கண்டால் விருந்துசெய் தும் மருந்திட்டும் அவர்களையன்பாகத்தழுவிப் பொய்யாகப்பழமைபா ராட்டிக்கூடியும் அவர்களுக்கு வாசனைபொருந்திய சொக்குப்பொடிக ளைத்தூவியும் அவர்களைக்கொன்றும இப்படிவாழுகின்றகாலத்தில் அவ ள்செய்த பாதகங்களால் வியாதிகள்மூடிக்கொண்டு அவயவங்கள்அழிந் தபின்றாள்-எ-று, (௰௯)

வருத்தமேலிட்ட ஞான்று மாதவரொருவர்வன்ன
வருத்தியாற்பணிந்துபாதம் விளக்கிநல்லமுதமூட்டித்
திருத்தியகந்தஞ்சாற்றிச் சேடமுந்தீர்த்தத்தானுங்
கருத்தினாற்கொண்டாளன்று கடும்பிணிதீர்த்ததன்றே

இ-ள். அங்ஙனந்துன்பமேலிட்டகாலத்தில் அந்தவேசையானவள்ம காதவத்தையுடைய ஒருயோகீஸ்வரர் எழுந்தருளிவர அவரைக்கண்டு ஆசையால்வணங்கிநின்று அவரதுதிருவடிகளை யபிஷேகஞ்செய்து அ வருக்கு நன்மையானதிருவமுதூட்டித் திருத்தமாகியசந்தனம்பூசிப் பின்பு பரிகலப்பிரசாதமும் பாததீர்த்தமும் அன்பாகஉட்கொண்டாள் அப்பொழுதே அவளைச்சூழ்ந்த கொடியவியாதிகளெல்லாம் நீங்கிவிட் டது-எ-று. (௨௰)

அவன்மனந்தெளிந்தாளென்னை யடிமைகொண்டருளுமென்று
ளிவனுபதேசம்பண்ணி யிருபதந்தலைமேற்சூட்டப்

பவமறுத்தெம்மைச்சேர்ந்தாள் பாசமுஞ்சுவர்க்கஞ்சேர்ந்தார்
கவுரியிற்பற்றுதொண்டர் காதலினிருப்போமென்றார்

இ-ள். அதன்பின்பு அந்தவேசையானவள் சித்தசுத்தியுள்ளவளாகி அந்தயோகீஸ்வரனாயவரைவணங்கி ஓடசுவாமி என்னையடிமைகொண்டுரட்சிக்கவேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்தாள் அதுகேட்டு அந்தயோகீஸ்வரரும அவளுக்கு ஞானோபதேசஞ்செய்து இரண்டுதிருவடிகளும் அவள்சிரசின்மேற்சூட்டிவைவளவில் பவவிநீங்கி எமதுதிருவடியிற்சேர்ந்தாள் அவளைச்சுற்றத்தாருமசுவாக்கத்திற்பொருந்தினார்கள் ஆகையினால் உமையவளுடைய அன்பில் நாம்வைத்திருக்கும் விருப்பைப்பார்க்கிலும் பத்தர்களுடைய அன்பில் அதிகவிருப்புவைத்திருப்போமென்று திருவுளம்பற்றியருளிப் பின்னுஞ்சொல்லுகின்றார்-எ-று. (௨௧)

டாயனைத்தொண்டர்க்கீந்த வளமெலாநமக்கேயாகு
மேயவரிடத்தேயாமும் விருப்பமாயிருப்பதென்று
ராயனும்பூசைபண்ணி யடியிணைதலைமேல்வைத்து
நேயமாமுண்மைகேட்டுநித்தமுமென்றிக்கண்டான்

இ-ள். ஓ விஷ்ணுவே நீகேட்பாயாக அடியார்களுக்குச் செய்தசகலசன்மானங்களும் நமக்குச்செய்வதாகும் நாமும் அவர்களிடத்திற்றானே எப்போதும விருப்பமாகப்பொருந்தியிருப்பதென்று அனுக்கிரகஞ்செய்தருளினார் அதுகேட்டமகாவிஷ்ணுவும் பரமசிவனைப்பூசித்து இரண்டுபாதங்களையும் சிரமேல்வைத்துக்கொண்டு அன்பாகியமெய்ஞ்ஞானவுபதேசத்தைப்பெற்றுச் சிதம்பரத்தில் நடனதரிசனமுங்கண்டு தரிசித்தார்-எ-று. (௨௨)

கருக்குழிவேண்டிற்கொல்லுங் காலனைவேண்டிற்செக்கி
னெருக்குணவேண்டினந்த நேசனாநிந்தைசெய்மின்
றிருக்கிளர்செல்வம்வேண்டிற் றிகழ்முத்திவேண்டிற்றொண்டர்
வருக்கமேபோற்றுமென்று மறைந்தனன்மன்றுளாடி

இ-ள். பிறவிக்குழியைவேண்டினால் கொல்லுகின்ற யமனைவேண்டினால் செக்கிலிடத்தில் நெருக்குண்ணவேண்டினால் நமது அடியார்களை நிந்தைசெய்யுங்கள் லட்சுமிவிலாசம்பொருந்திய செல்வம்வேண்டினால் பிரகாசிக்கின்றமோட்சம்வேண்டினால் அடியார்கள்கூட்டத்தை வணங்குங்களென்றனுக்கிரகஞ்செய்து சிதம்பரத்தில் நடனஞ்செய்தருளிய பரமசிவனானவர் சிதாகாசத்தின்மறைந்தருளினார்-எ-று. (௨௩)

புராரிதான்மறைதல்கண்டு போதகவுரைப்பினாலே
முராரிமுன்னிற்றல்போல முதல்வனைப்பணிந்துபோற்றிக்

காரார்மாமலர்கள்கொண்டு கழலிணைபூசைசெய்து
நாரணன்வைகுந்தஞ்சென்று நயந்தனனுண்மைவீட்டை

இ-ள். திரிபுராந்தகராகிய பரமசிவன் மறைந்தருளினதைக்கண்டு உபதேசமகிமையினால் விஷ்ணுவானவர் பரமசிவன் முன்னேயிருப்பதுபோலக்கொண்டு அவ்வாலயத்திலிருக்கின்ற சோலைகளில் வண்டுகள்மொய்க்கின்ற புஷ்பங்களைக்கொண்டு இரண்டுதிருவடிகளையும்பூசித்து நரசிம்ம மூர்த்தியாகிய மகாவிஷ்ணுவும் வைகுந்தத்திற்குப்போய் உண்மைவீட்டையிலிருந்தார்-எ-று. (உ௪)

முன்றிருமாலுக்கிந்தமுதுகுன்றினுபதேசித்து
மன்றிலேயாடல்செய்யுமழகினையன்றியுங்குன்று
மொன்றெனவுறுமோதாயன்றியும்பாமன்றிற்றிருக்கூத்தாடிக்
குன்றிலேயிருப்போமென்றசொல்லையுமிதனாற்கண்டோம்

இ-ள். முற்காலத்தில் மகாவிஷ்ணுவுக்கு இந்த விருத்தாசலத்தில் உபதேசஞ்செய்து சிதம்பரத்தில் திருநடனஞ்செய்கையைக்காட்டியருளிய சம்பந்தத்தினால்சிதம்பரமும்விருத்தாசலமு மொன்றென்றுறுதிசெய்தோம். அல்லாமலும் உயர்ச்சிபொருந்தியசிதம்பரத்தில் திருநடனஞ்செய்து விருத்தாசலத்தில் வசித்திருப்போமென்று பரமசிவன் திருவாய்மலர்ந்தருளிய தன்மையையும் இதனால் அறிந்தோம்—எ-று (உ௫)

இரதமாகுளிகைநன்மையிருப்புபொன்னாகுமின்னம்
வரமுளமிருதசஞ்சீவனமுண்டேன்மடிந்தாருய்வ
ரரனருள்பெற்றுநல்லாயபாதமுடையவர்நல்ல
குரவனைநேரின்மைந்தன்பெருமையைக்கூறப்பாற்றே

இ-ள். இரசகுளிகையானது நன்மையுள்ளதாயிருந்தால் இரும்புபொன்னாவது சத்தியம் மேன்மையான மிருதசஞ்சீவனமென்னுமகாசித்தியுமருந்துமிருந்தால் இறந்தவர்கள்பிழைப்பார்கள் அதுபோலநல்லவிகுந்த சற்குருவானவர்கிடைத்தால் எவர்களுஞ்சிவகடாட்சம்பெற்று நல்லாம்பாதமாகிய சத்திநிபாதத்தையும்பெறுவார்கள் அவ்வண்மையான சற்குருதரிசனஞ்செய்தசற்சீஷனுடைய பெருமையை நம்மாலெவ்விடத்துஞ்சொல்லமுடியுமோ-எ-று. (உ௬)

வேறு,

அத்தன்விருத்தகிரிக்கதையைத்தொழு தர்ச்சனைசெய்தவர் பற்றி
வணங்குவா, சத்தமுரைத்தவ ரத்தமுரைத்தவர்சந்ததிசொன்னவர்தஞ்
செவியுற்றவ, ரொத்தனைமாதர்க ளொத்தனைவேறுப ரின்றவராயின மெக்
கொலைசெய்யினு, மெத்தியபொன்சிவனதெடுக்கினும் வெவ்வினை
யுண்கினுமேவிலராவலம்.

இ-ள். பழமலைநாதருடைய விருத்தாசலபுராணத்தை வணங்கிப் பூசித்தவர்கள் அதைவிடாமல் எழுதினவர்கள் அதை ஓசையாகப்படித்தவர்கள் அதற்குப் பொருள்சொன்னவர்கள் அதைச்சிவசன்னிதானத்திற் றுதித்தவர்கள் அங்ஙனந் துதிப்பதைத் தங்கள்செவியினிடமாகக் கேட்டவர்கள் இவர்களெல்லாரும் எவ்வளவு ஸ்திரீகள் எவ்வளவு பிராமணர்கள் தாய்தந்தைகள் பசுக்கள் முதலிய அந்தக்கொலைபாதகங்களைச் செய்தாலும் பிரகாசிக்கின்ற பொன்னையும் சிவாலயப்பொருளையுங் களவுசெய்தாலும் மதுபானஞ்செய்தாலும் அதுகளால் ஒருபாதகங்களையும் பொருந்தார்கள்-எ-று. (௨௭

ஒப்பியபாதகமத்தனையும் முரகத்துரிபோலவொருக்கியருக்களை,
மெய்ப்பயிருளைப்படி யப்பாயாகுவரெத்தனைவேண்டினரத்தனையும்மவர்,கைப்படுமுத்திகள் வித்தைகளசித்திகளைப்படுமிக்கதைசெப்புமிடத்திலனி,லப்பருயம்மையுமத்தலமேவுவரந்தியகாலமும்வந்தெதிர்நிற்பார்

இ-ள் பழைமையாகப் பொருந்திய சகலபாவங்களையும் பாம்பினுடைய தோலையுரித்தது போலவும் சூரியனுடைய சந்நிதானத்திற்பட்ட இருளைப்படிப்பேயோ அதுபோலவுங் கெடுத்து சூரியப்பிரகாசம் போலப் பிரகாசிப்பார்கள்-அல்லாமலும் எதை விரும்பினாலும் அவைகளெல்லாம் அவர்களுக்குக் கைவசமாகும் மோட்சமும் வித்தையுஞ்சித்திகளுங்கைவசமாகும் இந்தப் புராணத்தைப் படிக்கின்ற ஸ்தானத்தில் பரமசிவனுஞ் சிற்சத்தியும் அதுவேஸ்தலமாக எழுந்தருளியிருப்பார்கள் அன்றியுமந்தகாந்தத்திலும்வந்து தெரிசனமாவார்கள்-எ-று. (௨௮

சத்துருநாசமடைந்தளகேசன் தனக்கிணையாவர்மலர்த்திருமேவுவன்
வித்தகராகுவர்மைமையின் வெம்மைகள் வேந்தரிராசிகள் பாம்புபசாசுகள்,
பந்திரமாமிருகப்பயமற்றிருபத் தொருகோடியவர்க்குளகால்வழி
யத்தனையும்பதமெய்துவர்புத்தகமங்கைதரிப்பினுமப்படியாமால்

இ-ள்-சத்துருவாதையில்லாமல் செல்வத்திற் குபேரனுக் கொப்பாகவாழுவார்கள் அவர்களிடத்தில் மலர்மகளாகிய லட்சுமிவாசமாய்ப்பிரியாதிருப்பாள் ஞானசொரூபராவார்கள் இம்மையில் வெவ்விதானகொடுமைகளும் ராஜகூட்ட சயமும் சர்ப்பபயமும் பசாசுபயமும் அஸ்திரபயமும் மிருகபயமும் இல்லாமல் மறுமையில் அவர்களும் அவர்கள் வமிசத்தில இருபத்தொருகோடி கால்வழியிலுள்ளபிதாக்களும் மோட்சத்தைப்பொருந்துவார்கள் அல்லாமலும் இந்தப் புத்தகத்தைக் கைகளில்வைத்திருந்தாலும் அந்தப்பலனைப் பெறுவார்கள்-எ-று. (௨௯

வேறு

திங்கண்மும்மழைபெய்கசெழும்புவி
பொங்கிவாழ்கபுரவலனோங்குக

நங்கள்சங்கரன்பூசைநலம்பெற
சங்கரன்னடியார்கடழைக்கவே

இ-ள். மாதந்தோறு மும்மாரி பொழியக்கடவது செழுமைபொருந்திய உலகம் செல்வமிகுந்துவாழக்கடவது, இந்த வுலகத்தை யரசுசெய்கின்ற அரசன் வாழக்கடவன் நமது பரமசிவனுடைய பூசையானது நலம்பெறக்கடவது பரமசிவனடியார்கள் எப்போதுந் தழைக்துவாழக்கடவார்கள்—எ-று, (௯௰)

சசிவன்னச்சருக்க-முற்றும்பெற்றது.

ஆக சருக்கம் - ௰அ -க்கு - திருவிருத்தம் - ௪௱௯௫.

விருத்தாசலபுராணம் - முற்றிற்று.

சிவமயம்.

அருளிறைவணக்கம்.

இந்திரபீடத்திறைகரபாத்திரரியற்றத்தாத்திரோயர்செங்கமல
சுந்தரர்நாகைச்செழும்பதியருணசலசுவாப்புதியெழிற்பிறைசை
வந்தருளருணசலகுருவிவர்தம்பதங்களென்மனத்துறம்பரிசார்[ணுல்
சந்தமார்விருத்தாசலப்பெரும்புராணந் தனக்குரைசெயத்துணிந்தன

திமையேபுரியுமெனையொருபொருளாத்திருவுளங்கொண்டெனைப்போ
ல்வந், தாமைபோற்கருதித் தன்னுருவாக்கியடிமலரென்சிரந்தாக்கி
யேமவோர்மொழிப்பாலூட்டியபிறைசையெம்மருணசலசிவமென்
னுமினைசமின்றுபழமலைப்புராணந்தனக்குரைநவிற்றிடுமன்றே.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
பெயர் விருத்தாசலஸ்தல மான்மியம்
தொடர் எண் 3044
தொகுப்பெண் VIII D 203 (அ)

வி...

4...

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20

சு. இராஜமாணிக்கம்பிள்ளை.

ஸ்ரீ வேலன் அச்சுக்கூடம்,
சிதம்பரம்.

Registered Copy - Right.

விலை ] 1927. [ அணா 4.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றமென்னும்

# விருத்தாசல புராணம்.

இஃது

பாலருக்கும் மாணவர்க்கும்

உபயோகமாகும் பொருட்டு,

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்**

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

**ஸ்ரீமான் ச. விசுவநாதபிள்ளையவர்கள்**

அநுமதிப்படி

சிதம்பரம் நாவலர் தமிழ்க்கலாசாலை யுதவியாசிரியர்

**க. இராமமாணிக்கம்பிள்ளையால்**

வசனநடையாக எழுதி,

சிதம்பரம்

**ஸ்ரீ வேலன் அச்சுக்கூடத்திற்**

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] அக்ஷயவருஷம் தைமீ [இதன்விலை அணா 1.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை

சென்னை-20.

அமிழ்தினுமினிய தமிழ் மொழியை அன்புடன் போற்றி [illegible] புண்ணியசீலரும் சைவப்பிரசாரகரும் மெய்யன்பர் [illegible] மெய்விதிரா ஆண்மையிற் சிறந்தவரும், கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் வாக்குநலத்தில் வல்லவரும், ஏகாந்தத்திலும் உத்தம தானமாகிய வித்தியாதானப் பெருந்தருமஸ்தாபகரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் மாணாக்கரின் மாணாக்கரும், அவர் தம் பெருந்தருமங்களைப் பொன்னேபோற் போற்றி வளர்ச்சி புரிவதுடன்* என்னை நன்னிலையிலாக்கி முன்னுக்குக் கொண்டுவந்த நன்மையாளரும் வித்யாகுருவுமாகிய ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் பொற்பாதகமலங்களைத் துணைகொண்டு அவர்களின் ஞாபகார்த்தமாக முன் மூன்று இந்நூலை எழுதத் துணிந்தனன்.

விருத்தாசலத்திற்கு ஒருசமயம் போயிருந்தபொழுது அதன் பெருமை முதலியவைகளைக் கேட்டுப்படிக்க, புராணத்தைக் கொண்டு பார்த்தவளவில் அப்புத்தகம் அச்சிடப்படவில்லை என்று அறிந்து என்போல்வாரும் பெருமைகளைத் தெரிந்துகொள்ளும்படி, துறையூர் ஸ்ரீ சிவப்பிரகாசதேசிக ராதீனம் ஸ்ரீமத் ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகரவர்கள் செய்தருளிய விருத்தாசலபுராணம் செய்யுள் ரூபமாயிருப்பதுகருதி அதற்குச்சிறிது மாறுபடாவண்ணம் என் சிற்றறிவுக்கெட்டியவரை வசனரூபமாக எழுதி நாவலர் பெருமான் தருமவித்தியாசாலைத் தருமபரிபாலகரும் அன்பு, அறிவு, சாந்தம் ஆகிய நன்மைக்குணங்கள் அமையப்பெற்றவரும் ஆகிய ஸ்ரீமான் ச. விசுவநாதபிள்ளையவர்களின் பேராதரவுடன் அச்சிற்பதிப்பித்துள்ளேன்.

ஆசிரியர் கருத்துக்கு ஒரு சிறிதும் மாறுபடாவண்ணம் உரைவரைய வல்ல அறிவிற்சிறந்த ஆன்றோர்கள்பலர் செய்யத்தக்க இந்த அரும்பெருஞ் செய்கைக்கு அருகனல்லாத சிறியேன் எழுதிய இச்சிறுபுத்தகத்தில், பிழைகளே பெரும்பாலும் பெருகிக்கிடத்தல் திண்ணம். அறிவுடையவர்கள் குற்றங்களைப் பொறுத்துக் குணங்களைக் கொள்ளுமாறு பன்முறை வந்திக்கின்றேன்.

அடியேனை ஒரு பொருளாகஎண்ணி என் வேண்டுகோட்கிணங்கி விலையேறப்பெற்ற அருமையான நேரத்தை ஆசீர்வாத முகத்தான், சிறப்புப் பாயிரஞ் செய்தருளிய தில்லைவாழந்தணருளொருவராகிய உபந்யாச ரத்னாகரம் பிரம்மஸ்ரீ வி. ஸ. சிவகாமசுந்தரதீக்ஷிதரவர்கள் திருவடிகளை வணங்கித் துதித்து வாழ்த்துகின்றேன்.

இன்னும் இதற்கு இன்றியமையாத் துணையாயிருந்து உதவிசெய்த மற்றும் என் அன்பர்களின் செயல்களுக்கும் என்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவனாகின்றேன். இவையெல்லாம் முற்றுவித்தருளிய சிற்சபை பொலியத் திருநடம்புரியும் அற்புதக்கூத்தனாகிய நடராஜப்பெருமான் திருவருளை மனமார வந்தித்து வாழ்த்துகின்றேன்.

க. இ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப் பாயிரம்.

அன்பார்ந்த சிவாகத சிகாமணிகளாகிய தமிழ்மக்களே

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த நித்யசுத்தாத்வைதப் பெருங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவம், அபார ஸம்ஸார ஸாகரத்தில் அநாதிகாலமாக மூழ்கி வருந்துகின்ற ஆன்மகோடிகளுக்கு நிஜஸ்வரூபத்தைக்காண்பித்துத் தன்சரணாம்புஜத்தில் அபேதானந்த முத்தியைத் தந்தருள, அநேக திவ்யசிவஸ்தலங்களில் திருக்கோலங்கொண்டு அருள்புரிந்து வருகின்றாரென்பது வேத லோக ஸம்ப்ரஸித்த விஷயம்.

மேற்கூறிய ஆறு சிவஸ்தலங்கள் பலவற்றுள் மிகச்சிறப்பு வாய்ந்ததும், க்ஷேத்ரம், தீர்த்தம், மூர்த்தி என்ற முக்குணாதிசயங்கள் நிரம்பப் பெற்றதும், பதினெண் புராணங்களுள்ஒன்றாகிய ப்ராஹ்மவைவர்த்தமென்ற புராணத்தில் புகழ்ந்தோதப்பெற்றதும்,பராபரவித்தைகளாலும்அறிதற்கரிய மாஹாத்மியங்களோடுப்ரகாசிக்கின்றதுமான "விருத்தாசலக்ஷேத்ரமாஹாத்மியமானது முதன்முதலில் ஸ்ரீமத் விருத்தாசலேசுவரரால் விருத்தாம்பிகைக்கு உபதேசித்தருளப்பெற்றது.

பரமன் பிறகு ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய ஹிரண்யகர்ப்பருக்கு உபதேசித்தார். இவ்விரண்யகர்ப்பரிடமிருந்து முறையாக வேதவ்யாஸர் நன்றாய்க் கிரஹித்தார். பின்னர் வ்யாஸமுநிவர் தாமுணர்ந்த விருத்தாசலபுராணத்தைத் தன் அன்பனாகிய ஸூதருக்குத் திருவாய்மலர்ந்தருளினார். பௌராணிகோத்தமராகிய ஸ்ரீமத்ஸூதமஹாமுநிவர் தவச்ரேஷ்டர்களாகிய, நைமிஷீயமஹாரிஷிகளுக்கு அளவற்றஆனந்தத்துடன் போதித்தார். கூறிய குருசிஷ்யபரம்பரையாகப்ராப்தமான இவ்விருத்தாசலபுராணத்தை எக்காலத்தும் எல்லோர்க்கும் உதவுமாறு ஸ்ரீமத் வேதவ்யாஸர் தமது வாக்வல்லபத்தால் 10-வது புராணமாகிய ப்ரஹ்மவைவர்த்தத்தினிடையே சேர்ப்பித்தார்.

இவ்விதவைபவங்களோடுப்ரகாசிக்கும்விருத்தாசலபுராணம் வடமொழியைக்கற்றுணர்ந்த பண்டிதர்களுக்குமாத்ரம் பயன் அளிப்பதையும் ஏனையோர்க்குப்பயனளியாததையும் கண்ட திருக்கைலாசபரம்பரையைச்சேர்ந்த துறையூர் ஞானகூத்தசிவப்பிரகாசதேசிகர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானகூத்த சிவப்பிரகாசதேசிகர் அவர்கள் எந்நாட்டிலும் நன்றாகிய இத்தென்னாட்டிலேதமிழ்மக்கள்நன்குணர்ந்து ஒழுகி ஆனந்தமுறவெண்ணி செந்தமிழ்ப் பாஷையிலே "விருத்தாசல புராணத்தைச் செய்யுளாகச்செய்து வெளியிட்டார்.

# சிறப்புப் பாயிரம்.

இத்தமிழ்ச்செய்யுள் "விருத்தாசல புராணம்" தமிழ்ப்பாஷையை நன்றாய்க் கற்றுணர்ந்த பண்டித ஜனங்களுக்குமாத்திரம் பயன்படுவதையும், ஸாமான்யக் கற்றறிவாளர்கட்குப் பயன்படாததையுங்கண்டு, பாலர்முதற் பண்டிதர் வரையில் எல்லோரும் படித்துப்பயன்பெறவெண்ணி, சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தமிழ்க்கலாசாலை ஆசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ சு. ராஜமாணிக்கம்பிள்ளை அவர்களால் மிக்கவன்போடும், சிரத்தையோடும், நன்முயற்சியோடும், செவ்வனே விளங்கும்படிக்குச் செந்தமிழ் நடையில் மூலப்பிரதிக்கு விரோதமின்றிச் சுருக்கமாகவும், ஸரஸமாகவும், ஸரளமாகவும் மேற்சொல்லிய விருத்தாசல புராணம் கத்யரூபமாக எழுதிமுடிக்கப் பெற்று, அச்சிட்ட பிரதி ஒன்று அன்போடு ஷை பிள்ளை அவர்களால் தரப் பெற்றேன்.

நம் தமிழ்மக்களுக்கென்றே மிகப்ப்ரயாஸத்துடன் எழுதிய கத்யரூபமான "ஸ்ரீமத் விருத்தாசலபுராணத்தைத் தமிழ்மக்களாகிய தாங்களும் ஏனையோரும் வாங்கிப்படித்து, அதன்படி ஒழுகி ஸ்ரீமத் விருத்தாம்பிகா ஸமேத ஆனந்தஸாகர ஸார்வபௌம ஸ்ரீமத் விருத்தாசலேச்வர பாதபத்ம நிழலில் நீடூழிவாழ எல்லாம்வல்ல ஸ்ரீமந் நடராஜமூர்த்தியைப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு,

| | |
|---|---|
| அக்ஷய ஞூ | பந்யாஸாத்ஞைகரம், |
| தைமீ 29உ | வி. எஸ். சிவகாமஸுந்தர தீக்ஷிதர், |
| 11—2—1927. | 6, தெற்குஸந்நிதி, சிதம்பரம். |

---

சிதம்பரம் நாவலர் தமிழ்க்கலாசாலைத் தமிழுபந்யாசகர்

பிரமஸ்ரீ

## வித்வான் N. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் இயற்றிய சிறப்புப் பாயிரம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கந்தனை யளித்த கன்னியோர் பாகன் காமுறு பழமலை புராணம்
செந்தமிழுரையாற் செய்தனன் றில்லைச் சீர்பெறு மிராஜமாணிக்கன்
பைந்தமிழ் கமழு நாவலர் கழகப் பண்டித னுவலர் தரும
முந்துற வளர்த்த மெய்கொள்சீர்ப் பொன்னம்பலவனென் முதல்
[வனற்சீடன்

---

# சருக்கவகராதி.

| சருக்கம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | அகத்தியச் சருக்கம் ... ... | 7 |
| 2. | அன்பர் பூசைச் சருக்கம் ... ... | 34 |
| 3. | உருத்திராக்கச் சருக்கம் ... . | 42 |
| 4. | கடவுள் வணக்கம் ... ... | 1 |
| 5. | கலிங்கர் சருக்கம் ... . . | 28 |
| 6. | கலியகல் சருக்கம் ... ... | 30 |
| 7. | கோபாலவந்தச் சருக்கம் ... ... | 45 |
| 8. | சசிவனைச் சருக்கம் ... ... | 48 |
| 9. | சிவக்ஷேத்திரச் சருக்கம் ... ... | 43 |
| 10. | சிவபூசாவிதிச் சருக்கம் ... ... | 35 |
| 11. | சுவேதச் சருக்கம் ... ... | 32 |
| 12. | தலச்சருக்கம் ... ... | 9 |
| 13. | தீர்த்தச் சருக்கம் ... ... | 11 |
| 14. | நிருத்தச் சருக்கம் ... ... | 23 |
| 15. | பிருடிதச் சருக்கம் ... ... | 47 |
| 16. | புராண வரலாறு ... ... | 3 |
| 17. | விதர்க்கணைச் சருக்கம் ... ... | 16 |
| 18. | விபசித்துச் சருக்கம் . . . . | 19 |
| 19. | விபூதிச் சருக்கம் . . ... | 40 |
| 20. | விருத்தகிரிச் சருக்கம் ... ... | 4 |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 19 | செலதல | செய்தல |
| 14 | 16 | திலகணுப | திலகணுப் |
| 17 | 25 | கதையக | கதையைக் |
| 23 | 1 | மதத்த | மதத்தா |
| ,, | 3 | வெஞ்சு | லெஞ்சு |
| ,, | 4 | ணந்தனன் | னந்தனன் |
| | 21 | இரண்டாக் | இரண்டறக |
| 27 | 21 | அகனை | அதனை |
| 41 | 2 | வேதகஙகளை | வேதங்களை |
| ,, | 17 | விளமபும | விளம்பும் |
| | 30 | அருளுட | அருளுடை |
| | 24 | குவித்து | காங்குவித்து |
| 44 | 10 | மாணுந்தத்தல் | மாணுந்தத்தில் |
| 48 | 21 | பதவிகளை | பதவிகளைப் |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விருத்தாசல புராணம்.

## கடவுள் வணக்கம்.

### ஆழத்துப்பிள்ளையார்.

திருவுறு கலசமுந் திருந்து மழுக்கரமும்
கருணைபூத்தகமுந் திண்மைமையக்காய்க்கரமும்
பருவமாய்ந்த தாளமாமுகமும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம். 1

### திருமுதுகுன்றநாதர்.

திருமாலு நான்முகனுந் தேவர்கோவுந்
தேவர்களு முனிவர்களுஞ் சித்தர்களும்
அருமறையு மறியாத வையாரு
மாபரி நாயகனாதியாய நின்றமூர்த்தி
உருவாயகிரிவடி வாயனந்தகோடி
பொலிவுடைய கொடுமுடிகளாகி நின்ற
பெருவாழ்வை திருமுதுகுன்றுடையான்றனைப்
பொருகருணையாளனையாம் வணங்கலுற்றாம். 2

### பெரியநாயகியம்மை.

பச்சைமலை பவளமலைதனிற்சேர்ந்தமைபோலப்
பரிவுடைய திருவடியும் அம்மலைமேலுற்ற
மெய்சுமந்த திருமுகமும் பொற்சத்திருவிடையும்
விழிமூன்றுங் கரநான்கும் பெரியநாயகியார்
கச்சிருந்த முலைத்தடமு முகவாக்குங்
கருங்குழலும் வெண்ணகையுஞ் செய்யவாயும்
நச்சுமடியார்பிறவி யறுக்குந்தாளும்
நைந்துருகிப் புந்தியினிற் சிந்தைசெய்வாம். 3

### விநாயகர்.

ஒருமலையாற் புரமலையு மொருமைந்தன் றிருமைந்தன்
இருமலையுந் துமமலையு மெதிர்மலையும் வினைமலையும்
பொருமலையும் விம்மலையும் பொம்மலையும் புடைத்தருளிக்
கருமலையும் பெருமலையிற் கைம்மலையைக் கைதொழுவாம்.

### சுப்பிரமணியர்.

திருக்குமரம் போலவாருந் திருப்பாதங் கண்டாரை
உருக்குமரன் றிருக்குமர னுறருரைசெற்றுரை
முருகக்குமரன் றோளுக்கு முழுவயிர முளைத்ததைத்
தருக்குமரம் பைக்கனிபோற் றந்தானைச் சிந்தைசெய்வாம்.

### திருஞானசம்பந்தர்.

மருளோடப் புத்தரெலா மருண்டோட வருகரிடத்
தருளோட வாறோட வாற்றெதிரே யேடோட
வெருளோடப் பாண்டியனார் வினையோடச் செய்தடியார்
இருளோட வருளோடப் பெற்றானைப் பதம்போற்றி.

### திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர்.

மருங்குகடற் கல்மிதப்பில் வந்தார்தம் பதம்போற்றி
பொருங்கரியேறு கைலையினிற் போனார்தம் பதம்போற்றி
நெருங்குகுநரி பரியாக்கி நிறுத்தினார் தம்பதம்போற்றி
இரும்பொருள்கேட் டானைப்பாக் கந்திருந்தார் தம்பதம்போற்றி.

### வாழ்த்து.

வானவர்கள் மாணினங்கண் மறையவர்கண் மறைவொலியி
யானசிவ சமயமே தாகமங்கடம்மோங்க
ஞானமுளா ராதியர் நற்றடியுந் தழைத்தோங்க
தானதனந் தழைத்தோங்கத் தப்பணியெலா நைந்தோங்க.

தெய்விகமா முனாருணரா திருமேனிதனைநண்ணுந்
சைவமறைப் பொருளுமுறுந் தானிகருந் தழைத்தோங்க
மெய்விரவுஞ் சிவனடியார் மேன்மேலுந் தழைத்தோங்க
பொய்விரவா முனிவர்களும் புண்ணியருந் தழைத்தோங்க.

### நூற்பயன்.

தவமேதுஞ் செயவேண்டாந் தருமங்கள் செயவேண்டாம்
புவனேசன் விருத்தகிரிப் புராணத்தைப் புலமாட்டார்
கவலாதே கற்றோருங் கேட்டோருங் கதியடைவார்
சிவனாணை சிவனாணை சிவனாணை சத்தியமே. 1

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# புராண வரலாறு.

திருக்கைலாச மலையில் எழுந்தருளியிருக்கும் பரமசிவன் பார்வதி தேவியாருக்குப் பதினெண்புராணங்களையும் உபதேசஞ் செய்தருள, அவற்றைப் பக்கத்திலிருந்து கேட்டருளிய நந்தியெம் பெருமான் வியாசமுனிவருக்குச் சொல்லியருள, அம்முனிவர் சுமந்த முனிவருக்குச் சொல்ல, அவர் தெய்வவனமருக்குரைப்ப, அவர் சூதமுனிவருக்குச் சொல்ல அச்சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்களுக்குச் சொல்வாராயினர்.

அப்பதினெண்புராணங்களாவன, பிரமபுராணம், பதுமபுராணம், வைணவபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், காந்தபுராணம், வாமனபுராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம் என்பனவாம்.

இவற்றுள், சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம் என்னும் பத்தும் சிவபுராணங்களாம். காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவதபுராணம் என்னும் நான்கும் விஷ்ணுபுராணங்களாம். பிரமபுராணம், பதுமபுராணம், என்னும் இரண்டும் பிரமபுராணங்களாம். ஆக்கினேயபுராணம் ஒன்றும் அக்கினிபுராணமாம். பிரமகைவர்த்த புராணம் ஒன்றும் சூரியபுராணமாம். இப்பதினெண் புராணங்களுள்ளும் பத்தாவது புராணமாகிய பிரமகைவர்த்தபுராணத்தில், சிவபெருமான் உமாதேவியாருக்குத் திருவாய்மலர்ந்தருளிய விருத்தாசல மான்மியத்தை, நாதசன்மாவானவர் அனவர்த்தினிக்குக் கூறியவாறு சூதமுனிவர் சௌனகாதிமுனிவர்களுக்குச் சொல்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

## விருத்தகிரிச் சருக்கம்.

திருநுதலில், திலகம் அணிந்து ஒளியுடன் விளங்கும் தேவியே! நீ இவ்விருத்தகிரியின் பெருமையைக் கேட்பாய்:— "அரிபிரமேந்திராதி தேவர்களனைவரும், இவ்விருத்தகிரியின் பெருமையை அறியமாட்டார்கள்; நீ பாலப்பருவத்திலிருந்தமையால் நாம் இதுகாறும் அதன் பெருமையை உனக்கும் சொல்லவில்லை. ஆதலின் உலகில் எவர்கள்தாம் அறியவல்லவர்கள். நீ எமது திருவுருவிற் பாதிவடிவா யிருத்தலினாலும், இமமலை உனது குலமாயிருத்தலினாலும் இதன் பெருமையை உனக்குச் சொல்லுதல் தகும்." என்று சிவபெருமான் உமாதேவியாருக்குத் திருவாய்மலர்ந்தருளினார்.

மறையவர்கள் ஓதும் வேதவொலி நிறைந்த இவ்விருத்தகிரியானது, பொன்மலை முதலிய எண்ணிறந்த மலைகளுக்கெல்லாம் புண்ணியம் நிறைந்த சாரமாகும்; இந்திரன் முதலிய தேவர்கள்யாவரும் இறந்தகாலத்திலும் இது ஞானவொளி வீசிக்கொண்டு என்றும் அழிவுறாமல் நின்று விளங்கும்; மும்மூர்த்திகளும், தேவர்களும், முனிவர்களும், யோகிகளும், சித்தர்களும், நிறைந்து வாசஞ்செய்யும் உண்மைத்தலமாகும். நாம் வேறு அம்மலை வேறு என்னும் பேதம் இல்லை. நமக்கு உன்னிடத்திலிருக்கும் விருப்பத்தைக் காட்டிலும் அம்மலையினிடத்தில் அதிக விருப்பமாயிருக்கும்.

இன்னும் அம்மலை நாம் இச்சையுற்றுக்கொள்ளும் வடிவத்துள இருதயஸ்தானமாயும், நம்மை ஒத்ததாயும், அநாதியாயும், சிவலிங்க வடிவமாயும், நம்மிருவருக்கும் சந்தோஷத்தைத் தருவதாயும், வேதங்களின் முடிவாயும் விளங்காநிற்கும். திருமுதுகுன்றமானது, தன்னை இடைவிடாமல் தியானிப்பவர்களின் துன்பமனைத்தையும் நீக்கி இன்பமெவற்றையும் எளிதிற்கொடுக்கவல்லது; அளவில்லாத சிகரங்களையுடையது; தன்னிடத்தில் வாசஞ்செய்தவர்களுக்கும் தன்னை அன்புடன் அருச்சனை செய்தவர்களுக்கும் கொடிய தீவினைகளை ஒழித்தருளவல்லது.

மற்றைத் தலங்களிலிருந்து தவத்தைச்செய்த பெரியோர்களைக்காட்டிலும், இவ்விருத்தாசலத்திற் பிறந்த மூடர்களே சிறந்த பெரியோர்களாவர்கள். அசையும்பொருள் அசையாப்பொருள்கள்

ஆகிய இருவகைப்பட்ட உயிர்களெல்லாம் முற்பிறப்பில் அளவில்லாத தவத்தைச்செய்து இறந்தபின் இத்தலத்தில் வந்து பிறக்கும். இத்தலத்திலவசிக்கின்ற சிறந்த பேதைகளும உயர்ந்த தேவராம். இவ்விருத்தகிரியின் எல்லையாகிய ஐங்காததூரத்திலும கூப்பிடு தூரத்திலும் குடியிருப்பவர்களெல்லாரும தேவர்கள்; கோபுரதரிசனங்கிடைக்கத்தக்க இடங்களில் இருப்பவர்கள், அவர்களிலும மேலானவர்கள்; மலையைச்சூழக் குடியிருப்பவர்கள், மகாவிஷ்ணுவையும் பிரமாவையும ஒப்பானவர்கள். இம்மலையில் வாசஞ்செய்பவர்களுக்குத் திரிகுணதோஷமும, சர்வபிணிகளும், மிகுந்த பசியும, தீயவினைகளும, நவக்கிரகபீடையும, தரித்திரநித்திரையும், இராக்ஷத வாதையும என்றும இல்லையாம. திருமால் வணங்குகின்ற இத்திருமுதுகுன்றமே ஒரு பெரிய விருக்ஷமாகவும், வேதாகமங்களே மிருகம பறவைகளாகவும மனிதர்கண்களுக்குப் புலனாகும. ஆதலின் நமது புகழ் இத்தன்மையதென்பதை எவரும அறியார்கள். சிதம்பர சிற்சபையில நிருத்தஞ்செய்வோம், திருமுதுகுன்றினில் இருப்போம என்று நமது உண்மைவடிவைத் தரிசித்தவன எவனாயிருந்தாலும, அவன தேவனேயாவன்; அப்பொழுதே அவனுக்குச சகல சித்திகளும் சித்தியாகும. இது சத்தியம, சத்தியம என்று சிவபெருமான திருவாய்மலர்ந்தருளினார்.

முற்காலத்தில், நான்கு முகமுடைய பிரமதேவர், நீரையுண்டாக்கித் தமது வீரமாகிய விந்துவை விட்டார். அது நீரில் முட்டையாக மிதந்தது; அதனையுடைத்தலும, அதினின்றும உண்டாகிய முக்குணங்களில ஐம்பூதங்களும தோன்றின. திருமாலின் இருகாதுகளிலுமுள்ள குறும்பியிடத்தில் மது, கைடவர் என்னும் பேரையுடைய இரண்டு ராக்ஷதர்கள் பிறந்து விஷ்ணுவைஎதிர்த்து யுத்தஞ்செய்தனர். அப்பொழுது விஷ்ணு அவர்களை வெல்லமுடியாதவராய் என்செய்வோமென்று ஏங்கிய பின் ஒருவாறுதெளிந்து அவர்களைப்பார்த்து 'உங்களுக்கு வேண்டிய வரங்களைக்கேளுங்கள்' என்று சொன்னார். அதனைக்கேட்ட மதுகைடவர்கள் 'எங்களுக்குத் தோற்றுப்போன நீ எவ்வாறு வரங்களைத்தருவாய்' என்று கூறிப் பின்னும 'உன்னை வென்ற எங்களிடத்தில் வரங்கேள், தருவோம்' என்றனர். மாயவனாகிய மாலும் "என் கையினால் நீவிர் மாயும்படியான வரத்தைக்கொடுங்கள்" என்று கூறலும், அவர்கள் அவ்வாறே கொடுத்தார்கள்.

மாயவன் கையினால் மது கைடவர்கள் மடிந்தொழிந்தார்கள் அவர்களின் மாமிசங்கள் பிரமா சிருஷ்டித்த நீரைத் தூர்த்தன. அந்நாள்முதல் இந்தப்பூமிக்கு மேதினி எனனும் பெயர் வழங்குவதாயிற்று. அந்தநீரும் இந்தமாமிசங்களும் ஒன்றாய்க்கலந்து இறுகும்படி பிரமா சிவன்திருவடிகளைத் தியானஞ் செய்தனர். அச்சமயம் பரமசிவன் பாதாளங்களுக்குக்கீழே திருவடிகளும், அண்டங்களுக்கு அப்பால் கொடுமுடிகளுமாகி எங்கும் வியாபித்து விருத்த கிரியின் உருவமாய்நின்றனர். அமமலை தரித்திரன் வாசலில் பொன்மழை பொழிவதுபோலவும், சிறியஊற்றினிற் பெரியநீர்ப்பிரவாகம் தோன்றுவதுபோலவும் நான்முகன் எண்ணமுங்கடந்து பூமிசுவர்க்கங்களில் பரந்துநின்று மதுகைடவரின மாமிசங்களோடு கலந்து ஒன்றாகிப்பூமிக்குப் பலஞ் செய்து நின்றது.

இதனைப்பிரமதேவர் அறிந்து, “சிவன செயலால் இதுநிகழ்ந்தது” என்பதை மறந்து, பற்பலமலைகளைப்படைத்து எவ்விடங்களிலும் பரவியிருக்கும்படி ஏவினர். அம்மலைகள் எங்குஞ்சென்று பார்க்க மலைக்கரசாகிய பழமலையாகவே இருப்பதனால் தாங்கள் இருப்பதற்கு வேறிடமில்லை யென்று அறிந்து பிரமாவிடத்தில் திரும்பிவந்து சொல்லுதலும், பிரமா மிகுந்த கோபத்தோடு அகங்காரங்கொண்டு நின்றனர். (ஒருவனிடத்தில் சினமும் செருக்கும் ஒருங்கே பொருந்துமாயின, அது நெருப்பும் காற்றும் ஒருங்கே பொருந்துவதுபோலாகும். ஏனெனின், நெருப்பு, தன்வீட்டையும் எரித்துப் பக்கங்களில் உள்ள வீடுகளையும் எரிக்குமாறுபோலக் கோபாக்கினியானது தன்உயிரையும் அழித்துத் தன்குலத்தையுங் கெடுத்துத் தன்னைச்சேர்ந்தவர்களையும் துன்பப்படுத்தும்.)

இவ்வாறு கோபங்கொண்ட பிரமதேவர், ஆயிரந்தேவ வருஷம்வரை அலைந்துதேடியும், அடிமுடியொன்றையும் அறியமுடியாதவராய், இதுஎன்னமாயமோ யார்செய்தவித்தையோ என்று ஐயுற்றுப், பின்னர், சிவபெருமானது திருவருட்செயல் என்றுகருதி, வேதாகம புராணங்களாயும், மந்திரங்களாயும், எங்குநிறைந்த பொருளாயும் விளங்குகின்றதிருவைந்தெழுத்தின் பெருமையைஉள்ளவாறுணர்ந்து அதிலுள்ள மூன்று அக்ஷரங்களும் முதலில்வரும்படி செபித்துத்தியானஞ்செய்தனர். கோடிசூரியர்கள் ஓரிடத்திற் கூடியுதித்தாற்போலப் பரமசிவன் பார்வதிதேவியோடும் இடபாரூட

ராய் எழுந்தருளிவருதலைத் தரிசித்த பிரமா உடல்நடுங்கப் பூமியில் விழுந்து பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்வாராயினர்.

பாயநால்வகைப்பாலுளபசுக்களைப்படைத்து
மேயபாசமோரைந்தினால்விழைவுறத்தளைத்துத்
தூயபூமியின்சுவர்க்கமுநரகமுமேய்த்துச
சாயங்காலையிற்கட்டியபசுபதிசரணம.

பிரமா இவ்வாறு துதித்து, எட்டுககரங்களாலும நான்கு வாய்களையும் பொத்தினவு, "எமபெருமானே' தேவரீரது திருவருளால் உண்டாகிய விருத்தகிரியின் உருவமே எங்கும்நிறைந்து நிற்றலால், அடியேன் ஆககிய மலைகளனைத்தும இருப்பிடமின்றி நின்று எங்குவனவாயின. நான் யாதுசெய்வேன்" என்று விண்ணப்பஞ் செய்தலும, சிவபெருமான் சினந்து "எங்கும் நிறைந்துநின்ற உருவம் மலை அன்று; எமது உருவமேயாகும; முன்னர் நீ ஆக்கிய நீ இறுதம்படி நாம்செய்தநன்றிமையமறந்து செருககுற்றாய். நாம ஒரு கணப்பொழுதினில் கோடி பிரமர்களைப்படைத்து மறு கணத்தில் மாற்றுவோம; இப்படிச்செய்வது பிரமர்களாகிய உங்களைமாத்திரமன்று; திருமால்முதல் எவரையும் எவ்வுலகங்களையும் சிருஷ்டி செய்வோம்; அடுத்த கணப்பொழுதில் அவற்றையும் மாற்றுவோம். இப்படி இறந்தவர்கள் எண்ணில்லாதவாகள். நீ எம்மை இகழ்ந்தால் நாம் உன்னை அழித்துவிடுவோம். சிவத்தைத்தவிர வேறு தெய்வம இல்லையென்று சிந்தனைசெய்வாயானால் உன் உலகையாள்வாய்; அல்லது அழிந்துபோவாய்." என்று அருளினர்.

பிரமதேவா யாளியின் எதிர்ப்பட்ட யானைபோற் கலங்கி, சுவாமீ, பொய்யினேன் செய்த குற்றங்களைப் பொறுத்தருளவேண்டும என்று பிரார்த்திகக, சிவபெருமான் அஞ்சற்க என்று அபயம் அளித்து, "பிரமனே நீ இவவிருத்தகிரியே எமது உருவம் என்று உறுதியாக அறிந்திருககின்றாய்; மேலும சிறியவனாகவுமிருக்கின்றாய்; மாலோன்மகனுமாகின்றாய்; சிருஷ்டித்தொழிலையும்பெற்றாய்' ஆதலால, உன் பிழைகளைப்பொறுத்தருளினோம். இனி நாம்கூறும் உண்மையுரைகளை உறுதியுடன் கேட்பாய்; எக்காலத்திலும் அழிவில்லாத இம்மலையின் சிகரங்களில் பஞ்சலிங்கங்களும் ஒருகாலத்திலும மாறாமலிருக்கும்; அவ்விலிங்கங்களில் இவ்விருத்தகிரியே பிரதமலிங்கமாக, நாவலந்தீவிற் பிரகாசிக்கும், மற்றை நான்கு

லிங்கங்களும் இத்தீவின் நாற்றிசைகளிலுமுள்ள நான்கு தீவுகளிலும் பிரகாசிக்கும். இவ்விருத்தகிரி மறைந்து உனதுகண்களுக்கு அநுவமாயிருக்கும், உன்னாற் படைக்கப்பட்ட மலைகளுக்கு இடம் உண்டாகும். முன்னர் நீ நம்மையும் நமது படைப்புத்தொழிலையும் மறந்து செருக்குற்றுப் படைத்துக் குற்றஞ்செய்தனை, ஆதலால் உன் மலைகளுக்கு இடமில்லாமற் செய்தோம். எல்லாம் சிவன் செயல் என்று தெரிவாய்; இந்திரன் முதலிய இறைவர்களும், நீயும், திருமாலும், சூரியசந்திரர்களாகிய இருசுடரும், எவ்வுயிரும், ஐம்பூதங்களுமாகிய எல்லாப்பொருள்களும் நமது ஏவலின்படி நடக்கும் என்று அறிந்துகொள்; நீ படைத்த பலமலைகளைப் பூமிக்கு உறுதியாக நிறுத்திக் கடல்,காடு,நாடு,அட்டகஜம்,அட்டநாகம்,சப்ததீவு,தேவருலகு இவைகளைப் படைக்கும்படி எமது தியானமே எளிதிற் செய்ய வல்லது. ஆதலால் நீ விரும்பிய வரங்களைக்கேள் தருவோம்;" என்று அருளிச்செய்தனர்.

பிரமதேவர் "அடியேனை அடிமை கொண்டருளிய கடவுளே! பெரியநாயகியம்மையாரும் தேவரீரும் இத்திருமுதுகுன்றில் என்றும் இவ்வுருவமாய்நின்று அடியார்க்கெளியவராயெழுந்தருளிவந்து அருளுகின்ற புகழும், இப்புராணமும் பொலிவுற்று நிலவுமாறு அநுக்கிரகஞ் செய்தல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். "பிரமனே! நீ கேட்டவரங்களைத் தந்தருளினோம்; நமது திருமுதுகுன்றைப்பணிந்த பக்தர்களனைவருக்கும் பொருள், புகழ், கல்வி, யோகம், ஞானம், போகம், மோக்ஷங்கள் ஆகிய வரங்களைக்கொடுத்தருளுவோம்; தேவர் பதவியும், திக்குப்பாலகர் பதவியும், அரசர் பதவியும் அளிப்போம்; ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் ஆகிய மூவகைத்துன்பங்களையும் நீக்கியருள்வோம்; இவ்விருத்தாசலத்தை அடைந்தவர்களுக்கு எல்லா இன்பங்களும் உண்டாகும்; இல்லாதது ஒன்றுமில்லை." என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். அயனார், அப்பெருமான் சென்ற திக்குநோக்கி வணங்கித் தனதுலகிற் சென்று, அனைவருக்கும் இதன்பெருமையை உரைத்து, அப்பரமன் அருளிய வரத்தினாற் சிருஷ்டித்தொழிலையுஞ் செய்யத்தொடங்கினார்.

திருச்சிற்றம்பலம்.

[stamp]

## இரண்டாவது
## தலச் சருக்கம்.

முக்கண் மூர்த்தியாகிய முழுமுதற்கடவுள் திருவடிக்கன்பரா வாகிய பிரமதேவருக்கு அருளிய இந்தச்சரித்திரத்தை அன்புடன் படித்தவர்களும், கேட்டவர்களும், திரிகாலங்களிலும் தியானஞ் செய்தவர்களும் இறந்தார்களாயினும் இறந்தாரல்லர். சிவசாரூபமாவர் என்று ஞானமறையுணர்ந்த நாதசன்மாவென்பவர் அனவர்த்திக்குக்கூறிய பின்னும் இத்தலத்தின் பெருமையைச் சொல்லுகின்றார்.

ஒருகணம், ஒருநாழிகை, ஒருசாமம், ஒருநாள், ஒருபக்ஷம், ஒருவருஷம், மூன்றுவருஷம் விருத்தாசலத்தில் நீங்காமலிருப்பவர்கள பிறவிக்கடலுள் அமிழ்ந்தார்கள். இத்தலத்தில் எந்நாளும் இருப்பவர்களும், இதன்பெருமையைக் கேள்வியுற்றுவந்து இறப்பவர்களும், பிறப்பவர்களுமே சிவசாரூப்பியம்பெறுவார்களாயின், பிறத்தல், இருத்தல் இறத்தல், மூன்றும் ஒருவருக்கு வாய்க்குமாயின் அவர்பெருமையை எம்மால் எடுத்துச்சொல்ல முடியுமோ. செய்நன்றி மறந்தவர்களும் ஐம்பெரும் பாவங்களைச் செய்தவர்களும் மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரைத்தரிசித்து, திருவிழாவில் திருவீதியில் அப்பெருமான் கொண்டருளும் மகோற்சவத் திருக்கோலத்தைக் கண்டு வணங்கி விபூதி பரப்பிய படுக்கையிற் படுத்துறங்குவது முதலிய நியமந்தவறாமல் மூன்றுவருஷம் வரை இத்தலத்தில் இருப்பார்களேயாயின் சிவசொரூபமாவர்.

எழுவகைப் பிறப்புக்களுமுடைய எல்லா வுயிர்களுமிறந்தால் திருமுதுகுன்றநாதர் அவைகளைத்தமது மடிமீதிருத்தி, தாயைப் போல அன்பு செய்து வலச்செவியில் உபதேசஞ் செய்தருளுவார். விருத்தநாயகியும் தமது திருக்கரங்களாற் றடவி முன்றானையால் வீசிப்பிறவிக்களையை மாற்றுவார். இத்தலம் இத்தகைய பெருமை வாய்ந்தது என்று துணிந்து அத்தலத்திற் போய் உயிரை வலிய விட்டவர்கள் புண்ணியராக மாட்டார்கள்; வயிரவக் கடவுளுடைய சூலத்தாற்குத்துண்டு கிடப்பார்கள். இத்தலத்தில் ஒருவன் நித்தமும் ஆயிரமாயிரம் பிழைகளை அறியாமற்செய்தாலும் பழமலைநாதர் அவற்றைப்பொறுத்தருளுவார்; ஆனால்அறிந்து ஓரணுவளவு அரிய குற்றங்களைச் செய்தாலும் அது மேருவாக வளரும். பிராமணர்

களும் பெரிய முனிவர்களும் சிறிய பாவஞ்செய்யினும் மூடராய் வயிரவர் சூலத்தாற்குத்துண்டு வருந்துவார்கள். வெய்யிற்காலத்தில் வனங்களிற் சஞ்சரிப்போர்களுடைய சோகதாகம் குளிர்ந்த நீராலன்றி மற்றொன்றினாலும் மாறுதவாறுபோல வேறுதலத்திலிருந்து செய்த பெருமபாவங்களெல்லாம் விருத்தாசலத்தில் நீங்குமேயல்லாமல் வேறொருதலத்தில்நீங்காது. இத்தலத்திலிருந்து செய்த பாதகமனைத்தும வயிரவர் சூலத்தினாலல்லாமல் மற்றொன்றினாலும் நீங்கமாட்டாது. விருத்தாசலத்தில் சற்குருவினால் சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தை உபதேசம்பெற்றுத் தினமும் ஐயாயிரத்தைந்நூறுதரம் செபித்தாலும அக்ஷரலக்ஷமசெபித்தாலும பாவங்கள் நீங்கிச் சிவசொரூபமாவார்கள்; அவர்கள்மனைவிமாருமசத்தியினுருவைப்பொருந்துவார்கள். இவர்கள் எக்காலமும இந்தவடிவைபபெற்றிருப்பார்கள். குருவுபதேசமபெற்றுவேதாத்தியயனமசெய்தாலும் அபபலன்களையடைவார்கள். பாவங்களைநாசஞ்செய்யும பழமலையிலிருந்து பழமலைநாதரை வணங்கித்தவஞ்செய்பவாகளை முனிவருந்தேவரும முன்வந்துவணஙகிபபணிந்துநிற்பர். பெரியநாயகியம்மையும தாய்தங்கை, தமக்கை, அத்தை, மைத்துனி முதலிய உற்றசுற்றத்தார் போலவந்து சூழ்ந்திருப்பார். இத்தலத்தைவிட்டுக காசிககுச் சென்றவனுககுந் தவத்தின் பலமும முத்தியும சித்தியாகா. கூன் குருடு செவிடு ஊமையாகிய பலபிணிகளையுடையவர்கள் உறுப்புக்குறைந்தவர்களாயிருந்து மணிமுத்தநதியில் மூழ்கிப் பெரியநாயகியையும பழமலைநாதரையும வழிபட்டுநின்று அழகிய சரீரத்தைப் பெற்றவர் அளவில்லாதவர்கள்; மணலையும நக்ஷத்திரங்களையும மழைத்துளிகளையும இவவளவென்று அளவிட்டுச்சொல்லவல்லவன விருத்தாசலத்தில் வரமபெற்றவர்களை வரையறுத்துச்சொல்ல வல்லவனாவான்.

அத்திரி, வசிஷ்டர், போதாயனர், ஜமதக்கினி, அகத்தியர் காசிபர், சதககினர், உரோமசர், கண்ணுவர் முதலியமுனிபுங்கவர்களும் இத்தலத்திலிருந்து அருந்தவஞ்செய்து அவரவர்கள் விரும்பிய பலவரங்களைப்பெற்றார்கள். மும்மூர்த்திகள், திககுப்பாலகர், அட்டவசுக்கள் ஆகிய இவர்களும இலககுமி, சரஸ்வதி, இந்திராணி இவர்களும் இத்தலத்திருந்து மெய்த்தவஞ்செய்து தங்கள் தங்கள் சம்பதங்களைப்பெற்றாகள். தானம், தருமம், தவம், யாகம், தத்துவமாகிய இவைகளொன்றுந் தெரியாதவாகளாய் முத்தியடைய விரும்பின

வர்கள் எல்லாப்பாவங்களையும் நீக்கவல்ல இத்தலத்தில் வாசஞ்செய்வார்களானால் முத்தியை அடைவார்கள். ஞானிகள் சிறிதுகாலம் வசித்திருந்தாலும், அவர்கள் எண்ணிய பதவிகளை யடைதல் திண்ணம். அதுவல்லாமலும் அவர்கள் தேவவிமானங்களில் ஏறிச் சென்று தேவருலகமுழுதும் உலாவிவருவார்கள்.

விருத்தாசலம் என்று ஒருதரம் துதித்தவர்களும், மதில் கோபுரம் முதலிய திருப்பணி செய்தவர்களும், செய்வித்தவர்களும் இத்தலத்தின் திருநாமங்களைக் கேட்டவர்களும் படித்தவர்களும் ஆகிய இவர்களைச்சூழ்ந்த தீயபாவங்கள் சூரியனைக்கண்ட இருள் நீங்குவதுபோல விலகிப்போம். இத்தலத்திருந்து தேவவிமானங்களில் ஏறிச் சிவலோகஞ்செல்பவர்களை ஆதித்தர் பன்னிருவரும், அட்டதிக்குப்பாலகரும், தேவரும் எதிர்கொண்டு வணங்கி, சிவபெருமானுக்கு அருச்சிப்பதுபோல அருச்சித்து உபசரிப்பார்கள். மும்மூர்த்திகளிலும் முதுகுன்றநாதருக்கு இணையான மூர்த்தி இல்லை; அதுபோல இவ்விருத்தகிரிக்கு இணையானதலம் இன்றும் இல்லை; என்றும் இல்லை. இத்தலவிருக்ஷமாகிய வன்னிமரத்தின் ஒரிலையில் அடங்கிய உணவை எவர்களுக்காவது கொடுத்தவர்கள் சிவலோகத்திற் சேர்ந்திருப்பார்கள். சிவபூசைத் திரவியங்களுள் ஒருபலமாயினும் உதவினவர் சிவசொரூபமெய்துவர். சிவனடியவர்களுக்குத் திருமடங்கட்டிக்கொடுத்தவர்கள் அவ்வடியவர்கள் வசிக்கும் காலஅளவில் ஒவ்வொரு பொழுதுக்கும் ஒவ்வொரு கற்பகாலம்வரை சிவலோகத்தில் இனிது வாழ்வார்கள். வீதி வகுத்து வேதியர்களுக்கு வீடுங்கொடுத்துப் பூமிதானஞ்செய்தவர்கள் முற்கூறிய பலன்களைப் பெறுவார்கள். இனித் திருமணிமுத்தாநதியின் சிறப்பைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

---

மூன்றாவது

## தீர்த்தச் சருக்கம்.

முன்னொருகாலத்தில், திருமுதுகுன்றநாதருடைய சந்நிதிக்குக் கீழ்த்திசையில், பிரமாவிஷ்ணுமுதலியதேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், யோகிகள் ஆகிய அனைவரும் குழுமியிருந்து, அரிய

பெருந்தவஞ்செய்து, மூலாதார முதலிய ஆறுதாரங்களின் வழியாய்ச் சிவபெருமானது உண்மைபுருவத்தைத் தியானித்தலும் பிரமானந்தப்பெருக்கு உண்டாயிற்று. பரமசிவன் அந்தப்பேரானந்தப் பெருங்கடலைத்தமது திருக்கரங்களால் நதிவடிவமாக்கிமணிமுத்தாநதியென்னுந் திருநாமஞ்சூட்டியருள, அந்நதி சிவசத்தி வடிவாய்ச் சிவனுக்கின்பஞ்செய்து யாவருக்கும் நீராய்விளங்கித்தீவினைகளுக்கு நெருப்பாயும் நம்மவர்களுக்குக் குளிராயும் இருந்தது. அம்மணிமுத்தாநதியினின்றும்படிந்துவருங்காற்று மேல்பட்டமாத்திரத்தில், பறவை, மிருகம் முதலிய எழுவகைப் பிறப்பினையுடைய எண்ணில்லாத உயிர்களும் தேவருலகையாளும்; அந்நதியில் மூழ்கினவர்களுக்கு அன்பு, அறிவு, தவம், ஈசுரபக்திகள் உண்டாகும்; சிவனருளும் சிவஞானச்செல்வமும் பெருகும்; சகல துன்பங்களும் சாராதோடும்; அஞ்ஞானம், சோம்பல், தரித்திரம் அகன்றுவிடும்; திருமகளும் நேசமோடுவாசஞ்செய்வாள்; அட்டமாசித்தியும் முத்தியும் சித்தியாகும்; மயக்கம், பேய், நோய்கள் மாய்ந்துபோகும்.

அம்மணிமுத்தாநதியில் ஒருதரம் ஸ்நானஞ்செய்தால் ஆயிரங் கோதானஞ்செய்த பலனுண்டாகும். அவர் மூழ்கும்போது தமக்கு இஷ்டரை யெண்ணி மூழ்கினால் நினைக்கப்பட்டவர்களும் பரமுத்தியெய்துவர்; மனமகிழ்ந்து மூழ்கி ஓரிரவு தங்கினால் சிவலோகஞ் சேர்வர்; பலதரமும் ஸ்நானஞ் செய்தவர்கள் பெறும்பேறுகளுக்கு ஓர் எல்லையுண்டாகுமோ? அந்நதியினைத்தெரிசித்தாலும் பரிசித்தாலும், மூழ்கும்படி முயற்சித்தாலும், அன்புடன் அந்நதிக்கரையில் வசித்தாலும், ஸ்நானஞ்செய்தாலும் அவர்கள் பாவமுழுதும் சூரியனைக்கண்ட இருள் நீங்குவதுபோலக் குறைந்துவிடும். இவ்வளவு விசேஷ பலன்களைத்தருவதென்று எண்ணி ஸ்நானஞ்செய்து சிவபூசை செய்பவர் பெருமையைச் சொல்லவல்லவர் எவருளர். அமாவாசை, பௌர்ணிமை, உத்தராயணம் தக்ஷிணாயனம் மாசப்பிறப்பு, விசேஷநக்ஷத்திரங்கள், விதிபாதயோகம், வைகாசிப்பௌர்ணிமை, மாசிமகம் இந்த நாள்களில் மணிமுத்தாநதியில் முயற்சியுடன் மூழ்கி, இயன்றவரை தானஞ்செய்து சிவபெருமான் திருவடிகளை வணங்கி மும்முறை வலம்வந்து விதிப்படி பூசிப்பவரது பலன்களை நூறுவருஷம்வரை சொன்னாலும் முடிவுபெறாது. அவர்கள் வசிக்குந்தலமே சிவலோகமாகும்.

கங்கை, யமுனை, பிரயாகை, சரஸ்வதி, காவிரி, சந்திரபாகை, கோதாவரி, நருமதை, சரயு, கோமதி, கண்டகி, மந்தாகினி, அஞ்சனை, மந்தனை, சோணை, சிந்து, சங்கம், கயை, கவுசிகை, கன்னியாகுமரி என்னும் புண்ணிய தீர்த்தங்களிலும், பூமி, சுவர்க்கம், பாதலமாகிய மூவுலகிலுமுள்ள மற்றைத் தீர்த்தங்களிலும், நதியும் கடலும் சங்கமமாகுந்தீர்த்தங்களிலும் சென்றுமூழ்கும் பலன்களைப் பார்க்கிலும், இம்மணிமுத்தாநதியில் ஒருநாள் ஸ்நானஞ்செய்வோர்களுக்குக் கோடி மடங்கு பலன் கூடும். பெருமை பொருந்திய திருமணிமுத்தா நதிக்கரையில் இருந்து யாகஞ் செய்தவர்கள் சதாசிவரூபமாவார்கள். மாசி மக நக்ஷத்திரத்தில் அந்நதியில் ஸ்நானஞ்செய்து சுவாமிக்கு அபிஷேகஞ்செய்வதற்கு அந்தநீரைக்குடத்தில் எடுத்துக்கொண்டு நடந்தவர்களுக்கு அடியொன்றுக்கு ஓர் அஸ்வமேத யாகஞ்செய்த பலன் வீதமுண்டாகும். மற்றைத்தலங்களிலிருந்து இதனைத் துதித்தாலும் நினைத்தாலும் பிறவிநீங்கும். அகத்தியமுனிவர் அருள்பெற்று விளங்கிய சுவேதமுனிவர், பௌர்ணிமை, மாசிமகம், ஆதிவாரம், அஷ்டமிதிதி, ஆதிரைநாள் ஆகிய தினங்களில் இந்நதியில் அன்புடன் ஸ்நானஞ்செய்து பின்பு சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்த திருமஞ்சனநீரானது இவ்வுலகில் சுவேதநதியென்றும் வெள்ளாறென்றும் பேர்பெற்று விளங்கும்.

கயரோக நோயினன், சொத்தைப்பல்லினன், குறைந்தகையினன், குட்டநோயினன், முடைநாற்றம்பொருந்திய உடம்பினன், முபலகன் என்னும் வலியினன இவர்கள் அறுவரும் விருத்தாசலத்துக்குப்போய் அகத்தியமுனிவர் முன்னின்று வணங்கி, "முனிவர் தலைவரே, நாங்களறுவரும் இந்நோயினால் துன்பமடைவதற்கு முன் சன்மத்தில் என்னபாவஞ்செய்தோம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அகத்தியர் அவர்களை நோக்கி, "நீங்கள் முற்பிறப்பில் மறையவர்களை வதைத்தமையாற் கயரோகமும், குருபத்தினியை மருவியதாற் குட்டநோயும், பிறர்மனைவியரை விரும்பியதால் முடைநாற்றம் வீசும் உடலும், கோட்சொன்னதாற் சொத்தைப் பல்லும், மதுபானஞ்செய்தலாற் குறைவுற்றகைகளும், பொன்னைத் திருடியதால் முபலகன் என்னும் வலியும் உங்களுக்கு வந்தன. இதனால் நெடுங்காலம் நரகக்குழியில் வீழ்ந்து வருந்தினீர்கள்; இப்போது அப்பாவங்களில் எஞ்சியவற்றை அநுபவிக்க இப்பிறவியெடுத்தீர்கள். மாசிமாதமுப்பதுநாளும் மணிமுத்தாநதியில்முழுகிப்

பழமலைநாதரை வணங்கிவருவீர்களாயின், உங்கள் கொடிய நோய்கள் முழுதும் கடிதில் நீங்குதல் நிச்சயம்." என்று அருளிச் செய்தார். அவ்வறுவரும் அகத்தியமுனிவர் ஆஞ்ஞையின்படி மணிமுத்தாநதியில் மாசிமாசமுழுவதும முறைப்படி மூழ்கிப்பாவவிமோசனராகிப் பழமலைநாதர் திருவடிகளை வணங்கித்துதித்துப்பின் அகத்திய முனிவரையடைந்து அடிபணிந்து நின்றார்கள். மேகத்தில் மறைந்து நீங்கிய இளஞ்சூரியனைப்போல ஒளியுடன்விளங்கும் உடலினராகிய அவ்வறுவரையும அகத்தியமுனிவர் கண்டு நீங்கள் முற்பிறப்பிற் செய்த பாவங்களால் நேர்ந்த நோய்களும், மணிமுத்தநதியில்மூழ்கியதால அந்நோய் நீக்கமும், பழமலைநாதர் உங்களுக்கு அருள்செய்ததுமாகிய அற்புதச்செயல்களனைத்தும் உலகில் எவரும அறிந்துப்புமபடி எடுத்துச்சொல்லுங்கள் என்றுகூறினர். அந்த அறுபேரும் அம்முனிவர் அநுமதிப்படி தேசமெங்குந்திரிந்து அறிவித்துச்சென்றார்கள்.

செல்வங்களாற் சிறப்புற்ற சிலோச்சயமென்னுந் தேசத்தில் வணிககுலதிலகனுகிய் விளங்கிய சுகேசனென்பவனுக்குச் சற்புத்திரர் அறுவர் இருந்தார்கள். அவர்கள் கல்விகேள்விகளில நல்லபாண்டித்தியராய், சொலவினுமிலாபங்கொள்ளும் தூயதல் வர்த்தகத் தொழிலில்விர்த்திபெற்று, நீதிவழுவாதுபொருளைதேடி, குபேரனைப போல் பொலிவுற்று வாழ்ந்துவருநாளில் விருத்தகிரியின பெருமையைக் கேள்விபுற்றுஅத்தலத்திற்சென்றுமணிமுத்தாநதியில்மூழ்கி நீறணிந்து நித்தியநியமங்களைமுடித்து, இரத்தினம, பொன், பூமி வஸ்திரம, பசு முதலிய தானங்கள்செய்து பழமலைநாதரைத் தெரிசித்து வணங்கி நதிக்கரையில் ஒருவிருக்ஷத்தின் நிழலில் இருந்தார்கள். அப்பொழுது நெடுந்தூரத்திலிருந்து ஒரு பிறவிகுருடன் முன்னே ஒருவன் கோல்பிடித்து வழிகாட்டிவர வந்தான். அவன் திருக்கோயிலுக்கு வடதிசையிலுள்ள புண்ணியமடுவில் இதுசெய்யின் இதுவிளையும என்று எண்ணுமல் மூழ்கியதும் தனது இருகண்களுந்தெரிந்து நன்றாகப் பிரகாசித்தலினால் நகைத்துநின்று ஆனந்தககூத்தாடி எட்டுத்திககினையும் நோக்கினன். பார்த்த புண்ணியபுருஷனை வணிகரறுவரும விரித்த கைகளையுடையவராய், என்ன அதிசயம் நடந்தது என்று வினவினர்கள். கண்பெற்றவன் நான் இந்தமடுவில் தாகத்தினுல் மூழ்கியதும பெரிய உருவத்தையுடைய ஒரு மகாபுருஷர்வந்து ஏதோ சொன்னர். அதை அறியா

தலுைப் ஆகா என்று அலறினபொழுது அப்பெரியவர் என்னைப் பிடித்து எனதிருகண்ணிலும்பொருத்தமான ஒரு மருந்தைத்தடவ லும் என் குருட்டுத்தன்மை நீங்கிக் கண்கள்தெரிந்து மனமும் தெளிந்தபடியால் அப்பெரியாரின் அழகைப்பார்த்தேன், என்ன சொல்வேன். புசித்தால் பசிதீரும் என்று சொல்வது உலகவழக் கம. அவர் அழகைப்பார்த்தால் பசிதீரும்; அவர் கமல முகமும, கண்மூன்றும, பொன்சடையும்,வெண்மதியும,கருமிடறும், மங்கை யோர் பாகமும, மானும, மழுவுமாய் விளங்கும்படி தோன்றி நின் றருளினர். சுவாமீ, நீஙகளிருவரும அடியேன்மீது கிருபைவைத்து இருகண்களையும கொடுத்தருளினீர்கள், நீங்கள் எப்பொழுதும் வாழுவீர்கள் என்று யான் கூறினேன். அதற்கு அவர்கள் உனக்கு மாத்திரமன்று; இநநதி தன்னிடத்தில் அன்புடன் மூழ்கினவர்க ளுககு மும்மலங்களையும போககிப பொன்னையும், பூமியையும் அளிககும; தேவர் பதங்களையும கொடுக்கும். ஆதலால் அந்த மரத்தின் நிழலில் இருககின்ற வணிகமாகளுககுச் சொல்லிப்போ வாய் என்று அருளினார். நீங்களும சென்று மூழ்குங்கள். என்று கூறினான். வைசியப்பெருமககள அனைவருமம கண்ணைப்பெற்ற புண்ணியபுருஷன் சொற்படி புண்ணியநதியில் விருப்புடன் மூழ்கி எழுந்தபொழுது சுவாமியும அம்மையாரும் விருத்த உருவத்தின ராய், எழுந்தருளிவந்து, அவர்கள் விருமபிய வரங்களைத்தந்தருளி னார்கள். அவவறுவர்களும அவர் திருவுருவங்களைககண்டு வணங்கி கைகுவித்து நின்று துதித்து ஆனந்தககூத்தாடி, பழமலைநாதர் சந் நிதி சென்று தரிசித்து வணங்கி மனமகிழ்வுடன் விடைபெற்றுக் கொண்டு தங்கள நகரத்துக்குப் போனார்கள், ஆதலின் தீர்த்தத் தின்பெருமை இப்பொழுதுமாத்திரமா இருககும; எப்பொழுதும் இருககும.

அந்தலத்தில் வன்னி விருக்ஷத்தின் மேற்றிசையில் நித்தியா னந்தகூபம் என்று ஒரு தீர்த்தம் விளங்கும். அதனைப் பிரமதேவர் அன்பினாலுண்டாக்கி அத்தீர்த்தங்கொண்டு பழமலைநாதரைப் பல நெடுங்காலம் பூசித்துப் பலசித்திகளையும் உலக சிருஷ்டியையும் பெற்று மகிழ்ந்தார். அத்தீர்த்தத்தில் சிறிது உட்கொள்ளப்பெற்ற வர்கள் முத்திபெறுவார்கள். அப்பிரமதேவர் இத்தீர்த்தத்தை உண்டாக்குவதற்குமுன் தமதுநித்தியகருமம் முடித்தற்கு அககினி திசையில் அரியதீர்த்தம் ஒன்றுண்டாக்கி நியமநிஷ்டைகள் செய்

தார், அத்தீர்த்தம் பாவமென்னும்செத்தையை எரிக்கும்; அக்கினி போலப்பிரகாசிக்கும். அதில்அன்புடன்மூழ்கினவர்வினைகளினின்று நீங்கி நற்கதிபெறுவர். திருமாலும் சிதம்பர சிற்சபையில் ஆடும் அற்புத நடனத்தைத் தரிசித்துக்கொண்டுஇத்தலத்தில்வந்துநிருதி திசையில் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில்இலக்குமியும்தானும் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரை வழிபட்டு அப்பெருமானருளால் உலகத்தைக காத்தலாகிய தொழிலைச்செய்துகொண்டுவந்தார். அத்தீர்த்தத்தில் அன்புடன் ஆடுவோர்கள் நினைத்தவெல்லாம் சித்திபெறுவார்கள் என்றுபரமசிவன் பார்வதிதேவிகருப்பகர்ந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

---

நான்காவது

## விதர்க்கணச் சருக்கம்.

பார்வதிதேவியார் பரமசிவனைப்பணிந்து சுவாமி, இத்திருமுது குன்றில் வந்திருப்பவரெல்லாரும தேவவிமானத்திலேறி எங்கும் திரிவார்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினீர்; அப்படி விமானங்களிற் சென்றவர் யார் யார்? அவர்கள எத்தேசத்தவர்கள்? அவர்கள் பாவந்தீரச்செய்த தவம யாது? அவைகளைத் தெரிவித்தருளவேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் திருவாய்மலர்ந்தருள்வாராயினர்.

முற்காலத்தில் கோசலதேசத்தில் மணிபிங்கலை யென்னும் நகரில் விபசித்து என்னும வேதியனொருவன் மிகுந்த வறுமைப் பிணியால் வந்தபசியை மாற்றுவாரொருவரும் இல்லாமையினால் நாட்டிற் பலவிடங்களிலுந் திரிந்து நன்மையொன்றும அடைய முடியாதவனும்பும காட்டிற் சென்றும் காய், கனி, கிழங்கு ஒன்றுங் காணாதவனும்பும் மனம்வருந்தி, வனங்களில் ஆறுநாள்வரை அலைந்து திரியும்பொழுது சூரியகிரகண புண்ணியகாலம்வர வழியில் ஒரு சுனையைக்கண்டு மூழ்கி அருகிலிருக்கும சிவலிங்கத்துக்கு அருச்சனைசெய்து அப்பால் நடக்கையில், சரீரத்தளர்வால் மரம்போற் சாய்ந்துவிழுந்து, எழுந்து நடக்கும் சக்தியற்று, கல்லும் முள்ளும் கால்களிற்றைத்து இரத்தம் ஒழுகவும், அன்னந் தண்ணீருண்ணாமையால் பல்லும் நாவும் பசைபிடித்து ஒட்டிக்கொள்ளவும், நிற்க

கிழவின்றி வருந்தவும், வாடியிருந்து, 'நான் நல்ல குலத்திற் பிறந்திருந்தும், நல்லசாஸ்திரங்களை நன்குகற்றறிந்தும், நல்லோர்பலரால் நன்குமதிக்கப்பெற்றிருந்தும், செல்வம ஒரு சிறிதும் இல்லாததினுலன்றோ எனக்கு இவ்வாறு இடையூறு நேர்ந்தது; முன்வினையின் படி இல்லதுவாராது உள்ளதுபோகாது" என்று எண்ணியெண்ணி மனம புண்ணுயினுன்.

இவ்வாறு விசனமுற்ற விபசித்து, முன்செய்த சிவபூசாபலத்தால் ஏழாவது நாளில் ஒரு சுனைககரையில் தேவவிமானமு வருதலும அதனருகிற் சென்றுன். அத்தேவவிமானத்தில் தேவமாதர்கள் இசையுடன் பாடியாடவும், ஆலவட்டம் அசையவும, வெண்சாமரைவீசவும, பூமழை பொழியவும, வெண் கொற்றககுடைகிழவில், மாதர்களின் மத்தியில், சிவபெருமான் திருவருளால், சடைமுடியும், வெண்பிறையும, முக்கண்ணும, முப்புரிநூல் விளங்குந்தோளும, கொன்றைமாலையும, நீலகண்டமும, ஒளியுருவும் கமல முகமுமபெற்றுப் பிரகாசிககின்ற கணநாதர் இருககுஞ்சிறப்பை விபசித்து கண்டு தெரிசித்தான்.

கணநாதர் விபசித்துவைககண்டு விமானத்தினின்று இறங்குதலும, வேதியனுகிய விபசித்து வந்து கணநாதரை வணங்கி, "சுவாமீ, அடியேன் உமமை வணங்குதற்கு முன்னுளில் என்ன தவஞ்செய்தேனே? நீர உருத்திரரைப்போலுமிருககின்றீர், உம்மை இன்னுரென்று அறிந்திலேன்" எனறுகூற, சிவகணநாதர் வேதியனை நோககி "விபசித்துவே நீ அருந்தவஞ்செய்தாய், ஆதலால் எமமைத்தரிசித்தாய். சிவகணநாதரைத் தரிசித்தல் யாவருக்கும் எளிதல்ல; பழமலைநாதருடைய கணநாதன் நான்; என் முற்பிறப்பின் கதையககேட்பாய்" என்று கூறினுர்.

"நான் பாஞ்சாலநாட்டில் விதையமென்னுநகரில் ஒரு செட்டியின் மகன். என்பேர் விதர்ககணன். நான் மிகுந்த வறுமையினுல் கூலிக்குச் சுமைதூககி வயிறுவளர்த்து வந்தேன். சிலநாட்சென்றதும், ஒரு வர்த்தகனுக்குச் சுமை சுமந்து விருத்தாசலத்துக்குப்போனேன். அப்பொழுது 'மார்கழித்திருவாதிரைப்புண்ணியத்திருநாள். அத்தலத்தில் ஞானிகள் முதலிய நல்லவர்பலரைத் தரிசித்தேன். வர்த்தகன்சரக்கை விற்று என்கூலியுங்கொடுத்தான் அன்று அளவில்லாதவர்கள்வந்துமணிமுத்தாநதியில்மூழ்கினுர்கள்;

யானும் அதனைக்கண்டு மூழ்கி, விபூதி ருத்திராக்ஷமணிந்து, திருக்கோயிலுக்குச்சென்று வலம்வந்து, பழமலைநாதரைத்தொழுது துதித்துக் கூலியால் வந்த சிறிது பொருளைத்தக்கவர்களுக்குத் தானஞ்செய்து உணவின்றி நித்திரையொழித்து வாய்பேசாது அன்றிரவு அவ்விடத்திற்றங்கியிருந்தேன். இரவுமுழுவதும் பழமலைநாதரும் பெரியநாயகியம்மையும் எழுந்தருளிவருந் திருவுலாச்சிறப்பை அடியவர்கள் கண்டுவணங்கித்துதித்து விடியற்காலத்தில் மணிமுத்தாநதியில் மூழ்கிக் கடவுளை அருச்சனைசெய்ய, அடியேனும் அவ்வாறு மூழ்கியருச்சித்து வணங்கிப் பிச்சைபெற்று உண்டு மகிழ்ந்திருந்தேன். பின் என் ஊருக்கு வந்து சிலநாளாயினபின் மரணாவத்தை அதிகரித்தலும், இயமதூதர்கள் என்னைப்பாசத்தாற் கட்டுதற்கு நெருங்கிவந்தார்கள். அவர்கள்வருமுன் சிவகணங்களும் பழமலைநாதரும்பாலாம்பிகையும் விநாயகரும் சுப்பிரமணியரும் நந்திநாதனும்எழுந்தருளிவரத்தரிசித்தலும், என்துன்பமனைத்தும்பகலை ஒழிந்தன. தேவதேவராகிய சிவபெருமான் உமாதேவியின் திருத்தோள்மேல் தமது திருக்கரம் வைத்துத் திருப்புன்முறுவல் செய்து "விதர்க்கனே! நீ இனி உன்பயங்களை விட்டுவிடு; உன்மீது அன்புவைத்தவர்களாநாங்களே உனக்கு யமதண்டனை யாவுமில்லை" என்று அருளிச்செய்து உண்மை ஞானத்தை என் வலச்செவியில் உபதேசஞ்செய்தருளினார். பெரியநாயகியார் தமது முன்றானையால் பிறவிகளை நீங்கும்படி வீசினார். அப்பொழுதே சிவகணநாதனாகி தேவவிமானமேறிவரச் சிவபெருமான் திருவடிகளைத் துதித்து வணங்கினதும் இறைவன்மறைந்தருளினார். நான் தேவவிமானத்தில் ஏறின நாள்முதல் எந்த உலகங்களிலுஞ் சுற்றிவருகின்றேன். அவ்விமானத்தில் வருகின்றவர்களெல்லோரும் பழமலைநாதரைவணங்கித் துதித்தவர்களும் அத்தலத்தைமிதித்தவர்களுமேயாவர். விருத்தாசலத்தை மிதித்தவர்கள் இந்தப்பெரும் பலனைப்பெற்றால் உள்ளன்புடன் அத்தலத்திற் சென்று வணங்கினவர்கள் எதைத்தானடைய மாட்டார்கள். இத்தலத்தை மிதித்தவர் சூரியனொளி வீசுமிடங்களிலெல்லாம் சிறந்த விமானங்களில் ஏறித்திரிவார்கள். பழமலையில் வந்து வரம்பெற்றவர்களை நான்குவேதங்களும் வரையறுத்துக்கூற முடியா. பழமலைநாதரும் பாலாம்பிகையும் எவர் வருவாரென்று எதிர் நோக்கியவண்ணம் நிற்கின்றார்கள். ஆதலால் நீயும் அத்தலத்திற் சென்று முறைப்படி மூழ்கிவணங்கினால் திருமுதுகுன்றநாதர்

கிருபை புரிந்தருள்வார். இது சத்தியம்" என்று கணநாதர் கூறி மறைந்தார். இனி அதனைக் கேட்டுக்கொண்டிருந்த விபசித்து வினுடைய சரித்திரத்தை விபரமாய்ச் சொல்லுகிறோம்.

திருச்சிற்றம்பலம்.

---

ஐந்தாவது

## விபசித்துச் சருக்கம்.

விபசித்துவானவர் கணநாதர் சென்றதிசைநோக்கி வணங்கித் துதித்து மெய்மறந்து பொய்யகற்றி, சிவத்தியானத்தால் யான் பெற்றசெல்வமேசெல்வம என்றுகருதி மனமுருகி ஞானத்தாற் பல விதமாகத்தியானித்தார். தாய், தமர், (சுற்றம) தாரம், (மனைவி) இழந்து பசியினாற்பேய்போலலைந்து தவஞ்செய்யாது அவமேசெய்து பித்தனாய்த்திரியும எனக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு அருள் செய்வது ஜாலவித்தையோ உண்மையோ மாயமோ கனவோ யாதொன்றும அறிகிலேன். மாதாமனம, செலவம, மழை, இவை இன்னதன்மையது இன்னகாலத்தில் வருவது என்று அறிய முடியாதவாறுபோல முனசெய்த அருந்தவத்தாற் பெருமபலன் வருங்காலம இன்னதெனறு அறிதல் அருமை எனறு அறிவுடை யோர் கூறுவர. அத்தன்மைபோலக் கணநாதர்தரிசனம் எனக்குக் கிடைத்ததோ" என்றுஇவவாறு பண்ணிய விபசித்து அங்குள்ள தெய்வசுனையில மூழ்கி நித்திய நியமங்கள் முடித்து மனந்தளர் வுற்றிருந்தார்.

அப்பொழுது அந்தசுனையில்ஸ்நானஞ்செய்வதற்குச்சிலதேவ மாதர்கள விமானத்திலவநதிறங்கினார்கள். அவர்கள்ஆபரணங்களைக் கழற்றிக்கரையிலவைதது ஸ்நானஞ்செய்துகரையேறி வேறுஆடை ஆபரணங்களை யணிநது கொண்டார்கள். அப்பொழுது அானது தோழ்னுகிய குபேரன தங்கையானவள் தன்ஆபரணங்களையணியுங கால், தமயனுககுத் தேவர்களாற் கொடுககப்பட்ட விலையில்லா மாணிககமபதித்த உயர்ந்த மூககணியொன்று காணாமையால் எக்க முற்றிருந்தனள். மற்ற மாதர்கள் அதனைககண்டு மனத்துயரங் கொண்டார்கள். ஒரு சிசசிலி என்னும குருவி வந்து அந்த ஆபா

ணத்தைக் கவ்வி மரத்தின்மேல் வைத்து உண்ணுமுன்னவ் என்றெண்ணி அதனைக் கொத்துதலும் அது தவறி மரத்தடியிலிருந்த விபசித்துவின் மடியில்விழுந்தது. அம்முனிவர் அதனைக்கண்டஞ்சி நடுக்கத்துடன் கையிலெடுத்து வைத்துக் கொண்டிருந்தார். தெய்வப்பெண்கள் இதனை அறியாதவர்களாய், குபேரன் தங்கையை நோக்கி, சில சபத மொழிகளைக் கூறினார்கள். மின்னுகின்ற உன்னுடைய மூக்கணியை நாங்கள் எடுத்திருந்தால் விரதமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், பொற்களவுசெய்தவன், வேதங்களைவிட்டவன் சிவஸ்தலத்தில் அதிபாதகஞ்செய்தவன், சிவபூஜை செய்யாது உண்பவன், குருநிந்தை செய்பவன் ஆகிய இப்பாவிகள் அநுபவிக்கும் நரகத்தில் நாங்களும் அநுபவிப்போம். இன்னும் புருஷன் பசியறிந்து போசனமிடாதவள், புருஷனைவஞ்சித்தவள், புருஷனுக்கு முன் உண்பவள், புருஷனை எதிர்ப்பவள், அந்நிய புருஷனை யணைபவள், குழந்தையையும் புருஷனையும் கொன்றவள் ஆகிய இப்பாவிகள் அடைந்தநரகத்தில் நாங்களும் அடைவோம், என்று பெண்கள் கூறினார்கள். அதுகேட்ட குபேரன் தங்கை அதைக்கொடுத்தவர்களுக்கு என் ஆபரணமுழுவதும் சிவனாணைப்படி தருவேன் என்று கூறினாள். அச்சமயம் அவள்பேசியதைக்கேட்ட விபசித்துமுனிவர் அவர்களிடத்திற்சென்று ஏன் கவலைப்படுகிறீர்கள் உங்களாபரணம் இதுதானோ என்று அந்த மூக்கணியைக் கொடுத்தார். குபேரன் தங்கை மனமகிழ்ந்து அதனை வாங்கி இருகண்களிலும் ஒற்றி இதனால் எண்ணாத எண்ண மெல்லாமெண்ணி வருந்தினோம். அங்ஙனம் வருந்தாவண்ணம் கொடுத்த நீரே எனக்குத்தமயனாவீர் என்று கூறி "வேதியரே நீர் எந்தேசத்திலிருப்பது? இப்போதுஎத்தலத்தை நாடிச்செல்வது? இந்தவனத்தில் ஏன் வந்தீர்? உமது சரீரமிளைத்ததற்குக்காரணம் யாது? என் ஆபரணம் உம்மிடத்தில் எப்படி வந்தது? இதை என்னிடத்திற் கொடுத்த விதம் என்னே? விபரமாகச்சொல்லுவீர்" என்றுவினவினாள். முனிவர் அது கேட்டு மொழிகின்றார்.

"பெண்கள் நாயகமே! நான் கோசலதேசத்தில் மணிபிங்கலை என்னும் ஊரிலுள்ளவன், ஒரு குறைவுமின்றி வாழ்ந்துவந்தேன். அப்பொழுது தாய், தந்தைமுதலிய சுற்றத்தார் இறந்தார்கள். நானும் மனைவியும் சிறிதுகாலம் இல்லறத்திலிருந்தோம். பின் வறு

ணிமப் பிணியால் என் மனைவியும் இறந்தாள். நான் ஒருவன் மாத்திரம் இறவாமற் பேய்போலலைந்து நிற்கின்றேன். அழகிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் என் மனைவியை நிகர்ப்பவர் ஒருவருமில்லை. பேய் மிருகம் முதலியவற்றிற்கும் மனைவிகளுண்டு. அதனையில்லாத என் போன்ற பாவிகள் இவ்வுலகில் எவர் உளர். இனிப் பொருள்முதலிய வற்றில்விருப்பமில்லை. முத்தியடையவழி நமபினால் அன்பின் இலக்ஷணமசிறிதுமில்லை ஒருசிவகணநாதர் இப்படிப்பட்ட என்னைநோக்கி விருத்தாசலத்துக்குப் போவாயாகில் விசேஷ பெருமையைப் பெறுவாய் என்றனர். அத்தலம் எத்திசையிலிருப்பது என அறிகிலேன். ஒருமாநிழலிற்படுத்திருந்தேன். அப்பொழுது இம்முக்கணி என் மடியிற் கிடந்தது. அதை உனனிடத்திற் கொடுத்தேன். இவ்வளவே; வேறில்லை. என்று விபசித்து முனிவர் கூறினார். கூறியதைக்கேட்ட குபேரன்தங்கையும் "இவர் தெய்வமுனிவர், இவரது செயலனைத்தும் சிவபெருமான் திருவிளையாடல் போலும் என்று அவர்உண்மைநிலையை அறிந்து பொய்கையிற் பொதிசோறு உண்ணக்கொடுத்து எல்லா ஆபரணங்களையும் அம்முனிவர் பால் தந்து இவைகளைத் திருமுதுகுன்றநாதர் திருப்பணிக்கு உபயோகப் படுத்தும்படி செய்வீர் என்று சொல்லி அவரையும் விமானத்தில் ஏற்றி அத்தலத்திற்கொண்டுவந்துவிடுத்து அதன்மகிமையுரைத்து மற்றமாதர்களுடன் தெய்வலோகத்துக்குச்சென்றாள். (அவர்தேவ மகளிர்; இவர் மனிதர். அவர் செல்வமுற்றவர்; இவர் கட்டக் கோவணமற்றவர். கணநாதர்கிருபையினாலல்லவோ இவர்களைச் சந்தித்தது. விதி தவறினும் கற்பகவிருக்ஷமும் குருவாக்கியமும் பெரியோர் வார்த்தைகளும் தவறுகமாட்டா.)

விபசித்துமுனிவர் மணிமுத்தாநதியில் மூழ்கி நகைகளைவைத் தற்குப்பல இடங்களை நினைத்துக்கொண்டு கரை ஏறினார். அப்பொழுது ஆகாயத்தில் அரனருளால் அசரீரிதோன்றி "விபசித்துவே, இத்தலத்தில்வந்ததினால் பிறவிகளை நீங்கினாய். ஆபரணங்களைக் கற்பகவிருக்ஷமாகிய வன்னிமரத்தில் வைப்பாய். கணநோத் துள் • கீர்ணாரியும் முத்தியடைந்தாய். உரோமசர்பால் உபதேசம் பெற்று முற்பிறப்பிற்செய்து முடியாத தவத்தை இப்பொழுது முடித்துக்கொள். கடவுளும் காக்ஷி கொடுத்தருளுவார்." என்று கூறிற்று. அதுகேட்டமுனிவர் மனமகிழ்ந்து நகைகளை வன்னிமரத் தில் வைத்துவிட்டு உரோமச முனிவருடன் சென்று வணங்கி

அசரீரிவாக்கையுரைத்தலும் உரோமசர் கேட்டு ஆனந்தங்கொண்டு இவ்விபசித்துவுக்கு இறைவனருள் எதனாலுண்டாயது என்று எண்ணி, பின் பெருந்தவத்தால் என்று தெளிந்து அவருக்குச் சிவஞானோபதேசஞ் செய்தனர். விபசித்து கேட்டு மனமகிழ்ந்து நதியில் நீராடிப் பழமலைநாதரை வணங்கித் துதித்துப் பஞ்சாக்ஷர செபஞ்செய்து துறவுபூண்டு குருபக்தியுடன் சருகு, நீர், காற்று, அருந்திப் பஞ்சாக்கினி மத்தியில் ஒரு காற்பெருவிரலை நிலத்தில் ஊன்றி நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தார். அத்தவமாகிய அக்கினி மூவுலகங்களிலும் சென்று மூண்டதால் தேவர் யாவரும் நடுங்கிப் பெருந்துன்பமுற்றார்கள்.

பெரியநாயகியார் இந்நிலையைத் திருவுளத்திற்கொண்டு பழமலைநாதரை வழிபட்டு நின்று "எமது தலைவரே! இம்முனிவன் செய்த தவாக்கினி எங்கும் பரவி எல்லாவுயிர்களையும வாட்டியதால் தேவரீர் எழுந்தருளித் தரிசனந்தருதல் வேண்டும், என்று பிரார்த்திக்க, பழமலைநாதர் முக்கண்ணும்,நாற்புயமும், சந்திரனையும கங்கையையும் தரித்த சடாமுடியும் உமையின் இடப்பாகமும செம்மேனியும் விளங்கும்படி விபசித்துவுக்கு எதிரே தோன்றியருளினர். அப்பொழுது அளவில்லாத உயிர்களும ஆனந்தங் கொள்ளவும், அந்தர துந்துபி முழங்கவும் தேவர்கள் பூமாரிபொழியவும், விபசித்து முனிவர் கண்டு தரிசித்து வணங்கித் தோத்திரஞ் செய்தனர்.

மருளூறுத்தும் பெருமபாச வலைவளைத்தைம பொறியாய
வெருளூறுத்து நாயேவிப் புலவேட்டை விளையாடி
இருளூறுத்தும்வெறுவெளியினின்றேனை யெடுத்தாட்கொண்
டருளூறுத்துமுதுமலையிலருட்கடனின் பதம்போற்றி.

கா[illegible] பெருமபாசக் காட்டுவழிதிசைதப்பிப்
பா[illegible]புலியலைப்ப விடயத்தீப்பரந்துசுடத்
[illegible]பேய் சழீஇக் கொள்ளத்தடமாறிக்
[illegible]வற்றுன் குளிர்ந்தமலர்ப்பதஞ்சரணம்.

எய்யாநான்முக னென்றுளானன்றே
யுய்யாவுடல மெடுத்தேனுன்றுண்
மெய்யாக் கண்டிலன் மெய்யிதுகரியே
யையாமுதுகிரியப்பாசரணம்.

அஞ்சு விதத்தா லாருமதத்த அந்தகர் தொடையா லடுமதர்படையா
னெஞ்சு சுழற்று நினைவால்வினையா னிர்தனை விழைவா னிரயக்குழியா
வெஞ்சு நடிப்பா லெய்த்தேனத்தா லுந்தி யினிரையா லுறுபிணிவலையா
தஞ்ச நிருத்தா சரணஞ்சரணம். னந்தனன் முதுகிரி நாதசரணம்.

இவ்வாறுதுதித்துநின்ற விபசித்துவைச் சிவபெருமான் திருவுள மகிழ்ந்து வேதியனே! நீ விருத்தாசலத்தின் திருப்பணிகளை முறைப்படி விருப்பத்தோடுசெய் என்றருளினர். விபசித்துவும "ஸ்வாமி, அடியேனுக்கு திருப்பணியைநிறைவேற்ற வருள்செய்து எப்போதும இத்திருவுருவத்தோடு இருந்தருளவேண்டும் என்று கடவுளிடம விண்ணபபஞ்செய்ய சிவனும் அங்ஙனமேயாகுக என்றருள்செய்தார். விபசித்து வன்னிமரத்தில்வைத்தநகைகளையெடுக்கும்படி ஏறினதும், முனிவரே. நான்கற்பகவிருக்ஷம் இத்தலத்தில் சிவபூசை செய்யவந்தேன்; திருப்பணிக்குவேண்டிய பொருளைக் கொடுப்பேன்என்று வன்னிமரம சொன்னது. விபசித்துவானவர் பழமலைநாதருடைய ஆலயத்திருப்பணிமுழுதும் அழகுறஅமைத்து தேர், தேரோடும்வீதி, சிவனடியார் இருக்குமிடம் இவைகளைச் செய்வித்து, நித்தியவிழா மாதவிழா நந்தவனம பலவாத்தியம் யானைகள் தேவதாசிகள் பசுக்கூட்டங்கள் மடாலயங்கள் இவைகளை ஆலயங்களுக்கு அங்கமாக ஏற்படுத்திச் சிவபெருமான் திருவடியில இரண்டறக்கலந்தனர். இனித்திருமுதுகுன்றநாதர் செய்தருளிய திருநிருத்தத்தைக்கூறுவாம்.

திருச்சிற்றம்பலம்.

---

ஆறாவது

## நிருத்தச் சருக்கம்.

அணுவளவுந் தவம்புரியாமல் அவமே புரிந்துழலும் பாவிகள் விருத்தகிரியிற்சென்று சிவபெருமானது திருவடிகளையெளிதிற்பெறுகின்றார்கள்என்று பிரமா. விஷ்ணுமுதலிய தேவர்கள் பழமலைநாதர் சந்நிதியிற்போய் வேதங்களையோதி வணங்கிநின்றார்கள். சிவபெருமான் திருவுள்ளக்கிடக்கையை அறிந்த விபசித்துமுனிவர் நந்திதேவருக்குக்கூற அவர் பழமலைநாதருக்கு விண்ணப்பஞ்செய்தார். அப்பரமன் அம்முனிவரிடத்தில் வைத்த பெருங்கருணையால் தேவதுந்துபி முழங்கவும், அடியார்கள் ஹரஹர என்று வாழ்த்தொலி

செய்யவும், பூதகணங்கள் வாத்திய கோஷஞ் செய்யவும், கணநாதர்கள் எள் விழ இடமின்றி நெருங்கி நிற்கவும் சோதிசொரூபராய்த் தேவர்கள்முன்தோன்றியருளினர். தேவர்கள் அந்தச்சோதியைக் கண்டு நடுநடுங்கிக் கண்களைமூடி இங்ஙனந்தோன்றுதல் முறையோ என்று வேண்டலும், கடவுளும் காட்சி தந்தருளித் தேவர்களைப்பார்த்து நகைத்து உங்கள் சுகம் எப்படி என்று வினவியருளினர்.

தேவர்கள் "தேவாதிதேவரே, சிவசங்கரரே, எங்களுக்குத் தருமாதிகாரப்பதவிகளைத்தந்தருளினீர்; அப்பதவிகளில் வருபவர் ஒருவருமில்லை; எல்லாவுயிர்களும் மணிமுத்தாநதியில் மூழ்கி, எளிதில் தேவரீரது திருவடியடைந்து முத்திபெற்று நித்தியானந்தராய் இருத்தலால், பிரமபதவிக்கும் விஷ்ணுபதவிக்கும்வருபவர்களில்லை; சிவபூசையுமில்லை; தேவர்களுக்கு அவிப்பாகமும் அளிப்பதில்லை; அசுவமேதயாகங்களும் அதன்போகங்களும் இல்லை; போரும் வீரசொர்க்கமுமில்லை; சூரிய நமஸ்காரமும் இல்லை; யமதண்டனையும் இல்லை; தானங்களும் இல்லை; மற்றத்தேவர்பதவிகளுக்கு வந்தவருமில்லை. ஆதலால் தவத்தாற்பெற்றஸ்தானங்களும அழிந்தன. நரகங்களும பாவிகளில்லாமல் நாசமடைந்தன. எங்களுக்கு இதுவரை அதிகாரமில்லை, இனி நாங்கள் அதிகாரஞ்செலுத்தும்படி தேவரீரே கிருபை செய்யவேண்டும்" என்று வேண்டினார்கள்.

சிவபெருமான் அத்தேவர்களை நோக்கி, "தேவர்களே வாருங்கள். இவ்விருத்தகிரியே எமது உருவம. இந்நதியேசிவசத்தி. ஒருமையுடன் அந்நதியில்மூழ்கிஎம்மைவணங்கினால் உயர்ந்த கதியளிக்கும; அதையாவர்தடுக்கவல்லவர். மாமுதலிய அறிவில்லாத உயிரும தம்மையடைந்தவர்களுக்கு உயர்ந்த பேறளிப்பதை நேரே அறிந்திருக்கின்றீர்கள். உண்மைப்பதவியளிப்பது அதன் இயற்கையாகும். முன் நீங்கள் இத்தலத்தில் வந்து தவத்தைச்செய்தவினாலன்றோ பெரியதேவர்களாயினீர்; இப்பொழுது உங்களைத்தவஞ்செய்ய வேண்டாமென்று நீக்கினால் மற்றவர்களையும் விலக்குதல் நன்று. ஆதலால் நீங்களும் இத்தலத்தில் தவஞ்செய்தால் முத்தியைப்பெறுவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

தேவர்களனைவரும் அவ்வாறே மணிமுத்தாநதியில் மூழ்கிப் பரமசிவனை இருதய கமலத்தில் தியானஞ் செய்தபொழுது சிவ

பெருமான் திருவருளால் வேதங்களும் ஆகமங்களும் எங்கும்நிறைந்தன. தேவர் குழுவிற் சிவனும் விளங்கி நின்று ஒற்றுமையையும் உண்மையையும் உணர்த்தும்படி திருவுளங்கொண்டு ஞானமயமாகிய திருவடிகள் எட்டுத்திக்கிலும் பிரகாசிக்கும்படி சத்திகள் முகத்திலும் பத்தர்கள்முகத்திலும் திருவருணோக்கஞ்செய்து மணிமுத்தா நதிக்கரையில் திருநிருத்தஞ் செய்தருளினார். தேவர்கள் நிருத்த தரிசனஞ்செய்து ஆனந்தமாகிய அமுதைப் பருகி, அசைவின்றி, மெய்மறந்து ஒற்றுமையுற்றார்கள். சிவபெருமான் தேவர்கள் நிலையறிந்து உமையைநோக்கி நகைத்து, தேவர்களுக்கு அன்பு உண்டாகும்படி பின்னும் நிருத்தஞ்செய்து தனித்துநின்று தேவர்கள் அஞ்ஞானம் நீங்கும்படி ஞானக்கண்ணைத் தந்து திருவைந்தெழுத்தின் உண்மை ஞானத்தை உபதேசஞ்செய்தருளுகின்றார். "இருளும் வெளியும் இல்லாத இடத்தில் அசைவின்றி நிற்பதே சமாதி. பூதாகாசம் மற்றைப்பிருதிவி அப்பு வாயு தேயு நான்கிலும் கலந்தும் கலவாமலும் நிற்பதுபோல, சிதாகாசமாயும் எல்லாப் பொருளுந் தாமேயாயும் எங்கும் நிறைந்து நாதத்துக்கு அதிபதியாய் விளங்கிநிற்கும் பரமசிவமே நாம், உடல் உயிர் இரண்டிலும் உட்பொருளாய் விளங்குவதும் புறப்பொருளாய் விளங்குவதும் யாம் என்று தன்னுடலிற் றரிசித்தவனே சிவசொரூபமாவான். ஆகமங்களின் முடிவும் இவ்வாறே கூறும். தேவர்களே நீங்கள் இதனை அறிந்துகொள்ளுங்கள். ஒருவர் நமது உண்மை வடிவை ஞானாசாரியார் வழியாக அறிவார்களேயன்றித் தாமாக அறியார்கள். உடல், பொருள், ஆவி மூன்றும் உதவி, குருவிடத்தில், அருளுபதேசம் பெறுபவர்கள் நிழலும் மரமும்போல நீங்காது நிற்பார்கள். ஆசிரியர்களின் குலத்தையும் குணத்தையும் அவமதித்தவர்களும், அவரை நம்மில் வேறாக நினைத்தவர்களும், வஞ்சனை செய்தவர்களுமாகிய இவர்கள் நெடுங்காலம் நரகங்களிற் கிடந்து வருந்துவார்கள். ஆசாரியர்களுக்கு அருச்சனைசெய்வது நமக்குச் செய்வதாகும். எல்லாவுயிருமாயிருக்கின்ற நமக்குச் செய்த குற்றங்களை ஆசாரியர் நீக்கியருளுவர். அவருக்கு வஞ்சனையாற்செய்த குற்றங்கள் எம்மாலும் நீக்கமுடியா; என்னெனின்? முத்தியைக் கொடுப்பது அவரது தொழிலேயல்லாமல், வேறொருவருடைய தொழிலல்ல; ஆகலான், ஆசாரியர் பேரின்பத்தைக் கொடுத்தருள அவற்றிற்குப் பிரதியுபகாரமாகத் தங்கள் உடல் பொருள் ஆவியை

மனமாசொடு தத்தஞ்செய்தவர்கள் நரகங்களிற் கிடப்பர். அவர் பிறவியறுப்பவர் ஆசாரியர்களே. தேவர்களே நீங்களும் நம் உண்மையை அறிந்திருக்கின்றீராதலின் தெளிந்துகொள்ளுங்கள். உத்தமமாகிய இந்தச்சத்தியவசனத்தை உண்மையென்று உணராதவர்களே தங்கள் சிரங்கள் வெட்டுண்டு ஆயிரம் சுககலாய்ப்போய் எரிவாய் நரகத்துக்கு இரையாவார்கள். இது சத்தியம் சத்தியம்" என்று நிருத்தஞ் செய்தருளிய திருமுதுகுன்றநாதர் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். அப்பொழுது தேவர்கள் கடவுள் திருவடிகளை வணங்கிச் செல்லுவார்களாய் " ஆசிரியரிடமாகப் பெற்ற தவத்தையுடைய பெரியோர்களே எப்பொழுதும நீங்காமலிருப்பார்கள். அப்படிப் பெறுதவர்கள் நிலைபெற்றிருக்கமாட்டார்கள் என்றுரைத்துச் சென்றார்கள். மணிமுத்தாநதியில் திருநிருத்தஞ் செய்த சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய உண்மைப்பொருளை அன்புடன்படிக்கும் அடியார்கள் அசுவமேதயாகபலனிலும் அநேக பலனையடைந்து பிறவிப்பிணி நீங்கிச் சகலசித்திகளும முத்தியும பெறுவார்கள் என்று அனவர்த்தியென்னும் தேவிக்கு நாதசனமா கூறினார்.

திருச்சிற்றம்பலம்.

---

ஏழாவது

## அகத்தியச சருக்கம்.

திருமுதுகுன்றநாதரின் திருநிருத்தத்தைக் கூறினோம். உலகிலுள்ள உயிர்கள யாவும உய்யும்படி அகத்தியமுனிவா இவ்விருத்தகிரிக்கு விருபபத்தோடுவந்த சரித்திரத்தைச் சொல்லுகின்றோம.

விந்தமலை வளர்ந்து சூரிய சந்திரர்கள் செல்லும வழியைத் தடைசெய்தது; அதனால் இராப்பகல் இல்லாதொழிய, பிராமணர்கள் நித்தியாநுட்டானமசெய்யாமலும தேவர்கள் அவிபாகமில்லாமலும் பசியினால் வாடுதலால், மழை பெய்யாமல் துரும்புங் கரிந்துபோகுந் தன்மையைத் தேவர்களும முனிவர்களும பிரமதேவருக்குக்கூற, அவர் தமது குமாரராகிய தவத்திற்பெரிய அகத்திய முனிவரை நோக்கி "நீ விந்தமலையின் செருக்கையடக்கி, வில்வலன், வாதாவியென்னும் அசுரர் இருவரையும அழித்துவருவாய்" என்று கூறினார். தேவர் முனிவர் யாவரும் புகழ்ந்து துதிக்கவும்,

பூமாரிபொழியவும், தேவமகளிர் நடிக்கவும், பஞ்சவாத்தியமொலிக்கவும், அசுரர்கள் அஞ்சவும, அகத்தியமுனிவர் புறப்பட்டுத் தீர்த்தங்களையும, பல தலங்களையும் தரிசித்து விந்தமலையின் சமீபத்திற் செல்லுதலும், நூறுயிரயோசனைதூரம் உயர்ந்திருக்கின்ற விந்தமலையானது அகத்தியமுனிவரைககண்டு மனமுருகி எதிர்கொண்டு வணங்கிப்பணிந்துநிற்குநிலையை முனிவர்கண்டு மகிழ்ச்சியுடன்கூறுகின்றார். "யான் தென்றிசைககுத் தவஞ்செய்யவிருமபிச்செல்லுங் காலத்தில் உன்மேல் ஏறி யிறங்கிப்போதல் கூடாது. அது ஒரு தடையாயிருககின்றது. ஆதலால் பூமிககுச்சமமாய் அடங்குவாய்; இப்படிச் செய்யாவிடின் உன்னையழித்துச் சாமபராககுவோம." என்று முனிவர் கூறவும, படம விரிததாடும பாமபு மந்திரமொழிகளைககேட்டதும படத்தையொடுக்கிப் புற்றினுட் புகுவதுபோல விந்தமலை பூமியுள் ஒடுங்கியது. சந்திர சூரியர்கள வழககமபோற் சஞ்சரிகக, தேவர்முனிவா யாவருமமனமகிழ்ந்து பூமழை பொழிந்தார்கள். அகத்தியமுனிவா வில்வலன் வாதாவியிடத்தில் தனித்துச் செல்லுதலும், அவரிருவருமஎதிர்சென்று பூசித்து அமுதுசெய்தருளுமபடி வேண்ட, முனிவர் சம்மதித்தலும, வஞ்சகனாகிய வில்வலன் தமபியாகிய வாதாவியை ஆட்டு வடிவமாககி அறுத்துச் சமைத்துப் பாகஞ்செய்து படைத்தான; அகத்திய முனிவரும் அமுதுசெய்திருந்தார். வில்வலன் வாதாவியை வருகவென்று அழைத்தான்; அதனையறிந்த அகததியமுனிவர் சிவபெருமானருளால் அவ்விருவரையும அழித்துவிட்டார். அனைவரும வாழ்தொலி செய்தனர். முனிவர் கொடிய விந்தமலையைப்பார்த்த பாவந்தீரவும் அசுரர்களை அழித்த பாவந்தீரவும் விருத்தாசலத்துககு வந்து மணிமுத்தாநதியில மூழ்கிப் பழமலைநாதரை அன்புடன் அருச்சித்து வணங்கினார். பழமலைநாதர் எழுந்தருளி முனிவருக்கு நிருத்த தரிசனம கொடுத்தருளினார். அகததியமுனிவா நடனதரிசனஞ்செய்து பேரானந்தங்கொண்டு வணங்கி நின்று சுவாமீ, அடியேன் உமது திருவடியைவிட்டு நீங்காதிருககும் கைமமாறே கைமமாறென்று கருதிப பிரார்த்தித்து முனிவர்களைத் தத்தம் இடங்களிற் செல்ல விடைகொடுத்துப் பழமலைநாதரை வழிபட்டுக்கொண்டு வந்தார். இனிக கலிங்கராசன் சரிததிரத்தை இயம்புகின்றோம்.

திருச்சிற்றமபலம்.

எட்டாவது

## கலிங்கச் சருக்கம்.

பழமலைநாதரை வழிபடும் பாக்கியம பெற்றவர்களைப் பழிக்க நினைத்தாலும பழித்தாலும் பேய்வடிவாகிக் காடுகளிற்சென்று திரிவார்கள்; அவர்களைக கூறுவோம.

உரோமசமுனிவர் ஓமவிறகு, தருப்பை, புட்பம், மாவிலை முதலியன எடுத்துக்கொண்டு திரியும் வனத்தில் ஒரு நாள் பெரியோர்களை நிந்தித்ததனாற் பேய்வடிவமபெற்ற ஒருவன் மெய்நடுங்க வாய் புதைத்து வணங்கிநின்றான். முனிவர் அவனைநோக்கி "நீ எங்கே செல்கின்றாய்; உனக்கு இந்த வடிவம் எதனால் வந்தது" என்று வினவலும் பேய்வடிவினன் பின்வருமாறு கூறுகின்றான். "யான் உயர்ந்தசாதிச் சூத்திரன், என்பெயர் கலிங்கன், அங்கதேசத்தில் இருப்பவன். நாடு, வீடு, மாடு, பெண்டிர், பிள்ளை, செல்வம் முதலிய எல்லா நலங்களிலும குறைவில்லாதவன், அடுத்தவர்க்குக் கொடுப்பவன், மிகப்பசியுடன் நொந்துவந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாது அன்னமளிப்பவன்; இவ்வாறு பலநலங்களும் பெற்று வாழ்ந்துவருங்காலத்தில், நிறைமொழி மாந்தராகிய ஒரு யோகியார் வாழ்வுபெற்றவாசல்என்று என் வீட்டுக்கு வந்தனர் நான் என் விதிவசத்தால் அவரைக்கண்டு எழுந்து மரியாதைசெய்யாதிருந்ததலை அந்த யோகி உணர்ந்து நீ என்ன வாழ்வு வாழ்கின்றாய் என்று காமவிரித்துச் சிரித்து, உன்னை அறிஞர்கள் காணின் உடனே சூரியன்மேனியைக் காணவேண்டும்; நீ உன் மைந்தர்களுக்கு வாழ்வைக்கொடுத்து அருந்தவமுனிவர்களோடு அடைந்து தவஞ்செய் என்று கூறினார். அடியேன் அந்த யோகியைநோக்கி எங்கும் இடங்கிடையாமல்அலைந்து உருத்திராக்ஷம் கிழிந்த துணியணிந்து, சாமபலைப் பூசித் தரித்திரனாய் வீடுதோறும் நுழைந்து திரிகின்றாய்; நீ நிந்தகர்க்கு நிந்தகன். அப்படிப்பட்ட உன்னை யானுங் கண்டு நகைப்பேன் என்று சினங்கொண்டு கூறினேன். அந்த யோகீஸ்வரர் அதிக கோபங்கொண்டு சூத்திரப்பேயே, நாம் உன்பால் அன்புடன் கூறிய நன்மொழிகளை யுணராது நம்மைத் தூஷித்த நீ பேய்வடிவங்கொள்வாய் என்று சாபமிட்டனர். நான் அவர் திருவடிகளைப் பற்றிக்கொண்டு அடியேன் செய்த குற்றங்களைப பொறுத்தருளவேண்டும் என்று வேண்டினேன். அவர்

நீ விருத்தாசலத்திற்குச் சென்று உரோமச முனிவரைக் கண்டால் இச்சாபம் நீங்கும் என்று கூறினார். முட்டியபின் தலை குனிவது போல, சாபமிட்டபின் அவரை வணங்கினால் அவர் பாதங்கிடைக்குமோ! பின் பேய்வடிவானேன். அதுமுதல் எவரும் என்னைத் தொட்டதுமில்லை. வயிரவக்கடவுளும், அவர் சேனாபதியும், சேனைகளும் அன்னந்தண்ணீர் ஆகிய பதார்த்தங்களைக் கையிற்றொட்ட பொழுதே என் கையறும்படி வெட்டுவார்கள். இருக்கவும் நிற்கவும் இடமில்லாமல் மழை, வெய்யில், காற்று இவைகளால் வருந்தி நித்திரையின்றித் திரிந்து நிற்கின்றேன். என் உடம்பில் எலும்பு மாத்திரம் இருக்கின்றது; அணுவளவு மாமிசமும் இல்லை. யான் என்செய்வேன்; மிகவும் வருந்தினேன். அத்துன்பங்களுக்கு எல்லையில்லை; இத்துன்பம் நீங்கும்படி தேவர் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தேன்" என்று கூறிய கலிங்கன்மீது உரோமசமுனிவர் கிருபைசெய்து "கலிங்கனே, உன்னிடத்தில் யோகீசர் சாபம்வந்து கிட்டியது, உன் மலபரிபாக காலம்வந்து தோன்றியதாகும். முற்பிறப்பிற் செய்த பாவத்தைத்தாம் அநுபவித்துத் தீர்ப்பதற்கே அவர் சாபந்தந்தார். அதுபற்றி அஞ்சாதே" என்று கூறி அவன் மெய்யிற் கரம்வைத்தனர். கருணையே உருவமாகிய சிவனடியார் திருவடித் தரிசனமே பாப விமோசனமாகும். அவர் கூறும் நல்லுரைகளை உள்ளத்திற்கொள்வதே தவங்களாகும். அவர் ஒருமையுடன் கூறும் சொற்களைக்கேட்பதே ஜீவன் முத்தியாகும். அவர் உள்ளமுவந்திருப்பதே முத்தியாகும். "கலிங்கனே நமது திருவருணோக்கமே முன்னுள்ள பேய்ப்பிறவி நீங்கி மனிதப்பிறவியாகியது. ஆதலால் மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதர் திருவடிகளைத் தரிசனஞ் செய்வாய்" என்று உரோமசமுனிவர் உரைத்தருளினார். அக்கலிங்கனும் மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரையும், பெரியநாயகியையும் வணங்கிக் கண்களில் ஆனந்தபாஷ்பஞ்சொரியத் தரிசித்துத் துதித்து மனமகிழ்ந்து இம்மையில் இராஜபோகங்களையும், மறுமையிற் றேவர் பதங்களையும், அநுபவித்தொழித்துப் பின் சுத்தமாகிய முத்தியைப் பெற்றான். தவமுனிவர்களைத் தரிசித்தவர்களுக்கும், தூஷித்தவர்களுக்கும் வரும் பலன்களை அறிந்துகொள்வதற்கு இக்கலிங்கனே சாக்ஷி. பெரியோரைநிந்தித்த மூடர்களும், பாழுங்கிணற்றருகில் நின்ற சிறுபிள்ளைகளும் சமம். ஆனால் கிணற்றில்விழுந்த சிறுவர்கள் திரும்பப் பூமியிற்பிறந்து செல்வத்தை

யடைவார்கள். பெரியோர்களை நிந்தித்த கொடியவாய்களையுடைய நாய்கள் ஒவ்வொரு சொல்லுக்கு ஒவ்வொரு நரகமாகக் கிடந்து வருந்துவாரகள்.

திருச்சிற்றமபலம்.

---

ஒன்பதாவது

## கலியகல் சருக்கம்

சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, விருத்தாசலத்தின்பெருமையைக் கூறியருளும என்று விண்ணப்பஞ்செய்ய, சூதமுனிவர் உருத்திரசங்கிதையிறகூறிய கலிதொலைத்த சரித்திரத்தைச சொல்லுகின்றார்.

சனற்குமாரர் முதலிய முனிவர்கள் மேருமலையிற்சென்று பிரமதேவரை வணங்கிநிற்ப, அததேவா அவர்களைநோககி உங்களுககு நேர்ந்த துன்பம் யாது என்று வினவ, சனற்குமாரமுனிவர் சொல்லத்தொடங்கினர். "முனிவாக ளனைவரும கலியின்வசப்பட்டதனாற் றுன்பமுற்றார்கள். அரசனும சூத்திரனுயினன. மழையும பெய்யாமல் மறுத்தது. அதனால் தேவர்களுககுப் பூசையில்லை. தானதருமம இலலை; தவமும இல்லை. வேதநெறியைவிட்டார்கள. கண்டவாகள் வேதமோதுகின்றனர். பிராமணர் அரசன் ஏவலின்படி அடங்கிநடககின்றனர். வேதங்களை ஓதுகின்றிலர். அவற்றின் பெருமைகளையும் எண்ணிலர். இகழ்ந்து திரிகின்றார்கள். முனிவர்கள் யோகம ஞானம செபம பொறுமை முதலிய குணங்களைக கைவிட்டனர். பேரின்பத்தைககாட்டிலுமசிற்றின்பமேசிறந்தது என்கின்றனர். மனைவி மைந்தர் வார்த்தைகளுககுமேன்மையதிகம். தாழ்ந்தவர் உயர்நதவராகின்றார். மாணுக்கர்கள் குருவிடத்தில் வாதஞ்செய்கின்றனர். சிவபூசைவிதிவழுவி அவமே செய்கின்றார்கள். மெய்யை நீக்கிப்பொய்யையேபுகலுகின்றார்கள். சூத்திரர்கள்யாகஞ்செய்கின்றார்கள். அரசன் காமவிச்சையும் பெண்கள் கூட்டமும் சூதும் தீயவழியிற் பொருள்தேடுதலும் உடையவனுகின்றான். ஒருவர்செய்யும் ஆசாரங்களை மற்றவர்செய்கின்றார்கள். புண்ணியமாகிய சிவவேடத்தைபபூண்பவர் ஒருவரும்இல்லை. பிரம விஷ்ணுககளால் அறியமுடியாத பரமசிவனை நிந்தனை பண்ணுகின்றார்கள். பொய்ப்பொருளைப் போற்றுகின்றார்கள். மெய்ப்பொருளைத்தூற்றுகின்றார்கள். குடும்ப

மாகிய சமுத்திரங்களில் கொலைமுதலிய துன்பங்களாகிய முதலைகள்
வந்து எங்களை இழுக்கின்றன. அவைகள் விட்டு நீங்கும்படி தேவரீர்
மாலுமியாக நின்று எங்களைக்கரையேற்றியருள வேண்டும்" என்று
விண்ணப்பஞ்செய்தார்கள்.

அதனைக்கேட்ட பிரமதேவர் அவர்களை நோக்கிப்பின்வருமாறு
கூறுகின்றார். "கலியே இல்லாத பதியொன்றுளது நீங்கள் எந்தக்காலத்தி
லும் இந்தக்கலி அந்தத்தலத்தை யடைவதில்லை. அந்தத்தலத்தை
யடைந்தவர்களுக்குப்பெரும்பிணிகள் யாவும் அகலும். அக்கினியும்
சூடும்போலச்சத்தியும் சிவனும் பேதமின்றி விளங்குவர். அத்தலம்
நித்திய கல்யாணமாய் நிகழும். கலியே இல்லாத அப்பழமலைப்பதி
யைத்தரிசித்தவர்களுக்குச்சகலவித்தைகளும் சித்திகளும் முத்தி
யும் உண்டாகும். நாமமுற்காலத்தில் அத்தலத்திற்சிவபூசைசெய்து
சிருஷ்டித்தொழிலைப்பெற்றோம். மகாவிஷ்ணுவும் வஞ்சகஅரக்கர்
களை வெல்லும் வரம்பெற்றார். திருவிடைமருதூரில் தவஞ்செய்த
தேவல முனிவரும் இத்திருமுதுகுன்றிற் சிவபூசைசெய்து நாமால்
அடையமுடியாத நித்தியத்துவத்தைப் பெற்றார். யாகஞ்ஞவற்கி
யர் சிவபூசை செய்து வேதப்பொருளையும் ஞானசித்திகளையும்
அடைந்தனர். சுக்கிரனும் சிவபூசையால் அசுரகுருத்துவம் பெற்று
மந்திரசித்தியும் எய்தினன். சிகண்டி என்பவனும் சிவபூசையாற்
சித்திகள்பல பெற்றான். விசுவாமித்திரரும் சிவபூசையால் வேத
முனிவராய் விளங்கினர். வசிஷ்டரும் விசேஷபூசையுடன் ஒருயாக
ஞ் செய்தார். அந்தயாகத்தில் அகத்தியர் முதலிய முனிவர்கண
ங்களும் இந்திரன்முதலிய தேவரும் சந்திரசூரியரும் சதுர்மறைக
ளும் வந்து அவிப்பாகம் வாங்கினர்கள். நமது பழமலை நாதரும்
மறையவர்போல வடிவங்கொண்டு வந்து தம் கரத்தால் அவியைவாங்
கி அமுது செய்தருளினார். அக்காலத்தில் அசுரர்களை யழிக்கும்படி
தேவர்கள் வருதலும், அதனைக்கண்ட அசுரர்கள் அஞ்சிக் கடலிற்
புக்கொளிப்ப, அகத்தியமுனிவர் அக்கடலை ஆசமனஞ்செய்து
பருகியதால், வெளிப்பட்ட அசுரர்களைத் தேவர்கள் அழித்தார்கள்
இஷ்ட சித்திகளை யெய்தினோர் இவர்கள்மாத்திரமல்ல. இன்னும்
இங்கேநம்மாற் சொல்லப்பெறாத மற்றவர்களும் எண்ணில்லாதவரங்
களைப்பெற்றார்கள். ஆதலினால் நீங்கள் அத்தலத்திற்குச் செல்லுங்
கள்." என்று பிரமதேவர்முனிவர்களுக்கு இவ்வாறுகூறியருளினார்.
அவரதுஉபதேசமொழிகளைக்கேட்ட முனிவர்களனைவரும் அந்தத்

தலத்தையடைந்து புண்ணியமடுவில்மூன்றுகாலங்களிலும்மூழ்கிப் பழமலைநாதரைப் பூசித்து, வலம்வந்து செபித்து, துன்பங்கள் நீங்கப்பெற்றுப் பலவரங்களையும், ஞானத்தையும, கலியில்லாத சுகத்தையும அடைந்திருந்தார்கள். உடலைவாட்டி ஒறுத்தலும வெறுத்தலுமின்றி, இத்தலமகிமையால சிறிது காலத்துள் தவத்தினபலனகள் யாவும சித்திபெறறன என்று முனிவாகள தங்களுக்குள் அதிசயங்கொண்டு அத்தலத்தில் அளவில்லாதகாலமிருநது சிவபூசை செய்துவநதாாகள்.

திருச்சிற்றமபலம்.

---

பத்தாவது

## சுவேதச் சருக்கம்.

முன்னொருகாலத்தில, குருகுலத்திற் பிறந்த சுவேதன் என்னும் அரசன ஐமபது கோடி யோசனைதூரம் அகனற உலகமுழுவதையும் ஒருகுடையினகீழ்பபெருமையுடன்அரசுசெய்து விருதத பருவத்தினனாய்த் தன்மனைவியோடும பூமியைச் சுற்றிவருங்கால, மனைவியிறகக, அதனைககண்டு அடங்காத்துயரங்கொண்டு, மனத்தளர்வுற்றுச் சகலசுகங்களையும வெறுத்துப் பின் அசுரகுருவால உபதேசமபெற்று, யமவாதனை சிறிதுமிலலாத தலத்தை நாடிச் சென்று, திருவானைககா, திருத்தவத்துறை, திருமழபாடி, திருவையாறு என்னுஞ் சிவதலங்களைத்தரிசித்து, திருவதிட்டையில் வந்து சுவேதமுனிவனுப்த் திருமுதுகுன்றினிற சென்று. மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரைபபணிந்து வலமவந்து அகத்தியமுனிவரையடைந்து அன்புடன் வணங்கிநின்று, சுவாமீ, அடியேன் தவம்புரியுந்தலத்தை யருள்செய்யவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தான்.

"இவ்விருத்தாசலத்தில், தவஞ்செய்தவர் எவரும் இறப்பதில்லை; குபேரனும், விசுவாமித்திரரும, சிறந்ததேவரும், பிரமாவும் பெரிய வரங்களைப்பெற்றார்கள். இத்தலத்தில் வந்தவர்களில் வரம் பெறுமற்போனவர்கள் ஒருவருமில்லை. அநாதியாகிய சுயமபுலிங்கத்தின் பெருமையும் மணிமுத்தாநதியின் பெருமையும எனது பரமகுருவாகிய முருகப்பெருமான் அருளியதைககேட்டு, நாமும் இத்தலத்திற்குவந்து பூசித்து, சிவயோகம்சிவஞானம்முதலிய சகல

பேறும் பெற்றோம். இத்தலத்தின்மகிமை மன முதலியவற்றிற்கும் எட்டாதது. நீயும் இத்தலத்திலிருந்து மனக்கவலையைநீக்கிப்பெருந் தவத்தைச் செய்வாய்" என்று அகத்திய முனிவர் கூறினார். அதை கேட்ட சுவேதமுனிவர் அகத்திய முனிவர் அருளியபடி சரீரவாழ் வையும் சகல வினைகளையும் துறந்து, மணிமுத்தாநதியில் மூன்று காலங்களிலும் மூழ்கி விபூதி ருத்திராக்ஷந்தரித்துப்பழமலைநாதரைப் பூசித்து வலம்வந்து பஞ்சாக்ஷரஞ்செபஞ்செய்து சிவனடியார்களைப் பூசித்து அறுசுவையுடன் அமுதளித்திருந்தார். அதுகாலை, பழமலைநாதர் சுவேதமுனிவரிடத்தில் எழுந்தருளிப் பிரமனுக்கு உப தேசித்த மந்திரத்தை உபதேசித்து இத்தலம் நமது வடிவமாகும் இந்நதி எல்லா நதிகளுக்கும் அரசாய் விளங்கும். இத்தலத்தில் தவஞ்செய்வாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். சுவேத முனிவர் சிவபூசை, சிவனடியார் பூசை, தானம், தருமம் இவைகளை விருப்பத்தோடு பெருக்கித் தவத்தையும் சந்தோஷத்துடன் செய் தனர். கன்றையிழந்த பசுப்போலச் சிவபெருமான் சுவேதமுனிவ ரெதிரே வெளிப்பட்டு நின்று "சுவேதனே இன்றுமுதல் நீ சுதபன் என்னும் பேரைப்பெறுவாய். அன்றியும் நந்திதேவனுடைய சுகத் தையும் பதவியையும் நல்கினோம்" என்று அருளிச்செய்தார். சுவேதர் "அடியேன் பிறவித்துன்பம் யமவேதனை நரகத்துன்பம் இவற்றால் மனஞ்சலிப்படையவில்லை. பிறத்தல் இறத்தலால் தலை தடுமாறித் தேவரீர் திருவடி மறப்பேனாகில் மாறுதல் உண்டாகும். அதனால் இத்தவத்தை இழந்து விடுவேனோ என்று நினைந்து பிறத் தலுக்குப்பயந்தேன். ஆதலால் இத்துன்பத்தை நீக்கியருளல்வேண் டும். சுவாமீ இப்போது தரிசனந்தந்தருளியதுபோல எப்பொழுதும் உமாதேவியாருடன் நின்று அருள்செய்யவேண்டும். தேவரீர் திரு வடியில் நேசங்குன்றாதவாறு வரங்கொடுத்தல் வேண்டும்" என்று சிவபெருமானிடத்தில் விண்ணப்பஞ்செய்தார். அம்முனிவரெதிரே பரமசிவனும் நகைத்தருளி அப்படியே ஆகக்கடவது என்று அரு ளிச்செய்தார். சுவேதரும் அமுதத்தன்மையான வரத்தைப்பெற்றி ருந்தார். இனி, சிவனடியார் பூசையைச்சொல்வோம்.

திருச்சிற்றம்பலம்.

---

## பதினொராவது
## அன்பர்பூசைச் சருக்கம்.

காந்தபுராணத்திற் சிவாகசியகண்டத்திற் கூறிய பழமலையில் வாழும்அன்பர்பூசையைசசொல்லுகின்றோம். பூர்வத்தில் ஒரு வணிகனுக்கு நான்குபுதல்வர்கள இருந்தார்கள். அவர்களுள் மூத்தவன் காசியிலிருந்துவருமசிவனடியார்களைககாசிவிசுவேசராகப்பாவித்துப் பூசித்துத்தேகாந்தத்தில் அககடவுள் திருவடியிற்சேர்ந்தான். இரண்டாவதுபுதல்வன் சோமேச்சரமென்னுந் தலத்திலிருந்து வரும் அடியார்களைச்சோமேச்சரராகப்பாவித்துப்பூசைசெய்து சோமேசர் திருவடியடைந்தான். மூன்றாவது புதல்வன் பாதுக்களின் புதல்வர் பொருளை அபகரித்து அதனால் தனபதியாகிச் சிதம்பரத்திலிருந்துவரும் அடியார்களைச் சிதமபரேசுராராகப்பாவித்துப் பூசித்துப் பின் சிற்சபேசர் திருவடியிற் சேர்ந்தான். நான்காவது புதல்வன் பழிபாவங்களுக்குப் பயப்படாது தீயவழியிற் பொருள் தேடிப் பிணியடைந்து தன்னைபபிடித்துவருத்திய பிரமகத்திதோஷத்தால் மூர்ச்சித்துக்கிடப்பதைத் தகப்பன் கண்டு ஒரு வயதுசென்ற பிராமணரிடத்திற்கூற, புராணககடலில் மூழ்கிய அப்பிராமணோத்தமர் அவர்களைநோக்கி "நீங்கள் தேவர்களும முனிவர்களும தெரிசித்து வணங்கும் திருமுதுகுன்றிற் சென்றால் இந்த வியாதி நீங்கும" என்று கூறினார்.

அதனைககேட்ட வணிகன் தன்புதல்வனோடும் பந்துவர்க்கத்தோடும விருத்தாசலத்தை யடைந்து மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரையும பெரியநாயகி யம்மையையும் வணங்கி நூற்றெட்டுத்தரமவலம்வந்து துதித்துச்சிவனடியார்களுக்குத் திருமடங் கட்டி அன்னவஸ்திர முதலியன அளித்துவந்தார்கள். இப்படி ஒரு வருஷம வரை நியமந் தவறாமற் செய்தலும், புதல்வன் பிரமகத்தி தோஷமும பிணியும் நீங்கித் தன் பிதாவோடும சிவன் திருவடியிற் சேர்ந்தான். அவன் உறவினர்களும மோக்ஷமடைந்தார்கள்.

இந்த வணிகமக்கள் நால்வருள் இளையவன் பெற்ற உயர்ந்த பேற்றை அகத்தியமுனிவர் சுவேத முனிவருககுச சொல்ல அவர் அம்முனிவர் அநுமதிப்படி விருத்தாசலத்திற்கு வந்து மணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரை வணங்கித்துதித்துத் தாம் செய்த பூசையில் அபிஷேகித்த நீரைத் தன் பெயரால் சுவேதநதி

யென்றுசொல்லும்படி செய்து சிவனடியாரைப்பூசித்து அறுசுவை யுடன் அன்னமுதலியன அளித்துப்பழமலைநாதர் அருளால் பிறவித் துயர் நீங்கிப்பிரகாசித்தார். இதனை நைமிசாரணிய முனிவர்கள் கேள்வியுற்று இத்தலத்துக்குவந்து சிவனடியார்களைப்பூசித்துவரும் பொழுது சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநடராஜப்பெருமான் அம்முனிவர்களுக்குப்பிரத்தியக்ஷமாகி நடனதரிசனந்தந்தருளினார். சுமந்தமுனிவா இத்தலபுராணத்தைச் சொல்லுங்காலத்தில் தெய்வ வின்மன் என்னுமரசன் கேட்டு வந்து மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரைவணங்கி அடியார்களையுமன்பொடுபூசித்திருந்தான். சிவனடியார்கள் எவர்கள் வீட்டிற்சென்றபோதிலும் அந்த வீட்டில் தேவர்களும் முனிவர்களும் வந்து கூடுவார்கள். அல்லாமலும் அந்த வீடு சகல செல்வங்களாலும் சிறப்புற்றிருக்கும். சிவனடியார்களைப் பூசித்தவர்கள் இருபத்தொருதலைமுறை தம சுற்றத்தவர்களுடன் பிறவிக்கடல் கடந்து முத்திக்கரை சேர்வார்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

பன்னிரண்டாவது

## சிவ பூசா விதிச் சருக்கம்.

அனவர்த்தினைபக்கு நாதசன்மாவானவா சிவ பூசாவிதியைச் சொல்லுகின்றார். அறிவுடையவொருவன் பூசைகளுட்சிறந்தசிவலிங்க பூசையைமூன்றுவேளையுஞ்செய்தல் வேண்டும். அது கூடாதாயின், இருவேளை ஒருவேளை செய்யலாம். அப்பூசைக்கு அங்கசுத்தியிலும் அந்தக்கரணசுத்தியாகிய பத்தியே மிகவுத்தமம். சந்திரன், சூரியன், சிரம், நெஞ்சு, திருமுறை, மணல், மண், அரிசிமா, விபூதி, பூரண கும்பம், கொன்றை, வில்வம, நீர், தருப்பை, பால, வேதிகை, சித் திரம, கோமயம, எள் இவறறுள் ஏற்றதொன்றிற் சிவனை ஆவா கனஞ் செய்து அனபிறுற்பூசைபண்ணுக. சிவபூசை செய்யாதவன் எத்துணைக்கல்வி தவம யாகம உடையவனுயினும அவன் செயல் போகமெல்லாம செத்தவனுக்குச்செய்வதை ஒத்திருக்கும. சிவ பூசையில்லாதவன் கொடிய நரகத்திற்கிடந்து வருந்துவன்; அவன் ஒருவேளை பிறவி பெறுபினும நோய் பேய் வறுமை யாதியால் வருந்திப்பிறந்திறந்துழல்வன். பூசையிலலாதவன் போசனம புழுத் தபிணத்துக்கும் புலையன்கட்டத்துக்குஞ்சமம். சிவபூசைசெய்பவர் கள் உயர்குலத்தவனைத்தீண்டினும் காண்பினும் நினைக்கினும்பாவம்

சிவபூசை செய்பவர் தவம், யாகம், தீர்த்தஸ்நானம் செய்யவேண்டியதில்லை. அவர் சிவகணநாதராய்த் தேவவிமானத்திற்றிரிவர். விருத்தகிரியிலிருந்து சிவலிங்கத்துக்கு ஒருகை நீரால் அபிஷேகஞ் செய்து ஒருபுட்பஞ்சாத்தினாலும் காசி. கங்கை' பிரயாகை, இமயம் இவைகளில் நெடுங்காலமிருந்து தவமுந் தருமமுஞ் செய்வதை ஒத்திருக்கும். ஒருநாள் சிவபூசை செய்தால் விரதம சாந்தி கோடி அசுவமேதயாகம இவைசெய்தபலன் உண்டாகும். மரணத்துன்பம் இல்லை. உள்ளன்போடு நீரும பூவுங்கொண்டு நிர்மலராகிய சிவனைப் பூசித்தால் பொருள் புகழ் போகம எண்சித்தி வித்தை நித்தியமங்களம இவையாவும கைகூடும. இந்திரன் பிரமா விஷ்ணு என்னுந் தேவர் மூவரும சிவபூசைசெய்து பெருந்தேவராயினர். இலக்குமி சரஸ்வதி இந்திராணிமூவரும அப்பூசையினாலமேற்கூறியதேவர்கள் உடம்பில் இடம்பெற்றார்கள். ஆரிடம தெய்வம இராக்கதம் படிகம தீர்த்தம சுயம்பு யலை ஆகிய இவ்விலிங்கங்களிற் பூசித்தால் யமதருமனும ஏவியபணிகளைச்செய்வான். அன்பின்றிச்செய்தபூசை அன்பினாற்செய்தபூசை செருக்கினாற்செய்தபூசை விநோதமாகச்செய்தபூசை ஆகியஇவைகளாலும வித்தை மெய்த்தவம பத்தி உண்டாகும். பூமியையாள்வர். தொண்டராய்த்தினமும இடைவிடாமற் பூசிப்பவர் மோக்ஷத்தைப்பெறுவர். புலையன நன்றிமறந்தவன் பசுவினைவதைத்தவன் விரதபங்கஞ்செய்தவன் பெண்களையும, பிராமணர்களையுங்கொன்றவன் ஆகியஇவர்கள் சிவபூசை செய்தாற்பாவமுழுதும்நீங்கிச் சூரியன்போல் விளங்குவார். முற்றத்துறந்தமுனிவரும் சிவபூசைசெய்தவர்க்குநிகராகார்.

காலை உச்சி மாலை இம்மூன்றுகாலமுங்கடவுளைப் பூசித்தல்உத்தமம். சிவபெருமானைப்பிரதோஷகாலத்தில் முறைப்படி வணங்கினால் திரிகாலங்களிலும் தரிசித்த பலன் உண்டாகும். பிரதோஷகாலத்திற் பரமசிவனைப்பூசித்தாலும தெரிசித்தாலும பரிசித்தாலும் குழந்தை தாய்தந்தை கர்ப்பிணி குதிரை பசு பிராமணர் பெண்டிர் இவர்களைக் கொன்ற பாவமும பொற்களவு ஆலயக்களவு செய்த பாவமும் நீங்கும். பிரதோஷ காலத்திற் சிவபெருமானைத் தெரிசித்தவர்களின்பாவம் பஞ்சிற்பட்ட தீப்போல நீங்கும். பிரதோஷகாலமாவது, திரயோதசித்திதியில் சூரியன் மறைவதற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாகிய ஒரு சாமநேரம். அக்காலத்தில் ஆபத்துக்கு அஞ்சிச் சென்றவனும்

மழைக்கொதுங்கினவனும ஆடல் பாடல் பார்க்கச்சென்றவனுமாய் பாடசிவனைக்கண்டு தெரிசித்தவனுக்கு ஞானமும் தவமும உண்டாகும். கொடுங்கோன்மன்னனும்பிரதோஷகாலத்திலவணங்கினல் அவன் பாவமனைத்தும் அகன்றுவிடும. பிரதோஷகாலத்தில் நெய், தயிர், பால், தேன், எண்ணெய், கருப்பு, இளநீர், சந்தனம், கனிரசம இவைகளாற் சிவபெருமானை அபிஷேகஞ் செய்த பொழுது இடையிடையே அபிஷேகஞ் செய்யுந்தீர்த்தோதகம தனித்தனி அபிஷேகஞ் செய்யும தீர்த்தோதகத்தினும பதின்மடங்கு பலன் அதிகமாகும. திருமஞ்சன முதலியவைகளைக்கொண்டு அபிஷேகஞ் செய்யின் ஒன்றுக்கொன்று நூறு மடங்கதிகமாகும. அங்ஙனஞ் செய்தவன் சிவசாரூபத்தைப்பெறுவன. முதலில வில்வபத்திரத்தினும் பின்வெந்நீராலும அபிஷேகஞ்செய்தவனுக்குக் கோடி கோதானஞ் செய்த பலன கிடைக்கும. அபரபக்கத்து அட்டமியில, பசுவின்நெய் எண்ணெய் இவற்றிலொன்றினால் இயன்றவரை அபிஷேகஞ் செய்யின், கோடி கோதானஞ்செய்த பலன கூடும. நூறுகோடி காலம்சிவலோகத்தில்வாழ்வன. விபூதியபிஷேகஞ்செய்தவன சந்திரனுவான். பசுவின்தயிரால்அபிஷேகித்தவன் விஷ்ணுவாயிருப்பான. பசுப்பாலினால் அபிஷேகஞ் செய்தவன் குளம்பும கொம்புகளும பொன்னாற்செய்து பட்டினாற்போர்த்த ஆயிரங்கோடி பசுக்களைச் சூரிய கிரகண புண்ணிய காலத்திற் பிராமணர்களுக்குத் தானஞ் செய்த பலன் அடைவன. தேனபிஷேகஞ்செய்தவன அக்கினிதேவனுவான. நீராலபிஷேகஞ் செய்தவன வருணனுவான. அமாவாசைக்கு முன் சதுர்த்தசியிலும அமாவாசையும சோமவாரமும் கூடிய நாளிலும பசுவின் பாலினால் அபிஷேகஞ்செய்தவன அழிவில்லாத பாக்கியமடைவன அபரபக்கத்தில அஷ்டமியும ஆதிவாரமும கூடியநாளில இளநீரபிஷேகஞ்செய்தால் இந்திரனுவான்.

சதுர்த்தசியில் தேன, நெய், எண்ணெய், கருப்புஇவைகளால் அபிஷேகஞ்செய்தவன் சாயுச்சியபதவி சாருவன். திருமஞ்சனத்தினலும, தனகையால நந்தவனத்தில எடுத்த புஷ்பங்களினலும சிவமூலமந்திரத்தினலும தினந்தோறும சிவபூசைசெய்பவன கார்த்திகைமாதத்துப் பூர்வபக்க ஏகாதசிதிதியில நெய்யால அபிஷேகஞ்செய்தால கோடிதலைமுறைசுற்றத்தோடு கைலையில் வாழ்வான். தானேஉண்டாக்கிய ஒருவெள்ளெருக்கம்பூவைச் சிவலிங்கத்துக்குச்

[illegible] பூசித்தால், பொன்னைப்பிராமணர்களுக்குத் தானஞ் செய்த பலன் கிடைக்கும். அலரி, வில்வம, கருஊமத்தை, தும்பை தருப்பை, வன்னி, நாயுருவி, கருநெய்தல் இவைகளைச்சாத்திப் பூசித்தால் ஒன்றுக்கொன்று ஆயிரமடங்கு அதிகமாகும். ஆயிரம் கருநெய்தற்பூமாலையைச் சாத்தி அரனை அருச்சித்தால் மேலான முத்தியுண்டாம். எல்லாப்பூக்களும் பூசைக்கு எற்றனவாகும். ஆயினும துர்க்கந்தமவிசுமபூ, மணமில்லாதபூ, பூமியில் விழுந்தபூ, அரும்பு, சுத்தமில்லாதபூ, மயிர்சிக்கியபூ, வண்டு துளைத்தபூ, மலர்ந்தபூ இவைகள் ஆகாவாம். பூ இல்லையாயின், இலை, காய், புல், பத்திரம் இவைகள் சாத்தலாம். அவைகளும் கிடையாதகாலத்திற் பாவனையாற் றியானித்துச்செய்தல் நல்லது. அர்த்தயாமத்தில் கருஊமத்தமபூ சாத்தினால் சிவலோகஞ் சேர்வான். நாயுருவியின் பத்திரத்தைச் சதுர்த்தசியிற் சாத்தினாற் சிவனடிசேர்வன். நெய் கலந்த குங்குலியத்தூபம் ஒரு மாதம இட்டாலும், எண்ணெய்த் தீபமிட்டாலும சாலோகஞ் சார்வன். பசுவின் நெய்பால், தீபம் வைத்தவன் அதன சுடர் ஒன்றுக்கு ஆயிரம சதுர்யுகம்வரை சிவலோகத்திற் சேர்வன். எண்வகைபபத்தியால் ஈசனைப் பூசிக்கின்றவர் ஈனராயினும இந்திரனாவர். பிராம்மணர்களும் எண்வகைப் பத்தியில்லையாயின் ஈனராவர். சிவாலயத் திருபபணி செய்தவர்களைச் சிவனென்று நினையாமல் மனிதரென்றெண்ணுவோர்க்கே எல்லா நரகங்களுமிருக்கின்றன. கண்ணுக்கு இனியபண்டங்களைக் கடவுளுக்குப் பிரீதிசெய்தவன் புண்ணியலோகஞ்சேர்வன். குருவுபதேசமபெற்றவன் பூசையை இழந்தகாலத்தில, சிவன்கோயிலை வலம் வந்து வணங்கினால், பூசித்ததுபோலாகும. புத்தி, சாமர்த்தியம், வித்தை, பொருளாசை இவைகளால் வேதநெறி விடுத்து வஞ்சக மார்க்கத்தை உபதேசஞ்செய்யுங்குருவும, கேட்கின்ற சீடனும் நரகத்தில் வீழ்வார்கள். பரமபரையாக வரும் ஆசாரியர் பாதம் பணிந்து உபதேசம்பெறும் நற்சீடன் சிவனையும் நற்குருவையும் ஒரு முகமாகக் காண்பான். அங்ஙனங்காணாது வேறாகக் கருதுபவன் கற்பகாலம்வரை நரகத்தில் வீழ்வன். தேவர்,முனிவர்,மனிதர் இவர்கள் தாபித்தலிங்கங்களும், பாவனை, சுயம்பு, வாணன், படிகம் பஞ்சலோகங்கள், இரசம், காந்தம், இரத்தினம், வெள்ளி, பொன் இவைகளால், தாபித்தலிங்கங்களும் நான்குவருணத்தாரும் பூசிக்கலாகும். இதரர்களுக்கும் மாதர்களுக்கும் ஆகா. அவர்கள் அண்ணு

மூலலிங்கத்தைப் பூசிக்கலாம். பெண்கள் இரசலிங்கத்தைப் பரிசித்தாலும் நரகத்தில் வீழ்வார்கள். பழுதுள்ளதும், வெந்ததும் வெடித்ததும் ஆகிய இலிங்கங்களை நீர் அருந்த நதி, கிணறு, குளம் முதலியவற்றில் வைத்தல்வேண்டும். பூசியாதவன் வறுமை, பிணிகளால் வருந்துவான். இரண்டுநாள்வரை பூசையில்லாதொழிந்தவன் நாலுநாளைப் பூசை செய்யக்கடவன். மூன்றுநாள் வரை பூசை முட்டுப்படுமாயின், அதற்கிரட்டிப்பான பூசை செய்தல் வேண்டும். மாதம் பக்ஷம் அநேகநாள் பூசியாதிருந்தால் குருவால் பிரதிட்டை செய்து சிவாலயத்திற்சென்று ணைகிரசாந்திசெய்யக்கடவன். சத்தியுஞ்சிவமுமாய்ப் பிரகாசிக்கும் உத்தமமாகிய இரசலிங்கம் பத்துக்கோடிலிங்கங்களுக்குச் சமம். அந்த இலிங்கத்திற்பூசித்தால் சத்துருநாசம் புத்தி முத்தி சித்திக்கும். அவ்விலிங்கத்தின்பூசைத்தீர்த்தத்தை உட்கொண்டவர்கள் பல பிணிகளும் பிறப்புக்களும் நீங்கிப் பிரமன் முதலிய தேவபதங்களைப்பெறுவார்கள். பொருந்திய பாவமுழுதும் அக்கினியிலகப்பட்ட விறகைப்போல அழிவுறும். இவ்விலிங்கத்தை நிந்தித்தவர்கள் நரகில் வீழ்வார்கள். பிறந்தால் நாய் நரி பூனை ஆகியவற்றின் வடிவெடுத்துப்பின் புலையர்க்கடிமையாய்க் கூன் குருடு ஊமைகளாய்ப் பிறப்பார்கள். மரணத்தில் ஒருவன் வயிற்றில் இரசலிங்கமிருக்குமானால் அவன்பிதாமாதா ஆரியரைக் கொன்ற பாவமும் மதுபானஞ்செய்த பாவமும் நீங்கி, கோடி அசுவமேதயாகபலனை அடைவான். இனிய நிர்மாலியங்கள், மனிதர் முனிவர் தேவர் இவர்கள்பிரதிட்டைசெய்த இலிங்கங்களுக்கேயல்லாமல் ஏனைய லிங்கங்களுக்கு இல்லை. அந்நிர்மாலியத் துளசியோடு அபிஷேகநீரையும் உட்கொண்டாற் பிறவி, சாபம் நீங்கும். ஞானமுண்டாகும். ஞானயோகிகளுக்கு நிர்மாலியங்களாகும். சிவனடியாரல்லார் உண்டால் நெடுங்காலம் நரகிற்கிடப்பர். வேத விதிப்படி பூசிக்கும் பூசைத்திரவியங்கள் நிருமாலியங்களாகா. ஆகமவிதிப்படி பூசிக்கும் பூசைத் திரவியங்களே நிருமாலியங்க ளாகும். பிராமணரல்லாத மூன்று சாதியாரும் ஆகம விதிப்படி சிற்பாசாரியர் நினைத்துச் செய்த சிவலிங்கங்களைப் பூசைசெய்யக்கடவர். இந்தப் பெருந்தவத்தினோருக்கு இலிங்கபேதம் யாதுமில்லை. இனித்திருநீற்றின் பெருமையைக் கூறுகின்றோம்; கேளுங்கள்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றாவது

## விபூதிச் சருக்கம்.

பிரமசாரி முதலிய நால்வகை யாசிரமிகளும் சிவபெருமான் அருளியபடி அவரவர்களால் விதிக்கப்பட்ட வெண்ணீறு அவரவர்களுக்கே யுரியவாகும். மடம், யாகசாலை இவைகளில் விளைந்த விபூதி க்ஷத்திரியர்முதல் மூவரும் தரிக்கத்தகும். வீதியில் விளைந்த விபூதியும் திருமடைப்பள்ளியில் உண்டாகிய திருநீறும் பெரியோர்மனையில் விளைந்த நீறும் பெண்களும் மற்றவர்களும் தரிக்கலாம். விபூதியை வடித்தெடுத்துக்கொண்டு நீரிற் குழைத்து மூன்று காலங்களிலும் நான்கு வருணத்தவர்களும் தரிக்கலாம். தவத்தர்கள் முக்காலமும் தரிக்கக்கடவர்கள். பெண்கள், சந்நியாசி, வானப்பிரஸ்தன், அவை மனைவி, பிரமசாரி, குருவுபதேசமில்லாதவன் இவர்கள் நீரிற் குழைத்துத் தரிக்கலாகாது. சுத்தமாகிய வெண்ணிறவிபூதியை வடித்தெடுத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். வேதசிவாகமங்களில் விதித்தபடி விபூதியை உடல்முழுதும் உத்தூளனமாகப் பூசி முப்புண்டிராகுதி தோன்றத் தரித்தால், புண்ணிய தீர்த்தங்களில் முழுகி அசுவயாகஞ்செய்து பிராமணர்களுக்கு மூவுலகத்தையும் தானஞ்செய்தவர் அடையும் பலன் கிடைக்கும். சிரம் நெற்றி கழுத்து உடம்பு விலா கை கால்களிலும் புயங்கள் ஆகிய இடங்களில் வெண்ணீறு விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்தவர்கள் சிவசாரூபம் பெறுவர். விபூதியை நெற்றியிற் றிலதமாகவும் சதுரமாகவும் சூலம்போலவும் தரிக்கலாகாது. விபூதியில் வாசம் கமழ்கின்ற சந்தன முதலியவற்றையும் சிறுமண்ணையும் கலத்தலாகாது. நீறணிந்தவனை நிந்தனை செய்ய நினைத்தவனும் நிந்தித்தவனும் எல்லா நரகங்களிலும் வீழ்ந்து வருந்துவார்கள். இது நிச்சயம். விஷ்ணுவின் அடையாளமான சங்குசக்கரத்தையும், சிவன் அடையாளமான சூலத்தையும் நெருப்பிற் காய்ச்சிப் பிராமணர்களுடைய தோளிற்சூட்டிடுவன கொண்டவனும் இட்டவனும் எரிவாய் நரகிற்கிரையாவார்கள். அவர்களை இந்நாட்டை விட்டு ஓட்டும் அரசனே அரசன்.

கௌதமர் தம்மைத் தூஷித்த பிராமணர்களைக் கோபித்து, நீங்கள் இழிந்த மண்ணையிட்டுப் பரமசிவனையும் திருநீற்றையும் அடியார்களையும் பூமியில் நிந்தித்து நரகிற் செல்லுங்கள் என்று

சபித்தார். அந்நாள்முதல் அறிவில்லாத அரிபக்தர்கள் நிந்திப்பார்கள். வேதங்களை நம்பி விபூதியைத் திரிலோகத்தவரும் தரிப்பார்கள்; மும்மூர்த்திகளும் தேவர்களும் எல்லா உலகத்தவர்களும் தரிப்பார்கள். இவ்வுலகங்களிலும் பிரமாணமாக வழங்கும் வேதங்களே, இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும் அளித்தற்கு முதற் சாதனமாயுள்ளது திருநீறே. மற்றவை பொய்ச்சாதனங்கள் என்று ஓதுகின்றன. உடலுக்கு உறுதிதருவதாகிய உணவை எல்லாரும் ஏற்றல்போல் உயிர்க்கு உறுதிதருவதாகிய திருநீற்றையும், உருத்திராக்கத்தையும் மகிழ்ந்து தரிப்பவர்களிடத்தில், சிவன் உமையொடு பிரிந்தருள்வர். முத்தியென்னும் பெண்ணை முயற்சியுடன் வசப்படுத்தவேண்டில் மணிமந்திர ஔஷதங்களாகிய விபூதி, ருத்திராக்ஷ, பஞ்சாக்ஷரங்களைத் தரித்தலவேண்டும். விபூதிருத்திராக்ஷங்களை நினைத்துத் தரிப்பவர்கள் பெறும்பேறுகளுக்கு எல்லையேயில்லை. அவர்களை வணங்கிப் பூசிக்கின்ற பூசையே பூசை. அவர்களுக்குக் கொடுக்கும் கொடையே கொடை. விபூதியானது தன்னைத் தரித்தவர்களின் வினைகளை நீறுசெய்வதால் அதற்குத் திருநீறென்று வேதம் விளம்பும். ஆன்மாக்கள் நரகில்விழாதபடிக்குப் பிறவிப்பிணிக்கு மருந்தாகத் தம தருமைத்தேவியாகிய உமையவள் கரத்தில் இதனைச் சிவபெருமான் கொடுத்தருளினார். வெண்ணிற விபூதியைத் தரித்தவுடன் சகலபிணிகளும், வந்த வினைகளும், வரும் வினைகளும், பேயும், பிறப்பும் இறப்பும் இல்லை. சகலநன்மைகளுந் தழைக்கும். தீர்த்தங்கள் எவற்றிலும் விபூதியைவிடப் பெரியதீர்த்தம் இல்லை. பிரமா முதலிய தேவர்கள், வியாசர் முதலிய முனிவர்கள், நந்திதேவர் இவர்கள் ஒருங்குகூடி யோசித்து, தருமம், தவம் முதலிய எல்லாவற்றிற்கும் விபூதி இல்லாவிட்டாற் பயனில்லையாகும்; என்று கூறினார்கள். வேகாத விபூதியும், வெந்து கரிந்த விபூதியும், செந்நிற விபூதியும் தரிக்கலாகாது. விபூதியில் வெண்மைநிறம் எவ்வளவு உண்டோ அவ்வளவும் மோக்ஷத்துக்கேதுவாகும். போகங்களுக்கு முதலாதலிற் பூதியெனவும் அருளுடைமையால் இரக்ஷையெனவும் பெயர் கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

## பதினன்காவது

## உருத்திராக்கச் சருக்கம்.

திரிபுரத்தசுரர்களால் தேவர்கள்யாவரும் வலியிழந்து வருந்தி சிவனைக்குறித்து ஆயிரந்தேவவருஷம்வரை தவஞ்செய்தலும், பரம சிவன்பார்வதிதேவியாரோடு இடபாரூடராயெழுந்தருளிவந்து அவர் படுந்துன்பங்களைக் கண்டதும முக்கண்ணினின்றும் நீர்த்துளிகள் விழுந்தன, அத்துளிகளே உருத்திராக்ஷமணிகளாகும். அவற்றுள் சூரியன்கண்ணிற்றோன்றியமணி பன்னிரண்டு பேதமுடையது அதன்நிறம் செம்மையும் பொன்மையும், சந்திரனுகிய கண்ணிற் றோன்றிய மணி பதினாறு பேதமுடையது. நிறம் வெண்மை. அக் கினிக்கண்ணிற் றோன்றிய மணி பத்துப்பேதமுடையது. நிறம் கருமை. பிராமணர்களுக்குவெண்ணிற மணிகளும அரசர்களுக்குச் செந்நிறமணிகளும் வணிகர்களுக்குப்பொன்னிற மணிகளும் சூத் திரர்களுக்குக் கருநிறமணிகளும் உரியனவாம். அவைகாய்க்குமாங் களும முப்பத்தெட்டு விதங்களாகும. ஒருமுகம் இருமுகமணிகள் சிவசொரூபமாம். பிரமகத்திதோஷமும் பசுவைக்கொன்ற பாவமும் நீங்கும். மூன்றுமுக மணிகள் அக்கினிவடிவாம். அம்மணிகளை அதிகமாக அணிந்தால் அநேக பெண்களைக்கொன்ற பாவநீங்கும். நான்குமுகமணிகள் பிரமதேவர் வடிவமாம். அம்மணியணியின் மனிதரை வதைத்த பாவம் மாறும். ஐம்முகமணிகள் காலாக்கினி வடிவம். உணவின் குற்றங்கள் நீங்கும். ஆறுமுகமணிகள் சுப்பிர மணியசொரூபம். பிரமகத்தி தோஷம் நீங்கும். ஏழுமுகமணி ஆதி சேடவடிவமாம். அம்மணிகளாற் பொற்களவுநீங்கும், எட்டுமுகம் விநாயகவடிவம்அவைகளாற் குருபத்தினியைமருவியபாவம்நீங்கும். ஒன்பதுமுகமணிகள்வயிரவசொரூபம். அம்மணிகளணியின் முத்தி யும் புத்தியும்உண்டாம். இடக்கையில் மாலையாகத்தரித்தால்கோடி பிரமகத்திதோஷம் நீங்கும். பத்துமுகம் விஷ்ணுசொரூபம். அவற் ருற் பேய், மிருகங்களால்துன்பமில்லை. பதினொருமுகமணி ஏகாதச ருத்திரசொரூபம். அவற்ருல்அதிக யாக பலன்உண்டாம். பன்னி ரண்டுமுகமணி ஆதித்தர் பன்னிருவர் வடிவம். அம்மணிகளால் அநேக அசுவமேத யாக பலன் ஆகும். சீரக்கொலைநீங்கும். பதின் மூன்றுமுகமணிகள் சுப்பிரமணிய சொரூபம். அம்மணிகளணியின் போகம் எண்சித்திகள் உண்டாம், எல்லாக் கொலைப் பாவங்களும்

நலகும. பதின்மூன்று முகமணிக்குமேற்பட்ட மணியில்லை. குடுமி யில் ஒருமணியும் சிரசில் முப்பத்தாறுமணியும் கழுத்தில் முப்பத்தி ரண்டுமணியும் மார்பில்நூற்றெட்டுமணிகளும்கைகளிற்பன்னிரண்டு மணியும் காதுகளில் அவ்வாறுமணியும் தரிக்கத்தகும். அப்படித் தரித்தால் ஆயிரம் யாகபலன் உண்டாகும். முற்காலத்தில் உருத் திராக்ஷப்பொதிசுமந்த ஒரு கழுதை காட்டுவழியாய் விந்தமலை சென்று உயிர்விட்டுக கைலையில் நூறுகற்பகாலம வாழ்ந்திருந்தது. வெள்ளி, பொன், முத்து, பவளம முதலியவற்றை இடையிடை யிட்டு, முகத்தோடு முகம்பொருந்தக் கோத்துத்தரிப்பது நன்று. எல்லாருமம எக்காலமுமம தரிக்கலாம். பஞ்சாக்ஷர செபஞ்செய்து தரிக்கின் மிகவும நன்று. புண்ணியகருமம், சிவ பூசை, தவம் முதலியன செய்யுங்காலங்களில் தரித்தல் நல்லது. எல்லாப் பாவி களும், இழிந்த உயிர்களுமம தரித்தால ஞானக்கண் பெறுவது சத் தியம். உண்மைத் தவமுடையவர்கள் எந்தககாலங்களிலும் தரித் திருப்பார்கள். இறக்குமுன் ஆயிரமணிகளை அணிபவர்கள் பெருமை யை அளவிட்டுச் சொலவது அரிதாகும். சிரம், காது, கழுத்து, மார்பு, கைகள், புயங்கள், மணிககட்டுகள்இவற்றில். தரித்தவர்கள் சிவசொரூபமாவார். உருத்திராக்ஷமாலையைப் பஞ்சாக்ஷர செபஞ் செய்து தரித்தவர்களைச்சிவபெருமான் பிரியாது உடனிருப்பார். அவர்கள் சென்ற இடம் மோக்ஷம். அவர்களைத் தரிசித்தவர்கள் தேவர்கள். இங்ஙனம நாதசன்மாவானவர் அனவர்த்தியைக்கு கூறுதலும், அனவர்த்தியை அடிபணிந்து கால், கை, காது, தலை, கண் இவைகளைப் பேதமில்லாமற் பெற்றவர்களுக்கே சிவபூசை முதலியவை சித்தியாகும். இவ்வுறுப்புக்களில்லாதவர்களுக்கு எவ் வகை முத்தி சித்தியாகும். இதனைச் சொல்லியருளல்வேண்டும் என்று வினவினர்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினைந்தாவது

## சிவகீர்த்திச் சருக்கம்.

அனவர்த்தியையே! நீ கேட்பாய். கலியுகவலிமையால் எண்ணி றந்த உயிர்கள் யாவும் சிறந்த தலங்களில் இருமையின்பங்களைப் பெறலாமல்லது மற்றொன்றினாலும் முடியாது. அத்தலங்களுள்ளும் விருத்தாசலத்திலல்லாமல் வேறொரு தலங்களிலும் எளிதில் முடி

யாது. ஆதலால் உடம்புநீங்குமுன் ஒருவருஷம்வரை அத்தலபுராணத்தைப்படித்தாலும்கேட்டாலுந்துதித்தாலும் அர்ச்சியத்தில்துதித்தாலும் முத்தியைப்பெறுவர். ஒருவர் அரகரா சமபோசங்கரா மகேசா அம்பிகா மகாதேவா புராந்தகா நீலகண்டா என்று துதித்தால் இளங்கன்றுக்கிரங்கி வரும் பசுவைப்போற் பரமசிவனும் விரைந்துவந்து காத்தருள்வார். மரத்திலுள்ள பறவைகளுக்கு ஒரு கல் போதுமாறுபோலச்சிவநாமங்களையுச்சரித்தலே பாவங்களைத் தும்பறந்துவிடும்; முத்தியுமடைவர். சிவ சிவ என்று செபித்தவர் எதிரே சிவபெருமான் பிரியாதவராய்த் திருநிருத்தஞ்செய்தருளுவர் யமனும் பணிவான்; அவர்கள் முகத்தில் நான்கு வேதங்களுமிருக்கும். பிறவிக்கடலில் மூழ்கார். புலையராயினும மாணுந்தத்தல் துதித்தவர். சிவசாரூபமாவர். ஒருவன் செவியில் கேட்கும்படி சிவ சிவ என்று உச்சரித்தால் அவன் பாவமுழுதும் நீங்கும். அவனுக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை. ஒருவன் சிவ சிவ என்று மூன்று தரம் உச்சரித்தால் ஒரு மொழிகருச் சிவன் தமது சிவலோகத்திற் சேர்த்தருளுவர்; மற்றைபிருமொழிகளும் சிவன் மேல் பாக்கியாக இருக்கும். பூசைதருமஞ் செய்யாதவனைப் சிவனைத் துதித்தாலும் இலக்ஷுமி சரஸ்வதி எந்நாளும நீங்காமலிருப்பார்கள். எல்லாப் பதவிகளும் உண்டு. சிவநாமத்தை உச்சரிப்பவர்களுக்குத்தீமையில்லை.

பிரதோஷகாலத்திற் பஞ்சாக்ஷரசெபஞ்செய்து நந்திதேவரின் பிசந்தொட்டு இருகொம்புகளினடுவில் சிவபெருமானைத்தரிசித்தால் தருமமும் தவமும் பெருகும். பாதத்திற் பாதம படும்படி நடந்து தியானம் தோத்திரஞ்செய்து குவித்து ஒருதரம் வலம் வந்தால் பலகோடிதரம்வலம்வந்தபலன்உண்டாகும். யமபயமும்இல்லை. மூன்று முறை வலம் வரின் தீயபிணிகள் தீரும். ஐந்து தரம் செய்யின் சந்தான முதலிய சம்பத்துண்டாம். நூறுதரம் செய்யின் பிரமகத்தி பாவம் நீங்கும். ஆயிரந்தரஞ்செய்தால் ஆயிரங்கண்ணனுவான். இடமாக வலம வரின், பிறவித்துன்பம் இல்லை. வலமும் இடமுமாக வலம் வரின் ஒன்றுக்குக் கோடி மடங்கு பலன் கூடும். உள்மதில் புறமதில் வலம் வருதல், அங்கப்பிரதக்ஷிணம் இவை செய்தல், ஒன்றுக்குப பல கோடி மடங்கு பலன் தரும். சந்நியாசி இடமாகவும் பிரமசாரி வலமாகவும் பிரதக்ஷிணஞ்செய்தால் ஒன்றுக்கொன்று அநேகமடங்கு பலன் ஆகும். ஆதலால் அறிஞர்கள் வலம்

வராமலிரார். விபூதி ருத்திராக்ஷந் தரித்து ஐந்தெழுத்தோதிப்பரம சிவனைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிச் சிதம்பரத்திலாயினும் விருத்தாசலத்திலாயினும் அடியார்களைப் பூசித்துத் திருப்பணி செய்து தேகாந்தத்தில் இரதத்தை யுட்கொள்வோர்களையல்லாமல் வேறொருசிவனை யாம் அறியோம்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினாறாவது

## கோபர்வதச் சருக்கம்.

அனவர்த்தியாயின் ஆசைக்கு இணங்கிக் கோபர்வதத்தின் பெருமையை நாதசன்மா கூறுகின்றார். முற்காலத்தில் திருக்கைலாசமலையிலிருந்து சிவகணங்களுடன் விருத்தகிரிக்கெழுந்தருளிய சிவபெருமான், உமாதேவியாரை நோக்கி, "தாருகாவனத்து முனிவர்களின் தவ வலிமையையும், முனிபத்தினிகளின் கற்பையும் சோதிக்குமாறு விஷ்ணுவாகிய மோகினியுடன் நாம் செல்லுகின்றோம். நீ இவ்விருத்தகிரியின் வனத்தில் வடகீழ்த்திசையில் இருப்பாய்" என்று கூறி நந்தியையும் உடனிறுத்திச் சென்றருளினர். தேவியார் அவ்வனத்தில் ஒரு சிவலிங்கத்தையும் தீர்த்தத்தையும் கண்டு நந்திநாதர் பணிசெய்யப் பூசித்தார். அதனால் அத்தலம் நந்திதேவர்பேரால் கோபர்வதம் என்றும், சத்தியின்பேரால் சத்தீச்சரம் என்றும் பெயர் வழங்கிவருகின்றது. அப்பொழுது சிவபெருமான் தாருகாவனத்தினின்று சத்தீச்சரர் என்னும் இலிங்கத்தினிடம் தரிசனந் தந்தருளினர். தேவியார் வணங்கிப் பூசித்து "இப்பர்வதத்தில்வந்து தானதர்மங்களைச்செய்கின்றவர்கள் சகல செல்வங்களையும், ஞானகங்கையில் மூழ்கினவர் ஞானத்தையும், தேவரீர் திருவடி வணங்கினவர் சிவபதவியையும் பெறுதல் வேண்டும்" என்றுவிண்ணப்பஞ்செய்தலும் சிவபெருமானும் அவ்வரங்களை அவ்வாறே அநுக்கிரகஞ்செய்தருளினர். கோபர்வதத்தில் கங்காஸ்நானஞ்செய்து கடவுளைவணங்கி வாய்பேசாதுநூற்றெட்டுத் தரம் வலம்வந்து அருச்சித்து, குருவுபதேசப்படி திருவைந்தெழுத்தைப்பன்னிரண்டுலக்ஷமுருச்செபித்தவர்கள் சிவசத்தியமாய்ச் சிவபதவி சேர்வார்கள். அப்பர்வதத்தில் வசித்து வரங்களைப்பெற்றவரும் கணநாதரானவரும் நற்கதிபெற்றவரும் இத்தொகையினர்

என்றுஎவரும் அளவிட்டுரைப்பது அரிது. அங்கேகருணைபரிபூரண ரென்னும் ஒரு கணநாதர்சேவிப்பவர்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுத்தருள்வார். அககணநாதரை ஒரு பாவி பார்த்தான். அவா அவனை ஆட்கொள்ளவிரும்பி இவன் யாரென்று ஞானககணணலா ராய்ந்து இவன் பெண் வதைமுதலிய பெருமபாவஙகளைச் செய்து மிகவுமஇழிந்தவன்: அந்தோ இவனுககுப் பாகதியில்லை யென்று நினைந்து அவனைத்தமது சந்நிதியில் நெடுந்தூரத்தில் நிற்கும்படி அருளினர். அவன் அநேகநாளாய் நின்றளவில பாவஙகளயாவுமபாம பின்தோல உரிவதுபோல நீஙகினமையால நாடோறும கங்கையில மூழ்கிச சத்தீச்சரரையும கணநாதரையும வலஞ்செய்து வணஙகி சருகுஅருந்தி நீருருகித் தவககோலம பூண்டு சகலவினையுமநீஙகி நின்றனன். கருணைபரிபூரணர் அவனை அருகிலழைத்து "நீ எந்நாடு? உன்பெயர்யாது? நீ இவவனததுககு எனவந்தாய்சொல" என்று வினவலும அவன் "சுவாமீ, நெடுந்தூரத்திலுள்ள சுந்தரநாட்டிற பிராமணகுலததிற்பிறந்து துருவிநத்தனனெனும் பெயருடையனா பலபாவஙகளைச்செய்து இந்தவனத்திலும வழிமறித்துப பொருள பறிககவந்தேன். பிறவிககுருடனுககுககண் பெறுமபடி புண்ணிய தீாத்தமகிடைத்ததுபோலப் பாவியேன்முன தேவரீா வெளிப்பட் டுத்தோன்றியருளினீர். அதனால் மருள்நீஙகி மனநதெளிவுற்றேன் உண்மைஞானத்தையுபதேசஞ்செய்தருளும "என்று அவர் திருவடி வணங்கினன். அதுகேட்ட கருணைபரிபூரணர் "நீ இப்பதிககு வந்த பொழுதே உன்பாவமனைததுமநீஙகின, மேலும் கஙகையில் மூழ்கிச சத்தீசுரர் திருவருளால் சகல நன்மைகளும சித்தி பெற்றாய், நீ எப்போதும இஙகு இருப்பாய்" எனறுரைத்துத்தவத்தையும ஐந தெழுத்தையும உபதேசஞ் செய்தருளினா. அவனும மெய்ஞ் ஞானியாய், சத்தீசுவரர்திருவடியிலஇரண்டறககலத்தலாகிய அத்து வித முத்தி பெற்றனன். இக்கோபர்வதத்தில் தேவா மனிதர் யாவ ராயினும மூன்றுநாள் விஷய வாசனையின்றி வசித்தாலும சத்தீசர் திருவடியடைவார்கள். சுற்றத்தோடிருந்தவரும் சிவசாரூபமாவர்.

திருச்சிற்றம்பலம்.

## பதினேழாவது

## பிருடிதச் சருக்கம்.

முன்னாளில் மகததேசத்தில்வேதமுணர்ந்தபிருடிதன் என்னும் பிராமணன் தன்மனைவி முருசியோடு பூமிப்பிரதக்ஷிணஞ்செய்து பிரணவப்பதி துவாரகை கங்கை கன்னியாகுமரி முதலிய சிவஸ்தல யாத்திரை செய்து துவாரகைக்கு வந்து ஒரு சிவயோகியைக் கண்டான். அவர் நீங்கள் எங்கேசென்றீர்கள் என்று கேட்க, பிருடிதன் "நானும் என் மனைவியும் பூமியை வலஞ்செய்து கொண்டு சிவாலயமுழுவதையுந் தெரிசித்து வருகின்றோம்" என்று கூறினான். யோகியானவர் அதுகேட்டு நகைத்து நீங்கள் விமானத்தில் வராது பெரிதும் காலநடையாக வந்தீர்கள். சித்தி பெற்ற ஒருதலத்திற் காவது செல்லவில்லை. மேலும் சென்றபொழுதே தேவவிமானம் வருகின்ற தெய்வத்தலங்கள் பல உண்டென்று சொன்னதும், அவ்விருவரும் வணங்கி அத்தலங்கள் யாவை என்றுகேட்க, யோகியார் கண்டகி, பீமை, கிருஷ்ணவேணி, மணிகாணிகை, சரயு, நாபமைத, மாநாளம், பாவநாசம், சந்திரபாகை, பரிதிபுரி, மதுரை, சிந்து, கோமதி, காவேரி, திருவானைக்கா திருமயிலாடுதுறை திருவண்ணாமலை திருவாரூர் சிதம்பரம் திருத்துருத்தி திருமழபாடி சுந்தரகிரி திருவாஞ்சியம் திருநெய்த்தானம் திருவிடைமருதூர் திருவாவடுதுறை திருக்கோடிகா திருமுதுகுன்றம் சோபருப்பதம் இவை மேலான தலங்களாம். இத்தலங்களைத் தரிசிக்காது விட்டால் முத்தி கிடைப்பதரிது என்று சொல்லியருளினர். அவ்விருவரும் அதுகேட்டு நாங்கள் நெடுவழிநடந்த பிரயாசத்தினால் இனிச்செல்லுதல் அரிது தேவரீர் திருவருள்செய்யவேண்டும் என்றுகூறினார்கள். சிவயோகியாரும் சித்தமகிழ்ந்து நீங்கள் இத்திருநீற்றை நெற்றியில் தரித்துக்கொண்டதும், கோபர்வதத்தை அடைவீர்கள். அங்கு உங்கள் பிறவித்துன்பம் நீங்கும்படி மூன்றுநாள் சிவனைப் பூசை செய்யின் இஷ்ட சித்திகளைப்பெறுவீர்கள்" என்று கூறி விபூதிப்பிரசாதம் கொடுத்தருளினர். அவ்விருவரும் திருநீற்றை விரைவில் நெற்றியிற்றரித்தலும், கோபர்வதத்தில் அடைந்து கங்கையில் மூழ்கிச் சத்தீச்சரர் திருவடிபணிந்து மூன்றுநாள் ஊண்உறக்கமின்றிப் பஞ்சாக்ஷர செபஞ்செய்தார்கள். அத்தருணம்சத்தீச்சரர் சத்தியுடன் இடபாரூடரா யெழுந்தருளித் தரிசனந்தருதலும், அவர்கள் மனமகிழ்ந்து பணிந்துநின்றனர். அப்பெருமான் அவர்களுக்கு வேண்

டிய வரங்களையுங்கொடுத்து ஒரு தெய்வ விமானமுந் தந்தருளினர். அவ்விருவரும் அதில் ஏறினது சிவசாரூபம்பெற்று எல்லாத் தலங்களிலும் உலாவிச் சத்தீச்சரர் திருவடி சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினெட்டாவது

## சசிவன்னச் சருக்கம்

சிவபெருமான விஷ்ணுவை நோக்கித் தவமுனிவர் செய்யுந் தரிசனத்தின் பெருமையைக் கேட்பாய் என்று திருவாய்மலர்ந்தருளுகின்றார். "பாவவெச்சனமகன் சசிவன்னன் என்பவன் அடியாரையும், உன்னையும், எம்மையும், வேதங்களையும், விபூதியையும் நிந்திப்பதே கல்வியாகவும், கொலைசெய்வதே விரதமாகவும், தீமைகள் பலபுரிந்து பொருள்பறிப்பதே கேள்வியாகவும், பொய், குறளை வன்சொல் இவையுடையனும், அடுத்தவர்களைக் கெடுப்பதே குலாசாரமாகவும் கொண்டு மனம் வாக்கு காயங்களினாற் பழி பாவங்களைச்செய்து வருதலினால், பேயும நோயும் சூழ்ந்து வருத்த, மூர்ச்சித்துக்கிடந்தான். இவன் சுற்றத்தவர்களாய்ச் சுவர்க்கஞ்சென்று தேவரானவரும் இவனது பழிபாவங்களால் நரகில் வீழ்ந்தனா. இப்பாதகன் வருவானோ என்று நரகமும் நடுங்கிற்று. சசிவன்னன் துன்பத்தைத் தந்தையானவன்கண்டு சகியாது, தேவபத்தன் என்னும் தெய்வ மாதவனை வணங்கித் துதித்து, தன புதல்வன் தீமைகளையெடுத்துக் கூறுதலும், அவர் "மறையவனே பழமலையின் கண்ணுள்ள கோபர்வதத்தில் சத்தீச்சரத்தில் முன் பிரமா இந்திரன் முதலியதேவர்களும் அசுரர்களும் கடவுளைப் பூசித்துத் தங்கள் நற்பதவிகளை பெற்றார்கள். நீயும் அங்கே சென்று மாநந்திபாராயணன் என்னும் மகானை நீங்காதிருந்து தரிசனஞ்செய்தால் உன்புதல்வன் பிணிகள்பலவும் ஒழியும் என்று அருளினார். அவருபதேசப்படி அவன் தன்புதல்வனோடு கோபர்வதம்சென்று கங்கையில் மூழ்கிக்கடவுளை வணங்கித்துதித்து அம்மகானையும் வணங்கித் தன்புதல்வன்செய்த வஞ்சகச்செயல்களை விண்ணப்பஞ்செய்தனன் அம்மாநந்திபாராயணர் கடைக்கண்ணால் நோக்கியருளினதும் அச் சசிவன்னன் பாவமனைத்தும அகன்றன. அதன்பின் அந்தயோகீசுவாரின் அநுமதிப்படி அவன் பலதொண்டுகள்செய்து பேய்பிணி

யாவும் நீங்கப்பெற்று ஞானியாய் மோக்ஷமடைந்தான். அவன்பிதாவுமபிதிர்க்களுடசிவலோகஞ்சேர்ந்தார்கள். அவன் ஆசைமனைவியும் அக்கதிசேர்ந்தனள். விஷ்ணுவே இன்னும் பெரியோர் பெருமைகளைச்சொல்லுகின்றேனகேள்.

சுவுகையென்னும் வேசியானவள் செல்வர்முதலிய நல்லவர் பலரையும வஞ்சகமாயவலையில் மயக்கிபொருள்பறித்துத்தீமை பலபுரிந்து பழிபாவங்களுக்கு அஞ்சாது திரிந்து பலபிணிகளால் வருத்தமுற்று அவயவங்கள் அழிந்து நின்றுள். அவள் ஒருசிவயோகியாரைக்கண்டு வணங்கிபாதபூசைசெய்து அமுதூசெய்வித்து அவர்பாிகலபபிரசாதமும பாததீர்த்தமும உட்கொண்டதும கடுமபிணிகள்யாவும நீங்கி அவரால ஞானோபதேசமபெற்று அவர் பாதங்களைத்தலைமேற்சூட்டலும பாவமுழுது நீங்கி மமதுதிருவடியிற்சேர்ந்தாள். அவள் சுற்றத்தவரும சுவாககமசோந்தார்கள்.

விஷ்ணுவே அடியார்களுக்குச்செய்த நன்மைகள்யாவும் நமக்குச் செய்தனவாகும. அவரிடத்தில் எப்போதும விருப்பத்துடனிருந்தருளவோய" என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர். மகாவிஷ்ணுவுட, பரமசிவன் திருவடிகளைப்பணிந்து ஞானோபதேசமபெற்று, சிதமபரத்தில் நிருத்ததரிசனம பெற்றார். பிறவியையும் இயமனையும் நரகதுன்பத்தையும் வேண்டிஞல் அடியார்களைத்தூறறுஙகள். அல்லது அருள்வளரும செல்வத்தையும் முத்தியையும விரும்பிஞல் அடியாரைப்போற்றுங்கள் என்று மன்றுளாடியாகிய திருமுதுகுன்றநாதர் அருளிச்செய்து மறைந்தருளினர். திருமால் நடராசப்பெருமானை வணங்கித்துதித்துத் தமது வைகுண்டத்தையடைந்து உண்மை நிஷ்டையிலிருந்தார். நிருத்தஞ்செய்யுமிடம் சிதமபரமென்றும் இருக்குமிடம விருத்தாசலமென்றும் கூறியிருத்தலால் இரண்டும்சமமென்று தெரிந்தோம்.

இவ்விருத்தாசல புராணத்தைப்பூசித்தவர்களும் எழுதினவர்களும படித்தவர்களும் பொருள்சொன்னவர்களும் அதைச்சிவசந்நிதியில் துதித்தவர்களும் துதிப்பதைக்கேட்டவர்களும் பாவங்கள் நீங்கப்பெற்று இஷ்ட சித்திகளடைந்து இம்மையின்பங்களையும் மறுமையின்பங்களையும் பெற்று வாழ்வார்கள்.

விருத்தாசல புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.